C

R673 211, N12
N12·6
162410

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE
31 JAN 1918
MADRAS

# சித்தாந்தம்.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

மாதாந்தரத்

தமிழ்ப் பத்திரிகை.

## ஆறாந்தொகுதி.

பத்திராசிரியர்

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

சிவஸ்ரீ - கலியாணசுந்தர யதீந்திரர்

(மணவழகு)

சென்னை

மஹாலக்ஷ்மி விலாச அச்சுக்கூடம்.

1917.

16அடிடு

# சித்தாந்தம் அருந்தொகுதியின்

## உள்ளுறை.

—:0:—


| | |
|---|---|
| அருளிலக்கணத்தின் ஓர் பகுதி-மோ. கந்தசாமி முதலியார் B A. | 234, 259. |
| அவைதிக சிவஞானபோதம்-ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர் | 54 |
| ஆரியவேத பாராயணம்-மணவழகு ... . ... | 143 |
| ஆத்திச்சூடி ஆராய்ச்சி-S. W. நாராயணசாமி பிள்ளை ... | 43 |
| ஆரம்ப உபந்நியாசப்பொழிப்பு-S. சபாரத்தின முதலியார் | 36 |
| இருமணி-ஜே-யம்-நல்லசாமி பிள்ளை B. A B. L. ... | 159, 174 |
| இறைவனருளுரு-அடிசைக்கிழார்-அ சிதம்பரனார் ... | 185 |
| உனக்கு எதுவேண்டும் இன்பமோ அன்பமோ அ-பழனிவேலாயுதம் பிள்ளை ... | 114 |
| ஏகான்மவாதபாவலர் இழுக்குரைமறுப்பு-தெ-சு-சுப்பிரமணியம்பிள்ளை | 261 |
| கடவுளும் உலகும்-ஜே-யம். நல்லசாமி பிள்ளை B. A. B L. | 107 |
| கல்வெட்டு-அடிசைக்கிழார்-அ-சிதம்பரனார் ... | 93 |
| கரந்தைத் தமிழ்ச் சங்கம்-த-வே-உமாமகேசுவரம் பிள்ளை | 257 |
| கிரியாமார்க்கம்-S. சபாரத்தின முதலியார் ... | 163 |
| சந்தான குரவர்-அடிசைக்கிழார்-அ-சிதம்பரனார் ... | 149 |
| சாந்தோக்யோபநிஷத்து-மணவழகு | 1, 25, 51, 75, 99, 123, 147, 171, 195, 219, 243, 268. |
| ஜீவேசுரலட்சணம்-N. V. S. முத்தைய பிள்ளை ... | 77 |
| சைவசித்தாந்த மகாசமாஜத்தின் கக-வது வருடக்கூட்டம் களந்தைகிழான் ... ... | 9 |
| சைவசமாஜத்தின் தீர்மானங்கள்-களந்தைகிழான் ... | 13 |
| சைவசமாஜத்தின் கக-வது வருட அறிக்கைப் பத்திரம் சமாஜ நிர்வாக சபையார் | 17 |
| சைவசித்தாந்த பரீட்சை விதிகள்-இ-குப்புச்சாமி ... | 41 |

சைவ சமயமாட்சி-சுவாமி வேதாசலம் .. ... 137, 166
ஞானம்-S. சபாரத்தின முதலியார் ... ... 208
தத்துவங்களும் அதற்கப்பாலும்-ஜே-யம்-நல்லசாமி பிள்ளை B. A. 193
தமிழர்க்கான சிலகுறிப்புகள்-தடிகைக்கிழார்-அ-சிதம்பரனார் 33, 187
திசைப்பெயரின் ஆராய்ச்சி-மாகறல்-பொன்னுசாமி முதலியார் 60
திருச்சிற்றம்பலம் S பால்வண்ண முதலியார் ... 64
திருக்கோயில்-ஜே-யம்-நல்லசாமி பிள்ளை B. A. B. L. 126
திரிபதார்த்த தத்துவப்படம்-ஜே-யம்-நல்லசாமி பிள்ளை B.A B L. 240
தீட்சை-W T. கோவிந்தராஜ முதலியார் ... 80, 102
தேவாரம் வேதசாரம்-சி-குப்புச்சாமி ... ... 217
நன்னெறி-W. T. கோவிந்தராஜ முதலியார் ... 135
நம்மிறைவனின் சர்வஞ்ஞத்து வாதிசாட்குணயங்கள் S நடேசதேசிகர் 153
நடுநிலை-மாகறல்-பொன்னுசாமி முதலியார் ... 88
நாம் யார்-வ-மு-இரத்நேசுரவையர் ... ... 226
நிலையா வாழ்க்கை-S நடேசதேசிகர் ... ... 246
பஞ்சாக்கரம்-பாரிப்பாக்கம்-கண்ணப்பமுதலியார் 6, 28, 57, 84, 132, 222
பொருட்பெண்டிர் என்னும் திருக்குறள் விளக்கம் மாகறல்-பொன்னுசாமி முதலியார் ... 4
முளையென்பது அங்குரம்-மாகறல்-பொன்னுசாமி முதலியார் 181
முத்தியாவது என்ன-அ-பழனிவேலாயுதம் பிள்ளை ... 214
மெய்கண்டதேவர் விருத்தாந்தம்-கி-இராஜு கிராமணி ... 255
மெய்ச்சமயம்-S சபாரத்தின முதலியார் ... 270
யாக்கை நிலையாமை-அ-பழனிவேலாயுதம் பிள்ளை ... 168
வடமொழிச் சிவஞானபோதமும் மாறுபட்ட உரையும் தே-ச-சுப்பிரமணியம் பிள்ளை 117
வாரநாம சங்கியை-சன்னுகம்-குமாரசாமி பிள்ளை ... 70
விக்கிரக ஆராதனை அ[illegible] S. நடேச தேசிகர் ... 205
வேதாகமங்களின் முப்பொரு[illegible]டெனிவு ஒன்றே.
தி-சு-[illegible]யாப்பிள்ளை ... 155, 189, 215, 238, 250


உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி கூ.] 1917ஸு ஜனவரிமீ [பகுதி க.

## சாந்தோக்யோபநிஷத்து.

### முதலாவது பிரபாடகம்.

### கண்டம் க.

உத்கீதமெனப்படும் ஓம்* எனுமட்சரத்தை ஒருவன் உபாசிக்க. ஓம் எனக் கானஞ்செய்கிறபடியால் உத்கீதமெனப் பெயராயிற்று.

---

* ஓம் என்ற சொற்குப் பொருள் பரமசிவமேயாம். "ஓம் நம: சிவாய" எனும் ஸ்ரீ ருத்திரத்தானும், "த்யாயேதோங்காரம் மீச்வரம்" எனும் தியாநபிந்துபநிஷத்தானும், "ஓங்காரம் ஸர்வேச்வரம்" எனும் நிருஸிம்ஹமோத்தரதாபிந்யுபநிஷத்தானும், "ஓங்காரோவேதப[illegible] சோவாசிவ ஏகோத்யேயா" எனும் அதர்வசிகோபநிஷத்தானும், "ஓம் மஹ[illegible]க்ராஸாய மகாதேவாய சூலினே" எனும் சரபோபநிஷத்தானும், "ஓங்கார[illegible]வ ரூபிண[illegible]காதேவம்" எனும் பஸ்மஜாபாலோபநிஷத்தானும், "சிவே[illegible]மே அஸ்து ஸதா[illegible]ரம்"

2. பூதங்களுள் பிருதிவிரஸம், பிருதிவியுள் ஜலம்ரஸம், ஜலத்துள் ஔஷதிரஸம், ஔஷதியுள் புருஷன்ரஸம், புருஷனுக்கு வாக்ரஸம், வாக்கினுக்கு ருக்குவேதம் ரஸம், ருக்வேதத்திற்குச் சாமவேதம் ரஸம், சாமவேதத்திற்கு உத்கீதம் ரஸம்.

௩. எட்டாவதாகிய உத்கீதம் (ஓம்) ரஸங்களுக்கெல்லாம் ரஸமாய், உத்தமமாய், பிரமத்திற்கிருப்பிடமாயது.

௪. ருக்கு, ஸாமம், உத்கீதம் (ஓம்) எத்தகையதெனின்? கூறுவாம்.

௫. வாக்கு ருக்கு, பிராணன் ஸாமம், ஓம் உத்கீதம். ருக்குக்கும் ஸாமத்திற்கும் காரணமாயுள்ள வாக்கும் பிராணனும் மிதுனம்(இரட்டை.)

௬. இம்மிதுனம் ஓம் என்ற அட்சரத்தில் சம்பந்தமுறலால் சகல விச்சையினையும் பயப்பிக்கும்.

௭. உத்கீதத்தை (ஓம்) உபாசிக்கிற ஒவ்வொரு வித்வானும் இச்சையினையடைகிறான்.

௮. உலகத்தில் ஓம் என்பது அனுமதிகொடுக்கும் பதமாயிருத்தலினால் அநுஞாட்சரமெனவும், ஸ்மிருதியட்சரமெனவும் பெயருறும், இவ்வட்சரத்தையுபாசிக்கிற வித்துவானுக்குச் சகல இச்சையும் ஸ்மிருத்தியாம்.

௯. மகிமையும், ரஸமுங்கூடிய இவ்வட்சரம், ஓம் என்று சொல்லிக் கேட்கும்படியாயும், தோத்திரஞ் செய்யும்படியாயும், கானஞ்செய்யும்படியாயும் இருத்தலின் மூன்றுவித்தைகளாக விருக்கின்றன.

௧௦ அறிந்தவனும் அறியாதவனுமாம் இருவரும் அந்த யஞ்ஞத்தைச் செய்கின்றனர். வித்தைபலவிதம், அவித்தைபலவிதம், ஞானத்துடனும் சிரத்தையுடனும் முடிக்கிறதர்மத்திற்கு விசேஷபயனுளது.

## கண்டம் ௨.

பிரஜாபதியின் சந்ததியினராகிய தேவரும்அசுரரும் யுத்தஞ்செய்யும்போது தேவர் அசுரரைச் செயிக்கும்பொருட்டு உத்கீதத்தைப் பாடத் தொடங்கினர்.

௨. தேவர்கள் கிராணேந்த்ரியமான பிராணனை உத்கீதகர்த்தாவாக வுபாசித்தனர். அசுரர்களந்தவேள்வியை யழித்தனர். அதனால் கிராணேந்த்ரியபிராணன் நற்கந்தத்தையும், துற்கந்தத்தையும் அடைந்தது.

௩-௬. பின்னர் வாக்கிந்திரியமும், சட்சுரிந்திரியமும், சுரோத்ர இந்திரியமும், மனஇந்திரியமும் அசுரர்கள் பாவத்தால் அடியுண்டு நற்கந்தத்தையும் துற்கந்தத்தையு மவையடைந்தன.

௭. வாய்க்குள்ளே முக்கியபிராணன் வருகின்றது. அவர்கள் பிராணனைப்போல் உத்கீதத்தைத் தியானித்தார்கள். கல்லைச்சேதிக்க முடியாதனுபோல அப்பிராணனைத் தாக்கமுடியாது அசுரர்கள்!பின்னிட்டனர்.

௮. இம்முக்கிய பிராணனை யறிந்தவன் ஒருவராலும் வெல்லப்படாத கல்லையொத்தவனாவன். இவனுக்குத் தீங்கு முதலிய செய்பவன் (அசுரரைப் போலச்) சிதறிப்போவான்.

௯. இம்முக்கிய பிராணனால் நற்கந்தம் துற்கந்த மிரண்டும் அறிவதில்லை. அதுபாவமற்றது. உண்ணுவதாலும், குடிக்கிறதாலும் மற்றப் பிராணன்களைக் காக்கின்றது. மரணாந்தத்தில் கிராணதியிந்திரியங்க ளடையாமல் வெளிப்புறப்படுகின்றன.

௧௦-௧௨. அங்கிரஸ், பிரகஸ்பதி, ஆயாஸ்யர் இவர்கள் உத்கீதத்தையுபாசித்ததால், அந்த உத்கீதம் அங்கிரஸ், பிரகஸ்பதி, ஆயாஸ்யம் என்றும் சொல்லப்படும்.

௧௩. தல்பருடைய புத்திரர் பகர் என்றவர் உத்கீதத்தின் உண்மையறிந்து, நைமிசாரண்யருக்கு உத்காதாவாகி அவர்கட்கு விருப்பமுள்ளவற்றை யெல்லாம் கானம்செய்தனர்.

௧௪. எந்த வித்துவான் இந்தஉத்கீதத்தை உபாசிக்கின்றனனோ அவன் சகலகன்மங்களையும் கானம் செய்கிறவனாவன்.

மனவழகு.

---

எனும் தைத்ரீயாருணசாகை காராயணத்தானும் அறிக. ஓம் என்பது விஷ்ணுவைக் குறித்திடாதோ வெனின் குறித்திடாது. என்னை? நிருஸிம்மோத்தரதாபின் உபநிஷத்தில் "அகாரம் ப்ரஹ்மாணம்," "உகாரம் விஷ்ணும்," "மகாரம் ருத்ரம்," "ஓங்காரம் ஸர்வேச்சுரம்" எனக்கூறுமாற்றால் இரண்டாவது மூர்த்தி [illegible] மூர்த்தியாத லெங்ஙனம் என்க? அன்றியும் சுருதியானது [illegible] "நகாரணன்" என ஓதுக்கியிருத்தலையு முணர்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# "பொருட்பெண்டிர்" என்னும்

# திருக்குறள் விளக்கம்.

"பொருட்பெண்டிர் பொய்ம்மைமுயக்க மிருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று"

## இதன் பொருள்

கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம் பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும் எ-று.

பொருட்குமுயங்கும் மகளிர்கருத்துஞ் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால் அவர்குறிப்பு, கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோ ரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை யெடுக்குங்கால் அவர்குறிப்போ டொக்கு மெனவே, அகத்தாலருவரா நின்றும் பொருணோக்கிப் புறத்தாற்றழுவுவர்; அதனை யொழிகவென்பதாம் என்பது ப-ரை.

இருட்டறை—காணப்படாததோ ரிடமென்பார். அது பொருந்தாது.

அத்திருக்குறள் "உண்ணாமையுள்ள துயிர்நிலை யூனுண்ண அண்ணாத்தல் செய்யாதளறு" என்பதேபோலத் தாப்பிசைப் பொருள்கோளாம்.



"இடைநிலை மொழியே யேனையீரிடத்தும்
நடந்துபொருளை நண்ணுதல் தாப்பிசை."

இருட்டறையி லென்னும் இடைநின்றசொல், இருட்டறையிற் பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்என முன்னும், இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇயற்று எனப்பின்னும் சென்றியைதல் காண்க. இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ யற்று என்பது இல்பொருளுவமை. நின் முகம் களங்கமின்றித் தேய்வு பெறுததோர் மதியமொக்கு மென்பது போல. வடநூலார் அபூதவுவமையென்பர். இருட்டறையிற் பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில் ஏதில் பிணமொன் றிருந்தால் அதனைத் தழுவிய தொக்கு மென்பது.

அருவருப்பு முதலியன தோன்றாமைப் பொருட்டும் தம்மக்கள் தீயொழுக்கங்கள் கல்லாமைப் பொருட்டும் இருட்டறையில் முயங்கல் வேண்டும் என்பது அறநூற்றுணிபு.

பொதுமகளிர் பொருளையே விரும்புவது இயல்பாகலின், பலகாரணம் பற்றி அவர்க்கு இருட்டறை யின்றியமையாதது. மருத்துவநூலாரும் சுரத நூலாரும் ஒவ்வோர் காரணம்பற்றி இருட்டறையில் முயங்கற்க என்பர்.

அயனாட்டார் இவ்வொழுக்கம் கொள்வர்.

பொருட்பெண்டிர் சேரிப்பரத்தையருள் ஒரு சாரார்.

அறவைப்பிணஞ் சுடுவோரும் அதனைத் தழுவிற்றிலர்.

ஆசந்தியில் வைத்தலும் ஆசந்தியைச் சுமத்தலும் தழுவுதலுமாகாது.

இவ்வாராய்ச்சியால் பரிமேலழகர் உரை தவறுபட்டது காண்க. இன்னும் அத்திருக்குறளைப்பற்றிச் செந்தமிழ் தொகுதி ௪ ல் பகுதி ௩-௧௦ ல் காண்க.

இது, காலஞ்சென்ற மொழிநூலாசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள் எழுதிவைத்த குறிப்பிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

**மாகறல்-பொன்னுசாமி முதலியார்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரம்.

"ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே."

இயங்கு திணையின்பாற்பட்ட எல்லா ஆன்மாக்களும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தையே யனுபவிக்க வேண்டுமென்னும் பேரவாவால் விழுங்கப்பட்டிருக்கின்றன என்பதை யானெடுத்தியம்பல் வேண்டா. ஓரறிவுடைய புழுமுதல் 'ஆறறிவுடைய மக்களீறாய எல்லா ஆன்மாக்களுக்கும் இதுவே இயல்பென்பது அவ்வவற்றின் இயல்பறிந்து நுணித்து நோக்கும் நுண்ணறிவாளர் பலர்க்கும் செவ்வன் விளங்கும், ஆயின் இவ்வான்மாக்கள் எல்லாவற்றானும் அனுபவிக்கப்படுவது இன்பந்தானேயோ என்று உற்று நோக்கின் இவ்வான்மாக்களெல்லாம் இன்பமென்று கொண்டது ஒருகணத்தே இன்பம்போற்றோன்றி மறுகணத்தே துன்பம் பயப்பதாய சிற்றின்பமேயாகும். அவையெல்லாம் சிற்றின்பமாமாறி யாண்டையதென ஆசங்கை நிகழ்த்து நிலையில் நந்தமிழ்நாட்டு மக்களாய நீவிர் நின்றிடாவண்ணம் கருணையங்கடலாங் கண்ணுதற் பெருமான் நந்தமிழ் நாட்டகத்து நந்தாமணி விளக்கங்களாம் பல பெரியோர்களைத் தோற்றுவித்து அவர்கள் தந் திருவாயின் அமுதமொழிகளால் பிறவிப்பிணிக்கு அருமருந்தன்ன பலநூல்களையும் வெளிப்படுத்து அருள்புரிந்துள்ளானாகலானும், அங்ஙனம் போந்த நூல்கள்தாமும் நுங்கையகப்பட்டு நுங்களால் பெரிதும் கையாளப்பெற்று வருகின்றன வாகலானும், அங்ஙனம் கையாளப்பெற்று வருவது மன்றி "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" என்ற பொய்யா மொழியின் பொருளுரைப்படி பல அரிய பெரிய வித்துவசிகாமணிகளின் உபந்நியாசங்களால் தோட்கப்பெற்ற செவிச்செல்வம் வாய்ப்பப்பெற் றிருக்கின்றீராகலா[illegible]லக இன்பமெல்லாம் சிற்றின்பமே யாமென யானும் விளக்கிக் காட்[illegible]லுறுவது மிகையேயாமாகலானும்,



"கனியினுங் கட்டிப்பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந்தார்க் கிடைமருதனே"

என்னுந்திருநாவுக்கரசு சுவாமிகளது திருச்செய்யுள் ஒன்றை மாத்திரம் உங்களுக்கு நினைவூட்டி அப்பாற் செல்கின்றேன்.

இனி, இவ்வான்மாக்களால், இன்பமென்றனுபவிக்கப்படுவன யாவும் சிற்றின்பமாகமுடிய "இயல்பாகவே பாசங்களினீங்குதலுடையனும் இயற்கையுணர்வினனாதலுடையனும் தூயவுடம்பினனாதலுடையனும் தன் வயத்தனாதலுடையனும் பேரருளுடையனும் வரம்பிலின்ப முடையனும்" என எண்குணமுடையானாய் முழுமுதற் செழும்பொருளாயுள்ள பரமகருணாநிதியின் றிருவடி ஞானத்தால் அடைந்தனுபவிக்கப்படும் அப்பரஞானானந்தனுபவமே என்றும் பொன்றுதலில்லாப் பேரின்பமென முடிக்கப்படும். ஆகவே அப்பரம் பொருளையடைந்து அப்பரஞானானந்தனுபவந் தலைக்கூடப்பெற்றிருத்தலே ஆன்மாக்களுக்கு இன்றியமையாத கடமையாமென்பது பெறப்பட்டது இக்கருத்தே பற்றியன்றே.

"வாழ்த்தவாயும் நினைக்கமட நெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்ததலைவனை" என்றும்,

"வணங்கத்தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமான்"

என்றும் போந்த தமிழ்வேத வாக்கியங்களும்,

"மானுடப்பிறவிதானும் வகுத்தது மனவாக்காய
மானிடத்தைந்துமாடு மரன்பணிக்காகவன்றோ" என்ற திராவிடோபநிடததிருவாக்கும் எழுந்தன.

இனி அங்ஙனம் வரம்பிலின்ப முடைமை முதலிய எண் குணங்களுந் தன்கண்ணுடையானாய் வேதாகம புராணேதிகாசாதிகளால் போற்றப் பெறுவான் சிவபெருமான் ஒருவனேயாம். இது சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் சிவகர்ணாமிர்தம் முதலிய உண்மையுரைக்கு நூல்களாற் கண்டு தெளிக. ஏனைச்சமயத்தாராற் கடவுளர்களாகக் கொண்டாடப்பெறும் பதத்தலைவர்களெல்லாம் இவ்வெண்குணமுடையரல்லரென்பதூஉம், இவ்வெண்

குணங்களுக்கு மறுதலையாய பிறப்பிறப்பாதி உயிர்க்குணங்களால் பிணிக்கப்பட்டவர்களே யாவரென்பதூஉம் அவ்வச்சமயத்தாரது நூல்களானே யுணரக்கிடத்தலின் "பிறப்பென்னும் பேதைமை நீங்கச்சிறப்பென்னுஞ் செம்பொருள்" கண்டுபேரின்ப மனுபவிக்க விழையும் ஆன்மாக்களெல்வருவரும் 'பசுபதிப்பெயரிய தனிமுதற்கடவுளான' சிவபெருமானொருவனையே தியானிக்கற்பாலராவர். இதுபற்றியன்றே திவ்வியம் பழுத்த சைவசித்தாந்தியாராகிய நம்குமரகுருபர சுவாமிகள்

"ஈண்டுமைத் தமியேன் வேண்டுவது யாதெனின்" என்றெடுத்து

"ஐந்தரு நிழற்கீழ் அரசு வீற்றிருக்கும்
இந்திர னாகிவாழ்ந் திருப்பதோ வன்றே
மலரோ னாகிமன் னுயிர்த் தொகுதியும்
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ வன்றே
அடலரு வணையில் அறிதுயிற் கொள்ளுங்
கடவுளா யுலகங் காப்பதோ வன்றே

அவைதான்

ஆருயின்பமென் றருபெயர் பெறினும்
வாருவல்வினை வருவிக்கும்மே" என்று அப்பதத் தலைமையும் தமக்கு வேண்டாமை கூறி மறுத்திட்டார்கள்.

ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்குபவன் என்னும் பொருளையுடைய உருத்திரன் என்னும் பெயரும் ஆனந்தமே சொரூபமாக வுடையான் என்னும் பொருளையுடைய சிவன் என்னும் பெயரும் அவனொருவன் றனக்கே உரிமையுடைத்தாதல் இதற்குறுசான்றாய் விளங்குதல் காண்க.

"சிவனெனு நாமந்தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்" என்னும் வேதவாக்கு ஈண்டே ஆழ்ந்து சிந்திக்கற்பாலது.

(இன்னும் வரும்)

**பாரிப்பாக்கம்-கண்ணப்பமுதலியார்,**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சைவ சித்தாந்த மகாசமாஜத்தின்

# பதினோராவது வருடக்கூட்டம்.

இம்மகாசமாஜக்கூட்டம் சென்னையில் திருமயிலை அம்பட்டன் வாராவதிக்கடுத்த பிள்ளையார்தோட்டத்தில் கடந்த டிசம்பர்மீ 29, 30, 31-ம் தேதிகளில் ஸ்ரீமான் இராஜா கிராமணியார் அவர்களால் இக்கூட்டத்திற்கென அமைத்திருந்த மிகப்பெரியதோர் அலங்காரம் பொருந்திய கொட்டகையில் சென்னையிலுள்ள பிரபுக்களும், பாவாணர்களும், வித்வசிரோமணிகளும், ஆங்கில அறிஞர்களும் நிறைந்திருக்கக்கூடிற்று. முதல்நாள் பன்னிரண்டு மணிக்குமேல் அக்கிராசனராக விருக்க யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த ஸ்ரீமான் ச. சபாரத்தின முதலியார் அவர்களை (Dy. Fiscal Jaffna) சமாஜத்தின் உப அக்கிராசனர்களாகிய ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் B. A., B. L. ஸ்ரீமான் T. நல்லசிவன்பிள்ளை யவர்கள் B.A., B.L. காரியதரிசி, ஸ்ரீமான் கி. குப்புச்சாமிமுதலியார் அவர்கள், ஏனைய அத்தியக்ஷர்கள் முதலானோர் அவரிருக்கு மிடத்திற்குச் சென்று பல உபசாரத்துடன் கொட்டகைக்கு அழைத்துச் சென்று அக்கிராசனத்தில் அமரக் கேட்டுக்கொண்டனர். பிறகு, இன்னிசைக்கருவிகளுடன் இதற்கென வரவழைக்கப்பட்டவர்களாகிய தேவாரகோஷ்டிகள் தேவாரங்களை ஓதினார்கள். சமாஜத்தின் உபசரணைச் சங்கத்தலைவர் பாகல்பட்டி, ஸ்ரீமான் P.L. இராமசாமி நாய்க்கர் அவர்கள் உபசரணைச் சங்கத்தவரின் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தனர். உபசரணைச் சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் புழல்-திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் பாடப்பெற்ற வரவேற்புக்கவிகளைச் சமாஜக் காரியதரிசி, ஸ்ரீமான் கி-குப்புச்சாமிமுதலியார் அவர்கள் வாசித்தனர். பிறகு சமாஜ நிர்வாக சபையினர் வெளியிட்ட வந்தனோபசார பத்திரத்தை ஸ்ரீமான் புழல்-திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் வாசித்தனர். பின்னர் சமாஜ அறிக்கைப் பத்திரத்தைக் காரிய

தரிசியவர்கள் வாசித்தனர். தேவார பாராயணம் முடிந்த பிறகு சபாநாயகர் அவர்கள் தமது ஆரம்பப்பிரசங்கத்தை ஆரம்பித்து, சைவசித்தாந்தத்தின் உண்மையினையும், பண்டைக்காலத்து வேதாகம ஒழுக்கங்களையும் நன்குபோதித்து அவற்றைக் கைவிடாதிருப்பதே சைவசித்தாந்த உணர்ச்சியின் பலன் என்றும் அதைவிட்டு நவீனநாகரீகங்களில் தலையிட்டுப் பழைய வழக்குகளைக் கைவிடுவது சித்தாந்த உணர்ச்சி யாகாதென்றும் பல்லோர் அறிய பல புனைந்து பேசினர்.

பிறகு முதலாவதாகத் தூத்துக்குடி ஸ்ரீமான் பொ-முத்தையப்பிள்ளையவர்கள் "கடவுள்எந்தக்காரணம்" என்னும்விஷயமாக உபந்நியாசிக்க ஆரம்பித்துச் சைவசித்தாந்த உண்மையின்படி கடவுள் நிமித்த காரணம் என முடித்தனர். இரண்டாவதாகக் காவித்தண்டலம் ஸ்ரீமான் வேதாசல முதலியார் அவர்கள் "பஞ்சாக்கர மகிமை"யென வெடுத்துப் பலரும்மகிழ்வெய்தப் பண்டைக்காலத்துப் புராணிகர்களைப்போல் பிரசங்கித்தனர் மூன்றாவது, மோரூர் ஸ்ரீமான் கந்தசாமி முதலியார் அவர்கள் B. A., ஆங்கிலத்தில் 'God as the Order of Inteligent Love' என்னும் விஷயத்தை உபந்நியசிக்க ஆரம்பித்துத் தமக்குள்ள தத்துவசாஸ்திரத்தின் பயிற்சி மிகுதியால் பலதிறப்படப்பேசி எடுத்த விஷயத்தை இனிமையாக முடித்தனர். நான்காவது திருநள்ளாறு ஸ்ரீமான் நடேச தேசிகர் அவர்கள், "ஈசுரத்தியானம்" என எடுத்துத் தாம் தோன்றிய ஓதுவார் குலத்திற்கேற்ப ஈசுவரனைவழிபடும் முறையெலாம் ஓதினர். ஐந்தாவது, குளித்தலை பிரம்மஸ்ரீ அரங்கசாமி ஐயர் அவர்கள் "சிவசொருப நிர்ணயம்" என எடுத்துத் தமக்குள்ள ஆகமப் பயிற்சியின் மிகுதியால் பிரமாணங்கள் பலவெடுத் தோதி விஷயத்தை நிருபித்தனர். ஆறாவது, சமாஜ பொக்கிஷதாரர் ஸ்ரீமான் W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் "தீக்கை" என்னும் விஷயமாக எடுத்துப்பேசினர். பிறகு சபாநாயகர் அன்று நடந்த பிரசங்கங்களின் விசேஷங்களை யெல்லாம் ஒவ்வொன்றாக வெடுத்துக்கூறி அன்று கூட்டத்தைக் குறைவற நடத்தினர்.

மறுநாள் பதினொன்றரை மணிக்குப் பிறகு கூட்டம்கூடியது. தேவாரக் கோஷ்டி தேவாரம் ஓதினர். அன்று முதலாவதாகப் பொள்ளாச்சி ஸ்ரீமான் முத்துசாமிப் பிள்ளையவர்கள் "மெய்யுணர்தல்" என்னும் விஷயமெடுத்துத் தம் வயோதிகப் பருவத்திற்கேற்ப மெய்யை யுணர்ந்து யார்க்கும் மெய்யுணர்வைக் கூறினர். இரண்டாவதாக ஸ்ரீமான் பொன்மார் நடேச முதலியார் அவர்கள் "பெரியார் யார்" என்னும் விஷயமெடுத்துத்



தாம் நெடும்பொழுது அது விஷயமாக ஆய்ந்திருந்த விஷயங்களை முறைமுறையாகக்கூறினர். மூன்றாவதாகத் திருக்கோவலூர் ஸ்ரீமான் R. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் "நம் நிலை" என்னும் விஷயத்தை எடுத்துத் தற்காலம் சைவத்திற்குள்ள நிலைகளை யெல்லாம் எடுத்துக்கூறினர். பிறகு யாழ்ப்பாணம், வண்ணைநகர் ஸ்ரீமான் சுவாமிநாத பண்டிதரவர்கள் சமாஜத்தின் பெரும்பயன் கருதிச் சமாஜம் உள்ள நிலையை யார்க்கும் எடுத்துக் கூறிச் சமாஜத்திற்கு ஓர் நிரந்தரமாகிய கட்டடம் இருக்கவேண்டுமென்று உபந்நியாசித்துப் புத்தகத்தில் தமது கையொப்பம் ஒன்றை முதலாக வைப்பதற்குமுன் ஸ்ரீமான் இராஜ-கிராமணியார்அவர்கள் கட்டிடத்திற்கு வேண்டிய நிலத்தைக் கொடுப்பதாக வாக்களித்துக் கையொப்பமும் செய்தனர். பின்னர் பண்டிதரவர்கள் தமது கையொப்பமாக முதலில் ரூபாய் 250-க்குக் கையொப்பம் வைத்தனர். அவரைப் பின்பற்றி அக்கணமே பலர் கையொப்பம் செய்தனர் அவற்றை யெல்லாம் மற்றோரிடத்தில் காணுதல் கூடும். பிறகு கயப்பாக்கம் ஸ்ரீமான் சதாசிவச் செட்டியார் அவர்கள் B. A., "சமயம்" என்பதைஎடுத்துச்சமயங்கள் பலகூறிச் சமயஉணர்ச்சியினை நாட்டினர். அதன்பின் ஸ்ரீமான் தமிழ்ப்பண்டிதர் சிங்காரவேலு முதலியார் அவர்கள் "வேள்வி" என்னும் விஷயத்தை யெடுத்துத் தமிழ்ப் பாஷையில் தமக்குள்ள உணர்ச்சியும், சைவத்தில் தமக்குள்ள பற்றும் தம்மை யறியாது தோன்ற சைவசித்தாந்த போதனையைச் செய்தனர். பிறகு அன்று நடந்த விஷயங்களை யெல்லாம் சபாநாயகர் ஒன்றின்பின் ஒன்றாக வெடுத்துப் பேசி அன்றையக் கூட்டத்தை முடித்தனர்.

மூன்றாம்நாள் பகல் 12-மணிக்குக் கூட்டம் கூடியது. தேவாரபாராயணக்காரர் தேவாரங்களை ஓதியபின்னர் முதலாவதாக ஸ்ரீமான் T. N. தங்கவேலுமுதலியார் அவர்கள் "நெஞ்சறிவுறுத்தல்" என்னும்விஷயத்தை எடுத்துத் தமக்கு அவ்விஷயமாக உள்ளபயிற்சியைப் பலரும்அறியப் பேசினர். இரண்டாவதாக ஸ்ரீஉருத்திரகோடீஸ்வரர் அவர்கள் "ஜீவகாருண்யம்" என்னும்விஷயமாகத் தமக்கு நெடுநாள்உள்ள பயிற்சியை எடுத்துக்காட்டிப் பேசினர். மூன்றாவதாக யாழ்ப்பாணம் ஸ்ரீமான் சோமாஸ்கந்த பிள்ளையவர்கள் "தேவாரம்" என்னும்விஷயத்தைப் பலரும்அறியத் தெளிவுபடப்பேசினர். நான்காவதாக ஸ்ரீமான் அர்த்தநாரி ஆசாரியர் அவர்கள் "சிற்பசாஸ்திரமும் தேவாலயநிர்மிதப்பிரதிஷ்டையும்" என்பதைப்பற்றிப் பலரும்மகிழப்பேசினர், ஐந்தாவதாக ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் எனப் பெயரிய மங்கையர்க்கரசியார் "பிறவிப் பெரும்பயன்" என்னும்விஷயத்தை வடமொழி

தென்மொழிப் பிரமாணங்களுடன் சைவசித்தாந்தத்தில் தமக்குப் பன்னெடுநாள் உள்ளபயிற்சியால் பலரும்ஆனந்திக்கப்பேசினர். ஆறாவதாக உப அக்கிராசனராகிய ஸ்ரீமான்J. M. நல்லசாமிப்பிள்ளைஅவர்கள் B. A B. L., "சைவத்தைப்பற்றிய சிலதப்பபிப்பிராயங்கள்" என்பதெடுத்து அத்வைதம் என்னும் சொல் சைவ சித்தாந்தத்திற்கே உரியதென்றும் மற்றைய மத வாதிகள் கூறும் அத்வைத ஞானம் அவர்க்காகா வெனவும் மற்றைய மூர்த்திகள் நித்திய கர்த்தாக்களே யன்றி சதுர்த்தமா யிருக்கின்ற சிவ ஞகாரென்றும் தமக்குச் சித்தாந்தத்தில் உள்ள பயிற்சியும் பற்றும் நன்கு தோன்றப் பகன்றனர். ஏழாவதாகச் சமாஜக் காரியதரிசியாராகிய ஸ்ரீமான் ஸி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் அவாவறுத்தல் என்னும் விஷயமெடுத்து அவாவறுத்தலானது துறவோர்க்கே யுரியதாயினும் சைவ சித்தாந்த உணர்ச்சியை மேற்கொண்ட ஒவ்வொருவரும் அதில் சிறிது சிறிது பழகி வருவாராயின் பல பிறவிகளில் ஆசையற்று அதன் பயனாகிய முத்தியை யடையக் கூடுமென்றும் அதைக்கைவிட்டு உயிர் வாழ்க்கையைக் கருதிப் பலரிடம் சென்று இரத்தலும் துறவு பூண்டு கூடாவொழுக்க முடைமையும் கூடா வென மொழிந்தனர். பிறகு யாழ்ப்பாணத்திலிருந்து விஜயஞ் செய்திருந்த ஸ்ரீமான் கைலாச பிள்ளையவர்கள் சைவ சமாஜத்தைப் பற்றிப் பல நல்லுரை கூறியதுடன் ஆகமத்தின் பெருந்தகுதிகளை யெல்லாம் கூறிஏட்டிலுள்ள ஆகமங்களை யெல்லாம் யாரேனும் உபகரித்தால் தாம் அச்சிடுவதாகத் தெரிவித்தனர். அதன் பிறகு வேலுமயிலுஞ் சாமியாரவர்கள் சமாஜத்தைப் பற்றிப் பேசி மங்கலமாக அடிக்கடி எடுத்துரைக்கும் "ஹர ஹர மகா தேவ" என்னும் விஷயத்தை எல்லாரும் உரைக்கும்படிச் செய்தனர். சபாநாயகரவர்கள் முடிபுரை எடுத்துச் சொல்லினர்.*

பின்னர், காரியதரிசி எல்லாருக்கும் வந்தனமளித்தனர். மங்கலமாகச் சபை இரவு 9-மணிக்கு முடிந்தது.

களந்தைகிழான்.

*ஆதிவாரமாலையிலும், சோமவாரமாலையிலும் ஸ்ரீமான்-P. V. மாணிக்க நாய்க்கரவர்கள், அ-என்னும் எழுத்தை யாதாரமாகக்கொண்டு கேட்டோர் யாவரும் வியக்குமாறு, அவ்வெழுத்தினின்றும் பிரணவத்தையும், பஞ்சாட்சரத்தையும், சடாட்சரத்தையும் எடுத்துக்காட்டித் தமிழினருமையினையும் முருகன்றலைமையினையும் நன்கு விளக்கி அரிய பெரிய மகோபந்நியாசம் செய்ததாகத் தெரியவருகிறது.

ப-ர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

# தீர்மானங்கள்.

1916-வருடம் டிசம்பர்மீ 30, உ சென்னையிற் கூடிய மகாசமாஜக்கூட்டத்தில் நடந்த தீர்மானங்கள்.

1. இவ்வருஷத்து அறிக்கைப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

2. வி. பி. அல்லது மணிஆர்டர் மூலமாய் வரும் வருவாய்கள் தவிர மற்றெல்லா வற்றிற்கும் இரசீது கொடுக்கவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

3. காகிதம் விலை முன்போல் குறையும் வரையில் வருட சந்தா ரூ 1-8-0 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

4. சென்னை இராஜதானியிலுள்ள சைவசித்தாந்த கிளைச்சபைகளின் வருடோற்சவச் சிறப்பைப்பற்றி சிறுகுறிப்புகள் சித்தாந்தப்பத்திரிகையில் பிரசுரஞ்செய்ய வேண்டுமென்று பத்திராதிபருக்குத் தெரிவித்துக் கொள்ளுமாறு தீர்மானஞ் செய்யப்பட்டது.

5. சித்தாந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயத்தைப் பற்றியும், அச்சு முதலிய ஒழுங்கு பற்றியும் அத்தியட்சர்கள் சிறிது கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

6. ஆயுள் சாமாசிகர்களின் சந்தாத்தொகையிலிருந்து கடனாக எடுத்துக்கொண்ட தொகையை மறுபடியும் கூடிய சீக்கிரம் திருப்பிக்கொடுத்துவிடல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதைச்சிறிது அத்தியட்சர்கள் கவனித்தல் நன்று.

7. ஸ்ரீமான் மே-கந்தசாமி முதலியார் அவர்களை உதவிப்பத்திராதிபராக இருக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

8. ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியாரவர்கள் செய்த பொருளுதவிக்காக இச்சமாஜம் நன்றி செலுத்துகின்றது.

9. சமாஜ உத்தியோகஸ்தர்கள் அடியிற் கண்டபடி நியமிக்கப்பட்டார்கள்.

## போஷகர்கள்.

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்

ஸ்ரீமான் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள் M. R. A. S.

,, S. இரத்தினவேலுச் செட்டியாரவர்கள், சென்னை.

,, அ. நா. முத்துக்குமாரசுவாமி செட்டியாரவர்கள், கூடலூர்.

,, P. தெய்வசிகாமணிச் செட்டியாரவர்கள், சென்னை.

,, ஆண்டவராய விஜய அருணாசல வணங்காமுடி பண்டாரத்தார், அவர்கள், பாலவனம் ஜமீன்தார்.

ஸ்ரீமத் அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியார் அவர்கள், மயிலாப்பூர்.

## சபைத்தலைவர்.

ஸ்ரீமான் ச. சபாரத்தின முதலியாரவர்கள், யாழ்ப்பாணம்.

## உதவிசபைத்தலைவர்.

ஸ்ரீமான்-J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள் B. A., B. L. High Court Vakil, மதுரை.

,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள் B. A. B. L. High Court Vakil, சென்னை.

## காரியதரிசி.

,, கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் சென்னை.

## போக்கிஷதாரர்.

,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் சென்னை.

## பத்திராசிரியர்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள், சென்னை.

(மணவழகு.)

## கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான்-S. விநாயக முதலியார் அவர்கள், B. A. சென்னை.

## உள்ளூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-T. V. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்

,, P. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

,, M. கந்தசாமி முதலியார் அவர்கள் B. A. Monthly Auditor.

,, C. V. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள்

,, M. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்



ஸ்ரீமான்-வல்லை-சண்முகசுந்தர முதலியார் அவர்கள்

,, A. சிவசங்கர முதலியார் அவர்கள்

,, C. ஏகாம்பர முதலியார் அவர்கள்.

,, S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B. A. L. T.

,, K. தெய்வசிகாமணி முதலியாரவர்கள்.

,, T. N. தங்கவேலு முதலியாரவர்கள்.

## வெளியூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் B. A., B. L. கோயம்புத்தூர்.

,, T. S. சாமிநாதப் பிள்ளை அவர்கள், திரிசிரபுரம்.

,, S. கந்தையா பிள்ளையவர்கள், B. A. யாழ்ப்பாணம்.

,, இராஜவேலு முதலியாரவர்கள் B. A, வேலூர்.

மறைத்திருவன்-விருதை சிவஞானயோகிகள் அவர்கள், கோயில்பட்டி.

ஸ்ரீமான்-C. ஏகாம்பர முதலியார் அவர்கள், செங்கல்பட்டு.

,, T. சபாபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல்.

,, K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரமேரூர்.

,, M. R. குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.

,, J. சாமிநாதப் பிள்ளையவர்கள், பெங்களூர்.

,, A. R. அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.

பிரமஸ்ரீ-கிரிவாச குருக்கள் அவர்கள், சேலம்.

ஸ்ரீமான்-P. C. முருகேச முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

,, காங்கேயம் அஷ்டாவதானம்-சேஷாசலம் நாயுடு அவர்கள், அவிநா[சி.

,, P. முத்தையபிள்ளை அவர்கள், அாத்துக்குடி.

,, S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.

,, S. மெய்கண்டப் பிள்ளை அவர்கள், நாகை.

,, C. T. பார்த்தசாரதி முதலியார் அவர்கள், B. A., L. T. சிற்றூர்.

,, M. வேலுசாமித் தேவர் அவர்கள், இராமநாதபுரம்.

,, A. T. முத்துக்குமாரசாமி செட்டியார் அவர்கள், கூடலூர்.

,, M. கதிரேசம் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

,, P. L. இராமசாமி நாயகர் அவர்கள், மிட்டாதார் பாகல்பட்டி.

,, சாம்பசிவ நாயனார் அவர்கள், தஞ்சை.

,, S. G. சிவலிங்க செட்டியார் அவர்கள், ஜலகண்டபுரம்.

## வனிதையர் வகுப்புக்காரியதரிசி.

ஸ்ரீமதி-ஆண்டாளம்மாள் அவர்கள், சென்னை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சைவசித்தாந்த மகாசமாஜ நிலயத்திற்காகக் கையொப்பம் வைத்தவர்கள்.

---

ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியா ரவர்கள், மயிலாப்பூர் வேண்டிய நிலம்

,, யாழ்ப்பாணம்-வண்ணை நகர் சுவாமிநாதபண்டிதரவர்கள் ...ரூ. 250

,, அ. சாமி குப்புசாமி கிராமணியார் அவர்கள் ... 100

,, ச. சபாரத்தின முதலியாரவர்கள், யாழ்ப்பாணம் ... 50

,, J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், ... ... 50

,, கி. குப்புச்சாமி முதலியாரவர்கள், ... ... 50

ஸ்ரீலஸ்ரீ திரு-அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ... 50

ஸ்ரீமான் க. இரத்தின கிராமணியாரவர்கள், ... ... 50

,, A. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ... ... 50

,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள், ... ... 50

,, T. S. சுவாமிநாதப் பிள்ளையவர்கள், திருச்சிறுப்பள்ளி ... 50

,, E. S. அர்த்தநாரி ஆசாரியரவர்கள், ஈரோடு ... 50

,, ம. கீ. என். சின்னசாமி பிள்ளையவர்கள், மதுரை ... 50

,, அ. மு. மாணிக்க முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... 50

,, V. C. வேதாசல முதலியாரவர்கள், செய்யூர் ... 35

,, P. குமாரசாமி செட்டியாரவர்கள், ... 25

,, தெளிசிங்க முதலியாரவர்கள், பெரம்பூர் ... ... 25

,, தங்கவேலு முதலியாரவர்கள், சிந்தாதிரிப்பேட்டை ... 25



ஸ்ரீமான் நா. அப்பாசாமி செட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி... 25

,, சா. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், பெரியமெட்டு ... 20

,, T. சபாபதி முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... 20

,, S. T. M. P. நடராஜ செட்டியாரவர்கள், யாழ்ப்பாணம்... 15

,, தி. மாணிக்கம், சென்னை ... 12

,, A. சிவப்பிரகாசம் முதலியார் அவர்கள், கிருஷ்ணம்பேட்டை 10

,, இராமலிங்காச்சாரியர், வாலாஜா ... 10

,, T. S. பரமேஸ்வரம் பிள்ளையவர்கள், சென்னை ... 10

,, இராவ்பஹதூர் க. வைதியலிங்கம் பிள்ளையவர்கள், சென்னை 10

,, குள்ளப்பாச்சாரியரவர்கள், வாலாஜா ... 5

,, B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள், பூட்டுத்தாக்கு ... 5

,, அரைக்கண்ணு கிராமணியாரவர்கள், கிருஷ்ணம்பேட்டை... 5

,, கா. கதிர்வேலு முதலியாரவர்கள், தண்டரை ... 5

,, அ. ர. தணிகாசல முதலியாரவர்கள், அங்கம்பாக்கம் ... 5

,, M. C. இராஜகோபால முதலியாரவர்கள், மயிலாப்பூர் ... 5

,, T. R. திருவேங்கடம், சென்னை ... ... 5

,, M. மாசிலாமணி முதலியாரவர்கள், மயிலாப்பூர் ... 5

,, மளிகை பு. ஆறுமுக முதலியாரவர்கள் ... ... 5

,, கு. வேலுமயிலுஞ்சாமியாரவர்கள், ... 5

,, P. V. முத்துசாமி ... 2

,, பொன்னுசாமி ஆசாரியாரவர்கள், சென்னை ... 1

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின்
## பதினோராவதுவருட
# அறிக்கைப்பத்திரம்-1916.

"எல்லாவுலகமும் ஆனாய்நீயே" என்று திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியபடி எல்லாவுலகமுமாகவிளங்குஞ்சிவபெருமானை ஆணவமலத்தொடக்கற்று அடைய உள்ள மதங்கள் பலவற்றுள் மேலாயது சைவசித்தாந்தம் எனத்தெரிந்து அவ்வழியொழுகும் ஆன்மாக்கள் ஆகிய சைவசித்தாந்திகள் பலர், சைவ சித்தாந்த மகா சமாஜம் என இச்சமாஜத்தை நிலை நாட்டினர். இவ்வாறு கூடியஇச்சமாஜம்

"ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மான டஞ்செய் வரதர்பொற் றாடொழ."

என்று அருண்மொழித் தேவர் அருளியபடி உடம்பின்பயனை யடைதற்கு இரண்டுவருடங்கள் (1906, 1907) தில்லையம்பதியில் குழுமிற்று. பின்னர் நாகப்பட்டினத்திலும், திருசிராப்பள்ளியிலும், இராமநாதபுரத்திலும், சென்னையம்பதியிலும், காஞ்சிமாநகரிலும், வேலூரிலும், கூடலூரிலும், முறையே 1908, 1909, 1910, 1911, 1912, 1913, 1914-ம் வருடங்களில் நடைபெற்றன. 1915-ம் வருடமாகிய கடந்த வருடம் தஞ்சையில் சைவ மடாதிபதிகளாலும், தஞ்சைவாசிகளாலும், நடாத்திய கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகள் அக்கிராசனராக எழுந்தருளினர். அதற்குத் தமிழ் நாட்டின் பலபாகங்களிலிருந்தும், சித்தாந்த சைவரும், தமிழறிஞரும் வந்திருந்தனர். டிசம்பர்மீ 25, 26, 27 தேதிகளில் பாவாணர் பலர் பல பிரசங்கங்களைச் செய்தனர். அக்கூட்டத்தைக் கூட்டிய மடாதிபதிகளுக்கும், தஞ்சை வாசிகளுக்கும் நிர்வாக சபையினர் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றனர்.



### அங்கத்தவர்.

இம்மகா சமாஜத்து இப்போதுள்ள அங்கத்தவர்களின் எண் 939 ஆகும். கடந்த வருடத்து எண் 733 ஆகும்.

### சமாஜகாரியஸ்தானம்.

இச்சமாஜ உத்தியோகஸ்தானம் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, சாமிநாய்க்கன் வீதி 66-வது எண்ணுள்ள வீட்டில் உள்ளது.

### சித்தாந்தம்.

இச்சமாஜத்தாரால் மாதந்தோறும் வெளிப்படுத்தப்படும் பத்திரிகை "சித்தாந்தம்" என்பதாகும். இவ்வருடம் காகிதவிலை ஒன்றுக்கு மூன்றாக ஏற்பட்டும் பன்னிரண்டுமாதங்களும் முட்டின்றி வெளிவரும்படி மிகப்பிரயாசையுடன் நடத்தப்பட்டது.

### பரீக்ஷைகள்

கடந்த வருடத்தில் குறித்தபடி இவ்வருடம்சமாஜ சம்பந்தமாக "சித்தாந்த பிரவேசப் பரீக்ஷை," "புராண பரீக்ஷை "ஆகிய இவ்விரண்டு ப்ரீக்ஷைகள் நடைபெற்றன.

### நிர்வாகசபையின் கூட்டம்.

இவ்வருடம் நிர்வாகசபையினர் சமாஜ உத்தியோக சாலையில் 14-முறைகூடிச் சமாஜசம்பந்தமான விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டுவனவற்றைப் பேசிச் செய்யக்கூடிய யாவையும் செய்தனர்.

### கௌரவ உபந்நியாசகர்கள்.

இச்சமாஜ சம்பந்தமாகப் பலவிடங்களிற் சென்று உபந்நியாசம் செய்து வரும் சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்-சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர், ஸ்ரீமான்-பொ-முத்தைய பிள்ளையவர்கள், உத்திரன்மேரூர்-ஸ்ரீமான் K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், ஸ்ரீமதி-ஆண்டாளம்மாள் எனவழங்கும் மங்கையர்க்கரசியார் அவர்கள் முதலியவர்களுக்கு இச்சமாஜத்தார் நன்றி பாராட்டுகின்றனர்.

### பத்திராசிரியர்.

இச்சமாஜப் பத்திரிகையாகிய "சித்தாந்தத்தை" மிக ஊக்கத்துடன் பத்திராசிரியாய் இருந்து நடத்திவரும் சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்-சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரரவர்கட்கு இச்சமாஜம் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறது.

### கணித பரிசோதகர்கள்.

மாதந்தோறும் சமாஜக்கணக்கினைப் பரிசோதித்துப் பத்திரிகையில் வெளியிட உபகரித்த ஸ்ரீமான்-A. சோமசுந்தரம் பிள்ளையவர்களுக்கும், M. கந்தசாமி முதலியார் B. A. அவர்களுக்கும், வருடக்கணக்கைப் பரிசோதித்துதந்த ஸ்ரீமான்-S. விநாயக முதலியார் B. A. அவர்களுக்கும் நிர்வாக சபையினர் நன்றிபாராட்டுகின்றனர்.

### கிளைச்சபைகள்.

மெய்கண்ட சந்தான சபை, சென்னை.
சைவ சமயாபிவிருத்தி சபை, செங்கற்பட்டு.
சைவ சித்தாந்த சபை, கட்டியாம்பந்தல்.
,, உத்திரமேரூர்.
,, திருக்கோவலூர்.
பாலவிக்நேஶ்வர சங்கம், பெங்களூர்.
சைவ சித்தாந்த சபை, பூவாளூர்.
சிந்தாமணி விநாயக பக்தஜன சபை, செம்பியம்.
ஸ்ரீ சுவர்ணாம்பிகை சைவசித்தாந்த சபை, சேலம்.
சிவனடியார் திருக்கூட்டம், ஆலந்தூர்.
வாகீச பக்தஜன சபை, விழுப்புரம்.
ஸ்ரீ சன்மார்க்க சபை, ஜலகண்டபுரம்.
ஸ்ரீ பிருஹத்கருணாம்பிகை சைவ சித்தாந்த சபை, அவிநாசி.
சைவ சித்தாந்த ஸ்ரீ பரமாசாரிய பக்தஜன சபை, தேர்த்துறை.

இச்சமாஜத்தின் அங்கத்தவர்களில் சிலர் சித்தாந்த பரமாகப் பல நூல்களை வெளியிட்டிருப்பதுபோல், சமாஜ வனிதையர் வகுப்புக் காரியதரிசியாராகிய 'ஆண்டாள் அம்மாள் என்னும் மங்கையர்க்கரசியார்' இவ்வாண்டு, "சிவஞானபோத வசனாலங்கார தீபம்," என்னும்நூலை வெளியிட்டுச் சித்தாந்த உலகத்திற்குதவியதை இங்குக்குறிப்பிக்க விரும்புகின்றோம். அன்றியும் "தேவார வேதசாரம்" என்னும் நூலொன்று அச்சாகி வருவதாகவும் கேள்விப்படுகின்றோம்.

இங்ஙனம்
சைவசித்தாந்த மகாசமாஜ
நிர்வாக சபையார்.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

## சைவசித்தாந்த மகாசமாஜ நிர்வாக சபையார்.

### போஷகர்கள்.

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்
ஸ்ரீமான் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள், M. R. A. S.
,, S. இரத்தினவேலுச் செட்டியாரவர்கள், சென்னை.
,, அ. தா. முத்துக்குமாரசுவாமி செட்டியாரவர்கள், கூடலூர்.
,, P. தெய்வசிகாமணிச் செட்டியாரவர்கள், சென்னை.
,, ஆண்டவராய விஜய அருணாசல வணங்காமுடி பண்டாரத்தார், அவர்கள், பாலவனம் ஜமீன்தார்.
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

### சபைத்தலைவர்.

ஸ்ரீலஸ்ரீ-அம்பலவாண நாவலர்சுவாமிகள் யாழ்ப்பாணம்.

### உதவிசபைத்தலைவர்.

ஸ்ரீமான்-J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள் B. A., B. L. High Court Vakil, மதுரை.
,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள் B A. B. L High Court Vakil, சென்னை.

### காரியதரிசி.

,, கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் சென்னை.

### பொக்கிஷதாரர்.

,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் சென்னை.

### பத்திராசிரியர்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்
சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள், சென்னை. (மணவழகு.)

### கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான்-S. விநாயக முதலியார் அவர்கள், B. A. சென்னை.

### உள்ளூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-T. V. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்
,, P. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

ஸ்ரீமான்-வல்லை-சண்முகசுந்தர முதலியார் அவர்கள்
,, M. கந்தசாமி முதலியார் அவர்கள் B. A. Monthly Auditor.
,, C. V. ஐம்புலிங்கம் பிள்ளையவர்கள்
,, K. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் M. A. B. L.
,, M. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்
,, A சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்
,, T. S. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்
,, A. சிவசங்கர முதலியார் அவர்கள்
,, C. ஏகாம்பர முதலியார் அவர்கள்.

வெளியூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் B A., B. L. கோயம்புத்தூர்.
,, ச. சபாரத்தின முதலியாரவர்கள், யாழ்ப்பாணம்.
,, T. S. குமாரசாமிப் பிள்ளை அவர்கள், B. A. தூத்துக்குடி.
மறைத்திருவன்-விருதை சிவஞானயோகிகள் அவர்கள், கோயில்பட்டி.
ஸ்ரீமான்-C. ஏகாம்பர முதலியார் அவர்கள், செங்கல்பட்டு.
,, T. பசுபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல்.
,, K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரமேரூர்.
,, M. R. குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.
,, J. சாமிநாதப் பிள்ளையவர்கள், பெங்களூர்.
,, A. R. அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.
பிரமஸ்ரீ-சிரிவாச குருக்கள் அவர்கள், சேலம்.
ஸ்ரீமான்-P. C. முருகேச முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.
,, காங்கேயம் அஷ்டாவதானம்-சேஷாசலம் நாயுடு அவர்கள், அவிநா[சி.
,, P. முத்தையபிள்ளை அவர்கள், தூத்துக்குடி.
,, S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.
,, T. S. சாமிநாதப் பிள்ளை அவர்கள், திரிசிரபுரம்.
,, S. மெய்கண்டப் பிள்ளை அவர்கள், நாகை.
,, C. T பார்த்தசாரதி முதலியார் அவர்கள், B. A., L. T. சிற்றூர்.
,, M. வேலுசாமித் தேவர் அவர்கள், இராமநாதபுரம்.
,, A. T. முத்துக்குமாரசாமி செட்டியார் அவர்கள், கூடலூர்.
,, M. கதிரேசம் செட்டியார் அவர்கள், மயிப்பாலன்பட்டி.
,, P. L. இராமசாமி நாயகர் அவர்கள், மிட்டாதார் பாகல்பட்டி
,, T. N. சீதாராமப் பிள்ளையவர்கள், தஞ்சை.
,, S. G. சிவலிங்க செட்டியார் அவர்கள், ஜலகண்டபுரம்.

வனிதையர் வகுப்புக்காரியதரிசி.

ஸ்ரீமதி-ஆண்டாளம்மாள் அவர்கள், சென்னை.

---



## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் பதினோராவது வருடத்து வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | மொத்தத் தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. | மொத்தத் தொகை ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1915ஹு டிசம்பர்ஸ் 1௳ இருப்பு. | | | | 543 | 9 | 9 | சமாஜ ரிஜிஸ்ட்டர் கட்டணம் ... | 50 | 0 | 0 | | | |
| | | | | | | | உத்தியோகசாலை குடிக்கூலி ... | 48 | 0 | 0 | | | |
| சாமாஜிகர் வருடச் சந்தா ... ... | 1092 | 10 | 0 | | | | சித்தாந்தம் சமாஜவிதிகள் அறிக்கைப் பத்திரம் இவைகள் வெளியிட காகிதம் அச்சுக்கூலி முதலியன .. | 792 | 12 | 6 | | | |
| ஆயுள் சாமாஜிகர் சந்தா ... ... | 70 | 0 | 0 | | | | | | | | | | |
| புத்தகசாலை ... ... ... | 1 | 0 | 0 | | | | | | | | | | |
| நன்கொடை ... ... ... | 3 | 0 | 0 | | | | | | | | | | |
| பழையபிரதிகள் விற்பனை... ... | 12 | 9 | 0 | | | | தஞ்சாவூர் கான்பிரன்ஸ் சம்பந்தமாய் ஸ்ரீமான் T. நல்லசிவன்பிள்ளை அவர்களிடம் ... ... ... | 43 | 12 | 0 | | | |
| தஞ்சாவூர் கான்பிரன்ஸ்வரவு ஸ்ரீமான் T-நல்லசிவன்பிள்ளை அவர்கள்மூலம் | 51 | 5 | 6 | | | | தபால் செலவு ... ... ... | 319 | 10 | 3 | | | |
| ஆண்டு பத்திரிகை ... ... | 5 | 0 | 0 | | | | உபந்நியாசகர் பிராயாணச்செலவு ... | 10 | 6 | 6 | | | |
| விளம்பரம் ... ... ... | 20 | 8 | 0 | | | | லிகிதர் சம்பளம் ... ... ... | 240 | 0 | 0 | | | |
| புத்தகவிக்கிரய கமிஷன் ... ... | 2 | 1 | 0 | | | | வண்டி சத்தம் ... ... ... | 10 | 12 | 3 | | | |
| சேவிங்ஸ்பாங்கி வட்டி ... ... | 12 | 1 | 7 | | | | மை, பிசின், காகிதம் முதலியன ... | 10 | 9 | 9 | | | |
| பரீக்ஷைகட்டணம் ... ... | 6 | 4 | 0 | | | | இதர செலவு ... ... ... | 6 | 15 | 3 | | | |
| இரும்பு பெட்டி ... ... ... | 50 | 0 | 0 | | | | தபால் பெட்டி ... ... ... | 2 | 14 | 0 | | | |
| | | | | | | | தந்தி செலவு ... ... ... | 2 | 15 | 0 | 1538 | 11 | 6 |
| | | | | 1326 | 7 | 1 | 1916ஹு நவம்பர்ஸ் 30௳ சேவிங்ஸ் பாங்கியில் இருப்பு... ... ... ... | | | | 320 | 1 | 7 |
| | | | | | | | பொக்கிஷதாரரிடம் .. ... ... .. | | | | 11 | 3 | 9 |
| | | | | 1870 | 0 | 10 | | | | | 1870 | 0 | 10 |

W. T. Govindaraja Mudaliar, *Treasurer.*

S. Vinayaka Mudaliar, *Auditor.*

K. Kuppusawmy Mudaliar, *Secretary.*

Madras, 25-12-16.

*To*

*The Secretary*

*Saiva Siddhanta Maha Samajam.*

*Sir,*

As requested in your letter of the 16th Instant, I have audited the accounts of the Samajam for the year 1915-16 ending with 30th November 1916 and found them correctly manitained.

2. I herewith append a statement of receipts and charges for the year under report duly verified.

I beg to suggest the desirability of introducing the system of receipts to be furnished in acknowledgment of, the receipt of subscriptions donation &c,, as this would afford an efficient check over the receipt being all brought into account.

Yours faithfully,
S. VINAYAKA MUDALIAR.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௯.] 1917௵ பிப்ரவரி௴ [பகுதி ௨.

## சாந்தோக்யோபநிஷத்து.

### முதலாவது பிரபாடகம்.

#### கண்டம் ௩.

இனி அதிதைவதம். இங்கே யெரிகிறவனை (சூரியன்) உத்கீதமாகத் தியானிக்க. பிரஜைகளின் பொருட்டு உதயமாகின்றான். இருளையும் அதனால்விளையும் பாவத்தையு நீக்குகின்றனன். எவனிந்த வுண்மையறிகிறானோ அவன் பயத்தினையும், இருளையும் (அஞ்ஞானம்) ஒழிக்கின்றான்.

௨. இச்சூரியனும் பிராணனுஞ் சமத்துவமானவை இரண்டு முஷ்ணமுள்ளது. சூரியன் திரும்பிவருகிறது, பிராணன் வெளியே போகிறதாகலின் இரண்டனையும் உற்கீதமாகத் தியானித்தல் வேண்டும்.

௩. எது (பிரஜைகளை) ஜீவிக்குமாறு செய்கிறதோவது பிராணவாயு. எது கீழ் நோக்குவதோ அது அபானவாயு. எது இரண்டிற்கும் நடுவே.

சரிப்பதுவோ அது வியானவாயு. அதுவாக்கு, அவ்வாயு மேனோக்காமலுங் கீழ் நோக்காமலு வாக்கை வெளிப்படுத்துகிறது ஆகலின் இதனை உத்கீத மாகத் தியானிக்க.

௪. மேற்செலுத்தாமலும் கீழ்ச்செலுத்தாமலு முச்சரிக்கிறவர்க்கே, ருக்கு உச்சரிக்கப்படுகிறது(அந்த) ருக்கே ஸாமம் ஆகலின் ஸாமம் கானஞ் செய்யப்படுகிறது, ஸாமம் உத்கீதமாகலின்.

௫. (வியானவாயு) அக்கினியை மதனம் பண்ணுகிறது, குறித்த அள விற் செல்லுகிறது, கடினமான தனுவை வளையச்செய்கிறது. இவை முதலிய தொழில்களில் மேல் கீழ் அளவைக் கடக்காமல் செய்தலின் வியானத்தினை உத்கீதமாகத் தியானிக்க.

௬. உத்கீதத்தினொவ்வொரு அட்சரத்தினையுந் தியானிக்கவேண்டும். உத் எனல் பிராணன், இது மேற்கிளம்புகிறது, கீ எனில் வாக்கு, தம் எனில் அன்னம் இதனால் ஜெகநிலை பெற்றுள்ளது.

௭. உத்—ஆகாயம், கீ—அந்தரிட்சம், தம்—பிருதிவி; உத்—சூரியன், கீ-வாயு, தம்-அக்நி; உத்-சாமம், கீ-யஜுர், தம்-ருக்கு. எந்த வித்வான் (இவ்வகையான) உத்கீதத்தைப் பிரார்த்திப்பானோ அவனுக்கு வேதம் தனது கன்மபலனாகிய பாலைக்கறந் தளிக்கிறது. அவனுக்கு அன்னமும் அதன்புசிப்பு முண்டாகிறது.

௮. ஒருவன் தியானிக்கத் தகுந்ததையே தியானிக்கவேண்டும், சாம த்தைத் தோத்திரஞ் செய்ய விரும்புகிறான் அதனையே தோத்திரஞ் செய் கிறான்.

௯. எந்த ருக்கை ருஷியைத் தேவதையைத் தோத்திரஞ் செய்வனோ அந்த ருக்கை ருஷியைத் தேவதையைச் சிந்திக்கின்றான்.

௰. எந்தச் சாமத்தால் ஸ்தோமத்தால் தோத்திரஞ் செய்ய உத்தே சிப்பனோ அவற்றையே சிந்திக்கின்றான்.

௧௧. எந்தத் திக்கைத் தோத்திரஞ்செய்ய விச்சிப்பனோ அந்தத் திக் கின் (அதிதேவதையைச்) சிந்திக்கின்றான்.



௧௨. பிரமத்தை யடைவதற் கேதுவாகிய தியானமாத்திரஞ் செய்து கொண்டு ஆன்மாவாகிய தான் கர்மத்தை உத்தேசித்துச் செய்பவனுக்கு எல்லாஞ் சமிருத்தியாம்.

## கண்டம் ௪.

ஓம் எனத் தியானிக்கவேண்டும், ஓம் கானம் செய்யப்படுகிறது.

௨. நமனுக்குப் பயந்து வேத வித்தையினை ஆசரிக்கிறார்கள், சந்தஸ் களைக் (கர்மங்களை) நடத்துவது வேதங்களிற் சொல்லப்பட் டிருக்கிறபடி யால் வேதங்கட்குச் சந்தஸ் எனப் பெயர்.

௩. மீனைப் பிடிக்கிறவன் ஜலத்திலிருக்கிற மீன்மீது இலட்சியமாக விருக்கிறதுபோல, மூன்று வேதகர்மங்களில் பழகுகிறவர்கள் மீது நமன் லட்சியமாக விருக்கிறான். இஃதுணர்ந்து தேவர்கள் வேதத்தில் தலைமையா யுள்ள ஓம் காரத்தைத் தியானிக்கிறார்கள்.

௪. ருக்கினை எப்போது அத்தியயனம் செய்கிறானோ அப்போது ஓம் என அதிஸ்வரம் செய்யவேண்டும்.

௫. அட்சரமாயும், அமிருதமாயும், அபயமாயுமிருக்கிற ஓம் காரத் தைத் தியானிக்கின்றானோ அவன் தேவர்கட்குச் சமுத்தவமாய் அமிர்தனா கிறான்.

மணவழகு.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரம்.

தொகுதி-௬. பகுதி-௧. பக்கம்-௫. தொடர்ச்சி.

படிகம்போல அருவுருவாமியல்புடைய ஆன்மா எவ்வெம் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம்மந்திர சொரூபியாவான் என்பது யாவராலும் உணரப்பெற்ற உண்மையாமாகலான் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தையே யனுபவிக்க விழையும் ஆன்மாக்கள் ஒவ்வொருவரும் இவன்றன் திருநாமமாம் திருமந்திரத்தையே தியானிக்கற்பாலராவர். இதனையுணர்த்தவே வடமொழிவேதமும் தன் னிருதயத்தின் கண்ணே சிவநாமத்தையோதியருளியது, அவ்வேதங்கள் பெயரால் நான்காயினும் அதனகத்துறு பொருளால் மூன்றேயாமென்பதை யுணர்த்தவே அமரசிம்மம் வேதங்களைத் "திரயீ" என்று கூறியது அதர்வணம் ஏனை மூன்றில் அந்தர்ப் பவமாவதாகும். இருக்கு, எசுர், சாமம் என்னு மற்றம்மூன்றனுள் நடுவணுள்ளது எசுர்வேதம். "அவ்வெசுர்வேதம் சம்மிதாகாண்டம் ஏழும் பாராயாதகாண்டம் மூன்றும் ஆரண்ணிய சங்கியாகாண்டம் ஒன்றும் உபநிஷத் காண்டம் ஒன்றும் ஆகப்பன்னிரண்டு காண்டங்களாகப் பிரிந்து எண்பத்திரண்டு பிரசினங்களையுடையதாய் மாந்திரமெனவும் பிராம்மண மெனவும் இருவேறு பகுதித்தாய் விளங்குவதாகும். அவற்றுள் முதற்கண்ணுள்ள மாந்திரமென்னும் சம்மிதாபாகமாகிய ஏழுகாண்டங்களுமே ஏனையவற்றிற் சிறந்தன. அவற்றுள்ளும் நான்காவதாகிய நடுக்காண்டமே கழிபெருஞ் சிறப்புடையதாகும், அந்நடுக்காண்டமும் ஏழு சம்மிதைகளாய்ப் பிரகாசிக்கின்றது. அவ்வேழனுள்ளும் நான்காவதாகிய நடுச்சம்மிதையின் நடுவே ஸ்ரீ ருத்திராத்தியாய மென்னும் சதருத்திரீய மந்திரம் பொலிவெய்தி விளங்க அச்சதருத்ரீய நடுவண் நாயகத் தன்மை பூண்டு ஸ்ரீ பஞ்சாக்கரம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது" ஆகவே ஸ்ரீபஞ்சாக்கரத்தால்



ஸ்ரீ ருத்திராத்தியாயமும் ஸ்ரீ ருத்திரத்தால் நடுச்சம்மிதையும் நடுச்சம்மிதையால் நடுக்காண்டமும் நடுக்காண்டத்தால் ஏழுகாண்டங்களும் எழுகாண்டங்களால் ஏனைய பகுதியுடன் எசுர் வேதமும் எசுர் வேதத்தால் இருக்கு, சாமம், என்னும் மற்றிருவேதங்களும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன இவ்வுண்மையையே

"மும்மறையுண டுமறையின் முனிவிலெழு காண்டத்திற்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையி
லம்மநடுச் சங்கிதையி னுதியீ ரெழுத்துநடுப்
பொம்மலுற வமர்மனுவின் பொருளாவா னெவன்மைந்த"

என்றெடுத்துப் போற்றினரோர் பெரியார், இங்ஙனம் அவ்வடமொழி வேதத்தின் இருதயமாய் விளங்குவது ஸ்ரீ பஞ்சாக்கரமா மென்பதை யுணர்த்தவே

"வேதநான்கினும் மெய்ப்பொருளாவது
நாதநாம நமச்சிவாயவே" என்னும்

தமிழ்வேதவாக்கிய மெழுந்தது. இங்ஙனம், வேதமென்னும் பாதபத்திற் பழுத்தகனியாவது பஞ்சாக்கரமாமென்பதை விளக்கவே

"பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே"

என்னுந் திருமந்திரத் திருவாக்கெழுந்தது. இதனால் வேதங்களினது இருதய மந்திரமாய்ச் சிறந்த சிவத்தியானத்தின் மிக்க தொன்றின்றென்பது சித்தாந்தமாயிற்று.

இனி வேதங்களினது முடி பொருள்களையே வெளிப்படுப்பான் போந்த உபநிடதங்களோ வென்னின் "சிவனை யாச்சிரயிக்காத சாத்திரத்தை எரித்துவிடுக"* என்றுபதேசிக்கின்றன. அங்ஙனம் சிவபெருமானை ஆச்சிரயிக்காத சாத்திர மொன்று உலகின்கண்ணின்று நிலவுதலே வேண்டாவென அறுதியிட்டுரைத்த உபநிடதங்கள் அவைதம்மகத்து எத்தனைமுறை யத்தியாவசியமா மிடங்களில் கூறியிருக்கு மென்பதை ஆராய்தல் வேண்டா.

*பிருகஜாபாலோபநிடதம்.

இனி நம்பனடிபேறும் நற்றவமுற்ற சைவசிகாமணிகளின் உய்வகைப் பயனாய்ப் போந்த சிவாகமங்களின் கண்ணேதெனின், அந்நாலுக்குறு பெயரானே அது விளங்குதலன்றியும் "சர்வாகமமயச்சிவ"* என்று சுருதியே அறுதியிட்டதாகலான் வேறு கூறவேண்டுதலின்றென்க. இங்ஙனம் "பலகலை யாகமவேதம்," யாவும் சிவமயமாய் விளங்குதல் பற்றியே.

"அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையு
மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து—மஞ்செழுத்தே
யாநந்தத் தாண்டவமும் யாவைக்கு மப்பாலா
மோனந்த மாமுத்தி யும்" என்னும் உண்மை விளக்கத்

திருவாக்குமெழுந்தது இங்ஙனம் இம்மந்திரமானது ஆன்மாக்களை முத்தியிலுய்க்கும் பெற்றித்தாம் சிறந்தசாதனமாதலையே உலகத்தில் வரம்பின்றி விரிந்து கிடக்கும் எல்லா நூன் முடிபுகளும் எல்லா ஞான முடிபுகளும் எல்லாவநுபவ முடிபுகளும் தன்னகத் தடங்கப்பெற்ற சிவஞானபோதமென்னும் முழுமுதல் நூலின்கண் சொருபலக்கணங் கூறும் சிறப்பியல்பின் பாற்படும் சாதனவியலின்

"ஊனக்கண் பாசமுணராப் பதியை
ஞானக்கண் ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே" என்னு

மிறுதிச் சூத்திரத்து மூன்று மதிகரணத்தின்கண் "சாதகங்களைச் செய்து முற்றிய ஆன்மாக்களுக்கு அச்சாதகங்களான் ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப் பட்டவிடத்தும் வேம்புதின்ற புழு அதனை நீத்துக்கரும்பினிற் றலைப்பட்டு அதன்சுவை தெரிந்துழியும் பயிற்சிவயத்தான் முன்னர்த்தான் நோக்கிய வேம்பின் சுவையையே நோக்கி நிற்குமாறுபோல முன்னர்த் தான் நோக்கிய பாசத்தையே நோக்கி நிற்குமாதலின் அந்நோக்கமாகிய வாசனையை நீக்குதற்கு உரிய சாதக மதுவாகலான் இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படியுச்சரிக்க" என்று வலியுறுத்தப்படுகின்றது.

அல்லதூஉம் ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னும் முப்பகுத்தாம் தத்துவம் முப்பத்தாறனுள் இறுதிக்கண்ணதாம் சிவதத்துவத்தின் மேற் றத்துவமொன் றின்றாமாகலான் அச்சிவதத்துவப்

*நாரதயரிவ்ராஜகோபநிடதம்.



பதியாக விளங்கும் பரம்பொருளின் மூலமந்திரமாய ஸ்ரீ பஞ்சாக்கரத்தினுங்கு மொன்றின்றென்பதூஉம் உணரப்படுமென்க.

மெய்த்த வொண்சிவ தத்துவமதனினு மேலாந்
தத்து வாந்தர மின்மைபோன் மறைகளின் றலையாய்
வைத்த வைந்தெழுத் தாகிய மந்திர மதனி
னுத்த ரம்பெறு மந்திர மிலையென வுணர்வாய். என்னும்

சித்தாந்த சிகாமணிச் செய்யுளும் இதனையே வுணர்த்துமாறறிக.

இனிச், "சிவாயநம" வென்னுமிவ் வைந்தெழுத்துக்களும், முறையே "பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களையும் சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னும் பஞ்ச ஞானேந்திரியங்களையும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்னும் பஞ்ச கன்மேந்திரியங்களையும், சத்தம், பரிசம், உருபம், இரசம், கந்தம் என்னும் பஞ்சதன் மாத்திரைகளையும், நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை என்னும் பஞ்சகலைகளையும், கன்மசாதாக்கியம், கர்த்தருசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், சிவசாதாக்கியம் என்னும் பஞ்சசாதாக்கியங்களையும், கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி என்னும் பஞ்சசத்திகளையும், சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்னும் பஞ்சப் பிரமங்களையும், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்னும் பஞ்சகர்த்தாக்களையும், சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும், அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் பஞ்சவர்ணங்களையும் தமக்குள் குறிப்பாய் உணர்த்தி நிற்கின்றன" என்றும் ஆன்றோர் கூறுகின்றனர்.

"அஞ்செ ழுத்தா லைந்துபூதம் படைத்தன
னஞ்செ ழுத்தாற் பலயோனி படைத்தன
னஞ்செ ழுத்தாகிய வக்கர சக்கர
மஞ்செ ழுத்துள்ளே யமர்ந்திருந் தானே. என்னுந் திருமந்

திரச் செய்யுளை நோக்க இன்னும் பலவும் காணக் கிடக்கின்றன.

இவ் வைந்தெழுத்துள் முதற் கண் நிற்கும் சிகாரம் சிவத்தையும் இரண்டாவதாய வகாரம் அருட் சத்தியையும் மூன்றாவதாய யகாரம் ஆன்மாவையும் நான்காவதாய நகாரம் திரோதானத்தையும் ஐந்தாவதாய

மகாரம் ஆணவத்தையும் உணர்த்துவதா மென்பது சைவசித்தாந்த சாத்திரப் பொருளாகும், இங்கு முதற் கண்ணின்ற சிகாரவகாரங்கள் பதியையும் இடைநின்ற யகாரம் பசுவையும் கடைநின்ற நகாரமகாரங்கள் பாசத்தையும் உணர்த்துகின்றன. எல்லாவற்றிற்கும் தலைமையுடையதும் சத்தாயுள்ளதும் ஆநந்தமே சொருபமாக வுடையதுமாய பதிப்பொருள் முதற்கண்ணிறுத்தப்பட்டது. பாச முடையதும் அதனானேதுக்க சொருபமுடையதும் பாசத்தை யொழித்துப் பதியையடைந்து ஆநந்தத்தையநுபவிக்க உரியதும் சத்துடன் சேர்ந்தவழிச்சத்தாயும் அசத்துடன் சேர்ந்தவழி அசத்தாயும் நிற்குமாற்றானே சதசத்தெனப் பட்டதுமான பசுவை பாசத்தின் பக்கத்தே பதியைச்சேர நிறுத்தப்பட்டது அசத்தாயுள்ளதும் எவ்வாற்றானும் பதியை யணுகாததும் செம்பிற் களிம்பென ஆன்மாக்களோடு தொன்மையே யுள்ளதுமாய பாசத்தைக் கடையில் நிறுத்தப்பட்டது. இம்முறைகொண்டே தான் "பதிபசுபாசம்" எனச் சைவசித்தாந்தத்தின்கண் வழங்கப்பெறுகின்றன. ஆகவே சத்காரியவாதம் கடைப்பிடித் தொழுகும் சைவ சித்தாந்தத்தின்கண் "பதியினைப்போற் பசுபாச மநாதி" என்னுந்திருமந்திரத் திருவாக்கை நிலைபெறுவிக்கும் மகாமந்திரமுமாயதிப் பஞ்சாக்கரமென்க. இம்முறை தவறி எவ்வாற்றானும் கடையாதலிலனான பதியைக்கடையில் நிறுத்தியும், எவ்வாற்றானும் தலைமையுறுதலிலனான பசுவை முதலில் நிறுத்தியும், எவ்வாற்றானும் பதியையணுகப் பெறுப்பாசத்தை பதியையும் பசுவையும் சேர இடைநிறுத்தியும் "சித்த சித்தீஸ்வரன்" என்று பொருந்தா முறையான் வழங்குவது அத்தொடர் தொகுத்தார் பெற்றி இற்றெனத் தெரிகின்றது, மற்று, "விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்" என்னும் மூவித ஆன்மா கூட்டங்களில் கடையாய சகலரிற் பரிபக்குவமுடைய ஆன்மா ஒன்றை அவர்கள் பதியெனக்கொண்டமையை விளக்கப் பதியைக்கடையில் நிறுத்தியும், அவர்களால் பதியெனக் கொள்ளப்பட்டவரும் பாசசம்பந்த முடையவர் அவர்களும் பாசசம்பந்த முடையவர் என்பதை விளக்கப்பதிக்கும் பசுவிற்கும் இடையே பாசத்தை நிறுத்தியும், எப்பொழுதுந் தாங்கள் பாசத்தோடு சம்பந்தப்பட்டவர்களே யன்றி அப்பதியைத்தானும் அடையப்போவதில்லை என்பதை விளக்க பசுவைப் பாசத்தின் பக்கமே நிறுத்தியும் முறைப்படுத்தார்கள் போலும்.

(இன்னும் வரும்)

**பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியார்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## தமிழர்க்கான சில குறிப்புகள்.

வானரர் — வால்+நரர்

வால்=வெள்ளிய நிறத்தையுடைய

நரர்=மனிதர்.

அதாவது, வாலி, சுக்கிரீவன், அநுமான் முதலியோர். இச்சாதியாருக்கு உரிய தேசம் மலைநாடு. அதாவது மேற்குமலைத்தொடரைச் சேர்ந்த மலைப்பிரதேசம்; நீலகிரி, மைசூர், பல்லாரி முதலிய உயர்ந்த நிலப்பாங்கான தேசம். நீலகிரி முதலிய இடங்கள் குளிர்ந்த தேசமானதால் அவ்விடத்தில் உள்ளவர்கள் கொஞ்சம் வெள்ளைநிறத்தை யுடையவர்களாயிருப்பது சகசமே. Torrid Zone-ல் உள்ளவர்களைக் காட்டிலும் வெளுத்தவர்கள் என்பதிற்றடையில்லை. ஆனால்தான் உஷ்ணப்பிரதேசங்களில் உள்ளவர்கள் அவர்களை வால் நரர் (வானரர்) என்று அழைத்தார்கள்.

பிற்காலத்தில், ஆரியர்களுக்கும் இவ்வானர சாதியாருக்கும் சண்டை உண்டானகாலத்தில் ஆரியக்கவிகள் வானரர் என்றபதத்திற்குக் குரங்குகள் என்ற அர்த்தத்தைக் கொடுத்து விநோதமாகப் பாடிவைத்தார்கள். ஒரு சாதியார் இன்னொருசாதியாரை Caricature செய்து எழுதுவதுவழக்கம். இப்போது நடக்கும் ஜர்மானிய யுத்தத்தில் ஆங்கிலேயப் பத்திரிகைக்காரர் ஜர்மன் கேய்சரை கழுகாகவும் இன்னும் எத்தனையோ விதமாகவும் வேடிக்கை வேடிக்கையாகப் பொம்மைகள் போட்டு அலங்கார வார்த்தைகளால் (Figurative Speech) கூறவில்லையா? அதைப்போல, ஆரியக்கவிகள் தமிழரில் ஒருசாதியாராகிய (வால் நரரை) வானரரை வாலுள்ள குரங்குகளாக உருவகித்து Caricature செய்து தங்களுடைய ஆரிய அரசனை உயர்த்தவேண்டிச் செய்த காரியமே யொழிய வேறின்று.

இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் இராமாயணமானது ஒருபக்கத்தார் எழுதியநூலே யொழிய பொது நூல் அன்று. அதே சரித்திரத்தைத்

தமிழர் எழுதியிருந்தது அதனிடைத்துப் பார்வையிட்டால் அப்போது ஆரிய ரைப் பற்றி எழுதியிருப்பது நன்றாய் விளங்கும்.

இப்போது நடக்கும் யுத்தமானது ஜர்மானியர் நியாய விரோதமாய் ஆரம்பித்த யுத்தமென்று நமக்கெல்லாம் நன்றாய்த் தெரிந்திருந்தும், அவன் என்ன சொல்லுகிறான், தான் செய்தது தான் நியாயம் என்று அதை வற்புறுத்தி எழுதுகிறான்.

அதுபோல, ஆரியர்கள் அக்காலத்தில் தமிழ் அரசர்களையும் பிறரை யும், தவம் செய்கையிலும், வேறுகாரியத்தில் முனைந்து இருக்கையிலும் மறைந்து நின்று கொன்றது அநீதமாயிருக்கத் தாங்கள் செய்தது மிகவும் நீதியானது என்று காட்டக் கற்பித்த ஒருகற்பிதம் என்று ஏற்படுகிறது. ஆகையால், வானரர் வாலுள்ள குரங்குகள் அல்ல. மிருகசாதியில் சேர்ந்த வர்கள் அல்ல. அவர்கள் தமிழரில் ஒரு சாதியார். வெண்மை நிறத்தை யுடையவர்கள்.

6. இலங்கை நாடாகிய தமிழ்நாட்டில் (Continant of Lemuria) அரசாண்ட அரசர்கள்:—

1. திரிபுராந்தகர் (தமிழ்ப்பெயர்-மேருவர்ம்பகன்)
2. சலந்தராசுரன்
3. அந்தகாசுரன்
4. வாணன்
5. சூரபன்மன்
6. இரணியன்
7. இராவணன்

இராவணன் காலத்துக்கு அப்புறம் இலங்கைநாடு பூராவும் கடல் கொள்ளப்பட்டது.

7. தமிழ் நாட்டின் பேரில் முதல் முதலில் படை யெடுத்தவர்கள் நீகிரோ வமிசத்தவர்கள். அதில் சேர்ந்த அரசர்கள் தாருகன், தாரகா க்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி முதலியவர்கள்.

8. நிகிரோவர்களுக்குப் பின் படை யெடுத்து வந்தவர்கள் மங்கோ லிய வமிசத்தவர்கள். இதில் சேர்ந்த அரசர்கள் சூரன், பதுமன், சிங்க முகன், பானுகோபன் முதலியோர்.

9. மங்கோலியருக்குப் பின் படையெடுத்து வந்தவர்கள். ஆரியர்.



(இவ்வரலாறுகளை யெல்லாம் "தமிழுலகம்" என்று நான் எழுதிவரும் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் பரக்கக் காணலாம்.)

10. பூர்வத்தில் குமரியாற்றுக்குத் தென்பாகமானது 49-நாடுகளா கவும் வடபாகமானது 56 தேயங்களாகவும் பகுக்கப்பட்டிருந்தது.

11. மேரு மலையானது பூமியின் மத்தியில் இருந்தது. அதாவது Equator-ம் axis-ம் சந்திக்கிற இடம். அந்த இடமானது இப்போது உள்ள இலங்கைத் தீவுக்கும் தென்பாகத்தில் உள்ளது. பூகோளப் படத் தில் பார்த்தால் தெரியவரும், இராவணன் காலம்வரை யிருந்து பின் கடல் கொள்ளப்பட்டது. அம்மலையைச் சுற்றிலும் பொன்கனிகளும் நவரத்தி னக் கனிகளும் நிறைந்திருந்ததாகச் சீனதேசத்துச் சரித்திரம் கூறுகின் றது. "மேருவைச்சார்ந்த காகமும் பொன்னிறமாகும்" என்ற பழமொழி யும் அம்மலையிலுள்ள பொன்கனிகளின் மிகுதியைக் குறிக்கின்றது. இம் மலையிலுள்ள வயிரக்கனிகளில் இருந்து 4-5 அடி நீளமும், 2-3-அடி அகல மும், 1-அடி கனமும் உள்ள வயிரங்களும் வெட்டி எடுத்ததாகவும் அவ் வயிரத்தாலேயே கத்தி முதலிய ஆயுதங்கள் செய்து அரசர்கள் தரித்ததாக வும் ஏற்படுகிறது. இந்திரனுடைய வச்சிராயுதமும் இக்கனிகளினின்றும் எடுக்கப்பட்டதே.

"சூரியன் மேருவை வலம்வருகிறான்" என்றபேச்சு தமிழர்கள் கடல் கொண்டுபோன நாட்டில் வசிக்கும்போது ஏற்பட்டது. ஏனென்றால் அங்கிருந்து பார்த்தால் தான் சூரியன் வலம் வருவது போல் தோன்றும்.

மேருமலை எல்லாமலைகளையும் விட உயர்ந்தது.

ஆரியர்கள் வடதுருவத்தை (NorthPole) "சுமேரு" வென்றும் தென் துருவத்தை (South Pole) "குமேரு" என்றும் கூறுவது வழக்கம்.

சிலபேர் இமயமலையையும், ஆல்டாய் மலையையும், வடதுருவத்தை யும், மேருவென அழைக்கிறார்கள் அது தவறான அபிப்பிராயம் என்று நீங்களே உணர்வீர்கள்.

ஆரிய நூல்களில் அதாவது வியாசரால் எழுதப்பட்ட 18-புராணங் களிலும் இன்னும் அவர்களுடைய வேதங்கள் இதிகாசங்களிலும் வடதுரு வத்தைச் "சுமேரு" என்றும் தென் துருவத்தைக் "குமேரு" என்றும் கூறப்பட்டிருக்கின்றன. சு, கு, என்னும் எழுத்துக்களை நீக்கி "மேரு" என்றும் கூறப்பட்டிருக்கும். அதனாலே தான் அவர்களுடைய சங்கர்ப்ப மந்திரத்தில் "மேரூர் தக்ஷிணே பார்சே" என்று வருகிறது.

ஆகையால் ஆரியர்கள் கூறும் மேருவல்ல தமிழர் கூறும் மேரு.

(இன்னும் வரும்)

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் கக-ம் ஆண்டு விழாக்கொண்டாட்டத்தில் அக்கிராசனராயிருந்த ஸ்ரீமாந். ச. சபாரத்தின முதலியார் அவர்கள் செய்த

# ஆரம்ப உபந்நியாசப் பொழிப்பு.

சபையோர்களே,

"ஓரும் வேதாந்தத் துச்சியிற் பழுத்த" அதிமதுரத் திவ்விய கனியினது சாரமாயுள்ள சைவசித்தாந்தத்தை விருத்தி செய்தலின்கட் பெருமுயற்சி செய்யும் சைவ சித்தாந்த மஹாசமாஜத்தின் பதினோராம் ஆண்டு விழாவைக் கொண்டாடுமாறு கூடிய இந்தப் பெருஞ் சபையில் அக்கிராசனம் வகிக்கத் தமியேன் சிறிதும் அருகனல்லேனாயினும், உங்கள் வேண்டுகோளை மறுத்தற்கஞ்சி நான் அதற்கு உடன்படுவேனாயினேன். அங்ஙனம் உடன்பட்டதற்கு முக்கிய காரணம் இச்சபையின்கட் பேரறிவாளர் பலராற் செய்யப்படும் பிரசங்காமிர்தங்களைக் கேட்டு மகிழ்தல் வேண்டும் என்னும் எனது விருப்பமே என்பதை உங்களுக்கு நான் முன்னர்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆயினும் இந்தச் சபையை ஆரம்பித்தற் பொருட்டுச் சில வசனங்கள் கூறவேண்டியது எனது கடமையாயிருத்தலால், எங்கள் சமயத்தின் தத்துவ ஞானத்துறைகளை மேல்வரும் உபந்நியாசகர்களுக்கே சமர்ப்பித்து, நான் இப்போது நம்மவர் எல்லாம் அனுட்டிக்க வேண்டிய அநுபவார்த்தமாகிய சில விஷயங்களை மாத்திரம் எடுத்துக் கூறத் துணிந்தேன்.



உலகத்திலே எந்தெந்தச் சாதியும் விருத்திபெறுதற்கு அந்தந்தச் சாதியின் சமயமே முக்கியகாரணம். இந்தியர்களாகிய எமக்குச் சமய விருத்தியின்றி யாதொரு விருத்தியும் வாய்க்கமாட்டாது. நாம் எல்லாம் எமது இயற்கையிற்றானே ஆன்மார்த்தத்தில் மிக மேற்பட்டதொரு நிலையை அடைந்துளேம் என்பது எங்கள் தேசத்திலே அங்கங்கெல்லாங் காணப்படும் ஆலயங்களாலும், அவ்வாலயங்கள் முட்டின்றி நடைபெறுதற் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுக் கிடக்கும் திரவிய கோடிகளாலும், அவ்வாலயங்களை ஆவலோடு நாம் சென்று தரிசித்து விழாக்கொண்டாடும் எமது இயற்கைத் தருமத்தாலும் இனிதறியக் கிடக்கின்றது. அதுமாத்திரமல்லாமல், உங்கள் தேசத்திலே இந்தக்காலம் என்று வரையறுத்தற்கரிய அந்தக் காலந் தொடங்கி அமைந்துள்ள சமய சாஸ்திரங்களாகிய வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஸ்மிருதிகள், பாஷியங்கள் கலைஞானங்கள் என்றுள்ள இவற்றின் பெருக்கத்தாலும் எமது சமய நாட்டம் இத்துணைத்தென்பது எவர்க்கும் பொள்ளெனப் புலனாகும். இந்த நிலையை அடைந்துள்ள இந்தியர்களாகிய நாங்கள் சமய விஷயத்தை அலட்சியஞ்செய்யத் தலைப்படுவதுண்டாயின் எமது லௌகிக நிலையிற்றானும் நாம் ஒருசிறிதாவது விருத்திபெறுவது கூடாது. ஆன்மார்த்தத்தில் பெரிதும் கீழ்நிலையில் உள்ள மேலைத் தேசவாசிகள் சமய விருத்தியைக் குறித்த சிந்தனையின்றி லௌகிகத்தில் விருத்தி பெறுவது ஒருவாறுகூடும். இந்தியர்களாகிய எங்களுக்கு அது ஒரு சிறிதுங் கூடாது. மாமிச பக்ஷண விலங்குகளாகிய சிங்கம் புலி முதலிய மிருகங்கள் மாமிசத்திற் சீவித்தல் கூடும். தாவரபட்சண விலங்குகளாகிய யானை குதிரை முதலியன அங்ஙனஞ் சீவித்தல் கூடாது. நாம் எல்லாம் எமது இயற்கைத் தருமத்தின் வழிநின்று எமக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகிய சமயவிருத்தி கொண்டே லௌகிகத்திலும் விருத்தி பெறுதல் வேண்டும்.

இங்ஙனம் சமய விருத்தியைப் பெரிது வேண்டிக் கிடப்போமாகிய எமது தற்கால சமய நிலை எவ்வாறு கிடக்கின்றது என்பதை நாம் எல்லாம் சற்றே ஊன்றிச் சிந்தித்தல் வேண்டும். இது பெரிதும் ஈனஸ்திதியை அடைந்துவருகின்றதென்பது நாம் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. எங்கள் சமய விருத்திக்குப் பல சத்துருக்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே கிறிஸ்தவமதம், மற்றொரு பக்கத்திலே உலோகாயதமதம், பின்னொருபக்கத்திலே மாயாவாதமதம், இன்னுமொருபக்கத்திலே கல்வி

மதமுமாக எங்கள் சமயம், நாற்புறத்தும், சத்துருக்களாற் சூழப்பெற்றுக் கிடக்கின்றது. எங்களுக்குச் சத்துருக்கள் புறத்துமாத்திரமன்றி அகத்தும் ஏற்பட்டிருத்தலை நாம் காணும்பொழுது எமது சமயநிலையைப்பற்றி நாம் என்சொல்லத்தக்கது? புறச்சத்துருக்களால் மாத்திரந்தானே நாம் பெரிதும் அவலப்பட்டகாலம் ஒன்றிருந்தது அந்தக்காலம் தெய்வானுக்கிரகத்தாலும் மகிமைதங்கிய ஆங்கில வேந்தரின் செங்கோன்மையாலும் பெரிதுங் கழிந்துவிட்டதென்னலாம். ஆனால் எங்களுக்குள்ளேயுள்ள அகச்சத்துருக்களின் கொடுமையே எங்களுக்கு மிகப் பெருங்கேடாய்க் கிடக்கின்றதென்பதை நாம் எல்லாம் சாவதானத்தோடு சிந்திக்கவேண்டியது.

நம்மவருட் கல்வியறிவுடையார் என்று மதிக்கப்படுவார் பலர், எமது பிதிரார்ச்சிதமாக எம்மிடத்தே யமைந்துள்ள சமயாசாரங்களையும், அவ்வாசாரங்களுக்கு ஏதுவாகிய அந்தரங்க உண்மைகளையும், அவ்வாசாரங்களால் நாம் பெறத்தக்க சிலாக்கியங்களையும் ஒரு சிறிதாவது சிந்தித்தலின்றி, அவைகள் எல்லாம் பயனில்லா மூடாசாரங்கள் என்றும், அவைகள் எல்லாம் எமது லௌகிக விருத்திக்குப் பெருந் தடைகளாகக் கிடக்கின்றன என்றும், ஆதலால் அவைகளைஎல்லாம் நாங்கள் விரைவிற் களைந்துவிடுதல் வேண்டும் என்றும் கர்ச்சிக்கின்றார்கள்! சமய ஞானிகளை எல்லாம் சோம்பேறிகள் என்றும் அவர்களால் உலகத்துக்குச் சிறிதாவது ஒரு பயனில்லை என்றும் அவர்கள் அனைவரையும் இந்தியாவை விட்டு விரைவிற் துரத்திவிடுதல் வேண்டும் என்றும் அட்டகாசஞ் செய்கின்றார்கள்! எங்கள் சமயசாஸ்திரங்களை எல்லாம் கட்டிக் கடலில் வீழ்த்தி விடுதல் வேண்டும் என்று முழங்குகிறார்கள்!! ஐயையோ! எங்கள் நிலை இங்ஙனம் இருக்குமாயின் நாம் எல்லாம் உய்யுமுறை எப்படி? நாம் எல்லாம் முன்னொருகாலத்திலே சமயத்துறையில் விருத்தி அடைந்தமை காரணமாக லௌகிகத்தினும் மிக உன்னதமான பதவியில் இருந்தோம். அந்தச் சமயத்துறையை அலட்சியஞ்செய்தமை பற்றியே நாம் இப்போது அடைந்துள்ள ஈனஸ்திதியை அடையலாயிற்றென்பதை நமது லௌகிக ஞானிகள் கவனித்தல் வேண்டும். இந்திய சரித்திரத்தை நாம் ஆராய்வதுண்டெனில் எமது ஏற்றமும் தாழ்வும் எமது சமயநிலை அளவாகவே மாறிமாறி வந்துகொண்டிருந்தன என்பது நன்கு புலப்படும். எமது ஆரியவர்த்தத்துள்ள சனங்கள் எல்லாம் உண்மையை உள்ளபடி கண்டு கடவுள் அருளிய வேதசிவாகமங்களிற் பத்திசெய்து மிக உன்னதநிலையில் இருந்தார்கள். பின்னொரு



காலத்திலே இவர்கள் இந்த வேதாகமப் பொருள்களைத் திரிபுற விளங்கி வேதவாக்கியங்களே தமக்குப் பயனை அளிக்கும்; கடவுள் ஒருவர் இல்லை என்னும் மீமாஞ்சமதத்தைத் தலைக்கொண் டொழுகினர். இவர்களுடைய கொள்கையைக் கண்டிக்குமாறே ஏகான்மவாதிகள் என்னும் மற்றொரு சாரார் பின்னர் எழுந்து, எல்லாம் கடவுளே, கடவுளை அன்றி வேதங்களும் இல்லை, ஆகமங்களுமில்லை, பிறிதொரு பொருளுமில்லை என்னும் மாயாவாதத்தை மேற்கொண்டொழுகி, தாம் எல்லாம் கடவுள் ஆதலின் தாம் எவ்வெச்செயலையும் விரும்பிய விரும்பியபடி செய்யலாம் என்று எண்ணி, விதிவிலக்குகளை மறந்து தருமங்களை அலட்சியஞ்செய்யத் தலைப்படுவாராயினர். இவர்களால் எய்திய கேட்டைக் கண்டமையாற்றானே கௌதமபுத்தர் கிளர்ந்து கடவுளைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டுவதில்லை, தருமானுஷ்டானமே எமக்குப் பெரிது வேண்டப்படுவதென்று பிரசங்கிக்கத் தொடங்கினர். இவருடைய பிரசங்கத்தாற் சனங்கள் எல்லாம் கடவுளை மறக்கவே உலகத்திற் பெருங்கேடுகளும் கிளர்வனவாயின. இவருடைய போதனையை நிராகரிக்குமாறே எமது சமய குரவர்கள் பிறரது கடவுட்சேவையும் தருமானுஷ்டானமுமாகிய இரண்டும் எமக்கு வேண்டப்படுவன என்று எங்கள் சமய நிலையை உள்ளவாறு எடுத்துக்காட்டிப் பற்பல அற்புதங்களாலும் தமது போதனைகளாலும் உண்மையை நிலைநாட்டினார்கள். இவர்களுடைய போதனைகளையும் இப்போதுள்ளவர்கள் புறக்கணித்துச் சமயத்தை நாம் சிந்திப்பதெல்லாம் வீண்செயல் என்றும் லௌகிக விருத்தியையே நாம் கவனித்தல்வேண்டும் என்றும் பத்திரிகைகள் தோறும் முழங்கத் தொடங்கிக்கொண்டார்கள் மேலைத்தேசத்தார் மேல் நிலைக்கு வந்ததெல்லாம் அவர்கள் சமயத்தைப் புறக்கணிந்தமை பற்றியே என்றும், அவர்களைப் போலவே நாமும் சமயத்தைப் புறக்கணிப்பதுண்டாயின், நாமும் மேல்நிலைக்கு வந்துவிடலாம் என்றும் இவர்கள் அதிகம் ஆத்திரத்தோடு கண்ணைமூடிக்கொண்டு பெருங்கூச்சல் இடுகின்றார்கள். மேலைத்தேசவாசிகள் சமயத்தை அலட்சியஞ்செய்து லௌகிகத்தில் விருத்தியடைவது ஒருவாறு கூடினும் கூடும். இந்தியர்களாகிய நாங்கள் அவ்வாறு விருத்தி பெறுவது ஒருபோதுங்கூடாது. நாங்கள் ஆன்மார்த்த நிலையிலே அவர்களிலும் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளோமாதலால், அந்த ஆன்மார்த்த விருத்தியையும் கவனித்தாலன்றி, லௌகிகத்தில் நாம் விருத்திபெறுவது சிறிதுங் கூடாது. ஒரு சிறுகுழந்தை பாலுணவில் மாத்திரம் சீவித்தல்கூடும். அது வயதின் முதிர்ந்துவிட்டதாயின் அதனுக்குப் பால் உணவு போதியதாகாது. அதுபோலவே ஆன்மார்த்த நிலையில்

ஏற்றமடையாத மேலைத்தேசவாசிகள், சமயநெறியைப் பரிபாலியாமல் லௌகிகத்தில் ஏற்றமடையலாம். ஆன்மார்த்த நிலையில் ஏற்றம் அடைந்துள்ள இந்தியர்களாகிய நாங்கள் சமயநிலையை அலட்சியம் செய்து லௌகிகத்தில் விருத்திபெறுவது சிறிதுங்கூடாது. சமுத்திரத்தில்வாழும் மச்சங்கள் சமுத்திரத்திற்றானே வாழுதல் வேண்டும். அவற்றை எடுத்துத் தரையில் விடுத்தால் அவைகள் ஒருபோதும் சீவிக்கமாட்டா என்பதை எங்கள் இந்திய லௌகிக ஞானிகள் தமது சிந்தையில் நன்றாக அழுந்திச் சிந்தித்தல்வேண்டும். இந்தியர்களாகிய நாங்கள் எங்கள் இயற்கைத்தருமத்தின் வழி எமக்கெல்லாம் இன்றியமையாது வேண்டப்படும் சமய உணர்வின்றி நாம் லௌகிகத்திற்றானும் விருத்தி அடையமாட்டோம்.

எங்கள் இந்திய லௌகிக ஞானிகள் மேலைத்தேசத்தின் லௌகிக விருத்தியால் தமது நற்பார்வை மழுங்கப்பெற்றுச் சிறிதாவது எமது தேசம் விருத்தி பெறுதற்குரிய முறையை உள்ளபடி ஆலோசியாது, எம்மை எல்லாம் கண்ணைமூடிக்கொண்டு மேலைத்தேசத்தைப் பின்பற்றும்படி ஆர்ப்பரிக்கின்றார்கள். அவர்களுக்கு அறிவே பெரும் பொருளாய்க் கொண்டது சமய பத்தியும் சமய விசுவாசமுமாகிய உணர்வெல்லாம் மௌட்டிகம் என்பது அவர்கள் கருத்தாய்க்கொண்டது அம்மம்ம! இஃதென்ன விபரீதம்! எமக்கெல்லாம் உணர்வே அறிவினும் சிறந்ததென்பதை இவர்கள் கிஞ்சித்தும் சிந்திக்கின்றாரில்லை நாம் அறிவை ஈட்டுவதுதானும் எமது உணர்ச்சியை வளர்க்கும் பொருட்டே என்பதை இவர்கள் சிறிதும், பொருட்படுத்துகின்றார்களில்லை உணர்ச்சி இல்லாக்கால் நாம் அறிவைத் தானும் ஈட்டுதல் கூடாதென்பதை இவர்கள் சிறிதாவது கவனிக்கின்றார்களில்லை. நாம் ஈட்டிக்கொள்ளும் எந்த அறிவாவது எமது உணர்விற் சென்று அழுந்தினாலன்றி எமக்கு அவ்வறிவால் யாதொருபயனும் வாய்க்கமாட்டாதென்பதை இவர்கள் நினைக்கின்றார்களில்லை. கடவுளைச் சேவிக்கும் விஷயத்திலே எமக்கு உணர்வே பெரிது வேண்டப்படும் என்பதை இவர்கள் பொறுமையோடு ஆலோசிக்கின்றார்களில்லை. உலகத்திலே எந்தெந்தச் சீவராசியும் உணர்வைத் தானே துணைக்கொண்டு இயங்குகின்றது என்பதைச் சிறிதும் பொருட்படுத்துகின்றார்களில்லை. மனிதன் தானும் தனக்கு இயற்கை முறையாக அமைந்துள்ள ஆப்தரது வாக்குகளிலே பத்தியும் விசுவாசமுமாகிய உணர்ச்சியுற்றே விருத்தியுறுகின்றான் என்பதை இவர்கள் சீர்தூக்குகின்றார்களில்லை. எமது உணர்ச்சியைப்பயிற்றும் பயிற்சியே (culture) எமக்குச் சிறந்த சாதனம் என்பதை இவர்கள் சிறி



தாவது யோசிக்கின்றார்களில்லை. மேலைத்தேச லௌகிகத்தால் தமது அறிவெல்லாம் மறைப்பெற்றுச் சமய பத்தியையும் சமய விசுவாசத்தையும் மூடபத்தி மூடபத்தி என்று தங்கள் மூடத்தனத்தைப் பகிரங்கஞ் செய்கின்றார்கள். ஐயையோ! இப்படியானால் நமது தேசம் முன்னுக்குவருதலுங்கூடுந்தானோ? சபையோர்களே சற்று ஆலோசியுங்கள்.

இதனால் நான் எவ்வெக்கொள்கையையும் நம்பிக்கொள்ளுதல் வேண்டும் என்று சொல்லவில்லை. எமது இயற்கை முறைப்படி நாம் எல்லாம் நம்பவேண்டிக்கிடக்கும் கொள்கைகளை நாம் நம்பினாலே உலகத்திற் சீவித்தல் கூடும் என்பதை இவர்கள் சிறிதாவது சிந்தியாமல், இயற்கை முறைக்கு மாறாயதொரு பிரசங்கத்தைச் செய்கின்றார்களே என்பது தான் நான் உங்களுக்கு எடுத்துக்காட்டுவது. நாம் நம்புதற்கடமை பூண்டுள கொள்கையையும் அது பிழையுடைத்தென்று பூரணமாகக்கண்டால் நாம் அதைத் தடையின்றி ஒழிக்கவேண்டும். இங்ஙன மின்றேல் நாம் நம்பவேண்டியவற்றை நம்பியே உணர்ச்சியிற் சிறந்து உலகத்தியங்குதல் வேண்டும் என்பதை இவர்களுக்கு இவர்கள் பாராட்டும் மேலைத்தேசக் கல்வி எப்போது காட்டுமோ நான் அறியேன்.

மேலைத்தேசத்தார் தமது பழைய ஆசாரங்களை நம்பாது புறக்கணித்தல் ஒருவாறு சாலும். என்னை? அவர்களிடத்தே யாதொரு சிறந்த பாரம்பரியம் சிறிதாவது இருந்ததில்லை. அவர்கள் தமது முன்னோர்களினும் அறிவாலும் பிறகாரணங்களாலும் ஏற்றமுற்றிருக்கின்றார்கள், இந்தியர்களாகிய நாங்களும் எங்களைப்பற்றி இவ்வாறு சொல்வது கூடுமோ? எங்களுக்கு மிகச் சிறந்துளதாய மகா மகிமையுடைய பாரம்பரியம் ஒன்றுளது. எங்கள் முன்னோர்கள் எங்களிலும் பல்லாயிரமடங்கு அறிவிற் சிறந்தவர்களாய் எங்களுக்குப் பல ஆசாரங்களையும் அனுட்டானங்களையும் திரட்டி வைத்து எமக்கெல்லாம் அவற்றைப் பிதிரார்ச்சிதமாகத் தந்திருக்கிறார்கள். பாரம் பரியம் சிறிதுமில்லாத மேலைத்தேசவாசிகள் தங்கள் பழைய வழக்கங்களைக் களைந்துவிடுவதைக் கண்டு நாமும் அங்ஙனஞ் செய்யத் தலைப்பட்டால் எங்களைப்போல அறிவில்லாதவர்கள் உலகத்தில் யாரும் இருப்பார்களா? எங்களுக்குள்ளே சிறந்ததாகிய பாரம்பரியம் இருத்தலால் நாம் சிறிதாவது தாழ்க்காது அதனைக் கைக்கொள்வது கூடுமாகவும், பாரம்பரியம் சிறிதும் இல்லாத மேலைத்தேசவாசிகளைப்போல் நாமும் ஒழுகவேண்டும் என்பது தவழ்ந்து விளையாடும் சிறுகுழந்தை நிருவாணியாயிருத்தலைக்

கண்டு பதினைந்து வயதுள்ள சிறுவனும் தனது வஸ்திரத்தைக் களைந்தெறிதல் போலும் ஒரு மவுட்டிகமாகுமன்றே!

சபையார்களே,

இந்தியர்களாகிய நாங்கள் விருத்தி அடைய வேண்டுமாயின் நாம் எல்லாம் மிகச்சிரத்தையோடு அநுசரித்தற்பாலனவாகிய மூன்றுசாதனங்கள் உண்டு. அவையாவன:—

1. பாரம்பரிய பத்தி/Respect to traditions.
2. விசுவாசசாதனை Nursing of Faith.
3. சமயானுட்டானம் Religious practice.

இந்த மூன்று சாதனங்களையும் நாம் கிரமமுறச் சாதித்துவந்தாலன்றி எமதுதேசம் பழயநிலைக்கு ஒருபோதும் வரவேமாட்டாது. எங்கள் தேசத்திலே உண்மையான அபிமானமுடைய பெரியோர் எல்லாம் இந்தச் சாதனங்களை உலகத்திலே விருத்தி செய்தற்குப் பெரிதும் முயலுதல் வேண்டும். இவர்கள் எமது நாட்டிற் குடிபுகுந்த கிறிஸ்தவ பாதிரிமாராலும் மேலைத்தேசவாசிகளாலும் மயங்கி விடாது எமது தேசத்தின் நிலையை எமதுதேச ஆசாரப்படி விருத்திசெய்ய முயலுதல் வேண்டும். இந்த ஆசாரங்களை இவர்கள் எமது சமயஞான வெளிச்சங்கொண்டு விசாரிப்பார்களாயின், அந்த ஆசாரங்களுள்ளே எமது விருத்திக்குச் சாதனமாயுள்ள பல உண்மைத் துறைகள் அமைந்திருத்தலைச் செவ்விதிற் காண்பார்கள்.

இவர்கள் இங்ஙனம் காணும்படி செய்யவேண்டியது. இதுபோலும் சமாஜங்களுக்கும் எங்கள் தேசத்திலே அங்கங்கு அமைந்துள்ள தேவஸ்தானங்கள் மடாலயங்களுக்கும் பொறுத்த பெருங்கடனாகு மென்பதை உங்களுக்கு எடுத்துக்காட்டி எனது உபந்நியாசத்தைமுடிக்கிறேன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# “ஆத்திச்சூடி ஆராய்ச்சி.”

“கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.”

இத்திருவாக்கானது 7-வது நூற்றாண்டின் பிற்பாதியில் அவதரித்த நமது மூதாட்டியாரான ஒளவையார் அருளிச்செய்த நீதி நூற்களான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை இவைகளில் ஒன்றான ஆத்திச்சூடியில் உள்ளதை எவருமிளமை தொட்டறிந்ததே. ஆயினும், 1. மகடூஉ முன்னிலையாக்க கற்பு=பதிவிரதாதர்மத்தை அநுட்டிக்கும் நிலை, எனப்படுவது=என்று சொல்லப்படுவது, சொல்=தன் கணவனதுசொல்லை திறம்பாமை=கடவாதிருத்தல். (அதாவது) பத்னி தனது பதியின் உத்திரவை மீறாது நடக்குந்நிலையே கற்பாகும். கல்+பு=கற்பு, ளவேற்றுமையில் றடவுமல் வழி என்பது. நன். மெய்யெனப்படுவது. 227. (2) ஆடூஉமுன்னிலையாக்க.கற்பெனப்படுவது=உத்தமவிரதமனுட்டித்தலென்று, சொல்லப்படுவது, சொல்=விவாககாலத்தில் சொல்லப்படும் சொல், திறம்பாமை=தவரா திருத்தல்(அதன்படி நடத்தலே) (அதாவது.)விவாககாலத்தில் திரிமூர்த்திகள், பஞ்சபூதங்கள், உற்றார், பெற்றார், ஆன்றோர் சாக்ஷியாக மூன்றுலோகத்திலும், அர்த்தத்திலும், ஜாமத்திலும், காமத்திலும் மணமகளை விட்டு நீங்காது சம்ரட்சிக்கிறேன் என்று சொல்லப்படும் உறுதிச்சொல்லினின்று தவராதிருக்கும் தன்மையே கற்பாகும். 3 பொதுவகையில் கற்பெனப்படுவது=விஷயங்களை ஐயந்திரிபறக்கற்றல் என்பது, சொல்=அவையின்கண் தன்னால் சொல்லப்படும் சொல், திறம்பாமை=அணுவளவினும் மாறுபடாதிருத்தலாகும். (அதாவது) விஷயங்களை ஐயந்திரிபறக் கற்றலின் தன்மையாவது அவையின் கண்ணே தன்னால் சொல்லப்படும் சொல்லினின்று தவராதிருக்கும் தன்மையை உடைத்தாயிருத்தலே கல்விக்கு அழகாகும். கல்+வி=கல்வி, இங்கு கல் என்பது கெல்லுதல் கிண்டுதல், ஆராய்தல் எனப் பொருள்படும். அதாவது விஷயங்களை ஆராய்ந்தறியும் ஞானமே கல்வி. இது வித்யா என்னும் தாதுவிலிருந்து வந்த வித்தை எனப்படும். (4) சிறப்புவகையில் கற்பெனப்படுவது=குருமுகமாகச் சீடன் ஜீவன் முத்திபெறக் கற்றுக்கொண்ட 'தன்மை எனப்படுவது, சொல்=குருவாக்கியமான ஒப்பற்ற ஓர்சொல், திறம்பாமை=தவராதிருத்தல். (அதாவது).) ஜீவன் முத்திபெறச் சீடன் குருமுகமாய்த் தெரிந்துகொண்ட ஒப்புயர்வற்ற ஓர் சொல்லைத் தவராதிருக்கும் தன்மையாகும். இது “கற்க கசடறக் கற்பவை கற்றபின்-நிற்கவதற்குத்தக”. என்னும் நாயனார் வாக்கும் ஒக்கப்பொருந்தும்.

S. W. நாராயணசாமி பிள்ளை,
விவேகவித்யா சபை காரியஸ்தன்
சேலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்த மகாசமாஜப் பரீக்ஷை விதிகள்.

சைவசித்தாந்த தத்துவ நூல்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலியவற்றையும், சைவ புராணங்களாகிய பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றையும் யாவரும் கற்று அவற்றின் கண் செறிந்து கிடக்கும் உண்மைகளை உணர்ந்து நலமெய்த வேண்டும் என்னும் நன்னோக்கம்பற்றிச் சைவசித்தாந்த மஹா சமாஜத்தினர் கடந்த வருடம்முதல் சிலபரீக்ஷைகள் நடத்தித் தகுதிக்கேற்றபடி பொற்பதக்கம், வெள்ளிப் பதக்கம், புத்தகங்கள் முதலிய பரிசுகளையும், ஒப்புச் சீட்டும் கொடுக்க முடிவுகட்டியுள்ளார்கள். அவற்றின் வரலாறு இங்கே குறிக்கப் படுகின்றது.

## 1917ஆம் நடைபெறும் பரீக்ஷைகள்.

1. சித்தாந்த பிரவேச பரீக்ஷை.
2. சித்தாந்த வித்வப் பரீக்ஷை.
3. புராண பிரவேசப் பரீக்ஷை.
4. புராண வித்வப் பரீக்ஷை.

### நடைபெறும் இடங்கள்.

1. சென்னை 2. தஞ்சாவூர் 3. மதுரை 4. திரிச்சிராப்பள்ளி 5-திருநெல்வேலி 6. கூடலூர் 7. வேலூர் 8. காஞ்சிபுரம் முதலிய பிரபல நகரங்களில் நிகழப்பெறும். அன்றியும், ஒரு நகரத்தில் 6-மாணவர் பரீக்ஷைக்கு வருவதாயின் அந்நகரத்திலும் நடத்தப்படும். ஒரு நகரத்தில் பரீக்ஷைக்கு வரும் மாணவர் தொகை 6-க்குக்குறையின் பரீக்ஷை நடக்கும் அடுத்த நகரத்துக்கு அவர்கள் வருதல் வேண்டும். இதுமுன்னர் அறிவிக்கப்படு



### அம்சவிவரம்.

மொத்தத்தில் நூற்றுக்கு 60 அம்ஸம் பெறுவர் முதல் வகுப்பினராவர். நூற்றுக்கு 40 அம்ஸம் பெறுவர் இரண்டாம் வகுப்பினராவர். இதனுள் ஒவ்வொரு பரீக்ஷைகளிலும் அதிக அம்ஸம் பெறும் முதன் மூவர்க்கு பதக்கப்பரிசு கொடுக்கப்படும்.

இப்பரீக்ஷைகட்கு ஆண்பாலாரும் பெண்பாலாரும் வரலாம். பரீக்ஷைக்கு வரவிரும்புவோர் 1917ஆம் செப்டம்பர்மீ 15உக்குள் தங்கள் விண்ணப்பங்களைச் சென்னைச் சமாஜ ஆபீசுக்கு அனுப்பிவிடல் வேண்டும். பரீக்ஷைக்குக் கட்டணத்தொகை அணா நான்கு, தபால் முத்திரையாக வேனும் சிலர் சேர்ந்து மணியார்டர் மூலமாகவேனும் அனுப்பலாம். பரீக்ஷைக்கு வருபவர் தங்கள் விண்ணப்பங்களில் ஒரு தமிழ்ப்பண்டிதர் கையெழுத்தையாவது சைவ சித்தாந்த மஹாசமாஜ அத்தியக்ஷர் ஒருவர் கையெழுத்தையேனும் வாங்கி அனுப்புதல் வேண்டும், இவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

### காலம்.

1917ஆம் அக்டோபர்மீ 28உ ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணி முதல் மாலை 5-மணிவரையில் மேல்குறித்த இடங்களில் பரீக்ஷைகள் நடைபெறும்.

## பாடங்கள் விவரம்.

### சித்தாந்த பிரவேச பரீக்ஷை.

செய்யுள்-திருவருட்பயன் மூலமும் நிரம்ப அழகியர் உரையும்.

சிவஞானசித்தியார் முதல் சூத்திரம் மூலமும்உரையும் (தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளையவர்கள் பதிப்பு).

மனப்பாடம் 1. சிவஞானபோத 12 சூத்திரங்களும் வெண்பாக்களும் (மூலமட்டும்.)

### சித்தாந்த வித்வப் பரீக்ஷை.

சிவஞானசித்தியார் முற்றும் மூலமும், உரையும் (தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளையவர்கள்) பதிப்பு.

சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த அஷ்டகம் (சென்னை, சிந்தாதிரிப் பேட்டை ஸ்ரீமான் அழகப்ப முதலியார் பதிப்பு).

## புராண பிரவேசப் பரீக்ஷை.

**வசனம்:**—பெரியபுராண வசனம். திருவிளையாடற் புராண வசனம். கந்தபுராண வசனம் முற்றும். (ஸ்ரீமான்-ஆறுமுக நாவலர் பதிப்பு.)

சரித்திரங்கள், சரித்திர சம்பந்தமான விஷயங்கள் முதலியன கேட்கப்படும்.

**செய்யுள்:**—பெரியபுராணம் முதலிலிருந்து தில்லைவாழந்தணர் சருக்கம் முற்றும்.

திருவிளையாடற் புராணம். இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல் முதல் திருவவதாரப் படலம் முற்றும்.

**மனப்பாடம்:**—தோடு, கூற்று, பித்தா, நீற்றுப்பதிகங்கள், திருத்தொண்டத்தொகை, நமச்சிவாயப்பதிகங்கள், திருவடித் திருத்தாண்டகம், திருவாசகம் திருச்சதகம் ஆகிய திருப்பாசுரங்கள்.

**இலக்கணம்:**—தப்பின்றி எழுதத்தெரிந்தால் போதும்.

## புராண வித்வப் பரீக்ஷை.

பெரியபுராண முற்றும், திருவிளையாடல் புராணம் முற்றும், கந்த புராணம் முற்றும்.

**மனப்பாடம்**—அகத்தியர் தேவாரத்திரட்டும், திருவாசகத்தில் திருச்சதகமும்.

**குறிப்பு:**—புராண பிரவேசப் பரீக்ஷைக்கு 20 வயதுக்கு உள்பட்ட மாணவர்கள் மாத்திரமே பரீக்ஷைக்கு உரியராவர். பெண்பாலார்க்கு இவ் விதியில்லை.

பாடங்கள் தவிர ஏனைய விதிகள் சிலமாறுதற்கும் உரியவை.

## வேண்டுகோள்.

இப்பரீக்ஷைகளை இனிது நிறைவேற்றுதற் பொருட்டு, சமாஜ அத்தியக்ஷர்களும், அங்கத்தினர்களும் முயற்சி செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.



## 1916ஆம் சித்தாந்தப் பிரவேசப் பரீக்ஷையில் முதல் வகுப்பில், தேறியவர்கள்.

க. சூரியநாராயண பிள்ளை, அத்துக்குடி.
ஆ. மு. சிதம்பரம் பிள்ளை ,,
சங்க. கண்ணன், மதுரை.
ஆ. சுப்பிரமணிய பிள்ளை. ,,
முருகப் பிள்ளை. ,,
திரு. சி. சுப்பையா. ,,
A. பேச்சுமுத்து பிள்ளை. ,,
மு. பொன்னம்பலம். ,,

### பெண்பாலாரில்.

த. பத்மாவதி யம்மாள், சென்னை.

## புராணப்பிரவேசப் பரீக்ஷையில் இரண்டாம் வகுப்பில் தேறியவர்கள்.

வேலுத்தாயம்மாள், மதுரை.

மேற்கண்ட மாணவர்களுக்குப் பரிசு முதலியன இவ்வருடம் ஏப்ரல்மீத்தில் கொடுக்கப்படும்.

“இராஜவிலாசம்”
அம்பட்டன் வாராவதி ரோட்
மயிலாப்பூர்.

இங்ஙனம்
சி. குப்புச்சாமி,
காரியதரிசி.
சைவ சித்தாந்த மகா சமாஜம்.

## 1916ஆம் டிசம்பர்மீ 29, 30, 31-ம் தேதிகளில் மகாசமாஜக் கூட்டங்கூடுவதற்குப்பொருளுதவி செய்தவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமான்-சி. இராஜாராமமணியார் அவர்கள், பந்தல், எலக்ட்ரிக் விளக்குகள் முதலியவைகளுக்கு | 588 | 0 | 0 |
| ,, ,, அறிக்கைப்பத்திரம் முதலியவை அச்சிட | 22 | 13 | 0 |
| ஸ்ரீமத் சுவாமிநாதபண்டிதர் அவர்கள், சென்னை | 50 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமான் பு-குருசாமி கிராமணியார் அவர்கள் | 50 | 0 | 0 |
| ,, நல்லசிவன் பிள்ளையவர்கள், B. A., B. L. சென்னை | 30 | 0 | 0 |
| ,, புழலை-திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் (Hon. Magistrate) செம்பியம் | 30 | 0 | 0 |
| ,, P-L. இராமசுவாமி நாய்க்கர் அவர்கள், பாகல்பட்டி | 30 | 0 | 0 |
| ,, மயிலை, கட்டைதொட்டி, தங்கவேலுநாட்டார் அவர்கள் மாரியப்ப முதலியார் அவர்கள், சங்கர முதலியார் அவர்கள், முதல்னவர்கள் (விறகு 2-டன்) | 28 | 0 | 0 |
| ,, ராவ் சாஹெப் மாசிலாமணி முதலியார் அவர்கள், சென்னை | 20 | 0 | 0 |
| கஸ்டம்ஸ் அவுஸ் சந்தா | 20 | 0 | 0 |
| சைவசமயாபி விருத்தி சபை, செங்கல்பட்டு | 20 | 0 | 0 |
| ,, N-S. முனுசாமி முதலியார் அவர்கள், (பதார்த்தம்) | 15 | 12 | 6 |
| ,, சிங்காரவேலு செட்டியாரவர்கள், 2 (மூட்டைஅரிசி) | 15 | 0 | 0 |
| ,, பழ-சி, சண்முகம் செட்டியார் அவர்கள், முறையூர் ஜமீன்தார் (மலைவாழைப்பழம்) | 15 | 0 | 0 |
| ,, T. சபாபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல் | 15 | 0 | 0 |
| ஸ்ரீமதி T. A. C. பர்வதம்மாள், திருப்பத்தூர் | 15 | 0 | 0 |
| ஸ்ரீமான் சின்னசாமி செட்டியார் அவர்கள், திருப்பத்தூர் | 10 | 0 | 0 |
| ,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் | 10 | 0 | 0 |
| ,, கோவிந்தநாயுடு (Coustoms House) | 10 | 0 | 0 |
| ,, M. கந்தசாமி முதலியார் அவர்கள் B. A. | 7 | 0 | 0 |
| ,, வல்லை-சண்முகசுந்தர முதலியார் அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, T. N. தங்கவேலு முதலியார் அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, கா. சுந்தர முதலியார் அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, தனக்கோட்டி முதலியாரவர்கள், (Customs House) | 5 | 0 | 0 |
| ,, A. C. ஷண்முக முதலியாரவர்கள், (M L.V. Press) | 3 | 0 | 0 |
| | 1024 | 9 | 6 |

இங்ஙனம்:

புழலை. திருநாவுக்கரசு முதலியார்

உபசரணைச்சங்கக் காரியதரிசி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சைவசித்தாந்த மகாசமாஜ நிலையத்திற்காகக் கையொப்பம் செய்தவர்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியா ரவர்கள், மயிலாப்பூர் வேண்டிய நிலம் | |
| ,, யாழ்ப்பாணம்-வண்ணைநகர் சுவாமிநாதபண்டிதரவர்கள் ... ரூ. | 250 |
| ,, அ. சாமி குப்புசாமி கிராமணியார் அவர்கள் ... | 100 |
| ,, ச. சபாரத்தின முதலியாரவர்கள், யாழ்ப்பாழம் ... | 50 |
| ,, J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், ... ... | 50 |
| ,, கி குப்புச்சாமி முதலியாரவர்கள், ... ... | 50 |
| ஸ்ரீலஸ்ரீ திரு-அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ... | 50 |
| ஸ்ரீமான் க இரத்தின கிராமணியாரவர்கள் ... ... | 50 |
| ,, A. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ... ... | 50 |
| ,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள், ... ... | 50 |
| ,, T. S. சுவாமிநாதப் பிள்ளையவர்கள், திருச்சிறுப்பள்ளி ... | 50 |
| ,, E. S. அர்தநாரி ஆச்சாரியவர்கள், ஈரோடு ... | 50 |
| ,, ம. கீ. என். சின்னசாமி பிள்ளையவர்கள், மதுரை ... | 50 |
| ,, அ. மு. மாணிக்க முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... | 50 |
| ,, V. C. வேதாசல முதலியாரவர்கள், செய்யூர் ... | 35 |
| ,, P. குமாரசாமி செட்டியாரவர்கள், ... ... | 25 |
| ,, தெளிசிங்க முதலியாரவர்கள், பெரம்பூர் ... ... | 25 |
| ,, தங்கவேலு முதலியாரவர்கள், சிந்தாதிரிப்பேட்டை ... | 25 |
| ,, நா. அப்பாசாமிசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி ... | 25 |
| ,, சா. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், பெரியமெட்டு ... | 20 |
| ,, T. சபாபதி முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... | 20 |
| ,, S T. M. P. T. நடராஜ செட்டியாரவர்கள், யாழ்ப்பாணம் | 15 |
| ,, தி. மாணிக்கம், சென்னை ... ... | 12 |

| | |
|---|---|
| ஸ்ரீமான் A. சிவப்பிரகாசம் முதலியார் அவர்கள், கிருஷ்ணாம்பேட்டை | 10 |
| ,, இராமலிங்காச்சாரியர், வாலாஜா ... ... | 10 |
| ,, T. S. பரமேஸ்வரம் பிள்ளையவர்கள், சென்னை .... | 10 |
| ,, இராவ்பஹதூர் க. வைதிலிங்கம் பிள்ளையவர்கள், சென்னை ... | 10 |
| ,, குள்ளப்பாச்சாரியவர்கள், வாலாஜா ... ... | 5 |
| ,, B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள், பூட்டுத்தாக்கு ... | 5 |
| ,, அரைக்கண்ணு கிராமணியாரவர்கள், கிருஷ்ணாம்பேட்டை | 5 |
| ,, கா. கதிர்வேலு முதலியாரவர்கள், தண்டரை ... | 5 |
| ,, அ. ர. தணிகாசல முதலியாரவர்கள், அங்கம்பாக்கம் ... | 5 |
| ,, M. C. இராஜகோபால முதலியாரவர்கள், மயிலாப்பூர் ... | 5 |
| ,, T. R. திருவேங்கடம், சென்னை ... ... | 5 |
| ,, M. மாசிலாமணி முதலியாரவர்கள், மயிலாப்பூர் ... | 5 |
| ,, மளிகை பு. ஆறுமுக முதலியாரவர்கள், ... ... | 5 |
| ,, கு. வேலுமயிலுஞ்சாமியாரவர்கள், ... ... | 5 |
| ஸ்ரீமான் சு. நடேச தேசிகர் அவர்கள், கவர்ன்மெண்டு ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், மேலகாசாகுடி, நெடுங்காடு. ... | 5 |
| ,, P. V. முத்துசாமி ... ... | 2 |
| ,, பொன்னுசாமி ஆசாரியாரவர்கள், சென்னை ... | 1 |

### கையொப்பமிட்டவர்களில் இம்மாதம் பணம் செலுத்தியவர்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீமான் வேலுமயிலும் சுவாமிகள் அவர்கள் ... | 5 |
| ,, மளிகை பு. ஆறுமுக முதலியார் அவர்கள் ... | 5 |
| ,, அரைக்கண்ணு கிராமணியார் அவர்கள் ... | 5 |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௯.] 1917ஞு மார்ச்சுமீ [பகுதி ௩.

## சாந்தோக்யோபநிஷத்து.

### முதலாவது பிரபாடகம்.

### கண்டம் ௫.

உத்கீதமே பிரணவம், பிரணவமே உத்கீதம், சூரியன் உத்கீதம் ஆகவே சூரியன் பிரணவம், இவர் ஓம் என உச்சரித்துக்கொண்டு செல்லு கின்றனர்.

௨. இச்சூரியனை நான் தியானித்தேன் ஆதலால் நீ எனக்குப் பிள்ளை யாகப் பிறந்தனை. ஆகவே நீ அவர் கிரணங்களைத் தோத்திரிப்பாயாக உனக்கு அனேகமான புத்திரர் பிறப்பார்கள். எனக் கௌஷீதக முனி தனது புத்திரனை நோக்கிச் சொன்னார்.

௩. எது முக்கியமான பிராணனோ அதை உத்கீதமாகத் தோத்திரிக்க வேண்டும். பிராணன் ஓம் சப்தத்தோடு மேலெழும்புகிறது.

௪. இப்பிராணனை மற்றப் பிராணன்களுடன் அபேதமாய்த் தோத் திரித்தேன். நீ எனக்குப் புத்திரனாகவுண்டாயினை. நீயபேதமாய்த் தோத்தி ரஞ் செய் உனக்குப் பலபிள்ளைகள் பிறப்பார்கள்.

௫. எது உத்கீதமோ அது பிரணவம், எது பிரணவமோ அது உத்கீதம், இந்த ஏகத்வ தரிசனம் கர்மங்களில் அபசாரமாகிறதா உத்கானம் செய்யும் வாக்கைத் தடுக்கிறது.

### கண்டம். ௬.

பிருதிவி ரிக்கு, அக்கினிசாமம், சாமம் ருக்கிலிருக்கிறது. ஆகலின் இக்கொள்கையோடு கானஞ் செய்யப்படுகிறது ஸா பிருதிவி, அம அக்கினி, அது ஸாம.

௨. வாயு அந்தரிட்சம், அம அக்கினி இது ஸாம.

௩. சுவர்க்கம் சூரியனிரண்டும் சாம.

௪. நட்சத்திரம் சந்திரனிரண்டும் சாம.

௫. சூரியனுடைய சுக்லகாந்தி கிருஷ்ணகாந்தி இரண்டும் சாம.

௬. சூரியனுக்குள் இரண்யமயமான புருஷன் காணப்படுகிறான். அவர் ஜோதிமயமானவர், அவர் தாடி மயிர் பொன்வண்ணம் அவர் கால் கட்டைவிரல் முதல் நுனிவரையில் பொன்வண்ணம்

௭. *கபியெனும் சூரியனால் விகசிதமாய இருதாமரைபோலும் கண்களுமுடையர். இவர் சூரியன் மத்தியில் இரண்யபுருஷர்.

---

* "கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ" என இச்சுலோகத்திலுள்ள வாக்கியத்திற்கு ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர் கபி எனில் சூரியனெனவும், கப்யாசமெனில் அச்சூரியனால் மலர்ந்த தாமரை புஷ்பமெனவும் இத்தாமரைபோல் நேத்திரமுடையவர் சூரியமண்டல புருஷர் என்றனர்.

ஸ்ரீ சங்கராசாரியர் குரங்கின் ஆசனம் போலச் சிவந்த தாமரை யொத்த கண்ணுடையவ ரென்றனர்.

இவர்களிருவருக்கும் வெகுகாலத்திற்குப் பின் பிறந்த ஸ்ரீ இராமானுஜர் தாம் பாஷியமெழுதிக்கொண்டு சாரதாபீடத்திற்குச் செல்லச் சரசுவதி வாசலிற் பிரத்தியட்சமாகி இவ்வாக்கியத்திற்கு அவர் பொருள்கேட்க ஸ்ரீ கண்ட சிவாசாரியர் செய்த பொருளையே படித்து ஞாபகத்திலிருந்தது இவர் அந்தப்பொருளைச் சொல்லவும் அதனைக்கேட்ட சரசுவதி இச்சுருதிக்கு உண்மைப்பொருள் நீர் கூறினமையின், உமக்கே ஸ்ரீ பாஷ்யகாரர் என்னும் திருநாமம் தந்தனள் என்று அப்பாஷியத்தைத்



௮. ருக்கும் சாமமும் அவருக்கு அவயவங்கள், ஆகலின் உத்கிதா இவரையே உத்கீதம் செய்கிறான். சூரியமண்டலங்கடந்த உலகங்கட்கும் தேவர்கட்கும் ஈசராயிருக்கின்றனர்.

### கண்டம். ௭.

வாக்கு பிராணன் இரண்டுஞ் சேர 'சாம'

௨. சட்சுஸ் ஆத்மா இரண்டுஞ் சேர 'சாம'

௩. சுரோத்திரம் மனது இரண்டுஞ் சேர 'சாம'

௪. கண்ணின் சுக்கிலகாந்தி கிருஷ்ணகாந்தி இரண்டுஞ் சேர 'சாம'

௫. ருக்கு, சாம, உக்தம், யஜுஸ், பிரமம் என்னும் புருஷனே கண்ணுக்குள் காணப்படுகிறான்.

௬. மேலுள்ள உலகங்கட்கும் மனித இச்சைகட்கும் தேவன் இவரையே கானஞ்செய்பவர் கானஞ்செய்கிறார்கள்.

௭. கானஞ்செய்கிற வித்துவான் சூரியனையும் சூரியனிலுள்ள புருஷனையும் கானஞ்செய்கிறான். அவன் மேலுலகங்களையும் தேவகர்மங்களையுமடைகிறான்.

௮. அங்ஙனமடைந்த அவன் உத்காதா யஜமானனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

௯. எந்த வித்துவான் கானஞ்செய்கிறானோ அவன் எல்லாக் கன்மங்களையும் அடைகிறான் ஆகலின் உனக்கு என்ன விருப்பமிருக்கிறதோ அதைக் கொடுக்கிறேன்.

மணவழகு.

---

தன் சிரசில் வைத்துக்கொண்டனர் எனப் பாஞ்சராத்திரிகள் எழுதியுள்ளதனை நோக்குங்கால், அச்சரச்சுவதி முக்காலத்தினையு முணரத்தக்க பிரமன் மனைவியன்றெனவும், வடக்கே சரச்சுவதி யென்னும் பெயரை வாய்ந்த வொரு பண்டிதையாகிய பெண்ணெனவு மேற்படும். அல்லது இது கற்பனாவுரவவாக்கியமாக எழுதிவைத்தனரெனவும் எண்ணலாம் போலும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## வைதிகசிவஞானபோதம்

# அவைதிக சிவஞானபோதமாக

## ஆக்கப்பட்டமை.

தூத்துக்குடி எனப்படும் திருமந்திர நகரத்து மெஸ்ஸர்ஸ். ரா. மா. கம்பெனியார் வேண்டுகோட் பிரகாரம் தஞ்சை மகா-ா-ா-ஸ்ரீ வி. குப்பு ஸ்வாமிராஜு அவர்களாற் றமிழுரை யேறப்பெற்ற வடமொழிச்சிவஞான போதம் எங்ஙனம் அவைதிகமாக்கப்பட்டதென்பதை ஆராய்குதும்.

> சைவாகமோபி த்விவித: ச்ரௌதோ ச்ரௌதச்ச ஸம்ம்ருத:/
> ச்ருதிசாரமய: ச்ரௌத: ஸ்வதந்த்ர இதரோ மத:/
> ஸ்வதந்த்ரோ தசதா பூர்வம் ததாஷ்டாதசதா புந:/
> காமிகாதி சமாக்யாபி: ஸித்தஸ் ஸித்தாந்தசம்ஜ்ஞித:||
> ச்ருதிசாரமயோயஸ்து சதகோடிப்ரவிஸ்தர:/

"சைவாகமமும் சிரௌதம் அசிரௌதம் என இருவகையாய்க் கருதப்படுகின்றது; சுருதிசாரமயமானது சிரௌதமாம்; சுவதந்திரமானது அசிரௌதமாம்; சுவதந்திரம் பூருவம் பத்து வகையாகவும், சித்தாந்தப் பெயரினது மறுபடியும் பதினெண் வகையாகவும், காமிகமுதலிய பெயர்களாற் சித்தித்துள்ளதாம்; சுருதிசாரமயம் எதுவோ, அது நூறுகோடி விஸ்தாரமுள்ளதாம்" என்று சிவபுராணவாயு சம்ஹிதா பூருவபாகத்து உஅ—ம் அத்தியாயசுலோகங்களை மொழி பெயர்த்தார்கள்.

1. இங்கே அவர்கள் விடுத்த மொழி பெயர்ப்பினுற் சுருதிசாரமாயுள்ள ஆகமமானது நூறுகோடி விரிவினை யுடையதாம் என்றும், அது சிரௌதமாம் என்றும், எனவே, வைதிகமாம் என்றும், இந்நூறுகோடி விரிவினுள்ள காமிக முதலிய இருபத்தெட்டு ஆகமங்கள் சேர்தன என்றும் பெறப்பட்டது.



2. இந்த இருபத்தெட்டு ஆகமங்களும் சிவபேதம் உருத்திரபேதம் என இருவகைப்படும். சிவபேதம் காமிகமுதற் சுப்பிரபேதம் இறுதியாகிய பத்துமாம். உருத்திரபேதம் விஜயமுதல் வாதுளம் இறுதியாகிய பதினெட்டுமாம். ஆகலின், வாயுசம்ஹிதை சித்தாந்தம் எனப்பெயரிய இருபத்தெட்டு ஆகமங்களையும் முன்னர்ப் பத்தும் பின்னர்ப் பதினெட்டுமென்று வகுத்துக் கூறியதாம் என்க.

3. ராஜு அவர்கள் மொழிபெயர்ப்புப்பிரகாரம் காமிகமுதல் வாதுளம் இறுதியாகிய சுவதந்திரம் இருபத்தெட்டும் அசிரௌதமாய் முடிந்தன.

4. முடியவே, இருபத்தெட்டு ஆகமங்களுள்ளே பதினாறுவதாயும், உருத்திரபேதம் பதினெட்டனுள்ளே ஆறுவதாயுமுள்ள இரௌரவாகமம் அசிரௌதமாய், எனவே, அவைதிகமாய் முற்றியது முற்றவே, அந்த இரௌரவாகமத்துள் அடங்கிய சிவஞானபோதமும் அவைதிகமாய், எனவே, க்ஷமணர் பௌத்தர் முதலாயினோர்களுடைய நூல்கள்போல வேதபாஹ்ய மாயன்றோ முடிந்தது.

5. அவர்கள் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களை வேதசாரமென்று கூறி, அதனை நிரூபித்தற்கு 3, 4, 5, 6—ம் பக்கங்களிலே விடுத்த காமிகாகம சுலோகமேனும், சூதசம்ஹிதா சுலோகமேனும், நீலகண்டசைவபாஷ்ய வசனமேனும், காலமாதவீயவசனமேனும் அவர்களது வாயுசம்ஹிதாத் தமிழுரையினால் அவைதிகம் எனப்பெறப்பட்டகாமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும் (அவைதிகமன்றென்று கண்டித்து), வைதிகம் என்று ஸ்தாபித்ததா? இல்லை! இல்லை!!

6. இந்நூலுக்கு உரைசெய்தற்கு முன் முகவுரையிலேயே இத்துணை அநர்த்தஞ் செய்தார்களாயின், அவர்கள் நூலகத்து எத்துணை அநர்த்தஞ் செய்திருப்பார்கள் என்பதை அன்பர்கள் யோசித்துணர்வார்களாக.

7. இவர்களைத்தாமா ஒருவர் ஆங்கிலேய முகவுரையிலே சிவஞான சுவாமிகளினும் சிறந்த மகாபாண்டித்திய முடையவர்கள் (I must take leave to say that he is more erudite than Sivagnana Swamy was] என்றும், மற்றொருவர்,

நன்று விளங்கு நல்சிவ ஞான
போத மதற்குப் பொருளறி யாமல்
ஏத நிறைய வியற்றினார் பலருரை
அவ்வுரை மக்கட் கரணா காது
வெவ்விய தீமை விளைத்து .....
..............................நெறிபெற
விழைவோர் தமக்கு விருந்து போல்வதாம்.

"சிவஞானபோதத்தின் பொருளறியாமல், அதற்குக் குற்றம் நிறையச்(சிவ ஞானசுவாமிகள் முதலிய) பலர் உரைகள் இயற்றினார்கள்; அவ்வுரைகள் மனிதர்க்கு அரணாகாமற் கொடுந்தீமைகளை விளைத்து (வருவனவாக,) (ராஜு அவர்கள் செய்த உரையோ) நன்னெறி பெற விரும்புவோர்க்கு விருந்துபோல்வதாம்" என்றும் வரைந்தார்கள்.

8. ராஜு அவர்களேனும். முகவுரை கொடுத்த ஐவருள் எவரேனும் அந்த ராஜு அவர்கள் விடுத்த வாயுசம்ஹிதாத் தமிழுரையினாற் சிவஞான போதம் அவைதிகமன்றென்று ஸ்தாபிப்பார்களா?

ஆகவே, திருமந்திரகாரத்துக் கம்பெனியார்க்கு ராஜு அவர்கள் வாயிலாக வாய்த்த இலாபம் அவைதிகசிவஞானபோதமாமன்றி, வைதிக சிவஞானபோதமன்றும் என்றும், வைதிகரெவராலும் அது பரிசிக்கற்பாலதொன்றன்றும் என்றும், படிக்கற்பாலதொன்றன்றும் என்றும் முன்னரே எச்சரிக்கின்றோம்.

இங்ஙனம்

ஸ்ரீகாசிவாசி.செந்திநாதையர்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பஞ்சாக்கரம்.

## தொகுதி 5. பகுதி 2. பக்கம் 32. தொடர்ச்சி.

இன்னும் இத்தொடரிலுள்ள பெயர்கள் ஒன்று மற்றொன்றற்கு எவ்வாற்றானும் பொருந்தாதாயுமிருத்தல் வேண்டும் அவ்வண்ணம் நோக்குழி "சித்தென்னும் பெயரானது பதிப்பொருளுக்கும் கூறப்படுமாகலான் பெயரானும் பொருந்துமாறில்லை" மற்றும் "ஜகஜீவபரம்" என்புழியும் முறை தலைகீழாதலுமன்றி "ஜகம்" என்பது பாசத்தையே தனித்துரைத் தமையின் அத்தொடரும் முறை பெயர் என்னுமிரண்டானும் பொருந்துமாறில்லை. எனவே இவையெல்லாம் தலைவனாலாவது தலைவன் வழிநின்று தலைமையுற்றாராலாவது ஆக்கப்பட்டன. அல்ல என்பது பெறுதும். பதி, பசு, பாசம் என்னும் பெயர்களை நோக்குழி பதி யென்னும் பெயர் கடவுளுக்கே உரியதாய் ஆன்மாவிற்கு எவ்வாற்றானும் பொருந்துமாறில்லை. பசுவென்னும் பெயர் ஆன்மாவிற்கே உரியதாய் கடவுளுக்கு எவ்வாற்றானும் பொருந்துமாறில்லை. பாசமென்னும் பெயர் மற்றிருபொருள்களுள் எப்பொருளுக்கும் பொருந்துமாறில்லை. இங்ஙனம் பதி பதியே பசு பசுவே பாசம் பாசமேயாக "வினையி னீங்கிவிளங்கிய வறிவன்" சொற்றொடராக்கினார் பெற்றி இவ்வளவிற்றென்று யார்தான் எடுத்துரைக்கவல்லார். நிற்க இப்பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரமானது பக்குவாபக்குவர்களின் பொருட்டு "தூலபஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், காரணபஞ்சாக்கரம், மகாகாரண பஞ்சாக்கரம், முத்தி பஞ்சாக்கரம், என ஐவேறு பகுதித்தாய் விளங்குவதாகும் அவைதாமும் சாதனங்களைக் கூறுமிடத்து முதனூலின்கண் மாபாடியக்காரரானும் வெளியிடப் படாமல் வழிநூலின் "ஓசைதருமஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க" என்ற விடத்தும்,

அஞ்செழுத்தாலான்மாவை யரனுடைய பரிசுமரனுருவு
மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்கரநியாசம் பண்ணியான்மாவி
லஞ்செழுத்தாலிதயத்தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியினனலை யோம்பியனைவரிய
கோதண்ட மணைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதியருக்கனனை
யரவம்போற்றேன்று மான்மாவிலரனே. என்னுந்.

திருவிருத்தத்தின் கண்ணும், அவ்விதிகள் உரையாசியர்கள் ஒருவரானும் வெளிப்படுத்தப்படாமலிருக்கின்றன. இத்திருவிருத்தஉரையில்மறைஞான தேசிகர் "நம்முதலாயோதினருளாடாதுநாடு சிம்முதலாயோது நீசென்று" என்னும் விதியறிந்து நாடோறுந் தனக்கியன்ற மாத்திரஞ் செபஞ்செய்திருக்கில் என்றார்கள். சிவாக்ரயோகியர் பஞ்சாக்ஷரத்தை நாலுவர்ணத்தவர்களும் நாலாசிரமத்தவர்களும் இன்னபடி ஜபிக்கவென்று சிவாகமஞ் சொன்னபடியே, என்றார்கள். ஞானப்பிரகாசர் "மறைஞானதேசிகர் விரித்தபடி" என முதலிற் கூறித்தான் சில இடைப்பெய்துரைத்து "மற்றைய வெளிப்படை" என்று விட்டார்கள். சிவஞான முனிவரர் "அஞ்செழுத்தை விதிப்படியே மாறி நெஞ்சழுந்தியுச்சரித்தல் செய்க" என்றார்கள். நிரம்பவழகியர் "பஞ்சாக்ஷரத்தை உபதேசப்படியே யறிந்துச்சரிக்க" என்றார்கள். இவ்வுரையாசிரியர்களில்ஞானப்பிரகாசர்நீங்கலாக மற்றவரெல்லாம் பொது நோக்கில் ஒரே கருத்துடையவராக இருக்கின்றனர்.

சிவாக்ரயோகியர் நாலுவர்ணத் தவர்களும் நாலாசிரமத்தவர்களும் இன்னின்னபடி ஜபிக்க இன்னபடி ஜபிக்க வென்று சிவாகமஞ் சொன்னபடியே என்றாரேயொழிய, இன்னார் இன்னபடியென்றேனும் வெளிப்படுத்தாரில்லை. சிவஞானமுனிவரர் அஞ்செழுத்தை விதிப்படியேமாறி நெஞ்சழுந்தியுச்சரித்தல் செய்க என்றாரேயன்றி விதிப்படிமாறுதல் இஃது என்று காட்டினாரில்லை. நிரம்பவழகியரோ உபதேசப்படியே என்று விட்டனர். மறைஞானதேசிகர் உண்மைவிளக்க நூலின்கண் சாத்திரத்தை யோது மதிகாரிகளுணருமாறு வெளிப்படக் கூறியசிகாரமுதலாக ஓதுதல் என்பதையே குறித்தார்கள், மற்றும் சார்புநூலாய சிவப்பிரகாசத்தின் கண்ணும் சிவமுதலாயோதுமுறையும் அதனாலுறுபயனுமே கூறப்பட்டது. அதன் விரிவுரையாசிரியரும் "ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஆசாரியன் கடாக்ஷித்த முறைமையிலே" என்றே கூறினர்.



உண்மை விளக்கம் திருவருட்பயனாதிய நூல்களும்,

நம்முதலாயோதி லருளாடாது நாடுமருள்
சிம்முதலாயோது நீ சென்று. என்றும்.

ஆதிமலமிரண்டு மாதியா யோதினாற்
சோதியாமும் மலமுந்தீர்வாகா. என்றும்,

மாலார்திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசி மீளாவிடின். என்றும்,

உடன்பாட்டினும் எதிர்மறையினும் வைத்துப் பதியை முன்னாகக் கூறும் சூக்குமபஞ்சாக்கரமுறை ஒன்றையே விளக்கிப் போந்தனவாகலின் "எழுத்துக்களை மாறியுச்சரிப்பதைக் குருமுகத்தாற்றெளிந்து கொள்க" என நிரம்பழகியர் கூறியாங்கு அவைகளைக் குருமுகத்தாற்றெளிதலே இன்றியமையாக்கடமையாமென்பதுணர்த்து முகத்தானே சிகாரமுதலாயோதுமுறையொன்றே தற்போது கவனிக்கற்பாலதா மென்பதையும் இக்கருத்தே பற்றித்தான்.

"திருவாய் பொலியச்சிவாய நமவென்று நீறணிந்தேன்
றருவாய் நீ சிவகதிபாதிரிப்புலியூரரனே"

என்ற தேவாரத்திருவாக்கும்,

"நானேயோதவஞ் செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்" என்ற மணிவாசகத் திருவாக்கும் "சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க் கபாய மொருநாளுமில்லை", என்னும் ஔவைப்பிராட்டியாரது திருவாக்கு மெழுந்தனவா மென்பதையும் எடுத்துக்காட்டி அப்பாற் செல்கின்றேன்.

(இன்னும் வரும்)

**பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியார்.**

---

பிழை திருத்தம்.

பக்கம் 57-வரி 14-ல் வறிவன் என்பதை வரிவானென்றும், வரி 16-ல் ள்ள-சூக்குமபஞ்சாக்கரமானது என்பதை நீக்கியும் படித்துக்கொள்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திசைப்பெயரின் ஆராய்ச்சி.

## கிழக்கு.

க. எல்லாவுயிர்களுக்கும் ஒளியில் விருப்பமுண்டாவது இயல்பாதலால் முதல் முதலுண்டான திசை, ஒளியின் தோற்றமுடைய கிழக்குத் திசையேயாகும். கிழக்கென்பதற்கும் ஒளியுண்டாகும் திசை யென்றே பொருள். கில்=ஒளி, ஒளியாவது சூரியன். டைமர்=கிழக்கு, (மலேயம்) தாமம்=சூரியன்.

## மேற்கு.

உ. சூரியனிலும் சிறந்த ஒளியுடைப் பொருள் இல்லாமையால் சூரியன் தோன்றும் கிழ்த்திசையை ஒருவன் நோக்கி வீற்றிருக்குங்கால் அவன் பின்புறம் மேற்காகின்றது. மேற்கின்பெயர் பின்புறத்தை யுணர்த்தும் வென் என்னும் சொல்லிலிருந்துண்டாயது. வெற்கு மேற்காயிற்று. வகரம்மகரமாகும்.

வென்=பின்புறம். வென்—வெற்கு.

வெற்கு—வெஸ்டு= மேற்கு. (ஆங்கிலம்)

தமிழில் னகாமுண்டானபிறகு வெக் என்பது வென் ஆயிற்று.

"வெண்ணுருமென்புவிருத்திரனுக்காவுதலை" (காந்தம்)

மேற்குக்கு முதல் முதலுண்டான பெயர் குடதிசை.

குடம்=மறைவு. சூரியன் மறைகின்றதிசை யென்பது பொருள்.

"குடக்குன்றிலிட்ட விளக்கதுவாமே" (திருமந்திரம்)

## தெற்கு.

ங. அவன் வலப்புறம் சூரியகலையாதலால் தென்றிசைக்குச் சூரியதிசை யெனப் பெயருண்டாயது.



க. சூரியன்=ஞாயிறு, சோழன்.

உ. சோலம்—சோலன்—சோளன்—சோழன்.

ங. சுல்—சோலம்=தெற்கு.

ச. சுல்=சூரியன்.

ரு. சோலம்—சோளகம்—சோழகம்=தெற்கு

சு. வலவன்—வளவன்=சோழன்.

எ. வலம்—வலவன். வலப்பக்கம். தெற்கு.

அரசாட்சி முதல் முதல் தென்றிசையிலுண்டானபடியால் அரசாள்வோன்பெயர் அத்திசைப் பெயராலுண்டாயது. சூரியன் என்பது முதல் ஞாயிற்றையும பிறகு தென்றிசையையும், அதன் பிறகு அரசனையும் உணர்த்திற்று. பிறவு மன்ன. தெங்கம், தெக்கணம், தெங்கணம், தெசணம், தெட்சணம், தக்கணம், தச்சணம், தட்சணம், தெக்கு, தெற்கு முதலிய தென்றிசைப் பெயரெல்லாம் சூரியன் சம்பந்தமாகிய சொல்லிலிருந்தேயுண்டாயின.

சோதி—சௌத்=தெற்கு (ஆங்கிலம்)

சோதி=சூரியன்.

## வடக்கு.

ச. அவனிடப்புறம் சந்திரகலையாதலால் வடதிசைக்குச் சந்திரதிசை யெனப் பெயருண்டாயது நிகண்டு நூலார் வடதிசையை மதிதிசை யென்பர். "வடக்கின் பெயரே மதிதிசையுமாகும்" (பிங்=நி) நந்தை—நார்த்=வடக்கு. (ஆங்)

நந்தை=சந்திரன் முதற்பக்கம்.

சூரியகலைக்குப் பிங்கலை யென்றும், சந்திரன் கலைக்கு இடகலை யென்றும் பெயராம்.

இதனால் சூரியன் சொல்லில் தெற்கின் பெயரும், சந்திரன் சொல்லில் வடக்கின் பெயரும் உண்டாயின என்பது வலியுறுகின்றது.

சோதிடநூல் வழக்குப்படி சூரியன் ஆண்பாலும், சந்திரன் பெண்பாலும் ஆதலால் சூரியகலையாகிய வலப்பக்கத்தில் ஆண்பிண்டந்தரிக்கும். சந்திரகலையாகிய இடப்பக்கத்தில் பெண்பிண்டந்தரிக்கும். சூரியவோரையில் ஆணும் சந்திரவோரையில் பெண்ணும் பிறக்கும்.

## வடக்கு.

௫. வடதிசைக்கு முதலுண்டான பெயர் உத்தரமென்பதாம். உத்தரமென்பது உத்தரமாயிற்று. உத்தரமென்பதற்கு மிகுந்த கடலுடைய திசை யென்பது பொருள்.

உதகம் = கடல், தரம் = மிகுதி,

விந்தயமலைமுதல் இமயமலைவரையில் கடலாக இருந்தமையின் வடதிசைக்கு உத்தரமெனப் பெயருண்டாயது.

வடதிசைக்கு உதக்கு என்னும் மற்றோர் பெயரானும் அது வலியுறுகின்றது. உதம்—உதக்கு = வடக்கு.

உதக்கு உதீசியாயிற்று. உதீசி ஊசியாயிற்று.

உதீசி, ஊசி யென்பவை வடதிசையின் பெயர்.

உத்தரம் உதக்கு என்னும் வடதிசைப் பெயர்களைத் தென்திசையிலிருந்தவர்கள் வைத்தனரென்பதற்குச் சிறிதும் ஐயுறவில்லை தென்திசையிலிருந்தவர்கள் தமிழர்களே. உதமென்பது பதாநுசந்தான ரீதிகைப்படி வடசொல்லெனப்படாது.

## வடக்கு

௬. இப்பெயர் விந்தயமலைமுதல் இமயமலை வரையில் இருந்த கடலானது சிறிது சிறிதாக ஒதுங்கி முழுதும் நிலமாகியும், மக்கள் வாசமில்லாத காலத்து உண்டானதெனக்கொள்ளவேண்டும்.

அரசன் எல்லாராலும் அறியப்பட்டவன் ஆதலால் அவன், போரில் புறப்புண்பட்டகாலத்து மக்கள் சஞ்சாரமில்லாத வடதிசையில் நாணத்தினால் ஒளித்து நாள் கழித்து வந்தமையால் அத்திசைக்கு வடக்கெனப் பெயர் வந்தது. வடு—வடக்கு வடு = புறப்புண். புறப்புண்பட்டோர் நாணி ஒளித்து நாள் கழித்ததிசை யென்பது பொருள். அக்காலத்து வடதிசைதான் சனசஞ்சாரமில்லாத இடமாக இருந்ததெனப் புலனாகின்றது. புறப்புண்பட்டோரிற் சிலர் பட்டினிகிடந்தும் இறந்துபட்டனர்.

புறப்புண்பட்டோர் நாள் கழித்ததிசையாகலின் வடக்கு என்னும் பெயரும், வடக்கிருத்தலென்னும் பெயருமுண்டாயின.



"புறப்புண்ணி மறத்தகைமன்னன்
வாள்வடக்கிருந்தன னீங்கு
நாள்போற்கழியல ஞாயிற்றுப்பகலே"

(புறநானூறு ௬௫-பாட்டு)

என்பதனால் அச்சரிதவுண்மை தெளிக.

விந்தயமலை முதல் இமயமலை வரையில் கடலிருந்ததென்பதற்குப் பலசான்றுகளுள்ளன. கடல் நாடாவதும் நாடு கடலாவதும் இயல்பு. விந்தயமுதல் இமயம்வரை கடலாக இருந்த காலத்தில், இந்தியா, ஆபாலிகா, தென் அமரிக்கா, ஔத்திராலியா என்பவை ஓர் நிலமாகவே யிருந்திருக்கவேண்டும்.

## முடிவுரை.

௭. இதனால் முதல் முதலுண்டான திசை கிழக்கென்பதும் வடதிசையை யுணர்த்தும் உத்தரம் உதக்கு என்னும் பெயர்களால் விந்தயமுதல் இமயம்வரை கடலிருந்ததென்பதும், வடக்கு, வடக்கிருத்தலென்னும் பெயர்களால் பிறகு கடலொதுங்கி நிலமாயிற்றென்பதும், மற்றையதிசையிலிருந்தவர்கள் தமிழர்களென்பதும், பிறகு வடதிசையிலும் தமிழர்களே குடியேறினார்களென்பதும், பிறவும் பெறப்படுகின்றன. விந்தயமலையின் சிகரத்திலும் இமயமலைச்சாரிலும் இப்பொழுதும் தமிழ்ச்சம்பந்தமிருக்கின்றது.

கிழக்கு, மேற்கு, தெற்கு என்னும் திசைப்பெயர்கள் நீரின் பெயராலமையால்; வடதிசைப்பெயர் மாத்திரம் உத்தரம், உதக்கு என நீரின்பெயரால் அமைந்திருத்தலால் விந்தய முதல் இமயம்வரை கடலிருந்த தென்பதற்கு ஐயுறவில்லை.

உத்தரம் உதக்கென்பன வடகடலெல்லையைக் குறிப்பன ஆகாதோ எனின் மற்றையதிசைகளிலும் கடலிருத்தலினால் அது பொருந்தாது.

உத்தரமென்பதற்கு வேறு பொருள் கூறலுமொண்ணாது; கூறினும் அது பொருந்தக் கூறலென்னும் உத்தியின்பாற்படும்.

இது, காலஞ்சென்ற மொழி நூலாசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள் எழுதிவைத்த குறிப்பிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

**மாகறல்-பொன்னுசாமி முதலியார்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சிற்றம்பலம்.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக் கன்று காண்.

சித்தாந்தச் செல்வர்களே!

யான் இன்று எடுத்துக்கொண்ட விஷயம், "திருச்சிற்றம்பலம்" என்பது. இம்மந்திர மொழியின் உள்ளுறை கூறுதற்கு முன்னர் அம்மொழிப் பொருள் விளங்குதற்குரிய சில இயைபுகள் கூறுவாம்.

காணப்பட்ட இவ்வுலகமியாவும் விராட்புருடனுடைய சொரூபமாகும். அவனது அரைக்குக்கீழ் ஏழு உலகமும், அரைக்குமேல் ஏழு உலகமும் நிலைபெறுவனவாம். ஆதலால் இவ்வுலகமும் அவன் உடலின்பாற் பட்டதேயாம். அங்ஙனம் ஆர்ந்த இவ்வுலகத்தில் அநேக தெய்வஸ்தானங்களுள்ளன. அவை விராட்புருடன் உடலின்பாற்பட்ட ஆதார ஸ்தானங்களாம். எங்ஙனமெனிற் கூறுதும். மூலாதாரம் திருவாரூர், நாபி திருவானைக்கா, மணிபூரகம் அண்ணாமலை, இதயம் சிதம்பரம், கண்டம் ஸ்ரீ காளஹஸ்தி, புருவமத்திகாசி, பிரமரந்திரம் கைலை, துவாதசாந்தம் மதுரை, எனவும்; சென்னி ஸ்ரீ சைலம், நெற்றி கேதாரம்; புருவமத்திகாசி, குய்யம் குருக்ஷேத்திரம், ஹிதயம் பிரயாகை, ஹிதயநடு சிதம்பரம், ஆரூர் மூலாதாரம் எனவும் உண்மை நூல்கள் கூறுகின்றன.

மேற்கூறிய விராட்புருடனுக்கு இடை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளுள்ளன. அவற்றுள் இடைநாடி இலங்கையின் நேர் போகும், சுழுமுனை என்னும் நடுநாடி தில்லைநேர்போகும். அந்த நடுநாடியின் மூலக்குறியொன்று உளது. அக்குறிக்குத்தென்பக்கம் அம்பலமொன்று இருக்கின்றது. இனி,

இவ்வண்டம் ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டிருப்பதுபோல பிண்டமும் ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது ஆதலால் அண்டத் தியல்பெல்லாம் இப்பிண்டத்தினுமுண்டு. அங்ஙனம் உண்டு என்பதற்கு

"எண்டரு பூதமைந்து மெய்திய நாடிமூன்று
மண்டல மூன்றுமாகி மன்னிய புணர்ப்பினாலே
பிண்டமு மண்டமாகும் பிரமனோ டைவராகக்
கண்டவர் நின்றவாறு இரண்டினுங் காணலாமே."

என்ற செய்யுளே சான்றாம். அன்றியும் அண்டபிண்டங்களுக்குள்ள சில ஒற்றுமைகள் எடுத்துக் கூறுவாம்.

1. அண்டத்தில் சூரியன் சந்திரன் உண்டு. பிண்டத்தில் இடைகலை பிங்கலைகளுண்டு.
2. அண்டத்தில் பிராணிகள் தோன்றிநின் றழிவன பிண்டத்தினும் புழு முதலியன தோன்றிநின் றழிவன.
3. அண்டத்திற்கு பகலிரவுகளுண்டு. பிண்டத்துக்கு சகலகேவலமுண்டு.
4. அண்டம் அசத்தாயும் நித்தியமாயுமுள்ளது பிண்டம் அவ்வாறேயாம்.
5. அண்டம் ஈசனால் நடத்தப்படும். பிண்டமும் உயிர்க்குயிராயுள்ள இறைவனால் நடத்தப்படும்.
6. அண்டத்தில் திவ்விய க்ஷேத்திரங்களுள. பிண்டத்திலும் ஸ்ரீ பருப்பதமுதலிய க்ஷேத்திரங்களுள.
7. அண்டத்தில் கங்கையாதி நதிகளுண்டு. பிண்டத்தில்
ஹிருதயம்=பிரயாகை இடைநாடி=கங்கை
பிங்கலை=யமுனை நடுநாடி=சரஸ்வதி ஆகும்.

கங்கை யமுனை சரஸ்வதி என்னும் நதிகள் சங்கமமாகிற விடத்துக்கு திரிவேணி சங்கம மென்று பெயர். அதுபோல் நாபியின்கண் மூன்று நாடிகளுங்கூடிடுந் திரிவேணி சங்கமமுண்டு. இங்ஙனங்கூறியவாற்றால் பிரமாண்டம் யாவும் இத்தேகத்தின் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்பது பெற்றாம்.

இத்தகைய பிண்டமாகிய சரீரத்துள் ஜீவான்மா வசித்தபோதிலும் அதற்கு அறிவு இச்சை தொழில் அந்தரியாமியாகிய பரமான்வை யின்றி யமையாது. அவ்விறைவன் அவ்விடம் அநாதியே யிருத்தலால் இச்சரீரம் பிரமபுரமென்று உபசரிக்கப்பட்டது. ஆதலால் இச்சரீரம் பிரமபுரமாகவும் பரமான்மாவாகிய சிவம் பிரமமாகவுங் கொள்ளற்பாற்று.

இச்சரீரத்துள் தகரபுண்டரீக மென்னும் ஹிருதயகமல மொன்றுளது. அதன் தன்மையைக் கூறுவாம். அக்கமலம் பரமாகாயத்தில் சூக்குமமாயுள்ளதாதலால் பூதக்கண்ணாற் காணமுடியாது. இது பீஜமுதலாகக் கீழ் நோக்கித் தோன்றியதோர் திப்பிய கமலமாம். இக்கமலத்துக்குக் கீழ்க் கிழங்கு பிருதிவி தத்துவமாம். பெருவிரற் கனமுள்ள நாளம் அப்புமுதல் அந்தக்கரண மீறுகவுள்ள (23) தத்துவங்களாம். அந்நாளத்தின் உயரம் எட்டு அங்குலமுள்ளது. அதில் ஒன்பது துவாரங்களுள்ளன. அந்நாளத்தின் முடிவில் கீழ்நோக்கிய பொகுட்டினையுடைய முடிச்சொன்று உளது. அதற்கு வித்தியாதத்துவம் ஏழும் சுத்தவித்தை யொன்றும் ஆக எட்டும் எட்டு இதழ்களாம். இவ்விதழ்களில் கிழக்கு முதல் ஈசானம் வரை "ஓம் சிவாய-நமோ நம" என்னும் மந்திரம் விளங்கும், ஈசுரம் சதாக்கியம் என்னும் இரண்டு தத்துவங்களும் 64 கேசர வடிவுகளாம். சத்தி தத்துவம் பொகுட்டு வடிவாம். சிவதத்துவம் பொகுட்டினுட் காணப்படும் பீஜ வடிவாம்.

மேற்கூறிய தளங்களுக்குமேல் சூரியோதயத்துக்குச் சமானமாயும், பதினாறுதளங்கள் விளங்கப்பட்டதாயும் ஒருசாண் விஸ்தாரமுள்ளதுமான, தாமரை நடுவில் நாலங்குல விஸ்தாரமுள்ள கர்ணிகையொன் றிருக்கின்றது. இந்தக் கரணிகாக்கிரத்தில் சூரிய மண்டலமும், அதற்குள் சந்திர மண்டலமும், அதன் மத்தியில் அக்கினி மண்டலமும் அதன்மேல் சத்தி மண்டலமு மிருக்கின்றன.

முற்கூறியாங்கு முப்பத்தாறு தத்துவங்களையும் ஆசனமாகக்கொண்டு அவற்றின் மேனிற்கும், முதல்வன் திருவடிகள் அவ்விதைய கமலத்தின்மேனிற்கும், அதனை யறிந்து பஞ்சாக்ஷரத்தால் பூஜைசெய்க.

இதுகாறும் தகரபுண்டரீகமாகிய ஹிருதய கமலத்தைப் பற்றி ஒரு சிறிது கூறினும். இனித் தகரபுண்டரீகத்துள் விளங்கும் ஆகாயத்தைப் பற்றிப் பேசுவாம் ஹிருதய கமலமத்தியில் ஓர் (அம்பரம்) ஆகாயமுண்டு.



அந்த அம்பரம் சித்தாதலினால் அதற்குச் சிதம்பரமென்னும் நாமமுண்டாயிற்று. அதுபற்றி "சிதம்பரந்து ஹ்ருந்மத்யே" என்று தரிசனோபநிடதமுங் கூறுவதாயிற்று.

"உள்ளம் மன்றெனவும்" என்று தாயுமானவருங் கூறுவாராயினர். சித்சக்திரூபமாய் விளங்கும் இவ்வாகாயத்தைச் சரீரமாகவுடையது பிரமம் ஆதலால் இவ்வாகாயமே பிரமமாகிய சிவத்துக்குப் பெயராயிற்று. அது பற்றி, "பிரமபுரமாகிய இச்சரீரத்துள் தகரமாகிய புண்டரீக வீட்டினுள் இருக்கும் ஆகாயத்தை நாடவேண்டியது" என்று சாந்தோக்கியமுங் கூறுவதாயிற்று. ஆகவே பிரமாண்டம் பிரமபுரமாகவும், தில்லைவனம் புண்டரீக வீடாகவும், சிவம் ஆகாசமாகவும் கொள்ளல் வேண்டும்.

இந்தச் சிதம்பரத்தி னிடத்தே சகல சராசரப் பொருளையும் இயக்கிப் பஞ்சகிருத்தியம் நடாத்துவான் வேண்டி இறைவன் அனவரதமும் ஆனந்த நிருத்தனஞ் செய்தருளுகின்றனர். ஆண்டு பிரமா முதலிய தேவர்கள் எல்லாரும் வழிபடுவாராயினர் அது பற்றி,

"வண்டுளப மணிமார்பன் புதல்வனோடு மனைவியொடுங் குடிபுகுந்து வணங்கிப்போற்றும், புண்டரிக புரத்தினில் நாதாந்தமோன போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே" என்று ஆன்றோருங் கூறுவாராயினர்.

இந்த ஞானமன்றமே ஓங்காரமாம். அதனுள் நடிப்பவனே நடராஜனும். அதுபற்றி "ஓங்காரத்துட்பொருளை என்றும்; "உய்ய, என்னுள்ளத்துளோங்காரமாய் நின்ற, மெய்யா என்றுங் கூறுவாராயினர்.

ஆகவே ஞானமன்று எனினும் ஓங்கார மெனினும் ஒன்றேயாம்.

ஞானமன்று என்பது திருச்சிற்றம்பலம். ஆகவே ஓங்காரம் திருச்சிற்றம்பலமாம். சிற்றம்பலமென்னும் ஞானமன்றத்தை "ஆனந்தத் தேனிருந்த பொந்து" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறி யருளினார்கள்.

## திருவாசகம்.

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லா மென்னுடைய
பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரா
னந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

என்ற திருப்பாசுரத்தாற் காண்க.

தில்லை மரத்தின் விதை மஹாவிஷத்தை நீக்குமாறுபோல, அநாதியே நம்மைப்பந்தித்த சகசமலமாகிய மஹா விஷத்தைத் தகர புண்டரீக வீட்டினுள், "ஞானுகாயம்" நீக்குமாதலால் அந்தஞான மன்றம் "தில்லைத்திருச்சிற்றம்பலம்" என்று வழங்கப்படுவதாயிற்று.

மேற்கூறியாங்கு முப்பத்தாறு மாயாதத்துவ கமலபீடத்தினை வியாபித்து வித்தியா தேகமன்னி விளங்குஞ் சிலனைச் சிவான்மாகண்டு வழிபடும். அவ்வாறு வழிபடுதலால் வந்த மெய்ஞ்ஞானத்தால் ஒன்றன்றி இரண்டன்றி ஒன்றிரண்டுமன்றி நின்றநிலையாகிய அத்துவித பாவனை செய்யும். அப்பாவனையால் சிவபெருமானைத் தன்னுள்ளே காணும். கண்டபின் எங்கும் வியாபித்து நின்றறியு மியல்பொடு கூடிய முற்றுணர்வு உறும். பின் பொருளுண்மை உணரும். மலவாசனை நீங்கும். நின்மலகேவல மெய்தும். அந்தமொன் றில்லா ஆனந்தமுறும்.

சேதனு சேதனப் பிரபஞ்சம் தோன்றி யொடுங்குதற்கும், முத்தான்மாக்கள் கறந்த பால் கன்னலொடு தேன்கலந்தாற்போலத் திளைத்துநின்று பூரணானந்த வாழ்வு எய்துதற்கு இந்த ஞானமன்றமாகிய திருச்சிற்றம்பலமே இடமாதல் பற்றியும், இதனை ஆன்றோர் பொதுவெனக் கூறுவராயினர். எத்தளிக்கும் மேலான தளியாதலினுல் இதனை ஆன்றோர் "கோயில்" என்று கூறுவாராயினர். ஆரியவேதம் தனக்கு முன்னும் பின்னும் காப்பாக ஓங்காரத்தை நிறுத்தி நடைபெறுவதுபோல, நமது சமயாசாரியர்கள் தமிழ் மறையின் முன்னும் பிரணவ உறையுளாகிய திருச்சிற்றம்பலத்தை வைக்கும் ஆணைதந்தருளினுர்கள். அவ்வாறே நமது தமிழ்மறை ஓதுவார்கள் தேவாரம் ஓதுதற்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்னும் தெய்வத்திருமொழி கூறுதலை வழக்காற்றிற் கண்டாம். இனித்திருவாசகத்தில் "அந்தவிடைமருது" என்று கூறியிருத்தலைப்பற்றி ஒருசிறிது பேசுவாம்.

"இடைமருது அல்லது மத்தியார்ச்சுனம்" (மத்தியம் = நடு; அர்ச்சுனம் வெண்மை, நின்மலம்) இது நின்மலமான ஸ்தானமெனப் பொருள்பட்டு மத்தியசப்தத்தோடு சேர்ந்து நின்று இத்தன்மையையுடைய ஆதிசக்தியின் ஹிருதய கமலம், மத்தியஸ்தானத்தை யுணர்த்திப் பின்பு அந்த ஹிருதய கமல மத்தியில் தியானிக்கப்பட்டு விளங்கிய ஸ்ரீ சோதிர்மய மஹாலிங்கப்பெருமானை யுணர்த்தி நின்றமை காண்க.



"திருப்புடைமருதூர்" என்னும் வார்த்தையையும் நன்கு இத்தருணத்தில் கவனிக்கத்தக்கது.

இதுகாறுங் கூறியவாற்ருல் திருச்சிற்றம்பலமே பிரணவமாமென்பது, அல்லது பிரணவ உறையுள் என்பதுமாம்.

## திருவாசகம்.

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுள மன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினு னயடியேனணி கொடில்லை கண்டேனே.

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டு
முறவினெடு மொழியச்சென் றுல்குடைய வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த்திருச்சிற்றம்பல மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

S. பால்வண்ண முதலியார்,
திருநெல்வேலி.

## வாநரநாம சங்கியை.

வாநரம் என்பது குரங்கின் பெயர்களுள் ஒன்றென்பது சங்கத மொழியிலுள்ள அமரகோசம் முதலிய ஆபிதாநிகங்களாலும், மஹாபாரதம், வான்மீகம், பட்டிகாவியம் முதலிய காவியங்களாலும், திராவிட மொழியிலுள்ள பிங்கலம் முதலிய நிகண்டுகளாலும், பாரதம், இராமாயணம் முதலிய காவியங்களாலும், வேறு நூலகளாலுந் தெளியப்பட்ட சித்தாந்தம். வாநரம் என்பதன் பொருள் வனத்திலுள்ள பழம் முதலியவைகளைக் கவர்வது என்பது ஆபிதாநிக சித்தாந்தம். கிட்கிந்தைமலையிலிருந்த அநுமான், சுக்கிரீவன் வாலி முதலிய குரங்குகள், தைவிகமுடைமையால் வானரர் என வழங்கவும் படும் என்பது மஹாசநுங்கோர சித்தாந்தம். தைவிகமுடையன என்பது வான்மிகராமாயணம், அத்தியாத்துமராமாயணம், கம்பராமாயணம் முதலிய ஆப்தமகா வாக்கியங்களாற் பெறப்பட்ட சித்தாந்தம் சம்பநாடனுமை செவிசாற்றிய இராமாயணமுங் கம்பராமாயணமும் வேறுவேறன்று சேதுபந்தனமும் மாறிற்றிலது.

இவைகளை நோக்காது அடிசைகிழார் என்பவர் வேறுபல கூறுவாராயினர். வானரர் என்பதை வால் + நரர் எனக் கண்ணழித்து "வெள்ளிய நிறந்தையுடைய மனிதர் எனப் பொருளுங் கூறுவர். அம்மனிதர் வாலி, சுக்கிரீவன், அநுமான் முதலியோர் என்பதும் கூறுவர். இராமாயணங் கூறிய வாலி, சுக்கிரீவன் முதலியோருண்மை அங்கீகரணீயமாவதும், குரங்குகளென்னும் உண்மை அநங்கீகரணீயமாவதும்" பொருந்துவனவல்ல. முன்னரே கோட்டில் வாழ்விலங்கு எனப்பொருள்படும் சாகாமிருகம் என்பதற்கு சாகாதமிருகம் எனப்பொருள் கூறித் தமிழ்மொழி எனச் சித்தாந்தஞ் செய்தாருமுளர். சாகா—மரக்கொம்பு.

இனி மேருமலை இலங்கையின் தென்பாலுள்ளது என்பதுங் கூறினர். மேருமலை இமயத்தின் வடக்கே இளாவிருத கண்டத்துள்ளது என்பது பல ஆகமபுராணேதிகாசங்களாற் பெறப்பட்ட சித்தாந்தம். அல்லதூஉம் பகவற்கீதையிலே (அத். ௧0.) "மலைகளுக்குள் மேருவும் நானே" என்ற பகவான் கூற்றுக்குக் கௌரவ இராமநாதத்துரையவர்கள் கூறிய விருத்தியுரையை நோக்கினால் மேருமலையின் இயல்பும், காரணமும், பக்கமலைகளினியல்பும், இளாவிருத கண்டத்து நிற்கையும், சாதாரண மநுடர்க்கும் புலப்படாக்காரணமும் பிறவும் இலகுவிற் புலப்படுவனவாகும்.

இங்ஙனம்:

சுன்னாகம்-அ-குமாரசுவாமிப் பிள்ளை.

## சமாச்சாரங்கள்.

பரிபூரணானந்தபோதமும் சிவசூரியப்பிரகாசமெனு முறையும்—இந்நூல் பாம்பன்-ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிச்செய்தது. சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவ சமயத்துண்மை தென்மொழிப் பிரமாணங்களாலும், வடமொழிப் பிரமாணங்களாலும் இதனுள் நன்கு விளக்கி வச்சிரலேபமாக நாட்டப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர் மண்டலபிராம்மணோப நிஷத்துப் பிரகாரம் சுத்தாத்துவிதம் கூறியிருக்கின்றனர். உபநிடதங்களாகிய வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் சிறிதும் பேதமின்மையைத் தெரிவிக்கின்றது. நூற்றெட்டு உபநிடதங்களும் சித்தாந்தமேயென விவகரித்திருக்கிறது. உபநிடதங்களில் ஏகான்மாவாதிகள் தங்கட்கு ஆதரவாகக்காட்டிவரும் சுலோகங்களில் சித்தாந்த வுண்மையினைச் சுருதியுக்தி யனுபவங்கட்கிசையப் பொருத்திக்காட்டியிருக்கிறது. அன்றியும் துறவுக்கு அத்தியாவசியமாக வேண்டும் பற்பல சாதனங்களைப் பற்பலவகையாக எடுத்துக்காட்டி வலியுறுத்தியிருக்கிறது.

நீர்நிலை கண்டுபிடிக்கும் சாஸ்திரம்—இதுவெளிப்படுத்தியவர் கணித சாஸ்திரபண்டிதர், வரகூர்-பிரமஸ்ரீ சுந்தரேசுவர சாஸ்திரியாரவர்கள். பூமிக்குள் இன்னின்ன இடத்தில் அதிகமாகஜலம் இருக்குமெனவும் அதுதெரிந்துக்கொள்ளுதற்கு இன்னின்ன அடையாளங்கள் பூமியின் மீது உண்டெனவும் விளக்கப்பட்டிருக்கின்றது.

சித்தாந்த பாடசாலை—சைவசித்தாந்த மகாசமாஜச் சார்பாக ஓர் சித்தாந்த பாடசாலை இருத்தல் வேண்டுமென்று பலர்கருதியபடி ஸ்ரீமான் கி-இராஜு-கிராமணியார் அவர்கள் தமது பிள்ளையார்தோட்டத்தில் அமைத்திருக்கும் சமாஜ உத்தியோகசாலையில் 1917௵ பிப்ரவரி௴ 5௳ திங்கட்கிழமை (தைப்பூசம்) முதல் பிரதி ஆதிவாரந்தோறும் மாலை 3-மணி முதல் 6-மணிவரையிலும் ஸ்ரீலஸ்ரீ திருமயிலை - வித்துவான் தணிகாசல முதலியார் அவர்களைக்கொண்டு சித்தாந்த சாஸ்திரம் பதினான்கினுள் ஒன்றாய திருவருட் பயன் பாடம் நடத்திவருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம்.

சைவ சித்தாந்த ஸ்ரீபரமாசாரிய பக்தஜனசபை—தேர்த்துறையில் 16-1-17-ல், ஸ்ரீமான்-ப-தில்லை முதலியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் இரண்டாவது வருடோற்சவம் கொண்டாடப்பட்டது.

சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபை—ஜனவரி௴ 27, 28, 29௳களில் இச்சபையின் 13-வது வருடமகோற்சவத்தில் ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள், பிரமஸ்ரீ ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் அவர்கள் அக்கிராசனங்களின் கீழ் பல உபந்நியாசங்கள் நடந்தேறின.

27உ பெண்பாலார்க்கு மாத்திரம் ஸ்ரீமதி-வா-கோ-ஜெயலட்சுமியம்மா ளால் ஜீவகாருண்ய பிரசங்கம் நடைபெற்றது.

சென்னைச் சமரசஞான சங்கம்—1917ஆ பிப்ரவரிமீ 14, 15, 16, 17, 18-தேதிகளில் முறையே ஸ்ரீமத்-தாயுமானசுவாமிகள் குருபூஜா விசேஷத்தில் சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர், பிரமஸ்ரீ-வசிஷ்டபாரதியார், ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் ஸ்ரீமான்-கா-நமசிவாய முதலியாரவர்கள், திவான்பஹதூர் ஆனரபில் ஜஸ்டிஸ் பிரமஸ்ரீ-சதாசிவ ஐயரவர்கள் அக்கிராசனங்களின் கீழ் பல உபந்நியாசங்கள் நடந்தன.

சைவ சித்தாந்த புராணப் பிரசங்கசபை—காஞ்சிபுரத்தையடுத்த ஐயங்கார் குளத்தில், 14-2-17-ல் சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தின் கீழ் முதல்வருட மகோற்சவம் நடந்தேறியது.

நடராஜ பக்தஜன சபை—திருக்கழுக்குன்றத்தை யடுத்த மானாம் பதியில், சைவ சித்தாந்த மகாசமாஜத்திற்குக் கிளைச்சபையாக ஷை சபையைக் கட்டியாம்பந்தல் சைவ சித்தாந்த சபைத்தலைவர் ஸ்ரீமான்-சபாபதி முதலியாரவர்கள் 28-2-17-ல் தாபித்தனர்.

சைவசித்தாந்த மகாசமாஜம்—சென்னையில் 18-3-17-ல், சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ், திருவாவடுதுறை யாதீனவித்துவான் ஸ்ரீமான் ஆத்தங்குடி பொ-முத்தையபிள்ளையவர்கள் தேவாரமாட்சி என்னும் விஷயம் பிரசங்கித்தனர்.

சைவ சித்தாந்த சங்கம்—பூவாளூரில் 10-11, 3-17-ல், ஸ்ரீமான் க-சதாசிவசெட்டியார் B. A., அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஏழாம் நிறைவு விழா நிறைவேறியது.

கோவிற்பட்டி விளைகழகம்—இக்கழகத்தலைவர் சுவாமி விருதை-சிவஞானயோகிகளின் தலைமையின்கீழ் 11-3-17-ல், M. V. S. முத்தையபிள்ளையவர்கள் ஜீவேசுர லட்சணத்தைப் பிரசங்கித்தனர். இவ்விஷயம் நமது பத்திரிகையில் வெளிவரும்.

சென்னைச் சிவனடியார் சிவத்தலயாத்திரைச் சங்கம்—இவர்கள் 25-3-17-ல், 37-வது தலயாத்திரையாகப் பொன்னேரியை யடுத்த ஆண்டார் குப்பம் தரிசித்து வந்தனர்.

புதுவை-நளஆ பங்குனிமீ 11உ புதுவைமாநகரில் தமிழ்ச் சங்கமொன்று தாபிக்கப்பட்டது.

## சைவசித்தாந்த மகாசமாஜ நிலையத்திற்காகக் கையொப்பம் செய்தவர்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீமான் தி. இராஜு கிராமணியா ரவர்கள், மயிலாப்பூர் வேண்டிய நிலம் | |
| ,, யாழ்ப்பாணம் வண்ணைநகர் சுவாமிநாதபண்டிதரவர்கள் ...ரூ. | 250 |
| ,, அ. சாமி குப்புசாமி கிராமணியார் அவர்கள் ... | 100 |
| ,, ச. சபாரத்தின முதலியாரவர்கள், யாழ்ப்பாணம் ... | 50 |
| ,, J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், ... ... | 50 |
| ஸ்ரீ,, கி குப்புச்சாமி முதலியாரவர்கள், ... ... | 50 |
| ஸ்ரீலஸ்ரீ திரு-அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ... | 50 |
| ஸ்ரீமான் க இரத்தின கிராமணியாரவர்கள் ... ... | 50 |
| ,, A. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ... ... | 50 |
| ,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள், ... ... | 50 |
| ,, T. S. சுவாமிநாதப் பிள்ளையவர்கள், திருச்சிறுப்பள்ளி ... | 50 |
| ,, E. S. அர்தநாரி ஆச்சாரியரவர்கள், ஈரோடு ... | 50 |
| ,, ம. நீ. என். சின்னசாமி பிள்ளையவர்கள், மதுரை ... | 50 |
| ,, அ. மு மாணிக்க முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... | 50 |
| ,, V. C. வேதாசல முதலியாரவர்கள், செய்யூர் ... | 35 |
| ,, P. குமாரசாமி செட்டியாரவர்கள், ... ... | 25 |
| ,, தெளிசிங்க முதலியாரவர்கள், பிரம்பூர் ... ... | 25 |
| ,, தங்கவேலு முதலியாரவர்கள், சிந்தாதிரிப்பேட்டை ... | 25 |
| ,, நா. அப்பாசாமிசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி ... | 25 |
| ,, சா. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், பெரியமெட்டு ... | 20 |
| ,, T. சபாபதி முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... | 20 |
| ,, S T. M. P. T. நடராஜ செட்டியாரவர்கள், யாழ்ப்பாணம் | 15 |
| ,, தி. மாணிக்க முதலியார் அவர்கள், சென்னை ... | 12 |
| ,, A. சிவப்பிரகாச முதலியார் அவர்கள், கிருஷ்ணம்பேட்டை | 10 |
| ,, இராமலிங்காச்சாரியர், வாலாஜா ... ... | 10 |
| ,, T. S. பரமேஸ்வரம் பிள்ளையவர்கள், சென்னை .... | 10 |
| ,, இராவ்பஹதூர் க. வைதியலிங்கம் பிள்ளையவர்கள், சென்னை | 10 |
| ,, T. S. தியாகராஜ ஞானியார் அவர்கள், திருவாரூர் ... | 10 |
| ,, குள்ளப்பாச்சாரியரவர்கள், வாலாஜா ... ... | 5 |
| ,, B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள், பூட்டுத்தாக்கு ... | 5 |
| ,, துரைக்கண்ணு கிராமணியாரவர்கள், கிருஷ்ணப்பேட்டை | 5 |
| ,, கா. கதிர்வேலு முதலியாரவர்கள், தண்டரை ... | 5 |

| | | |
|---|---|---|
| ஸ்ரீமான் அ. ர. தணிகாசல முதலியாரவர்கள், அங்கம்பாக்கம் | ... | 5 |
| ,, M. C. இராஜகோபால முதலியாரவர்கள், மயிலாப்பூர் | ... | 5 |
| ,, T. R. திருவேங்கட முதலியார் அவர்கள், சென்னை | ... | 5 |
| ,, M. மாசிலாமணி முதலியாரவர்கள், மயிலாப்பூர் | ... | 5 |
| ,, மளிகை பு. ஆறுமுக முதலியாரவர்கள், ... | ... | 5 |
| ,, கு. வேலுமயிலுஞ்சாமியாரவர்கள், ... | ... | 5 |
| ,, சு. நடேச தேசிகர் அவர்கள், கவர்ன்மெண்டு ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், மேலகாசாகுடி, நெடுங்காடு. | ... | 5 |
| ,, P. V. முத்துசாமி .. | ... | 2 |
| ,, பொன்னுசாமி ஆசாரியாரவர்கள், சென்னை | ... | 1 |

கையொப்பமிட்டவர்களில் பணம் செலுத்தியவர்கள்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீமான் வேலுமயிலும் சுவாமிகள் அவர்கள் | ... | 5 |
| ,, மளிகை பு ஆறுமுக முதலியார் அவர்கள் | ... | 5 |
| ,, ஆரைக்கண்ணு கிராமணியார் அவர்கள் | ... | 5 |
| ,, கி. மாணிக்க முதலியார் அவர்கள் ... | ... | 3 |
| ,, T. R. திருவேங்கட முதலியார் அவர்கள் | ... | 1 |

## அறிவிப்பு.

சென்னை மயிலாப்பூர் அம்பட்டன் வாராவதி ரோட்டு, பிள்ளையார் தோட்டத்தில் ஸ்ரீமான் இராஜு கிராமணியார் அவர்கள் உதவிய நிலத்தில் இச்சமாஜ நிலயக் கட்டடவேலையை இப்போது ஆரம்பித்திருப்பதைப் பற்றி அங்கத்தவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறேன். கையொப்பம் செய்தவர்கள் தயையுடன் தொகைகளை அனுப்புவதுடன் கையொப்பம் செய்யாதவர்களும் போதுமான அளவும் கையொப்பம் செய்து தொகைகளை அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:
கி. குப்புச்சாமி,
காரியதரிசி.

OFFICE OF THE REGISTRAR
25 MAY 1917
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௬.] 1917ஆ ஏப்ரல்மீ [பகுதி ௪.

## சாந்தோக்யோபநிஷத்து.

முதலாவது பிரபாடகம்.

### கண்டம் ௧.

சாலாவத்யரென்னும் சிலகரும், சைகிதாயனரென்னும் தால்பியரும், ஜைவலியென்னும் பிரவாகனரும் உத்கீதவிஷயத்தில் வல்லவராயிருந்தனர். இம்மூவரும் உத்கீத விஷயத்தில் சம்வாதஞ் செய்யவாரம்பித்தனர்.

௨. பிரவாகனர் மற்றிருவரைநோக்கிப் பிராமணர்களாகிய நீங்களிருவீரும் உங்கள் வசனத்தைச் சொல்வீராக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேனென்றனர்.

௩. சிலகர் தால்பியரை நோக்கிக் கேள்வி கேட்க வாரம்பித்தனர். (அவருக்குத் தால்பியர் பதிலுரைத்து வந்தனர் )

௪. சாமத்திற்குக் கதியெது? ஸ்வரம். ஸ்வரத்திற்குக் கதியெது? பிராணன். பிராணனுக்குக் கதியெது? அன்னம். அன்னத்திற்குக் கதியெது? ஜலம்.

ரு. ஜலத்திற்குக் கதியெது? சுவர்க்கலோகம். சுவர்க்கலோகத்திற்குக் கதியெது? இதற்குமேல் ஸாமத்தை அப்பியாசிப்பதில்லை. ஸாமம் சுவர்க்கத்தைப்பற்றித் தோத்திரஞ் செய்வதனால் ஸாமத்தைச் சுவர்க்கத்தில் தாபிப்போம்.

சு. சிலகர்—சாமம் பிரதிஷ்டிதமென எவன் விபரீதமாகச் சொல்லுவனோ அவன் தலைவெடித்துப் போம்.

எ. தால்பியர்—அந்த இவ்வுண்மை உம்மிடமறிந்து கொண்டேன். சிலகர்—அங்ஙனமேயறிக. சுவர்க்கலோகத்திற்குக் கதியெது? இவ்வுலகம். இவ்வுலகத்திற்குக்கதியெது? இதற்குமேல் சாமத்தை அப்பியாசிப்பதில்லை, சாமம் பிரதிஷ்டையைத் தோத்திரஞ் செய்கிறபடியால் இவ்வுலகத்தில் தாபிப்போம்.

அ. பிரவாகனர்—அங்ஙனம் சொல்லற்க, சொல்பவன் தலைவெடித்துப் போவதாக. தால்பியர்—அந்த இவ்வுண்மை உம்மிடமறிந்து கொண்டேன். பிரவாகனர்—அங்ஙனமே யறிக.

கண்டம் சு.

சிலகர்—இந்த லோகத்திற்குக் கதியெது? பிரவாகனர்—ஆகாயம், ஆகாயத்திலேயே சகல பூதங்களுமுண்டாகின்றன. லயமாகின்றன. ஆகாயம் பெரிது அதே பராயனம்.

உ. உத்கீதம் பரமாத்ம சம்பந்தம், அனந்தம் இதனுண்மையறிந்து எவன் உபாசிக்கின்றானோ அவனுக்குப் பரமாத்ம சம்பந்தமான ஜீவனமுண்டாகிறது. உலகங்களையும் ஜயிக்கின்றான்.

ங. உனது பிரஜைகள் எதுவரையில் உத்கீதத்தை உபாசிக்கிறார்களோ அதுவரையில் அவர்கட்குப் பரமாத்ம சம்பந்தமான ஜீவனமிருக்குமெனச் சௌநகர் உதரசாண்டில்யருக்குச் சொன்னார்.

ச. இவ்வுலகத்தில் அங்ஙனமே எவன் உத்கீதத்தையுபாசிக்கின்றானோ அவனுக்குப் பரமாத்ம சம்பந்தமான ஜீவன முண்டாகும்.

மணவழகு.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஜீவேசுரலக்ஷணம்.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் அநாதிநித்யம். பாசமென்ற மாயை சகலப் பிரபஞ்சங்களுக்கும் சகலஜீவ சூக்குமசரீர தூலசரீரங்களுக்கும் உபாதானகாரணம், கர்மானுகுணமாய் எல்லாவிதசரீரங்களையும் அடைந்து ஜனன மரணச் சுழலிற்பட்டும் சுவர்க்கநரக மெய்தியும் வருந்துவதும் பரமேசுரனையறிந்து வழிபட்டு அவனருள்பெற்று முத்தியில் நித்யாநந்தப் பெருவாழ்வடைவதும் ஜீவன். அநாதியே ஆணவமலத்தில் கேவலாவத்தைப்பட்டுக் கிடக்கும் ஜீவர்களுக்குத் தனுகரணபுவன போகங்களைக் கொடுத்துப் பக்குவப்படுத்தி முத்தியின்பந் தருதற்பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் புரிந்தருளும் முற்றறிவும் அளவிலாற்றலும் பேரின்பமும் உடைய எங்கும் நிறைபரம்பொருளே பதி. உலகிலுள்ள எல்லாமதங்களும் தெய்வத்துக்கொவ்வொரு பெயர்தத்தம் பாஷைகளில் கூறிவணங்குகின்றனர். ஜீவர் பலர், தெய்வம் ஒன்று. பிரமம் கிளிஞ்சிலில்வெள்ளி போல இல்லாத மாயையிற்றோன்றிய தாய்க்கூறும் அவித்தையிற் பிரதி பிம்பித்து ஜீவனாயதென்றும் அந்த அஞ்ஞானம் நீங்கினாற் பிரமமேயென்றும் கூறிப்பிரமத்துக்கு அஞ்ஞானங் கூறுகை பிழை. நாஸ்திகர் பிரமம் இல்லை யென்கின்றனர். மாயாவாதிகள் பிரமமுளது அது நானே வேறில்லை என்கின்றனர். நாத்திகர்தாம் அறியாத உண்மையைக் கூறுகின்றனர். மாயா வாதிகள் பிரமம் இருப்பது போலக் கூறித் தம்மைத்தவிர வேறில்லை என்று ஏமாற்றம் கூறுகின்றனர். நீ பிரமமானால் பிரமவிலக்கணங்களில்லையே யெனில் மறைந்திருப்பதாய்ச் சாக்குகள் கூறி அறியாதை மருட்டுகின்றனர். அதனாலே தாயுமான சுவாமிகள்,

"யாங்களே தெய்வமென்றிடும் பாதகத்தவரும்." எனவும்

## திருவாசகம்.

"மிண்டிய மாயாவாத மென்னும், சண்டமாருதஞ்
சுழித்தடித்தாஆர்த்து" எனவும் கூறுகின்றனர்.

சைவரும், வைணவரும், முகமதியரும், கிறிஸ்துவரும், ஏனைய ஆஸ்திகரும் இந்த மாயாவாதத்தில் மயங்காது அவ்வவர் தெய்வத்தை நம்பி வழிபட்டுய்யவேண்டும்.

எல்லாவிதத்திலும் தாழ்மைப்பட்ட ஜீவனைப் பிரமமென்றுபத்தியை விடுத்துக் கெடுதியடையாதிருக்க வேண்டுகின்றனன்.

தலைமைவகித்த யோகிகள் வேதங்கள் உபநிடதங்கள் வேதாந்த சூத்திரம், ஆகமங்கள், சித்தாந்த நூல்களனைத்தும் கடவுளை வழிபட்டுச் சீவர் முத்தியடையும் மார்க்கங்களையே கூறுகின்றன. பிரமமொன்றே யுளதெனில், வேதாதிகள் யாருக்குயார் எதற்குக் கூறப்பட்டன. பிரமம் உபாதி வசத்தால் மயங்கியிருக்கிறது, உபாதி நீங்கினபோது பிரமம் பிரமமேயாம் எனில், அந்தப்பிரமம் முன்போல் மறுபடியும் உபாதியால் மயங்கும். ஆதலால் காரணமின்றி அஞ்ஞான மடைந்த பிரமம் என்றும் ஜனன மரணப்பட்டுழன்று துன்புறவே செய்யும். ஜீவனே பிரமமானால் வேதாதி நூல்களும் உபாசனை மார்க்கமும், ஞானமும் பயனற்றனவே யாம்.

சுவேதாசுவதரோபநிடதம்.

க்ஷரம் பிரதானமம்ருதா க்ஷரம் ஹர:
க்ஷராத்மாநா வீசதேதேவ ஏக:
தஸ்யா பித்யாநாத்யோ ஜநாத்தத்வ பாவாத்
பூயச்சாந்தே விச்வமாயா நிவ்ருத்தி:—

பிரதானம் (மாயை) மாறுவது, அழிவிலுயிர் மாறாதது, பிரதானம், ஜீவனிரண்டையும் ஒரேதேவனாகிய அரன் ஆள்கின்றனன் அவனது மிக்க முள்ளலானும், யோகத்தானும், அத்தன்மையைப் பாவித்தலானும், இறுதியில் எல்லாமாயையும் நீங்குகிறது.

சுவேதா 5—1

வித்யா வித்யே ஈசதே யஸ்து சோந்ய:



ஜீவனையும் பிரதானத்தையும் ஆள்பவன்.

சுவேதா 6-23

யஸ்யதேவே பராபக்தி:
யதாதேவே ததாகுரௌ.

"எவனுக்குத் தெய்வத்தினிடத்தில் மேலானபக்தி யுளதோ, எப்படி தெய்வத்தினிடத்தில் பத்தி அப்படி குருவினிடத்தில் உளதோ."

அவனே நூலுக்கதிகாரி யென்று உபநிடதம் கூறுகின்றது.

தன்னையே தெய்வமென் றெண்ணி யிருப்பவனுக்கு ஒரு தெய்வத்தினிடத்தில் எப்படிப்பத்தியுண்டாம், நமக்குத் தனுகரண புவனபோகங்களை நம்பயன் கருதிக் கொடுத்தருளும் கடவுள் உபகாரத்தைமறந்து நம்மையே கடவுளென் றகங்கரிப்பது எத்தனைப் பெரும்பாவம். இதனானே

போற்றிப்பஃறொடை

அவிகாரம் பேசுமகம்பிரமக்காரர் வெளியாமிருளில் வீடாதே. எனவும்

சங்கற்ப நிராகரணம்

மாயாவாதப் பேயா வுனக்குத் தேவரிலொருவ ருண்டாக
மேவரு நரகம்வி டுத்தலோ வரிதே.

எனவும் வற்புறுத்திக் கூறின.

ஆதலால் எல்லாம்வல்ல கடவுளை ஜீவனில் வேறென்றறிந்து அவனை வழிபடலே நன்னெறி.

(இன்னும் வரும்)

M. V. S. முத்தைய பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தீட்சை.

இப்போது தமியேன் பிரசங்கம் செய்யப்புகுந்த விஷயம் தீக்கை யென்பதாகும். இத்தீக்கையின் பொருளையும், அதன் பிறப்பையும் தொகையையும் வகையையும், அதனை ஈவோர் ஏற்போர் இலக்கணங்களையும், அதனைப் பெற்றோர் அனுட்டிக்கவேண்டிய முறைகளையும், அதனை அனுட்டிப்போர் அடையும் பயனையும் ஆகிய இவ்வைந்தின் கூறுபாட்டினைத் தனித்தனி எடுத்துக்கூறின் என் விருப்பம் ஒருவாறு முடியுமெனக் கருதுகின்றேன்.

முதலாவது-தீட்சை யென்றால் என்னை? இம்மூவெழுத்தொருமொழி ஆரியத்தில் தீக்ஷா எனப்படும். அது, "ஆவிறையும்" என்ற விதிப்படி தமிழ் மொழியாங்கால் 'தீக்கை' எனவாகும். தீக்ஷா என்பதில் தீ என்பது தானம் எனவும் க்ஷா என்பது க்ஷயம் எனவும் பொருள்படும். தானம் என்றால் யாது? தானம் என்பது ஆன்மாக்களுக்குப் புத்தி, முத்திகளாகிய இஷ்டகாமியங்களைத் தருவதாம். க்ஷயம் என்றால் யாது? க்ஷயமாவது ஆன்மாக்களை அநாதியாய்ப் பந்தத்தில் உட்படுத்தி நிற்கும் பாசங்களைப் போக்குவதாம். ஆகவே தீட்சை என்பதற்கு ஆன்மாக்களாகிய நம்போலியர்க்கு இம்மையிலே வேண்டுவனவாகிய இஷ்டகாமிய போகங்களை அருள்செய்து மறுமையில் நீங்கரிய பாசத்தொடர்பு அறுத்துப் பேரானந்த வாழ்வைத் தருவதாம் என்பது இரண்ட பொருளாகும். இப்போது தீட்சையின் பொருள் ஒருவாறு கூறப்பட்டது.

இனி இரண்டாவதாக தீட்சையின் தோற்றம் யாது? அது எத்தனைப் பாகுபாடுடைத்து? தோற்றம்—அநாதி மலமுத்தராகிய பரமசிவன் ஆன்மாக்களின் பந்த மோக்ஷங்களின் பொருட்டுக் கருணைத் திருவுருவாய் தமது திருமுகத்தினின்று இத்திருநாமத்துடன் இச்சத்தியைத் தோற்றுவித்து வித்தியேசுராதிகிரமமாக இருடிகட்கும், தேவர்கட்கும், விஞ்ஞானகலராதி ஆன்மாக்களுக்கும் பரவச்செய்வித்தார்.



அது பௌதிகீ எனவும் நைஷ்டிகீ எனவும் இருவகைத்து. பௌதிகீ யென்பது பூதசம்பந்த முடையது. அதாவது, விசித்திரமான அபீஷ்ட போகங்களைக் கொடுத்துப் பின்னர் நிர்திர்ஶ்யானந்த மோக்ஷத்தைக் கொடுப்பது. நைஷ்டிகீ யென்பது நிஷ்டை சம்பந்தமுடையது. அதாவது நிஷ்டையுடையோராகிய தவத்தவர்களுக்கு அணிமாதி சித்திகளைக் கொடுத்துப் பின்னர் பேரானந்தத்தைத் தருவது.

பின்னும் இத்தீட்சை சாபேக்ஷை, நிராபேக்ஷை யென விருவகைப்படும். சாபேக்ஷையாவது சமயாசாராதி அனுஷ்டானத்தை அபேக்ஷித்து நிற்பவர்க்குச் செய்யப்படுவது. சமயாசாராதி அனுஷ்டானமாவது தத்தம் சமயநூல்களிலே கூறப்பட்டுள்ள ஆசாரம், அனுஷ்டானம் முதலியவைகளைத் தவறாது பின்பற்றி ஒழுகுதல். நிராபேக்ஷையாவது மேற்கூறிய சமயாசாராதி அனுஷ்டானத்தை அனுட்டிக்க வியலாத பாலர், விருத்தர், மூடர், பிணியாளர் முதலாயினோர்க்குச் செய்யப்படுவது.

பின்னும் முற்கூறிய பௌதிகீ யென்பது, லௌகிகீ, அலௌகிகீ என இருவகை வேறுபாடுடைத்து. லௌகிகீ யென்பதற்கு லோகதர்மணீ என்றும் ஓர் பெயர் உளது. லோகதர்மணீ யென்றால் லோகதர்மமாகிய வைதிக கர்மத்தோடு கூடிய சிவதர்மத்தையுடையது. இது தன்னைச் சாதிப்போர்க்கு அஷ்ட ஐஸ்வரியங்களையும் இஷ்ட புவனங்களில் சுகபோகங்களையும் கொடுக்கவல்லது. இது புவன பதங்களைக் கொடுத்தலேயன்றி முத்தியை விரும்புவோர்க்குப் பரபதத்தையும் தரவல்லது. இது கிருகத்தருக்கு உரியது. அலௌகிகீ யென்பதற்குச் சிவதர்மணீ என்றும் ஓர் பெயர் உளது. இத்தீட்சைபெற்றவன் லௌகிக வைதீக வாசாரங்கள் உறங்கினோன் கைவெறும் பாக்கென ஒழியவும் பெறுவான். ஆனால் சிவதர்மானுஷ்டானம் ஒன்றும் எந்நாளும் ஒழியப்பெறான். சிவதர்மானுஷ்டானமாவது, சிவாகமங்களில் கூறியுள்ளபடி சிவபெருமானை சிவஞானத்தோடு உபாசித்தலாம். இவ்வலௌகிக வனுஷ்டானம் முதலில் சிவதருமத்தின் பலனை யனுபவிக்கச் செய்து பின்பு சர்வஞ்ஞத்வம் கொடுத்துச் சிவபதத்தை யடைவிக்கச் செய்யும்.

பின்னும் இத்தீட்சை சபீஜை நிர்ப்பீஜை எனவும் இருவகைப்படும். சபீஜை யென்பது பீசாக்ஷரங்களோடு கூடியது நிர்ப்பீஜை என்பது பீசாக்ஷரங்கள் நீங்கியது.

சபீஜை யென்பது சாதிகாரை, நிரதிகாரையென இருவகைப்படும். சாதிகாரை அதிகாரத்தோடு கூடியது. அதாவது இத்தீட்சை பெற்றோராகிய சாதகர், ஆசாரியர் இவர்களுக்கு தீட்சை, ஸ்தாபனம் முதலிய காரியங்களைச் செய்யும் அதிகாரத்தைத் தருவதாம். நிரதிகாரை சமயி புத்திரக அருகருக்கு மேற்கூறிய அதிகாரங்களைக் கொடாததாகும். புத்திரகர் என்றால் விசேஷ தீட்சை பெற்றவர்.

பின்னும் இத்தீட்சை சத்தியோநிர்வாணை, அத்தியோநிர்வாணை யென இருவகைப்படும். சத்தியோ நிர்வாணை யென்பது உடனே மோக்ஷத்தைத் தரவல்லது. இதன் உண்மையைப் புலப்படுத்தற்கு நமது ஸ்ரீமத் - உமாபதிசிவம் ஸ்ரீமந்-பெற்றான் சாம்பானுக்கு அருள்செய்த முறையேசான்று. இச்சரித்திரத்தின் சுருக்கம் பின்வருமாறு:—உமாபதி சிவாசாரிய சுவாமிகள் கொற்றவன் குடியில் எழுந்தருளி யிருக்கையில் பூர்வம் செய்த பாபவசத்தால் வேதியன் ஒருவன் புலையனாய்ப் பெற்றான் என்னும் பெயருடன் வளர்ந்து ஒரு புலைச்சியை மணந்து தன் பிறப்பில் அருவருப்படைந்து பூர்வ புண்ணியத்தால் சுற்றத்தாரையும்ஊரையும் விட்டு நீங்கித்தில்லையை யடைந்து, விறகு வெட்டித் திருச்சிற்றம்பல முடையார் திருமடப்பள்ளிக்கு வேதியர் வழியாகக்கொடுத்து வருகையில் பரிபாகமடைய சிவபெருமான் பெற்றான் சாம்பான் கனவிடைத்தோன்றி உமாபதி சிவாசாரியருக்குக் கொடுக்கும்படி,

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமற தீட்சைசெய்து
முத்திக் கொடுக்க முறை." என்னும்,

திருமுகப் பாசுரம் எழுதியருள அந்தச் சிரமேற்றாங்கிப் பத்திரப் படுத்திக் கொற்றவன் குடிவந்து அங்குச்சில நாள் உமாபதியார் வசிக்கும் திருமடத்திற்கு விறகுவெட்டித் தரும் திருப்பணியைச் செய்து வருங்கால



ஒருநாள் பெரும் மழையால் பெற்றான் சாம்பன் வரத்தடையுற்றதால் போஜன வேளை தாமதிக்க உமாபதியார் மடத்தோரைக் காரணங்கேட்க அந்தணர் மடைப்பள்ளிக்கு நாடோறும் விறகு தந்து வரும் ஒருவர் இற்றைக்கு வாராமையின் தடையுற்ற தென்றனர். அதைக்கேட்ட சுவாமிகள் நாளையவர்வரின் நம்மிடம் கூறுகவென்றனர். அவ்வாறே, பெற்றான் சாம்பான் மறுநாள் இரண்டு நாட்களின் விறகையும் கொணர்ந்து வரக்கண்டோர் உமாபதியாரிடம் கூற உமாபதியார் பெற்றானை யழைத்து நீ யார் என, பெற்றான் இறைவன் தந்த திருமுகத்தை வைத்துத் தொழவும், அத்திருமுகத்தை உமாபதிசிவம் நோக்கிச் சிரத்திலும் நயனங்களிலும் ஒற்றி அரன் ஆணையையெண்ணி அப்பெற்றான் சாம்பானுக்குச் சத்தியோ நிர்வாணை தீக்கையால் முத்தியளித்தனர். இதைக் கேள்வியுற்ற அவன் தேவி உமாபதியார் தன் கணவனை ஒருநாள் விறகுகொடாத காரணத்தால் கொலைசெய்தனர் என்று அரசனிடம் விண்ணப்பிக்க, அரசன் ஸ்வாமிகளைத் தீட்சையின் பிரத்தியக்ஷம் வினவி எதிரிலிருந்த முட்செடிக்கு முத்திதரக் கூற, அவ்வாறே முள்ளிக்குத் தீக்ஷைதர அதுவும் ஞானத்தீயால் பெற்றானைப்போல எரிந்து சாம்பரானதைக் கண்ட அரசன் அஞ்சி, நடுநடுங்கிச் சுவாமிகளை க்ஷமை வேண்டிச் சென்றனன். இச்சரித்திரத்தால் சத்தியோ நிர்வாணை யென்பது உடனே மோக்ஷத்தைத்தரவல்லது என்பதும், அது மிகவும் பரிபக்குவமுடைய் ஆன்மாக்களுக்கே செயற்பாலது என்பதும் பெறப்படுகிறது.

அசத்தியோ நிர்வாணை யென்பது பிராரப்த்வ கர்மபோக பலாதிகள் கழிந்தபின்பு தேகாந்தத்தில் மோக்ஷத்தைத்தருவது.

பின்னும் தீட்சை, சாதாரம், நிராதாரம் என இருவகைப்படும். சாதாரமாவது ஆதாரத்தோடு கூடியது. அதாவது சிவபெருமான் ஆசாரியனையதிட்டித்து அவன்மூலமாக ஆன்மாக்களுக்குச் செய்யப்படும் தீட்சை. நம்போலியர் பெறும் தீட்சை சாதாரதீட்சையாகும். நிராதாரம் என்பது விஞ்ஞானகலர், பிரளயாகலர் இவர்களுக்கு சாக்ஷாத் சிவபெருமான் தாமே முறையே அறிவினிடத்தும், திவ்ய திருமேனி கொண்டெழுந்தருளியும் ஆசாரிய அதிட்டானமின்றிச் செய்யும் தீட்சையாகும்.

(இன்னும் வரும்)

W. T. கோவிந்தராஜ முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரம்.

## தொகுதி 5. பகுதி 3. பக்கம் 59. தொடர்ச்சி.

இனி, பஞ்சாக்கரம் பிரணவத்தோடு சேர்த்து உச்சரிக்கப்பட வேண்டுவதின்றோ வெனின், இன்று. ஸ்ரீ பஞ்சாக்கரமும் பிரணவமே போன்று, தானே தனித்தியங்கிப் பயன்றரவல்ல தனிமந்திரமாமென்க. இம்மந்திர ஒன்றே இங்ஙனம் தனித்தியங்கும் ஆற்றலுடையதன்றி வேறெதுவும் இங்ஙனம் தனித்தியங்கும் ஆற்றலுடையதன்று. பிரணவம் உயிரும் பஞ்சாக்கரத்தினீங்கிய ஏனைமந்திரங்கள் உடல்களுமாம். உயிரினீங்கிய உடல்களியங்காவாறு பிரணவத்தினீங்கிய ஏனைமந்திரங்களியங்கமாட்டா. அற்றுகலினன்றே அவைகள் பிரணவத்தொடுஞ் சேர்த்தெழுத் தெண்ணப்பட்டு "அஷ்டாக்ஷரம்" முதலியவாக வழங்கப்பெறுவதும், இம்மந்திரம் அங்ஙனமின்றித் தன்னெழுத்துக்களானே எண்ணப்பட்டு "பஞ்சாக்கர" மென்றே வழங்கப்பெறுவதுமா மென்க. இம்முறை பற்றியே "நாதநாம நமச்சிவாயவே" என்றும் "நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே" என்றும், "சொல்லுநா நமச்சிவாயவே" என்றும் "நமச்சிவாயவாழ்க" என்றும் சமயாசாரியர்கள் கூறிப் போந்ததும் உறுசான்று மென்க. இன்னும்,

"அண்ணல் முதலா யழகெழுத் தைந்தும்" என்ற உண்மை விளக்குந் திருவாக்கு முதலியவைகளும் மேலேகாட்டிய "நம்முதல்" "சிம்முதல்" முதலிய பிரமாணங்களும் ஐந்தே எழுத்தைக் கூறுமாறு காண்க.

"ஐஞ்சன வானையடவி யுள்வாழ்வன
வஞ்சுக்கு மஞ்செழுத்தங் குசமாவன" என்றும்,

"அஞ்சக்கர மென்னுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப்புலக் கட்டை வேரறவெட்டி வளங்கள்செய்து" என்றும்

போந்த திருவாக்குக்களும், ஐந்தே எழுத்தை உணர்த்திப்போந்தன.



ஆயின், பஞ்சாக்கரத்தொடு பிரணவத்தைச் சேர்த்து உச்சரித்தல் இழுக்கோ வெனின், அன்று. ஏனை மந்திரங்கள் போலப் பிரணவத்தின் சார்பை வேண்டாதுதானே இயங்கப் பயன்றரவல்லதா மென்று கூறப்பட்டதல்லது பிரணவத்தைச் சேர்த்தல் இழுக்கெனயாண்டும் யாப்புறுக்கவில்லையாகலான், அதனைச் சேர்த்தலால் வருமிழுக்கேது மில்லையாமென்க. இவ்வுண்மையைத் தரவே சிற்சிலவிடங்களில் பிரணவத்தொடுஞ் சேர்த்து "போற்றியோ நமச்சிவாய" என்றதுபோன்ற திருவாக்குக்கள் எழுந்தனவாகும். மற்றும், சிவஞானசித்தியார் முதலியவைகளினும் இதயத்தர்ச்சிக்கு முறைகூறுமிடத்து சுத்தவித்தையாலாய கமலத் திதழ்களுக்குரிய எழுத்துக்களுள் பஞ்சாக்கரத்தொடு பிரணவம் சேர்க்கப்பட்டவா றறிக: இன்னும் பஞ்சாக்கரத்தின் பேதமாக எட்டெழுத்து ஆறெழுத்து நாலெழுத்து முதலியனவும் பஞ்சாக்கரமெனக் கூறப்படுவதும் உய்த்துணர்க.

இனி, "ஓங்காரமே நற்றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடராம்"

என்ற உண்மையில் சிவபெருமான்றன் திருமேனியாம் பஞ்சாக்கரம் சிறப்புடைத்தாகும், மற்றும், ஆன்மா தன்னுடம்பினகத்தே இதயம், நாபி, புருவநடு என்னும் மூன்றனையும் முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்பே ஞானபூசைசெய்யும்முறைப்படி, இதயகமலத்திற் சிவனை அவ்வஞ்செழுத்தான் அமைந்ததிருமேனியிற் கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அவ்வஞ்செழுத்தாற் பூசைசெய்து, குண்டலித்தானமாகிய நாபியில் ஞானவனலை எழுப்பி அதன்கண் அத்திரு வைந்தெழுத் தானே விந்துத் தானத்தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடைநாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமஞ்செய்து, விந்துத்தானமாகிய புருவ நடுவில், சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப்பொருளும் துவம்பதப்பொருளும், அசிபதப் பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தாற் சிவோகம்பாவனை செய்யின், அந்தரத்தியங்கும் நவக்கோள்களுள் ஏனைக்கோள்கள் போலக் காணப்படாத இராகு கேதுக்களை உபராகத்திற் சந்திராதித்த ரிடத்திற் காணுமாறுபோலப் பதி பசு பாசங்களுள் யான் இதனை யறிந்தேன் அறிகின்றிலேன் என்னும் உணர்விற்கு விடயமாகக் காணப்படும் பசுபாசங்களோ டொப்ப, வேறு காணப்படாத பதிப்பொருளாகிய முதல்வனைத் தன் இதயத்தின்கண் அஞ்

செழுத்தோது முறையாற் காணுமாயிற் கோலை நட்டுக் கயிற்றினாற் சுற்றிக் கடையவே காட்டத்தினின்றும் தோன்றும் அங்கிபோல் அம்முதல்வன் ஆண்டுத்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்குமென்பது முதலிய உண்மைகளை கடாவிடை யுள்ளுறுத்துரைத்த முதனூலொடும் அதன்பேருரையாய மாபாடியத்தானும் இவ்வுண்மை உணரப்படும்.

இங்ஙனம் சேதனாசேதனப் பிரபஞ்சந்தோன்றி நின்றொடுங்குமிடமாய் முத்தான்ம நிரதிசயானந்த பூரணப்பொருளுமாம் தகர புண்டரீகபுரமான தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண் திருநடங்குயிற்றும் பரமகாரணன் திருமேனி பஞ்சாக்கரத்தாலமைந்த தொன்றுமென்பதை யுணர்த்தவே

“வஞ்சகமாற்றடி வாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே”

என்ற திருஞானசம்பந்தரது திருவாக்கும்

“மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய வம்பு மனலுடன் கையுங்
கருவின மிகுத்த கமலப் பாதமு
முருவில் சிவாய நமவென வோதே” என்ற

திருமூலயோகிகளது திருவாக்கும்,

“புண்ணிய
வஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றுந்
தோளொரு நான்குஞ் சுடர்முக மைந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
யறுசுவை யதனினு முறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருஞ்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர” என்ற முற்றத்துறந்த
பட்டினத்தடிகளாரது திருவாக்கும் எழுந்தனவாகும்.

மற்றும்,

திருந்துநற் சியென்று தறிய கையு
மருந்தவர்வா வென்றணைத்த மலர்க் கையும்
பொருந்தி விமைப்பிலி யவ்வென்ற பொற்கையுந்
திருந்தத் தியாந் திருநிலை மவ்வே, என்றும்,



ஆடும்படிகே ணல்லம்பலத்தா னையனே
நாடுந்திருவடியி லேநகரம்—கூடு
மகரமுதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடி யப்பார், என்றும்

சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம பயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகர மதுதான், என்றும் போந்த திருவாக்குக்கள், இவ்விவ் வெழுத்துக்கள் இவ்விவ் வங்கங்களா யமைந்துள்ளனவா மென்று, ஒவ்வோராற்றான் மற்ற தன் சிறப்பிலக்கணம் உணர்த்துவதாகும்.

இத்திருநடன வுண்மை யுணர்ந்து தரிசித்தபேர்களால் எய்தப்பெறுவது புண்ணிய புராண முழுமுதற் செழும் பொருளோடு இரண்டறக் கலந் தனுபவிக்கும் பரமானந்தப் பெருவாழ்வாம், என்பது

“என்னத்தனுடல் கண்டின்புற்றதாலிவ் விருநிலமே” என்ற

தமிழ் மறையானும்

மாயைதனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாயவமுக்கிய ருடானெடுத்து—நேயத்தா
லானந்தவாரிதியி லான்மாவைத்தா னழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான். என்றும்,

உரையுணர்வுக் கெட்டா வொருவன் றிருபஞ்சாக்
கரத்தால் வரைமக டான்பாதி—பரையிடமாய்க்
காணும்படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு. என்றும் போந்த உண்மை விளக்க வெண்பாக்களானும் தெள்ளிதி னுணரப்படும்.

(இன்னும் வரும்)

பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நடு நிலை.

படைப்பிற் சிறந்த சூரியன் மற்றைய கிரகங்களுக்கு நடுவிலிருக்கின்றபடியால் படைத்தோனாகிய ஈசனும் நடுநிலையி லுள்ளவனென நிச்சயித்தல் வேண்டும். முளைவித்தி னடுவிலும், குருத்துமரத்தி னடுவிலும், கருஉடம்பி னடுவிலும் உண்டாகின்றபடியால் நடுநிலையென்பது உண்டாக்குவோனாகிய ஈசனிடத்திருந்துதான் உண்டாகின்றதெனக் கொள்ளவேண்டும். நடுநிலை அகம் புறம் என இருவகைப்படும். ஞாயத்தைக் குறிக்குங்கால் அகமாகும்; இடத்தைக் குறிக்குங்கால் புறமாகும்.

பகைவர் அயலோர் நட்பினர் இம்மூவகையோ ரிடத்தும் ஒப்ப நிற்பது ஞாயம். புறத்தே அம்பலத்தி னடுவுள்ள அரியாசனத்தி னடுவில் இனிது வீற்றிருந்தருளும் செங்கோல் மன்னவன், அகத்தே நடுநிலைமை நெல்லியங்கனிபோல ஒன்றுபட்டதாகின்றது. இந்நடுநிலை நிற்போனே வாதி பிரதிவாதிகளுக்கு ஆதாரமாவன். கல்லூரி முதலியவற்றில் தலைமையாயினோர் நடுவிடத்தில் இருந்தால்தான் ஏனையோரை நடுநிலையோடு ஆராய்தல்கூடும். இந்த நடுநிலையோரே தலைமைபெறுதற் குரியராவர். இத்தலைமை இயற்கை அமைதியாம். நடுநிலைமை யிலதாயின் எல்லாவுயிர்களும் துன்பப்படும், நாட்டிலும், ஊரிலும், குடும்ப முதலியவற்றிலும் தன்னிடத்திலும் நடுநிலைமை வேண்டும். வண்டியின் இருசு மையத்திலிருந்தால்தான் எருதுகளுக்கு எளிதாகும்; ஏர்க்காலும் நுகத்தடியின் நடுவில் இருந்தால்தான் உழுதொழிலும் இனிது நடைபெறும்; துலாக்கோலானது நடுவில் நின்றால்தான் வாணிகமும் வளர்ச்சிபெறும்; துலாவின் நடுவில் இருகாணியும் முக்காணி நடுவில் ஏற்றக்கோலும் இருந்தால்தான் இறைப்பவன்பாடலும் இனிதாகும்; காவடித்தண்டின் நடுவுதோளின் நடுவில் நின்றால்தான் சுமப்பவனுக்குப் பாரம் தோன்றாது; மனையின் மையத்தில் வாசக்காலும், வாசக்காலின் மையத்தில் கிணற்றுமையமும்



பெறின் மனையில் குற்றமிருக்கினும் நன்மையேயுண்டாம்; அரசாட்சியும் நடுநிலைமைகொள்ளின் அப்பாரம் குடிகண் மாட்டதாக அரசன் கல்விச் சங்கத்தினடுவில் இனிது வீற்றிருப்பன்.

"சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி."

அண்டபிண்டங்களின் அமைப்பை ஆராயின் நடுநிலையின் அருமைப் பெருமை நன்கு விளக்கமாகும்.*

நாபி—அரைக்கும் வயிற்றுக்கும் நடு.

இதயம்—வயிற்றுக்கும் கண்டத்துக்கும் நடு.

கண்டம்—இதயத்துக்கும் முகத்துக்கும் நடு.

"முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்குச்
சித்தாந்த வீதி வருந்தேவே பராபரமே."

சித்தாந்தவீதி=புருவநடு.

இதனால் எல்லா இன்பங்களும் நடுநிலையில் நிற்பதால் தான் உண்டாகின்றனவெனக் கொள்ளவேண்டும். இந் நடுநிலைமையே ஞாயமாகலின் அச்சொல்லுக்கும் அப்பொருளேயாம்.

இனி நடுவினை யுணர்த்தும் பெயர்களின் ஆராய்ச்சி மிக அழகாகின்றது.

### அவைவருமாறு:—

அகடு, அணவு, அண்டம், இடை, உந்தி, ஒப்பு, கரு, கருப்பம், கருப்பகம், கூறை, சமன், சுண்டா, செப்பம், சோதி, நள்ளு, நனந்தலை, நா, நாப்பண், நாய், பகல், பொது, மத்தி, மையம் முதலியன நடுவின்பெயர்களாம்.

(க) அகடு=நடு

அகடு=வயிறு, நடு; மார்புக்கும் அரைக்கும் வயிறு நடுவாதலால் அகடென்பது முதல் வயிற்றையும் பிறகு நடுவினையு முணர்த்திற்று.

சகடு—அகடு.

*நாபி, இதயம், கண்டம், புருவநடு, என்பன பரமான்மாவை விளங்கச் செய்யும் நல்லதோ ரிடங்களாகின்றன.

(உ) அணைவு = நடு

அணர் = கழுத்து, மிடறு. அணம் — அணைவு = நடு.

மார்புக்கும் தலைக்கும் கழுத்து நடுவாதலால் அணம் அணையென்றாய் நடுவினை யுணர்த்திற்று. கணம் — அணம்.

(ங) அண்டம் = நடு.

அண்டம் = திரட்சி, முட்டை, நடு, வயிற்றுள் முட்டை தரிக்குமிடம் நடுவாதலால் அண்டமென்பது முதல் முட்டையையும்; பிறகு நடுவினையு முணர்த்திற்று.

(ச) இடை = நடு.

இடை = பூரணை, சந்திரகலை, நடு, நாசப்பு, பக்கம், வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திரமண்டலம் என மண்டலம் ஐந்துள் சந்திரமண்டலம் இடையிலிருப்பதால் சந்திரனை யுணர்த்தும் இடா என்பது இடையென்றாய் நடுவினையுணர்த்திற்று. இலா — இளா — இடா — இடை. இலா = சந்திரன். இளா — இளை — இடை எனவும் பொருந்தும் அக்கினிமண்டலமும் திரிசங்கு மண்டலமும் பிற்காலத்தனவாகும்.

(ரு) உந்தி = நடு.

உந்தி = தொப்புள், நடு. தொப்புள் வயிற்றின் நடுவிலிருப்பதால் உந்தி யென்பது முதல் தொப்புளையும் பிறகு நடுவினையும் உணர்த்திற்று.

தொந்தி = உந்தி

(சா) ஒப்பு = நடு.

ஒப்பு = சமம், நடு. ஒப்பென்பது முதல் சமத்தையும் பிறகு நடுவினையும் உணர்த்தியது. ஒ — ஒப்பு. ஒ = நீர்.

நீர்மட்டம் போல்வது. இருபக்கத்தும் சமம் செய்வது நடு.

(எ) கரு = நடு.

கரு = கருப்பம், நடு. கருப்பம் தரிக்குமிடம் நடுவாதலால் கருவென்பது முதல் கருப்பத்தையும் பிறகு நடுவினையும் உணர்த்தியது.

கருப்பம் — கருப்பகம் = நடு.



(அ) கூழை = நடு.

குளம் — கூளை — கூழை = நடு.

குளம் = புருவநடு. குளம் — குடம் = புருவநடு, குடம் — குடி

சமன் = நடு.

சமன் = சமானம், ஒப்பு, நடு, கமம் — சமம். நீர்மட்டம் போல்வது.

(௯) † சுண்டா = நடு.

சுள் — சுண்டா = நடு. கோள்களுட் சூரியன் போல்வது.

§ சுல் = சூரியன் — சுல் — சுள், சுள் — சுஷுத்தி — சுழுத்தி = ஓரவத்தை, அவத்தை ஐந்துள் நடுவிலுள்ளது.

(௧௦) செப்பம் = நடு.

செப்பம் = செவ்வை, நடு, செம்மை தருவது. செம் = செவ்வை, நடு செங்கதிர் = சூரியன். செந்தமிழ் = கொடுந்தமிழ் நாட்டி னடுவிலுள்ளது.

(௧௧) சோதி = நடு.

சோதி = சூரியன், நடு, கோள்களுட் சூரியன் போல்வது.

சோதிராத்திரி = நடுராத்திரி.

(௧௨) நள்ளு = நடு.

நால் = நாக்கு, நால் — நள் — நள்ளுநடு. வாயுள் நாக்கு நடுவிலிருப்பதால் நால் நள்ளென்றாய் நடுவினை யுணர்த்திற்று.

நள்ளிருள், நண்பகல். நள் - நடு - நடுவு - நடுமு = முதுகு. (தெலுங்கு)

நடுவண் = நடு 2 பதம். நடு — நட்டம் — நடு

நட்டநடு, நட்டாறு. நள் — உண் — நணாந்தலை — நனந்தலை = நடு. உ. பதம். தலம் = கோயில. தலம் — தலை = நடு.

கோயில் ஊர் நடுவிலிருந்தலால் தலம் தலையென்றாய் நடுவினையுணர்த்திற்று. தலை = சிரம் சிரநடு எனவும் பொருந்தும்.

(௧௩) நா = நடு.

நா = நாக்கு, நடு, நாப்பண் = நடு. உ. பதம். பண் = குதிரை கல்லணை, நடு. பண்ணென்பது முதல் குதிரைக் கல்லணையையும் அதுமுது

† மொழிநூல் இலக்கணவியலில் ௧௫௩-ம் பக்கம் பார்க்க.

§ மொழிநூல் முதனிலையியலில் ௫௩-ம் பக்கம் பார்க்க.

ின் நடுவிலிருப்பதால் நடுவினையும் உணர்த்திற்று. பண்— வண். நடு வண் = நடு. உ.. பதம்.

(௧௪) நாய் = நடு.

நாய் = நடு, சுணங்கன். ஊர் நடுவில் திரிவது.

“நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட்பட்டக்கால்” (சுந்தரர் தேவாரம்)

நா—நாய் = நடு. சில சொற்களின் ஈற்றில் யகரமெய் வருவதியல்பு. உ-ம். வே—வேய். நாய்—நாயில் = கோட்டை. நகர்நடுவுள்ளது. நாயில் கோட்டை மதிலுமாம்.

நாயில்—நாயிறு = சூரியன். ஏனைய கோள்களின் நடுவுள்ளோன் என்பது. நாய்—நாயம்—ஞாயம் = நீதி. நடு நின்று தீர்ப்பது.

நாயம்—நாயகம் = தலைமை.

(௧௫) பகல் = நடு.

பகல் = பிரிவு, சூரியன், நாள், நடு.

பகல் = சூரியன், நடு. கோள்களுட் சூரியன் போல்வது.

(௧௬) பொது = நடு.

போது = தோற்றம், பிறப்பு, சூரியன், காலம்.

போதுகாலம் = பிரசவகாலம்.

போது—பொது = நடு. பொழுது பொதுவாயிற்றெனனும் பொருந்தும். பொது—பொதுவு. பொதுமை, பொதியல்.

(௧௮) மையம் = நடு.

மசம்—மயம்—மையம்—நடு. மசம் = கருப்பம். கரு என்பதுபோல. மசம்—மசக்கை = கரு. மசக்கைச்சோறு. மையவரி, மையக்கட்டை, நடு மையம். மயம் = தோற்றம்; பொருண்மயம், சிவமயம்.

இது, காலஞ்சென்ற மொழி நூலாசிரியரும், ஆசிரியருமாகிய மாகறல், கார்த்திகேய முதலியாரவர்கள் எழுதிவைத்த குறிப்பிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

மாகறல்-பொன்னுசாமி முதலியார்,

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கல் வெட்டு.

## உக்கல் பெருமாள் கோவில் கல்வெட்டு.

உக்கல் என்னும் கிராமமானது காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசிக்குப் போகும் பாதையில் மாமண்டூரிலிருந்து தெற்கே 5-வது மைலில் உள்ள ‘கூழம்பந்தல்’ என்னும் கிராமத்துக்கு ஒருமைலில் கிழக்கேயுள்ளது.

கூழம்பந்தல் என்னும் வார்த்தையானது ‘சோழம்பந்தல்’ என்னும் வார்த்தையின் மரூஉ. சோழன் பெயரால் தண்ணீர்ப்பந்தல் வைத்தஇடம் ஆனதால் சோழம் பந்தலாயிற்று.

இது உக்கல் பெருமாள் கோவிலின் மேற்குப் பக்கத்திய கல்வெட்டால் நன்றாய்த்தெரிகிறது.

இக்கல் வெட்டானது இராஜகேசரி வர்மன் என்கிற இராஜ இராஜ தேவன் என்பவனுடைய ஆளுகையில் 29-ம் ஆண்டில் செதுக்கப்பட்டதாக ஏற்படுகிறது.

உக்கல் கல்வெட்டால் அடியில் கண்ட அரசர்கள் தொண்டைமண்டலத்தை அரசாண்டதாக ஏற்படுகிறது:—

1. கம்பவர்மன் (இன்னவம்சம் என்று ஏற்படவில்லை)
2. பரகேசரிவர்மன் (சோழவம்சம்)
3. இராஜகேசரிவர்மன் Do
4. பராந்தகன் I Do
5. கிருஷ்ணன் III (இராஷ்டாகூட வம்சம்)
6. ஆதித்தியன் II (சோழவம்சம்)
7. இராஜ இராஜன் I Do
8. இராஜேந்திரசோழன் I Do

இராஜகேசரி வர்மன் அரசில் 29-ம் ஆண்டில் அவன்கீழ் அதிகாரியாயிருந்த சோழதேசத்தவனான கண்ணன் ஆரூரன் என்பான்தன் அரையன்

பெயரால் காஞ்சி·வந்தவாசிப் பாதையில் தண்ணீர்ப்பந்தல் ஏற்படுத்தி அதற்குப் படித்தரமும் விட்டான். அது அடியில் வரும் கல்வெட்டால் வெளியாகும்:—

வரி. 1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போல் பெருநிலச் செல்வியுந் தனக்கே
உரிமைபூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலை
மறுத்தருளி வெங்கைநாடும் கங்கபாடியும் நுளம்பபாடி
யும் தடிகைபா

வரி. 2. டியும் குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும் முரட்டொழில்
சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரைஇலக்கமும்
முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும் திண்டிறல் வென்
றித் தண்டாற்

வரி. 3. க்கொண்ட தன்னெழில் வளருழியுளெல்லா யாண்டுந் தொழுத
கை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீ
கொ ராஜகேஸரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவற்குயாண்

வரி. 4. டு. உ௰கூ-வது ஜயங்கொண்ட சோளமண்டலத்துக் காலி
யூர்க் கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய ஸ்ரீ விக்கிரமா
பரணச் சதுர்வேதி மங்கலத்துள் மெலை

வரி. 5. ப் பெருவழியில் ஸ்ரீராஜராஜதேவர் திருநாமத்தால் குணறுந்
தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீராஜராஜதே
வர் பணிமகன் சோளமண்டலத்து தென்கரை நாட்டு
நித்தா

வரி. 6. விநோத வளநாட்டு ஆலூர்க்கூற்றத்து ஆலூருடையான் கண்ண
னூரான் இவனே ஸ்ரீராஜ ராஜ கிணற்றில் தொட்டிக்கு
நீரிறைப்பார்க்கு அருமொழிதேவன் மரக்காலால் நிச
தம் நெல் ஐ. உ. ய..ஆ

வரி. 7. கத்திங்கள் கூ-க்கு நெல் ஐ. கூய. கூ. மும் ஸ்ரீராஜ ராஜன் தண்
ணீராட்டுவார்க்கு நிசதம் நெ ஐ. உ. ம. ஆகதிங்கள் கூ-க்கு
நெல்லு கூயகூ-ம் இப்பந்தலுக்கு குசக்கலம் இடு

வரி. 8. வார்க்கு திங்கள் க-க்கு நெல்லு ஈ ஆக திங்கள் கூ-க்கு நெல்லு
ஈகூ—மும் ஸ்ரீராஜ ராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும்
சேதத்துக்கும் ஆட்டாண்டு தொறும் புதுக்குப் புறமாக
வைச்ச



வரி. 9. நெல்லு உ. கூ. ஈ. ஆக ஐ கூயகூ. கூ. ஈ. இந்நெல்லுக்கு இவன்
பக்கல் இவ்வூர் ஸ ஒஹெயோம் இறை ஊ ஸூமும்
கூயஊ ஸூமும் கொண்டு இறை இழியச்சி...... .....

இன்னும் இக்கல்வெட்டால் என்ன தெரிகிறது என்றால் இச்சோழ ராஜன் காலத்தில் சோழர்களுக்குக் கப்பற்படை இருந்ததாகவும் அப்படை வலியால் காந்தளூர்ச்சாலை என்னும் இடத்தில் பிறகப்பல்களைத் தோற்கடித்துச் சோழன் வெற்றிகொண்டானென்றும்

வேங்கைநாடு, கங்கைபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம் (which was the Country of warlike Singalees) 1 7½ இலக்கம் (இலக்ஷம்) இரட்டபாடி (பாடி என்பது படைவீடு) 1 பன்னீராயிரம் பழந்தீவுகள் இவைகளையெல்லாம் சோழன் ஜெயித்துப் பிடித்துத்தன் அதிகாரத்துள் ளாக்கினான் என்றும், செழுமரைத்தேசுகொள் என்றதால் பாண்டியரை அடக்கி கப்பங்கட்டும்படி செய்தவன் என்றும் அறிகிறோம்.

ஆலூர்க் கண்ணன் என்பது கண்ணன் ஆலூரான், கண்ணனூரான், என்றாயிற்று, அக்காலத்தில் கிராமங்களைப் பஞ்சாயத்தார் ( Village Punchayats ) ஆண்டுவந்தார்களென்றும் இராஜாக்களுங்கூடத் தங்கள் தரும காரியங்களைப் பஞ்சாயத்தார் வசம் ஒப்புவித்து வந்தார்களென்றும் அறிகிறோம்.

மேலும் உக்கலானது ஜயங்கொண்ட சோளமண்டலத்தில் (தொண்டைமண்டலத்தில்) காலியூர்க் கோட்டத்தை (24 கோட்டத்தில் ஒன்று) சேர்ந்ததென்றும், உக்கலுக்கு விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம் என்பது மறுநாமம் என்றும் அறிகிறோம்.

விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம் என்றதால் விக்கிரமச்சோழன் என்பான் அவ்வூரின்கண் அக்கிராரம் ஏற்படுத்திப் பிராமணரைக்குடியேற்றி அப்பெயர் தந்தனனோ என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

தொண்டைமண்டலம் கோட்டம், நாடு நத்தங்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்றும் சோழமண்டலம் நாடு, கூற்றம், ஊர்களாகப் பகுப்பட்டிருந்ததென்றும் அறிகிறோம்.

கூற்றம்—கூறு என்னும் பகுதி அடித்தாகப்பிறந்தது. நாட்டின் ஓர் பாகம் என்பது பொருள்.

இன்னம் ஒன்று என்னவென்றால் அருண்மொழித்தேவர் மரக்கால் என்பது. அருண்மொழித்தேவர் என்பது சேக்கிழாருக்கு ஒரு நாமம். அவர் மந்திரியாயிருந்த காலத்தில் ஏற்படுத்தின அளவைக்கு அப்பெயர் வந்ததுபோலும்.

துடிசைகிழார்·அ·சிதம்பரனார்.

# சமாச்சாரங்கள்.

## ஞான நூற்கு நன்கொடை.

ஸ்ரீ காசிவாசி சாம்பசிவஸ்ரீ செந்திநாதையரவர்கள் இயற்றிய தேவாரம் வேதசாரம் என்னும் அரிய உரைநூல் அச்சேறி முற்றி நெடுநாளாகியுஞ் சாதனக் குறைவான் வேதனஞ் செலுத்தி வெளிப்படுத்தக் கூடாமையை நமது சமாஜ அத்தியட்சர் ஸ்ரீமான் ஏகாம்பர முதலியாரவர்கள் குறிப்பின் விண்ணப்பித்துக் கொண்டவளவில் பற்பல சிவபுண்ணியங்களைப் புரிந்து வருவதுடன், சுப்பிரமணியாலய கைங்கரியம் செய்து வருகின்ற பெஸ்டு அண்டு கம்பெனி அதிபாஷகராகிய ஸ்ரீமாந். S, இரத்தினவேலுச் செட்டியாரவர்கள் ரூபாய் 100 உபகரித்தமை கேட்டுச் சந்தோஷிக்கின்றோம்.

## நூன்மதிப்புரை

தொல்காப்பியசண்முக விருத்திமறுப்பின் முதற்பகுதியாகிய பாயிர விருத்தி மறுப்பு என்னும் ஒரு கண்டன நூல் எமது பார்வைக்கு வந்துள்ளது. இது செப்பறை மெய்கண்டதேவர் உரைமுக மாணுக்கரால் ஆக்கப்பட்டது.

இதுபிரபலப்பிரமாணத்துடன் விழுமிய நடையுடைத்தாய் விளங்குகின்றது. இஃது ஒரு சிறந்தகண்டன நூல்.

மெய்கண்டான் கழகம்— ஆத்தூரில்— ஏப்ரல்மீ 7, 8-தேதிகளில் ஸ்ரீமான் என்-ஏ-வி-சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் முதலாவது ஆண்டு நிறைவிழாக் கொண்டாடப்பட்டது.

அறுமுகவருட்கழகம்— நெல்லையில், ஏப்ரல்மீ 1, 2, 3, 4, 5, 6, தேதிகளில் மறைத்திருவன்—விருதை—சிவஞானயோகிகள் அக்கிராசனத்தின் கீழ் முதலாவதாண்டு நிறைவிழாக் கொண்டாடப்பட்டது.

சிவாகம சித்தாந்த பரிபாலனசங்கம்—தேவகோட்டையில் ஏப்ரல்மீ 21, 22, 23-தேதிகளில் அம்பாசமுத்திரம் வக்கீல் ஸ்ரீமத் V. P. காந்திமதிநாத பிள்ளையவர்கள் B. A. அக்கிராசனத்தின் கீழ் முதலாவதாண்டு நிறைவுவிழாக் கொண்டாடப்பட்டது.

சைவசித்தாந்த சமயாசாரியர் பக்த ஜன சபை—காவித்தண்டலத்தில் ஏப்ரல்மீ 21, 22, தேதிகளில் சிவஸ்ரீ-சித்தாந்தசரபம், அஷ்டாவதானம்-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் ஐந்தாம் வருட மகோற்சவம் கொண்டாடப்பட்டது.

சைவசித்தாந்த சபை - இக்கட்டியாம் பந்தல்சபையானது திருக்கழுக்குன்றத்தில் ஏப்ரல்மீ 18, 19, 20 தேதிகளில் ஷை சிவஸ்ரீ யதீந்திர சுவாமிகளின் அக்கிராசனத்தின்கீழ் ஆறுவது ஆண்டுநிறைவிழா கொண்டாடப்பட்டது.

# சைவசித்தாந்த மகாசமாஜநிலையத்திற்காகக் கையொப்பம் செய்தவர்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியா ரவர்கள், மயிலாப்பூர் வேண்டிய நிலம் | |
| ,, யாழ்ப்பாணம் வண்ணைநகர் சுவாமிநாதபண்டிதரவர்கள் .. ரூ. | 250 |
| ,, அ. சாமி குப்புசாமி கிராமணியார் அவர்கள் ... | 100 |
| ,, ச. சபாரத்தின முதலியாரவர்கள், யாழ்ப்பாணம் ... | 50 |
| ,, J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், ... ... | 50 |
| ,, கி குப்புச்சாமி முதலியாரவர்கள், ... ... | 50 |
| ஸ்ரீலஸ்ரீ திரு-அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ... | 50 |
| ஸ்ரீமான் க இரத்தின கிராமணியாரவர்கள் ... ... | 50 |
| ,, A பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ... ... | 50 |
| ,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள், ... ... | 50 |
| ,, T. S. சுவாமிநாதப் பிள்ளையவர்கள், திருச்சினாப்பள்ளி ... | 50 |
| ,, E. S. அர்த்தநாரி ஆச்சாரியரவர்கள், ஈரோடு ... | 50 |
| ,, ம. கி. என். சின்னசாமி பிள்ளையவர்கள், மதுரை ... | 50 |
| ,, அ. மு மாணிக்க முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... | 50 |
| ,, V. C. வேதாசல முதலியாரவர்கள், செய்யூர் ... | 35 |
| ,, P. குமாரசாமி செட்டியாரவர்கள், ... ... | 25 |
| ,, தெளிசிங்க முதலியாரவர்கள், பிரம்பூர் ... ... | 25 |
| ,, தங்கவேலு முதலியாரவர்கள், சிந்தாதிரிப்பேட்டை ... | 25 |
| ,, கா. அப்பாசாமிசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி ... | 25 |
| ,, சா. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், பெரியமெட்டு ... | 20 |
| ,, T. சபாபதி முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் ... | 20 |
| ,, S T. M. P. T. நடராஜ செட்டியாரவர்கள், யாழ்ப்பாணம் | 15 |
| ,, தி. மாணிக்க முதலியார் அவர்கள், சென்னை ... | 12 |
| ,, A. சிவப்பிரகாச முதலியார் அவர்கள், கிருஷ்ணாம்பேட்டை | 10 |
| ,, இராமலிங்காச்சாரியார், வாலாஜா ... ... | 10 |
| ,, T. S. பரமேஸ்வரம் பிள்ளையவர்கள், சென்னை ... | 10 |
| ,, இராவ்பஹதூர் க. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள், சென்னை | 10 |
| ,, T. S. தியாகராஜ ஞானியார் அவர்கள், திருவாரூர் ... | 10 |
| ,, குள்ளப்பாச்சாரியரவர்கள், வாலாஜா ... ... | 5 |
| ,, B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள், பூட்டுத்தாக்கு ... | 5 |
| ,, அரைக்கண்ணு கிராமணியாரவர்கள், கிருஷ்ணாம்பேட்டை | 5 |
| ,, கா. கதிர்வேலு முதலியாரவர்கள், தண்டரை ... | 5 |

| | |
|---|---|
| ஸ்ரீமான் அ. ர. தணிகாசல முதலியாரவர்கள், அங்கம்பாக்கம் ... | 5 |
| ,, M. C. இராஜகோபால முதலியாரவர்கள், மயிலாப்பூர் ... | 5 |
| ,, T R. திருவேங்கட முதலியார் அவர்கள், சென்னை ... | 5 |
| ,, M. மாசிலாமணி முதலியாரவர்கள், மயிலாப்பூர் ... | 5 |
| ,, மளிகை பு. ஆறுமுக முதலியாரவர்கள், ... ... | 5 |
| ,, கு. வேலுமயிலுஞ்சாமியாரவர்கள், ... ... | 5 |
| ,, சு. நடேச தேசிகர் அவர்கள், கவர்ன்மெண்டு ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், மேலகாசாகுடி; நெடுங்காடு. ... | 5 |
| ,, P. V முத்துசாமி .. ... | 2 |
| ,, பொன்னுசாமி ஆசாரியாரவர்கள், சென்னை ... | 1 |

கையோப்பமிட்டவர்களில் பணம் சேலுத்தியவர்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீமான் வேலுமயிலும் சுவாமிகள் அவர்கள் ... | 5 |
| ,, மளிகை பு. ஆறுமுக முதலியார் அவர்கள் ... | 5 |
| ,, துரைக்கண்ணு கிராமணியார் அவர்கள் ... | 5 |
| ,, தி. மாணிக்க முதலியார் அவர்கள் ... ... | 3 |
| ,, T. R. திருவேங்கட முதலியார் அவர்கள் ... | 1 |

## அறிவிப்பு.

சென்னை மயிலாப்பூர் அம்பட்டன் வாராவதி ரோட்டு, பிள்ளையார் தோட்டத்தில் ஸ்ரீமான் இராஜுகிராமணியார் அவர்கள் உதவிய நிலத்தில் இச்சமாஜ நிலையக் கட்டடவேலையை இப்போது ஆரம்பித்திருப்பதைப் பற்றி அங்கத்தவர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன். கையொப்பம் செய்தவர்கள் தயையுடன் தொகைகளை அனுப்புவதுடன் கையொப்பம் செய்யாதவர்களும் போதுமான அளவும் கையொப்பம் செய்து தொகைகளை அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
கி. குப்புச்சாமி,
காரியதரிசி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தோகுதி ௬.] 1917ளு மேமீ [பகுதி ௫.

## சாந்தோக்யோபநிஷத்து.

### முதலாவது பிரபாடகம்.

### கண்டம் ௧௦.

குருதேசத்திலே பஞ்சம் வந்தகாலத்தில் சாக்ராயணர் என்ற உஷஸ்தியானவர் பசியால் மிக வருந்தி ஆடிகி என்னும் மனைவியுடன் யானைப்பாகர்கள் வாழுங் கிராமத்தை யடைந்தார்.

௨. அம்முனிவர் கொள்ளைத் தின்றுகொண்டிருக்கின்ற ஒருவனைப்பார்த்து அதில் சிறிது கேட்டார். அவன் இக்கொள் எச்சலாய்விட்டது இது தவிர வேறே யென்னிடத்திலில்லை யென்றான்.

௩. அக்கொள்ளையாவது எனக்குக் கொடு என வாங்கிப் புசித்தார். பின்பு அவன் குடிக்கஜலம் கொடுத்தான். இந்த ஜலம் உச்சிஷ்டமானபடியால் தேவையில்லை யென்றார்.

௪. இந்தக் கொள்ளும் உச்சிஷ்டம் தானே அதைமாத்திரம் சாப்பிடலாமா வென, இச்சமயம் இக்கொள்ளைத்தின்னுவிடில் எனதுயிர் நீங்கியிருக்கும் ஆகலின் அது தோஷமில்லை. ஜலம் வேறிடத்தில் அகப்படுமென்றார்.

௫. அக்கொள்ளை யவர்புசித்து மீதியைத் தனது பத்தினிக்குக்கொடுத்தார். அவளும் பசிதீர்ந்து அதிற் சிறிது பத்திரப்படுத்தி வைத்தாள்.

௬. அவர் காலையிலெழுந்து தன் பத்தினியைநோக்கி எனக்குச்சிறிது ஆகாரம் கிடைத்தா லதைப் புசித்தபின் சமீபத்தில் ஒருவர் செய்யும் ராஜயாகத்திற்கு ரித்விக்காகப்போய்ப் பணஞ்சம்பாதித்து வருவே னென்றனர்.

௭. அவளிடத்தில் முன்னாள் மிகுதியாக வைத்திருந்த கொள்ளைக் கொடுத்துச் சாப்பிட்டுப் போமென்றனள். *

௮. அவர் ராஜயாகத்திற்குச் சென்று அங்கிருந்த ப்ரஸ்தோத்தாவையும், உத்காதாவையும், ப்ரதிஹர்த்தாவையு நோக்கி, எந்தத் தேவதையைக் குறித்து நீங்கள் தோத்திரஞ் செய்கிறீர்களோ, அந்தத் தேவதையை நீங்கள் அறிந்து கொள்ளாமல் தோத்திரம் செய்வீராகில் உங்கள்தலை வெடித்துப்போகக் கடவதாக வென்றனர். அம்மூவரு மவுனமுற்றனர்.

## சண்டம். ௧௧.

இராஜன் அம்முனிவரை நோக்கி நீர் யாரென்றனர். நான் சாக்ராயனரென்னும் உஷஸ்தி என்றனர்.

௨. நான் தங்களைத் தேடினேன் நீர் அகப்படாமையால் மற்றையரைக் கொண்டு நடத்தினேன் என்றனன் ராஜன்.

௩. தாங்கள் மற்றைய ரித்விகருடனிருந்து யாகத்தை நடத்தவேண்டுமென இராஜா கேட்டுக்கொள்ள அதற்கு முனிவர் இவர்கள் எனது கட்டளையின்படி யாகத்தில் தோத்திரம்செய்க. அவர்கட்கு எவ்வளவு திரவியமீவீரோ அவ்வளவு திரவிய மெனக்கும் கொடுக்க வேண்டுமென்றனர்.

௫. பிரஸ்தோதா உஷஸ்தியென்பவரை நோக்கி எந்தத்தேவதையைக் குறித்துத் தோத்திரஞ் செய்கிறோமோ அந்தத்தேவதை யாரென்றனர்.

* உஷஸ்தியென்ற முனிபுங்கவராகிய பிராமணோத்தமர் வேதபாரங்கதராக விருந்தும், அன்னியசாதியானிடம் உச்சிஷ்டமாகவிருந்த கொள்ளைவாங்கித் தின்றனரென்றதனால், ஆபத்துக்காலத்தில் தோஷமில்லை யென வேற்படுகிறது.



162410

௫. பிராணன்தானந்தத் தேவதை எனெனில் எல்லாப் பூதங்களும் பிராணனி லொடுங்குகின்றன, மறுபடியும் அதனிடத்திலேயே யுண்டாகின்றன. ஆகலின் தோத்திரம் பிராணனைச் சேருகின்றது. இவ்வுண்மையறியாது தோத்திரஞ்செய்தால் தலைவெடித்துப் போமென்றனர்.

௬. பிறகு பிரஸ்தோதா கேட்டதுபோல உத்காதா கேட்டனர்.

௭. ஆதித்யன் என்று பதில்கூறிப் பிரஸ்தோதாவிற்குச் சொன்னபடி சொல்லினர்.

௮. பிறகு உத்காதா கேட்டபடி ப்ரதிஹர்த்தா கேட்டனர்.

௯. அன்னம் என்று பதில் கூறிப் பிரஸ்தோதாவிற்குச் சொன்னபடி சொல்லினர்.

## கண்டம் ௧௨.

பகர், தால்ப்யர், க்லாவர், மைத்ரேயர் என்ற பெயர்களை வாய்ந்தவொருமுனிவர் அத்யயனஞ் செய்ய வெளியே போயினர்.

அவருக்கு உபகாரஞ்செய்ய வெண்ணி வேதபுருஷன் தானொரு வெள்ளை நாயாகி மற்ற தேவதைகளைக் குட்டிகளாக அழைத்துக்கொண்டு அம்முனிவர் சமீபத்தில் வந்தது. குட்டிகள் பசிக்கிறதெனத் தாயைக் கேட்டன.

௩. காலையில் ஆகட்டுமென்று தாய்நாய் சொல்லிற்று. அச்சமயத்தை முனிவ ரெதிர்பார்த்திருந்தனர்.

௪. அக்குட்டிகள் பஹிஷ்பவமான மென்கிற சாமத்தால் தோத்திரஞ் செய்வதாக ஒன்றுக்கொன்று மேலே விழுந்து 'ஹிம்' என்று சப்தம் செய்தன.

௫. ஓம் தின்னப்போகிறோம், குடிக்கப்போகிறோம் தேவனும், வருணனும், பிரஜாபதியுமாயிருக்கத் தகுந்த சூரியன் அன்னத்தைக் கொண்டு வந்து கொடுக்கட்டும். ஏ! அன்னத்திற்குப் பதியே அன்னத்தை யெங்கட்குக் கொண்டுவா என்றன.

மணவழகு.

RB...

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தீட்சை.

தொகுதி 6. பகுதி 4. பக்கம் 83. தொடர்ச்சி.

இன்னும் இத்தீட்சையின் இலக்கணங்களையும் இன்றியமையாக் குண்டமண்டல வேதிகைகளின் இலக்கணங்களையும், மந்திரங்களின் இலக்கணங்களையும், மந்திரங்களைச் செபிக்கும் முறைகளையும் தமியேன் சொல்லும் அதிகாரமுள்ளோன் அல்லேன் ஆகையால் அவற்றை நல்லாசிரியரையடுத்து அவரை நன்கு வழிபட்டு முறையிற் கேட்டு அறிக. இப்போது தீட்சையின் உற்பத்தியும் பாகுபாடுகளும் ஒருவாறு நிருபிக்கப்பட்டன.

இனி முன்னுவதாக இதனை ஈவோர், ஏற்போர் இலக்கணங்களைச் சிறிது ஆராய்வாம். ஈவோராகிய ஆசாரியராவார் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை முதலிய புண்ணிய தீர்த்தக் கரைகளையடுத்த தேசங்களும், சுயம்புலிங்கம் முதலிய சிவலிங்கங்கள் உள்ள தலங்களும், கிருஷ்ணசாரம் என்னும் மான் சஞ்சரிக்கும் இடங்களுமாகிய மகாதலங்களைத் தமக்குப் பிறப்பிடமாய்க் கொண்டவராய் இருத்தல் வேண்டும். உத்தமராகிய பிராமணரும், க்ஷத்திரியரும், வைசியரும், சற்சூத்திரரும் ஆகிய நாற்குலத்தவரும் சிவாசாரியராதற்கு உரியர். காமாதி மனக்குற்றங்களும், உடற்குற்றங்களாகிய மிகநெட்டை, அறக்குறுகல், அறப்பருமை, மிகவெண்மை, மிகக்கருமை, முடம், கூன், காய்கைக்கண், குழிக்கண், இழிக்கண், இடர்க்கண் முதலிய குற்றங்கள் உடையவரும், அநுலோம, பிரதிலோம வம்சத்திற் றோன்றியவரும் ஆசாரியராதற் குரியவர் அல்லர். பின்னும் தம்முடைய சந்தானத்திற் கேற்ற ஆசாரியரால் சமயம், விசேஷம், நிர்வாணம், ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கினையும் பெற்று அதற்குத்தக்க ஆசாரங்களையும் அநுட்டித்து, தம்முடைய ஆசாரியரிடத்திலே பக்தியுடையவராய், காமிகாதி யிருபத்தெட்டு ஆகமங்களையும் வேதம் வேதாந்தம் என்னும் உபநிடதங்களையும் ஐயந்திரிபு அறவோதி யுணர்ந்து அதின்



பயனாகச் சிவபெருமான் ஒருவனே தெய்வம் எனக் கண்டு அவரிடத்தில் அன்புபூண்டு அகப்பற்று புறப்பற்றுகளாகிய யான் எனது என்னும் அகங்காரமமகாரங்கள் நீங்கி, தீக்ஷை செய்விக்கும்போது மலரகிதராகிய சிவபெருமானைத் தன்னிடத்தே தரிசித்துச் சிவோகம்பாவனை செய்து, மலசகிதராகிய ஆன்மாக்களுக்கு மலத்தை நீக்கி, பாசம் நீங்குமிடத்து அவ்வான்மாக்களது சத்தினி பாதங்களால் விளையும் குறிகளின் பேதங்களை ஆராய்ந்து அவ்வவற்றிற்கு ஏற்ப சாம்பவி, சத்தி, மந்தரம் என்னும் தீட்சைகளினாலே அவர்களின் மும்மலங்களையும் போக்கி அவ்வான்மாக்களின் உள்ளே சிவபெருமானுடைய பொலிவாகிய திருவடிகளைத் தெரிசிப்பிப்பவரே ஆசாரியர் எனப்படுவார்.

முற்கூறிய சாம்பவதி தீக்ஷையாவது ஞானாசாரியன் திருநோக்கால் பரிசத்தால் செய்யப்படுவது. திருநோக்கால் என்பது மீனானது தன்னுடைய சினையைப்பார்த்த மாத்திரையானே அதனைப்பேதித்துத் தன்னைப்போல் ஆக்குவதுபோலவும், கருடபாவனை செய்பவன் பாம்பினாலே கடிபட்டவனைப் பாம்பாகவும் தன்னைக் கருடனாகவும் பாவித்து அவலோகனம் பண்ணி விஷந்தீர்ந்தவாறே அவனுடைய இளைப்பு நிவர்த்தியாகும் பொருட்டுத் தான் சந்திரபாவனைசெய்து அவனை அமிர்தகலையினாலே அபிஷேகம் செய்ததாகக் கிருபாநோக்கம் செய்வது போலச் சித்பாவனா சித்தனான ஆசாரியன் பாசநிவர்த்திக்காக நிக்கிரக நோக்கமும் ஆன்மாவின் திருப்தியின் பொருட்டு அனுக்கிரகத் தோற்றமும் பண்ணுவதாம்.

பரிசத்தால் என்பது ஆசாரியன் தனது கையிலே சந்தனக்குழம்பைப்பூசி அதைச் சிவாஸ்தமாகப் பாவித்து மந்திர மூர்த்தியாகிய சிவபெருமானைப் பூசித்துச் சிஷியனுடைய மஸ்தகத்திலே அச்சிவ அஸ்தத்தை வைத்து, ஸ்பரிசவேதியானது ஸ்பரிசித்தமாத்திரத்தே தாம்பிராதி லோகங்களினது களிம்பு நீங்கிச் சொர்னமாவதுபோல, அவனுடைய பாசத்திரயம் நீக்கி அவனைச் சிவனாம்படி செய்வது.

சத்திதீக்ஷையாவது மானததீக்ஷை. அதாவது மனத்தினால் குண்டமண்டலாதிகளை நிருபித்துச் செய்வது.

மந்திர தீக்ஷையாவது குண்டமண்டலாதிகளை ஸ்ரீ காமிகாதி ஆகமங்களில் விதித்துள்ளவாறு இயற்றி ஆகுதி முதலிய கிரியைகளைச் செய்து மாணாக்கனது மலத்தைப்போக்குவது.

அவ்வாசாரியர் ப்ரேரகாசிரியர் எனவும் போதகாசிரியர் எனவும் முத்திதாசாரியர் எனவும் மூவகைப்படுவர். ப்ரேரகாசிரியர் என்பார் சைவசமயத்திற்கு யோக்கியரான மாணாக்கர்களை அவர்களுக்குத் திருவருள் செய்தற்கு யோக்கியரான ஆசாரியர் இவர் என்று காட்டி அவரையடையும்படி செலுத்தி உய்விப்பிப்பவராவர்.

போதகாசிரியர் என்பார் சத்திநிபாதம் அடைந்து ஆசாரியனிடத்தில் அன்பு கொண்டு தம்மைத்தேடி யடைந்த மாணாக்கர்களுக்குச் சமய, விசேஷ தீட்சைகளைச்செய்து ஆசாரங்களைக் கற்பித்தருளுவோராம்.

முத்திதாசாரியர் என்பார் கோடையில் களைத்து விடாய்ப்பட்டவர் தாகம் தேடுமாறுபோலத் தம்மை யடைந்த மாணாக்கர்களை ஆறு இரண்டு ஆண்டுகளுள் பக்குவம் பரீக்ஷித்து நிர்வாணதீக்ஷை செய்து அவருடைய பாசத்தைச் சேதிப்பவரேயாவர். இதுகாறும் ஆசாரியருடைய சிறப்பு இலக்கணங்கள் கூறப்பட்டன. ஆசாரியருக்குப் பொதுவாய் அமைந்திருக்கவேண்டிய இலக்கணங்களாவன:—

குலம், அருள், தெய்வம், கொள்கை, மேன்மை, கலைபயில்தெளிவு, கட்டுரைவன்மை, நிலம், மலை, நிறைகோல், மலர்நிகர் மாட்சி, உலகியலறிவு, உயர்குணம் முதலியனவாம்.

மொழிகுண வின்மையும், இழிகுண இயல்பும், அழுக்காறு, அவா, வஞ்சம், அச்சம், ஆடலும், கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு ஒப்பன முரண்கொள் சிந்தையுமுடையோர் ஆசிரியராகார்.

இனி ஏற்போருடைய இலக்கணங்களைச் சிறிது ஆராய்வாம். கொலையாதி மகாபாதகங்களை விலக்கியோர் வாழ்விடமாகிய பரதகண்டத்திலே வேதம் வழங்காத நாட்டில் தோன்றாது புண்ணிய பூமியில் உயர்குலத்தில் தோன்றியவராய் சார்வாகம், பௌத்தம், ஆருகதம் முதலிய புறப்புறச் சமயங்களிலும், பாஞ்சராத்திரம் காபாலம், சாக்தேயம் முதலிய புறச் சமயங்களிலும் தோன்றாது சைவசமயத்தில் தோன்றியவராய் பூர்வ புண்ணிய விசேஷத்தால் உள்ளும் புறம்பும் குற்றமற்றவராய், அன்னம், பசு முதலியவற்றின் சிறந்த குணங்களுடையவராய், களிப்பு, மடிமை, மானம்,



காமம், களவு, பிணி, பிணக்கு, சினம், துயில், மந்தம், தடுமாற்றம், தறுகண்மை, பாபம், பொய் முதலிய குற்றங்களற்றவராய், ஆசாரியரை வழிபடலில் பின்னிடாதவராய், அவர் குணத்தொடு பழகிக் குறிப்பிற்சார்ந்து இரு என இருந்து சொல் எனச் சொல்லி, அவர் கூறும் விஷயங்களைப் பருகுவதுபோல் எதிர் பார்ப்பவராய், சித்திரப்பாவைபோல் அடங்கிச் செவி வாயாக நெஞ்சுகளனாக கூறியவற்றைக் கேட்டு அவற்றை வெளிவிடாது உள்ளத்து அமைத்து அனுபவிப்பவரே நன் மாணாக்கராவர்.

இப்போது ஏற்போராகிய மாணாக்கருடைய பொது, சிறப்பு இலக்கணங்கள் ஒருவாறு சொல்லப்பட்டன.

இனி நான்காவதாக நன்மாணாக்கராவார் அனுட்டிக்கவேண்டிய முறையினைச் சிறிது நோக்குவாம். சைவ மாணாக்கராவார் சமயி, புத்திரன், ஆசாரியன் என மூவகைப்படுவர். சமயி யாவான் சமயதீட்சை பெற்றுச் சிவாகமங்கள் விதித்தபடி சுத்தோதகத்தில் ஸ்நானம் செய்து தர்ப்பணம் செபம் முதலியன முடித்துச் சிவபெருமானுடைய திருவடிகளையும் ஆசாரியனுடைய திருவடிகளையும் மனதிலே தியானித்துக்கொண்டு வீட்டினின்றும் புறப்பட்டுப்போய்த் தூலலிங்கமாகிய கோபுரத்தைவணங்கித் திருக்கோயிலினுட்சென்று பத்திரலிங்கமாகிய பலிபீடத்தையும் இடபதேவரையும் வணங்கி மெல்லிய திருவலகு கொண்டு கிருமிகள் சாகாமல் மேற்படவலகிட்டு ஈன்று அணித்தானதும் நோயற்றதுமான பசுவின் சாணத்தைப் பூமியில் விழுமுன் இலையில் ஏற்று, வாவி, நதி முதலியவற்றில் வடித்து எடுத்து வந்த நீருடனே கூட்டித் திருமெழுக்குச் சாத்தித் திருநந்தனவனத்திற்குச் சென்று பேசுதலும் சிரித்தலும் சிவபெருமானுடைய திருவடிகளன்றிப் பிறவற்றில் சிந்தைவைத்தலுமின்றிப் பழுதுநீக்கிப் பூக்களைக் கொய்து, பரித்தவுடனே தூசு, ஈ முதலியன தீண்டாவண்ணம் அவைகளைப் பத்திரத்தால் மூடி, அவற்றை இண்டை முதலிய பலவகைத் திருமாலைகளாகக் கட்டிச் சிரத்தையோடும் சிவபெருமானுடைய திருமுடியிலே அவரைத் தீண்டுதற்கு அருகரான ஆதிசைவரைக் கொண்டு சாத்துவித்து இத்திருத்தொண்டு செய்யும் பெரும்பேறு பெற்றேனே வென மனமகிழ்

ந்து தேவாராதி பாசுரங்களை ஓதி, அகிற்கட்டையினாலும் சந்தனம் முதலிய பிறகந்தவர்க்கங்களினாலும் தூபம் பணிமாறச் செய்து கபிலை முதலிய பசுக்களின் நெய்யினாலே திருவிளக்கிட்டுச் செல்வத்திற்கு ஏற்ப திருப்பணிகள் செய்வித்து மனங்கசிந்து உருக உரோமம் சிலிர்ப்ப கண்ணீர்சொரியக் காருண்ய ரூபியாகிய சிவபெருமானே! அடியேனுடைய ஜனன மரணதுன்பங்களை நீக்கி ஆட்கொண்டு அருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்து அழுது வழிபடுவோன் ஆவான்.

இனி புத்திரனான விசேஷதீட்சை பெற்றவனாவான் விதிப்படி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு, மந்திரதேவர் முதலாயினோர் தர்ப்பணத்தைக் கிரமப்படிச் செய்து அக்கினிகாரியம் முதலிய ஆன்மார்த்தத்தை முடித்துக்கொண்டு முன்கூறியபடி சிவாலய வழிபாடுசெய்து அதிதிபூஜை முதலியனவற்றை யியற்றி ஆசாரியரும் சாதகரும் கூறியவற்றை யன்புறச் செய்பவனே புத்திரன் எனப்படுவான்.

இனி ஆசாரியன் என்பான் சமயம், விசேஷம், நிர்வாணம் என்னும் மூன்று தீட்சைகளையும் பெற்று நித்தியநைமித்தியக கர்மாதிகளைக் கிரமப்படி முடித்து மூவகைச் சித்திகளையும் விரும்பிக் காமிய கர்மத்தையும் செய்து அகப்பற்றும் புறப்பற்றுகளை அறவே நீக்கி இறைவன் திருவடிக்கண் தூங்காமற் தூங்குபவனே ஆசாரியன் ஆவான். இதுவரையில் தீட்சைபெற்றோராகிய மாணாக்கர் ஒழுகவேண்டிய விதிகளைச்சிறிது ஆராய்ந்தோம்.

இனி ஐந்தாவதாக அநுட்டிப்போர் அடையும் பலனை உற்று நோக்குவாம்.

(இன்னும் வரும்)

W. T. கோவிந்தராஜ முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கடவுளும் உலகும்.

"ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்—ஒன்றின்றேல்
அக்கரங்களின்றாம் அகரவுயிரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு. (சிவஞானபோதம்,)

"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவித மாகுநா ளெந்நாளே" (தாயுமானவர்பாடல்)

உருஷியர்களுள்ளே மிகவும் பேர் விளங்கிய மகான் கவுண்ட் டால்ஸ்டய் அவர்கள் விளம்புவது: "சமயம்என்பது மனிதன் வேறுவேறாகிய தனக்கும் இவ்வகண்ட உலகுக்கும், அல்லது அதன் மூல காரணத்துக்கும் ஏற்படுத்திக்கொண்ட சம்பந்தம் அல்லது இயைபு; நீதி என்பது இவ்வியைபைக் கொண்டு தன் வாழ்வை என்றும் நெறிப்படுத்துவது." நாம் அத்துவிதம் என்னும் நூலில் காட்டியபடி அறிவு, உணர்வு, ஞானம் என்பதும் ஒரு பொருள் மற்றைப் பொருள்களுடன் ஒப்பாதலையும், வேறாதலையும் உணரும் உணர்ச்சியென காட்டியிருக்கின்றோம். இவ்வுணர்வி னின்றும் மேலே நம் செயல்கள் நிகழ்கின்றன. உதாரணமாக நாம் வனத்துக்குட் செல்லும் போது, ஒருபழத்தைப் பார்க்கின்றோம். அதை நாம் முன் கண்டதில்லை. அது இன்னதென ஆராயுங்கால், அதற்கு இனமான கனிவர்க்கங்களோடு ஒத்திட்டு அதை உண்ணக்கூடும், அல்லது உண்ணக்கூடாதென முடிவு செய்கிறோம். இப்படி முடிவு செய்வதில் நாம் கொஞ்சமேனும் பிழைபடில், அக்கனி எவ்வளவு அழகாயும், அவாவையுண்டாக்குவ தாயினும், அதை உண்பதினால் நமக்கு ஊறு உண்டாகும். இவ்வண்ணமே நன்மை, தீமை நமக்கு உளதாவதும், நமக்கும் மற்ற உயிர்களுக்கும் உயிர்க்கூட்டங்கட்கும், மற்றைப் பொருள்களுக்கும் உள்ள இயைபுகளை நன்கு உணர்தலானும், உணராததலானுமே,

இவ்விதமே உயர்தருஞானம் சமயம் என்பதும். உயர்தரு பொருள்களையும் அவைகளின் இயைபுகளை உணர்தலுமாகும். அவ்வவர் கொள்வதில் இவ்வியபுகள் மாறுபட மதங்களும் மாறுபடும். இக்கோள்களும் பார்வை, தேர்ச்சி, அநுபவக் குறைவினாலும், காமம், வெகுளி, மயக்கத்தினாலும், சாதி, பிறப்பு, மானம் என்னும் கட்டுக்குள்ளடங்குவதாலும் உண்மைநெறியில் நில்லாது மாறுபடும். தாங்கள் முன்னிய கருத்துக்கேற்ப நீதிநெறிகளும் பல் வேறுபட்டு அவ்வழிகளில் மாந்தர்கள் மயங்குகின்றனர்.

நிற்க, இவ்வியைபுகளை ஆராய்ந்து நாம் சென்ற வழியில் பேயன் (Dr. Bain) பண்டிதரின் ஆராய்ச்சியைத் துணைக்கொண்டு சென்றோம். ('அத்வைதம்' என்னும் நூலில் 'உயிர்மெய்' என்னும் பகுப்பில்) அப்பண்டிதரும் கொடிய நாஸ்திகரெனினும் அவர் சென்றமட்டும் நமக்கு உடன்பாடே. அவர் நம்மோடு மேற் செல்ல இணங்காவிடினும், அப்படி மேற்செல்லுவதில் தடையிடைகள் அவர் காண்பாராயினும் அத்தடையிடைகளைத் தவிர்த்துச் செல்ல மனவூக்கமில்லாராயினும், அவர் கருத்துகளை நன்கு மதித்து, அவர் உண்மையினை நன்கு காட்டுகின்றோம். அவர் போனமட்டுமே வழித்துணை அளவாயிருந்தது நாம் எடுத்த விஷயம் நமக்கு நன்கு விளங்கிற்று. அதில் ஒன்றும் சந்தேகமில்லை. எல்லாம் நம் அநுபவத்தில் அடங்கியுள்ளது. நம்மநுபவத்துக்கு மாறாக ஒன்றும் கண்டதில்லை. சுவாநுபவத்தையும் ஆப்த வசனத்தையும் பிரமாணமாகக் காட்டி நம்மை எதையும் நம்பச் சொன்னதில்லை. யுக்தி தப்பியபோது சுருதியையும், சுருதி தப்பியபோது சுவாநுபவத்தையும், இதுவெல்லாம் தப்பியபோது, சொல்மாத்திர செப்பிடு வித்தையையும் கடைப்பிடித்ததில்லை. இது காண இயலாத பரமரகசியமென மாந்தர்களை மயக்குவித்ததுமில்லை. நாம் சொல்வது யாவரும் எளிதில் அறியவாகும். நாம் எளிய நடையிற் கூறுகின்றோம். அதை அறிவதும் அரியதெனின் இன்னும் எளிய நடையிற் கூறுவோம்.

மேல், நாம் உணர்ந்தும் நம்மநுபவத்தில் வந்ததும், இருபெரும் பகுப்பாகி, இவ்விரண்டும் ஒன்றோடொன்று முற்றிலும் மாறுபட்டதாயினும், அநந்நியமாய் பிரிக்கப்படாத வகையாய் அவற்றிற்கு, மனது, மாயை, அகம், புறம், புருஷன் பொருள், உயிர் உடல், ஆன்மா பாசம், சித்து அசித்து, சத்து அசத்து என ஒரு பொருட் பன் மொழிப்பெயர்கள் ஏற்பட்டதும் கண்டோம். அவை ஒன்றைவிட்டு ஒன்று நில்லாமையையும் இயைபையும் கண்டோம். அவ்வியைபும் ஒருவிதம் நமக்கு விளங்



கக்கூடாதிருப்பதையும் கண்டோம். ஆனால் அவ்வியைபு காரண காரிய இயைபு அல்லவென்னும், ஒன்றின் பின் னொன்று தொடரும் தொடர்பு இயைபு அன்றென்றும், இடம்பற்றி கூடிநின்றதன்றென்றும், பொருளும், அதன் பகுப்பும் அன்றென்றும் ஒன்று மற்றொன்றை இயக்கி நிமித்த காரணமாய் நிற்பதன்றென்றும், வியாபக வியாப்தி சம்பந்தம் அன்றென்றும், அல்லது ஒருவித இயைபும் இல்லாததன்றென்றும் நாம் உறுதியாகக் கண்டோம். ஆகவே உலக இயற்கைப் பொருள்களில் காணப்படும் எவ்வித இயைபினாலும் நாம் இதனை உய்த்தறிய முடியாவிடினும், உயிர்மெய், எழுத்துக்கள் உதாரணத்தைக்கொண்டு ஒருவாறு உய்த்தறிந்தோம். இவை ஒன்றன்று இரண்டன்று 'ஏகமிரண்டென்னுமற் சும்மாவிரு' என்று நம் வள்ளலாரும் அறை கூறினார். எனினும் இவ்வியைபுக்கும் ஒருவிதப்பெயர் இடவேண்டியதன்றோ? ஆகையால் நம் ஆன்றோர் வேறு பெயர் நன்கு கிடைக்காதவரை 'அத்வைதம்' என்னும் பெயரிட்டழைத்தார்கள். அத்வைதம் என்னும் சொல் இரு பொருளை ஒப்பி, ஒன்றையும் உண்மையல்ல வென்றும், மித்தை யென்றும் ஒதுக்கியதில்லை. இவைகளுக்குள்ள சம்பந்தத்தையே விளக்கி நின்றது. இதில் ஒருவித ஒற்றுமை ஏற்படினும் இருபொருளின் லிங்கம் நசித்ததில்லை. இவ்வியைபை வாயினாற் கூறொணாதாயினும், நம்மனசினால் இரண்டாயும் (துவைதம்) இரண்டல்லவாயும் (அத்வைதம்) உள்ள இயைபை உய்த்தறியலாம். இவ்விருமையில் ஒருமையாயுள்ள இயைபுக்கு அத்வைதமெனவும், அம்மதத்துக்கு அத்வைதஞானம் என்றும், அதுவே உண்மை முடிவானதால் சித்தாந்த ஞானமென்றும் சொல்லநேர்ந்தது. ஆகவே இஞ்ஞானத்தை, நாஸ்திகர், மாயாவாதியர், (Idealist) இவர்களுடைய ஏகவாதத்தினின்றும் (moimistry) ரீட்பண்டிதர் (Dr. Reid) ஹாமில்டன் (Professor Hamilton) இவர்களுடைய துவிதவாதத்தினின்றும் பாகுபாடு செய்யவேண்டும். பேயன் பண்டிதரும், அவர் இனத்தோரும், தங்களை ஏகவாதிகளெனச் சொல்லிக் கொள்ளுகின்றனர். எனின், இந்த ஏகவாதத்தையும், அஞ்ஞாதவாதிகள் (agnostrics) ஏகவாதத்தையுமே பிரித்தும் அறிய வேண்டியிருக்கிறது. உலகவழக்கில் ஒரு சொல் ஒரு சொல் ஒரு பொருளோடு வழங்கிவரும் போது, அதே சொல்லில் வேறு பொருளையும், ஏற்றி வழங்குவது பெரும் மயக்கத்துக் கிடமாகுமே தவிர வேறன்றென்க. ஒரு விதத்தில் நம் மதமும் ஏகவாதமெனவும் கொள்ளலாம்.

உயிர் முற்றும் விஷயீகரித்து நிற்கும் நிலையில் (Pure Objective Condition) உயிர் உடலோடு மடிந்து, உடலேயாய், உடலினின்றும் தான் வேறாகக்காணாது அறிவற்று நிற்கும். அப்படித்தான் கெட்டு அதுவதுவாய் நிற்கும்போது ஒரேபொருள், புறப்பொருள் (Object) மட்டும் தான் முனைத்து நின்றது. அப்படி விஷயீகரித்து நில்லாதபோது புற உலகு எல்லாம் நசித்து, உயிர் ஒன்றேயாய் நிற்கும். எனினும் உயிர் இல்லாதவழி, ஒன்றுமே இருந்ததில்லை. உயிர் தன்னிலையில் நின்றபோது வேறொன்றுமே நிலைத்ததில்லை. ஆகவும் ஸ்ரீ மெய்கண்டநாதன் 'ஏகம் ஏவாத்விதீயம் பிரம்மா' என்ற எழுதாமறைக்கு உண்மை உரைத்தவாறு எவ்வளவு பொருத்தமாகக் காண்கின்றோம். இவ்விரு பொருளுடன் மூன்றாவது பொருளாகிய பதி நிச்சயம் கூறுகின்றோம்.

இம்முப்பொருளுக்கு மேலே யாவரும் மேற்பொருள் கூறவாரில்லை. இம்முப்பொருளுமே எல்லா மதவாதிகளுடைய திரிபதார்த்தமாகும், அம்முப்பொருளின் இலக்கணத்தையும் இயைபையும் சொல்லுவதில் எவ்வித வேறுபாடுளதாயினும்.

இம்மூன்றாவது பொருளும் காட்சிப் பிரமாணத்தால் ரூபிக்க முடியாதது. ஆயினும் தர்க்க ரீதியாக கருதற் பிரமாணம் (யுக்தி) யால் ரூபிக்க முடியுமென நம்புகின்றோம். நாஸ்திகர்களாலும், மாயாவாதிகளாலும் அலக்கப்படாததும், விளக்கப்படாததுமாய் எஞ்சி நின்றவை உண்டன்றே. அவற்றினை எவ்வாறு விளக்குவது? இம்மூன்றாவது பொருள் நிச்சயம் கூறுவிடில், இப்பொருளை மேற்கொள்ளுவதால் பூர்வபட்சிகள் விளக்காதனவற்றை விளக்கவும், உலகியற்கும், நம்மனுபவத்துக்கும், இயற்கை சம்பவத்துக்கும், முரணுகாது நிற்கவும் வல்லதேல், அப்பொருளை துணி பொருட்பக்கம் (hypothesis) ஆகக்கொண்டு ஒழுகுவதில் என்ன ஊறு உண்டோ அறிகிலேம். இதனை இன்னும் அதிகமாக விரித்து ஈங்குப் பேச முயலாமல், இறைவனுக்கும் உலகுயிர்க்குமுள்ள சம்பந்தத்தை ஈங்கு ஆராயப்புகுவாம்.

கடவுளுக்கும் நமக்குமுள்ள சம்பந்தம், நமக்கும் நம் உடலுக்கும் நாம் முன்னர் கூறிப்போந்த சம்பந்தமேயாகும். ஆகவே இவ்வியைபுக்கும் அத்வைதம் என்னும் பெயரே ஏற்படும். நம்மருந்தவ தாயுமான சுவாமிகளின் கண்ணி யொன்றை நாம் மேற்காட்டியது எவ்வளவு பொருளமைதியுடைமையும், அழகுமுடையது. அவரே 'பொய்கண்டார் காணாப் புனிதமெனு 'மத்துவித மெய்கண்ட நாதன்' எனப் போற்றும் நம்மையாண்டவராகிய நாதனே இவ்வத்துவித உண்மையை நம் தமிழ் உலகத்துக்கு உணர்த்தியுள்ளார்.



உயிர் உடலுக்குள்ள என்னவித இணக்கமோ அவ்விணக்கமே உயிருக்கும் கடவுளுக்கும். கடவுள் சுத்த புருஷன் (Pure Object) உயிர் பொருள் (Object) கடவுள் சுத்த அகம், உயிர் சுத்த புரம். கடவுள் சத்து, உயிர் அசத்து. கடவுள் அகமும் சத்துமாக உயிரும் உலகுமே ஒருங்கப் புறமும் அசத்துமாகும், இவ்வுண்மையைத் தேவர் முதற்குறளில் 'உலகு' என்னும் பெயராலேயே உலகையும் உயிரையும் ஒன்றுபடுத்திக் கூறியதையும் ஓர்ந்துணர்க. எனினும் உலகை அசத்தெனக் கூறவும், உயிரையும் அப்பெயராலேயே கூறுவது கொஞ்சம் மயக்கத்துக்கு ஏதுவாகுமெனக்கருதி நம்மான்றோர் உயிர்க்குச் சத்துமல்லாத அசத்துமல்லாத சதசத்து என ஓர் பெயரிட்டழைக்கின்றார்கள். இதன் பொருளும் கடவுளுடனும் மாயை உடனும் வேறாய் அவற்றுள் ஒவ்வொன்றோடு கூடிய வழி அதுவாய் நிற்பதென்பது. உடலோடு ஒன்றியவழி உடலாயிற்று; அதுபோலச் சிவத்தோடொன்றியபோது சிவமாயிற்று. உடம்போடு கூடியபோது உடம்பேயாய் தான் கெடுதலின்றித் தான் வேறு தன் உடம்பு வேறெனவும் தன்னையும் உணராது நின்றமையும் கண்டோம். அதுபோல் சிவன் சிவத்தோடு ஒப்பற்ற இன்பம் துய்க்கும்போது தான் எனவும் கடவுளெனவும் தான் துய்க்கின்றேன் எனவும் உணர்வு கெட்டு நிற்கின்றது. இவ்வுணர்வு நிகழின் ஒன்றுதல் பிறவாது. உயிரேயில்லையேல், மோக்ஷம், அநுபவம், ஆநந்தம் என்பதும் வெறும் பேச்சாகும். இவ்விதமான உயிரின் தன்மைக்கு 'அதுவதுவாதல்' அல்லது 'சார்ந்ததின் வண்ணமாதல்' என்றுபேர். சித்தாந்திகள் சிவஞானபோதம் 3-ம் 4-ம் சூத்திரங்களைப் பற்றுகக்கொண்டு உயிருண்மை கூறும் வண்ணமே, ஏகாத்மவாதிகளும் உயிர் பூதங்களல்ல, பொறியல்ல, கரணங்கள் அல்ல, 24 தத்துவங்கட்கு மேற்பட்டதெனக் கொள்ளினும் அந்நிலையில் இவ்வுயிரின் தன்மையையும், அதற்கும் இறைவனுக்குமுள்ள இயைபையும் நன்குணராமையால் இவ்வுயிரே இறைவனென மயங்கிக் கூறுவார்கள். இப்பொருள்களெல்லாம் 5, 6, 7, சூத்திரங்களில் விளக்கப்பட்டுளது.

6-ம் சூத்திரம் 2-அதி. 5-ம் உதாரணச் செய்யுளில் இச்சத சத்து சத்தாகுமாறு யாங்ஙனம் என அழகாக விரித்திருப்பதை ஆராயக் கடவது.

"அது வென்று மொன்றன்றி அறவன்றே வேறே
அது வென் றறியறிவு முண்டோ • அதுவென
அறிய விரண்டல்லனுங் கறிவுள் நிற்றல
அறியு மறவே சிவம்"

இறை அது வென்று சுட்டப்படும் பொருள் அன்று. அங்ஙனமாயின் சடத்தோடொன்றாகும். இவ்விறையை அறிய இன்னொரு அறியவன் வேண்டும். இறைவன் தன்னுள் முற்றிலும் கலந்து நிற்றலால் தான்வேறு அவன் வேறாக உயிர் காணமுடியாது. இவ்விதம் சுட்டற்று அசை வற்று அசை வற்று நோக்காது நோக்கும் உயிரே சிவமாம் என்றபடி.

நம் உமாபதி சிவத்தின் திருவருட்பயன் இரண்டாம் அதிகாரத்தையும் கவனிக்கற்பாலது. இருளில் இருளாகி ஒளியில் ஒளியாகும் பொருள்கள் இப்பூவுலகின் இலதோ எனக் கேட்கிறார். அதற்கு அவர் வேறு இடங்களில் கூறும் விடையும் கண், பளிங்கு, ஆகாயம் என்பதே. கண் இருளில் பார்க்கத் தன் சக்தியற்றும் ஒளியில் அச்சக்தியை மீண்டும் பெறுகின்றது. மற்றவைகளும் (நீரும் இத்தன்மைத்து) இருளில் இருளாகும், ஒளியில் இன்னும் அதிக ஒளியாகும். ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளும் இவ்வுயிரின் தன்மையை பலவிடத்துக் குறிப்பித்தது 'யாதொன்று பற்றின தனியல்பாய் நின்று பந்தமறும் பளிங்கனைய சித்தநீ' யென்று சாதிக்கிறார். இங்கு ஒளி என்றது பரமான்மாவும், இருள், மாயை பாசமும், பளிங்கு முதலியன உயிரும் ஆம். ஒளியின்றி இருளுக்கும், இருளின்றி ஒளிக்கும் மாறும் ஓர் உயிர் உளதென நம் இயற்கை அநுபவத்தில் உணருகின்றோம். இவ்வுயிரும் இறைவனும் ஒன்றெனின் இம்மாறுதலும் இறைவனிடம் செல்லும். 'பிரமவாதின்' பத்திரிகையில் ஒரு ஏகாத்மவாத நண்பர் தம்மை கூறிய அறிவும், உறுதியாகிய உணர்வும் உடையவர்களாகிய ஓர் உயர்தர இனத்திற் சேர்த்துக் கொள்ளுகின்றார். அவர் இனத்திற் நாம் சேர்ந்தோமல்லோமென ஒப்புக்கொள்வேம். எனினும் ஒரே பதார்த்தத்தின் உண்மை உரைப்பார் இயற்கையில் உள்ள இழிவும் குறைவும், பழியும் பாவமும் சிற்றறிவும், சிறு தொழிலும் இறைவனிடம் கூசாமல் எவ்விதம் காப்பாற்றுவார். என நாம் அறிந்திலேம். கடவுள் அங்ஙனம் அலையுறார் எனச் சுருதிவாக்கு உண்டெனின் அது கேட்டதையே கேட்பதென்றும் தோல்வித்தானமாகி உண்மை மறுமொழியாகா.



அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருள் அவித்தையினால் ஆரோபிதமாகிக் கோடானுகோடி கண்டபொருள்களாயிற்றென்றும், அது எங்ஙனம் ஆயிற்றென்று ஒரு உபமான முகத்தானன்றி மற்றெவ்வித ருசுவும் கொடுக்காமல் அவ்வுபமானமும் எவ்விதத்தினும் குறைபாடுடைத்தாகவும், அங்ஙனம் கூறிய வாயினாலேயே இக்கண்டப்பகுப்பு பொய் பொய்யென்றும், உலகமில்லை, உயிர்களில்லை, உரகரில்லை, நானுமில்லை நீயுமில்லையென்றும், உடனே நானும் நீயும் தேவர்களும் மக்களும் உலகமும் பரம்பொருளென்றும் கூறுவது கூறிய அறிவினாலும் உறுதியாகிய உணர்வினாலும் பயந்ததாகாது அதிக அசங்கதமாகும்:— அல்லெனின் கடவுள் உயிர் என்னும் பதங்களுக்கு வேறுபொருளே உரைக்கவேண்டி வரும். இச்சிறு மொழியைத் திருமூலநாயனாருடைய இரண்டு திருமந்திரங்களை உதகரித்து நிறுத்துவோம். இத்திருமந்திரங்களைத் தவிர நாம் இது காறும் காட்டிய இருபட்ச நிலையும் சம்பந்தத்தையும் நன்கு விளக்கும் வாக்கு பண்டை நூல்களிலேனும் சரி, இற்றை நூல்களிலும் சரி, எந்நூலிலேனும் நம்மவர் காட்டுவாராக.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தின் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற்பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற்பூதம்."

(இங்கு மரமென்றது மரத்தாலாகிய யானைப்பொம்மை)

பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம்
தன்னை மறைத்தது தன்கரணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கரணங்களாம்."

இவ்விரு மந்திரங்களும் ஒன்று போலத் தோற்றினும், வெவ்வேறு பொருளுடையது.

அவற்றை இன்னொரு சமயம் விளக்குவாம்.

ஜே. யம். நல்லசாமி பிள்ளை,
B. A., B. L.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## உனக்கு எது வேண்டும்?

# இன்பமோ? துன்பமோ?

அன்பான நேசனே! ஒருவனால் அநுபவிக்கப்படுவது இன்பமென்றும் துன்பமென்றும் இரண்டிருக்கிறது, இவற்றுள் உனக்கு எது வேண்டும்,

அநேக சமயங்களில் நீ இன்பமென்று கருதித் துன்பத்தையே யடைகிறாய். இந்த உலகத்திலே சரீரத்தோடிருந்து எப்பொழுதும் அநுபவித்து வரும் அநுபவம் இன்பமானதென்று முன்பு நினைக்கிறாய்! பின்பு அது பல அல்லல்களைத் தந்து வருத்துதலால், இன்பமல்ல. இது துன்பமேயாம் என்று அநுபவத்தால் அறிகிறாய் இந்த அநுபவம் உனக்குமாத்திரமல்ல, உலகிலுள்ள எல்லாமாந்தர்க்கும் உள்ளது. ஆதலால், உலகத்தில் உடம்போடிருந்து அநுபவிக்கும் எவையும் துன்பமே யாமென்று நன்றாக உணர்ந்து கொள்ளக்கடவாய்!

இதை அநேகர் உற்றுநோக்குகிறதில்லை. இந்தச்சரீரமே மேலானதொன்றென்னுவர். இதை நன்றாய்ப் பாதுகாக்க வேண்டுமென்பர். அழகாய் உடுக்கவேண்டுமென்பர் தலையிலுங்காதிலும் மூக்கிலும் கழுத்திலும் மார்பிலும் கையிலும் இடுப்பிலும் காலிலும் விரலிலும் இனி யிடமில்லையென்னும்படி நகைபூண வேண்டுமென்பர். அறுசுவையுணவுகளை யுண்ண விரும்புவர். இனியகீதங்களைக் கேட்டுத் திரிவர். மணம்மணம் என்று மோந்து திரிவர். பலநிறப் பொருள்களைப் பார்த்துத் திரிவர். அரிவையர் தம்மைத் தழுவித் திரிவர். மாடமாளிகை கட்டி மகிழ்வர். கட்டில் மெத்தை சாமரை கவிகைகள் வேண்டுமென்பர். விளைநிலம் தோட்டம் தோப்புகள் வாங்கி வாங்கிச் சலியாது மகிழ்வர். குதிரைகள் வண்டிகள் ஆடுமாடுகள் வாங்கித் திரிவர். பொருள் பொருள் என்று பேயாய்ப் பறப்பர். எது வந்தாலும் திருப்தி யுண்டாகமாட்டாது. அன்பனே, இவை



யெல்லாம் இன்பந் தருவனவோ துன்பந் தருவனவோ நன்றாக யோசித்துப்பார். பிறந்த ஒருவன் இறக்குமளவும் இவற்றையெல்லாம் அநுபவித்தாலும் ஆசைக்கு ஒருமுடி வுண்டாவதில்லை. இன்னும் வேண்டும் வேண்டுமென்றே எண்ணுகிறான். இவற்றைத் தேடும்பொழுதும் அநுபவிக்கும்பொழுதும் படும் துன்பத்துக்கு அளவில்லை. எல்லாம் முன்பு இன்பம் போலத் தோன்றினும் பின்பு துன்பமாகவே முடியும்,

இந்த உலகத்திலே துன்பம் அநுபவித்தவரன்றி இன்பம் அநுபவித்தவர் ஆர்; ஒருவருமில்லை. அன்பனே! இதைபற்றி நீ என்ன நினைக்கிறாய்; உன் அநுபவத்தில் எதையாவது இன்பமாகக் கண்டதுண்டோ; உன் வாழ்நாளில் ஒருநாளாவது ஒன்றையாவது இன்பமாகக் கண்டனையோ; எல்லாம் துன்பமாய் முடிகின்றனவன்றோ; நீ மனக்கவலையின்றி யிருந்தது எந்தநாள்? அலைச்சலின்றி யிருந்தது எந்தநாள்? ஓடியோடி உலைந்தலைந்து கண்டமிச்சமென்ன! பட்டதுன்பமேயன்றோ! ஒருநாள் இருநாளா! மரணபரியந்தம் இந்தத்துன்பமானால் ஒருவன் உய்வது எப்படி! இந்தத்துன்பம் ஒருபிறப்பிலா, இதைப்போல எத்தனை பிறப்பெடுத்தாலும் அத்தனை பிறப்பிலும் இப்படியே இருக்குமென்றறிவாயாக, நாம் இப்பொழுது பிறந்திருக்கிறோம், இப்படியே முன்னும் பிறந்திருந்தோம். அப்பொழுதும் இப்பொழுதுமுள்ள துன்பங்கள் போலவே அநுபவித்தோம். அதற்கு முன்னும் பிறந்தோம். அப்பொழுதும் இப்படியேயாம் அத்தோடு நின்றதா, அதற்கு முன்னும் முன்னும் எத்தனையோ முறை பிறந்திறந்தோம், இந்த உலகம் உண்டானபோதே நாமும் பிறக்கத் தொடங்கிக்கொண்டோம். அன்று முதல் இன்று வரையில் துன்பமநுபவித்துக்கொண்டே வருகிறோம். பிறப்பிறப்புக்கு முடிவில்லை நாங்கள் அநுபவிக்கும் துன்பத்துக்கும் முடிவில்லை. இத்தோடு முடிந்துவிட்டதா, இந்தச் சரீரத்தைவிட்டு இறப்பது நிச்சயம்! இறந்தோமானால் மறுபடியும் வந்து பிறந்தே தீர்வோம். மறுபடியும் பிறப்போம்! மறுபடியும் பிறப்போம்! இப்படி இன்னும் எண்ணில்லாத முறை பிறப்போம். இந்த உலகம் உள்ளளவும் பிறவிக்கு ஒரு முடிவு வரமாட்டாது. உலகந் தோன்றிய காலமுதல் அழியுங்காலமளவும் பிறந்திறந்து திரிவது நமது சுபாவமென்று அறிவாயாக. அம்மட்டோ! இந்த உலகம் அழிந்துபோனால் அத்தோடு போய்விடமாட்டாது. மறுபடியும் உலகம் உண்டாகும் இப்படியே முன்னும் எண்ணில்லாத முறை உலகம் உண்டாகி அழிந்துகொண்டு தொடர்பாய் வந்தது. இன்னும் அப்படியேயாம். நாமும் இந்தத் தொடர்பில் அகப்பட்டுக்கொண்டு அவ்வப்பொழுது உலகத்திற் பிறந்திறந்து திரிபவரேயாம் ஆதலால், நமக்கு ஒவ்வொரு பிறப்பிலும் இப்பொழுதுள்ளதுபோன்ற துன்பங்கள் வந்துகொண்டே யிருக்கும். இதற்கு ஒழிவுண்டாகவேமாட்டாது. அன்பனே! உனக்கும் இதுகதியேயாம். அப்படியானால் உன் முடிவு என்ன! இப்படியே துன்பத்தை யநுபவித்துத் திரிவதோ, அல்லது இன்பத்தை யடைய முயல்வதோ சொல்லுதி.

இந்த மண்ணுலகத்தை விட்டு மேலுள்ள சுவர்க்காதிகளை யடைந்தாலும் அங்கும் இப்படியேயாம். அன்றியும், அவை நிலையுடையனவும் அல்ல. நாம் பூமியிற் பிறப்போம், சுவர்க்காதிகளை யடைவோம், மீள இங்குவருவோம், நரகிற் செல்வோம், தேவராவோம், மனிதராவோம், மிருகங்களாவோம், பறவைகளாவோம், ஊர்வனவாவோம், நீர்வாழ்வனவாவோம், மரஞ்செடிகளாவோம், மாறிமாறிப் பல பிறவிகளையும் அடைவோம். நாம் செய்துகொண்ட கன்மம் எப்படியோ அதற்கேற்ற பிறவி வரும் ஆதலால், இனி எந்தப்பிறவி வரும், அதன்மேல் எந்தப்பிறவிவரும், அப்பால் எது வரும் என்று ஒருநியதமில்லை எது வந்தாலும் வரும். எது வந்தாலும் நாம் அதை யடையவே வேண்டும். எந்த உலகத்தில் எந்தப் பிறவியை யடைந்தாலும் அங்கெல்லாம் துன்பமேவரும், இன்பமென்பது ஒருபோதும் வரமாட்டாது. ஆதலால், ஒருவன் இன்பமடைய வேண்டினால், உலகவாழ்விற் சிக்காமலிருக்கவேண்டும், எப்பொழுது பிறவி வராதொழியுமோ அப்பொழுது துன்பமும் வராமலொழியும், துன்பத்தை நீக்குதற்கு உபாயம் பிறவாதிருத்தலேயாம், ஆனால், அது எளிதில் வருமோ, வரமாட்டாது. நாம் கன்மத்தைச் செய்கின்றோம், கன்மமாவது புண்ணியபாவங்கள், ஒருநிமிஷமாவது புண்ணியம் அல்லது பாவத்தைச் செய்யாமல் இருக்கமாட்டோம், இரண்டிலொன்றைச் செய்தேதீருவோம், நாம் கன்மத்தை மனத்தாற் செய்கின்றோம், வாக்காற் செய்கின்றோம், காயத்தாற்செய்கின்றோம், இந்த மூன்றாலும் ஓயாமற் செய்துகொண்டேயிருக்கின்றோம், இதற்கு ஒரு முடிவுமில்லை, கன்ம எற்றத்துக்கு ஒர் அளவுமில்லை. இந்தப் புண்ணிய பாவ கன்மங்களே பிறவிக்கு வித்தாம், வித்து நிலத்தில் விழுந்தபோது மரம் முளைத்தல் நிச்சயமாம், அதுபோல நாம் கன்மத்தைச் செய்தபொழுது அதனாற் பிறப்புண்டாதலும் நிச்சயமேயாம், புண்ணிய கன்மம் மேலே போக்கும் பாவ கன்மம் கீழே தள்ளும், புண்ணிய பாவங்களிற் சிலவகைக் கன்மங்கள் பூமியிலிழுக்கும், இவ்வாறு கன்மவசத்தினாலே நாம் மேலும் கீழும் நடுவுமாகிய மூன்றிடத்தும் மாறி மாறிச் சுழன்றுகொண்டே திரியவேண்டிவரும், ஆதலால், இந்தச் சுழற்சிக்கு முடிவுண்டாகவேண்டும், கன்மம் அற்றால் இதுவும் அறும்; கன்மம் அறுவதென்றால் எளிதானகாரியமோ !

நாம் கன்மத்தை அறியாமை வசத்தாற் செய்கின்றோம். அந்த அறியாமையே அஞ்ஞானமென்று சொல்லப்படுவது. அஞ்ஞானம் ஆணவ மலத்தால் வந்தது. அந்த ஆணவம் நேற்றின்று உண்டானதன்று; அநாதியே செம்பிற் களிம்புபோல நாமுள்ளவன்றே நம்மோடு தொடர்ந்துள்ளது. அந்த ஆணவ மிருக்குமளவும் அஞ்ஞானம் நீங்கமாட்டாது. அது நீங்காதவரையில் நாமும் அறியாமை யுடையவராய்ப் புண்ணியபாவ கன்மங்களைச் செய்துகொண்டே திரிவோம். அதனாற் பிறவி யுண்டாகிக் கொண்டே யிருக்கும். ஆதலால், எல்லாவற்றுக்கும் மூலமாகிய ஆணவ மலவேர் அறவேண்டும். ஆணவமற்றால் கன்மமும் இல்லை, மாயையுமில்லை,



பிறவியுமில்லை, துன்பமுமில்லை, அன்பனே! ஆணவம் மாயை கன்மமாகிய மூன்றையும் ஒழித்தவன்றே சுகம்வரும், இல்லாவிட்டாற் சுகம் வரமாட்டாது, துன்பமே வரும்.

நாம் சிற்றறிவும் சிறுதொழிலு முடையோம். இந்த மல மாயை கன்மங்களை அகற்றிக்கொள்ளத்தக்க வல்லமை நம்மிடத்தில்லை அதுபற்றியே இவற்றின்பால் அகப்பட்டுக் கொண்டு விழிக்கின்றோம். முற்றறிவும் முற்றுத்தொழிலு முடையவர் சிவபெருமான். அவர் தம்முடைய வல்லமையினாலே இந்த மூன்று பாசங்களிலும் அகப்படாது அநாதிமுத்தராயிருக்கின்றார். அவருடைய வல்லமை இந்த மூன்று பாசங்களையும் அகற்றிவிடும், அந்த வல்லமையைச் சிவசத்தியென்றும் அருளென்றும் அறிவுடையோர் கூறுவர் அந்தச் சத்தியாகிய அருளை நாம் அடையவேண்டும். அதை யடைந்தால் அது நம்மிடத்தே தங்கி நின்று நம்மை வருத்தும் மலமாயை கன்மங்களை நீக்கிவிடும். நீக்கினால் இந்தத் துன்பங்கள் பின்புவரா; இதுவே பிறவியை நீக்கி இன்பத்தை யடைதற்கு உபாயமாம். சிவபெருமான் பெருங்கருணை யுடையவர். அவரை நாம் அடைந்தால் தமது சத்தியினாலே நம்மைக் காப்பாற்றுவார், மலமாயை கன்மங்களை நீக்கி நித்தியமான பேரின்பத்தை நமக்குத்தருவார்.

இந்த இரண்டில் உனக்கு வேண்டுவது எது? இன்பமோ துன்பமோ? கூறுதி! இன்பம் வேண்டுமானால் அவனுடைய திருவடியைச் சரணாக அடைகுதி! இதுவே நல்ல மதியாகும்.

அ. பழனிவேலாயுதம் பிள்ளை,
காரைக்கால்.

---

## வடமொழிச் சிவஞானபோதமும், மாறுபட்ட உரையும்.

சைவசித்தாந்த சாத்திரங்களுட் சிறந்த வடமொழிச் சிவஞானபோதத்திற்கு ஸ்ரீமாந் வெ. குப்புசாமி ராஜு அவர்கள் உரையொன்றெழுதி அதனைத் "தத்துவப்பிரகாசிகை" என்னும் பெயரால் வெளிப்படுத்தியுள்ளார்கள். அதைக்கண்ட சைவசித்தாந்திகள், பதி-பசு-பாசம்(கடவுள்-உயிர் கட்டு) என்னும் முப்பொருள்களும் அநாதி நித்தியவஸ்து என்பதை வச்சிரதம்பம்போல்நாட்டும் இச்சிவஞான போதத்திற்குப் "பிரபஞ்சமும்பொய், பிரபஞ்சத்திற்கு உபாதான (முதற்) காரணமான மாயையும்பொய், பிரமம் ஒன்றேயுள்ளது" என்னும் ஏகாத்மவாதக்கொள்கையை மேற்கொண்டொழுகும் ராஜு அவர்கள் உரையெழுதப் புகுந்தது பெருந்தவறேயெனக் கூற, அதனைக்கேட்ட ஏகான்மவாதிகளுள் ஒரு சிலர் "இங்ஙனங் குறைகூறுவது என்னை? ராஜு அவர்கள் இயற்றிய உரையுள் ஒரு தவறேனும் எடுத்துக் காட்டியன்றோ இவ்வாறெல்லாங் குறைகூறுதல் வேண்டும்" எனக் கூறுதலின், இன்னோரன்னர் விருப்பத்தை நிறைவேற்றுதற் பொருட்டாக இச்சிறு

பத்திரிகையில் அடங்கத்தக்க ஓர்சிறு விஷயத்தைமாத்திரம் தொட்டுஸ்தாலிபுலாக நியாயமாக ஒரு சிறிது விளக்குவாம். அது வருமாறு:—

## ஐந்தாஞ் சூத்திரம்.

விந்த்யக்ஷாணி பும்ஸார்த்தாந் நஸ்வயம் ஸோப்பி ஸம்புநா |
தத்விகாரி சிவஸ்யைவம் காந்தோ அயோவத்ஸதா நயேத் ||

(ராஜா அவர்கள் உரை.)

அவதாரிகை. இனி அவ்வாத்மா அறிதலும், சுதந்தரமாயின்றிச் சிவனாலேயறியு மென்பதனைக் கூறுகின்றார்.

பதவுரை. அக்ஷாணி அர்த்தான் பும்ஸா விந்தி — இந்திரியங்கள் விஷயங்களைப் புருஷனாகிய ஜீவனாலறிகின்றன, — ஸ: அபி — அச்சிவனும்— ஸ்வயம்ந — தானே அறிகிறதில்லை, —ஸம்புநா — சம்புவினால், நயேத் — அறிகின்றான் (என்பது முதலியன).

விசேட உரை.

இதனால் இந்திரியவாயிலாகப் புருஷன் அறிவதுபோல் சீவன் வாயிலாகச் சிவனே அறிகின்றான். சீவனுக்குச் சுதந்தரமான அறிவில்லை யென்பது பெறப்பட்டது. அது சூரியன் நேரே பிரகாசித்தற் கேதுவாகாத இருட்டறையிலுள்ள பதார்த்தத்தினை ஒரு கண்ணாடியினது சாயாப்பிரகாச வாயிலாக விளங்குவதுபோலச் சிவன் அவித்தையினால் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை அந்தக்கரண பிரதிபிம்ப சிதாபாஸ வறிவாகிய ஜீவாத்மாவின் வாயிலாக அறிவன் என்பதனால் பொருந்துமாறு காண்க.

ஈண்டு இவ்விசேட உரையில் இந்திரியவாயிலாகப் புருடன் அறிவது போல் சீவன்வாயிலாகச் சிவனே அறிகின்றான் என்கின்றார்களே. இது "அவ்வாத்மா அறிதலும் சுவதந்தரமாயின்றிச் சிவனாலே அறியும்" என்ற அவதாரிகை உரைக்கும் "அச்சீவனும் தானே அறிகிறதில்லை; சம்புவினால் அறிகின்றான்" என்ற சூத்திர உரைக்கும் மாறுபட்ட உரையேயாமன்றோ! யாதினாலெனின், அவதாரிகையும் சூத்திரமும் சிவனாலே சீவன் அறியுமெனக்கூற, விசேடஉரை சீவனாலே சிவன் அறிவன்; எனக் கூறுதலினாலென்க.

இனி, சிவபெருமானுக்கு சுவதந்தரமாய் அறியும் அறிவு இல்லையென்று விளக்கிய இவ்வுரையை இவ்வளவில் விட்டுவிடாது, பிரபஞ்சவிஷயங்களைச் சிவன் சுவதந்தரமாய் அறியாது சீவாத்மாவின் வாயிலாக அறிதற்குள்ள காரணத்தையும் ஓர் திருட்டாந்த வாயிலாக விளக்கியுள்ளார்கள். அதாவது "சூரியன் நேரே ... ... ... ஜீவாத்மாவின் வாயிலாக அறிவன்" என்பதாம். இதனால் சீவனுக்குக் குருத்துவத்தையும் சிவனுக்கு சிஷ்யத்துவத்தையும் சூட்டியுள்ளார்கள் அன்றோ! எவ்வாறெனில்; சிவன் அவித்தையால் மறைக்கப்பட்டு அறியாதிருந்த பிரபஞ்ச விஷயங்களைச் சீவனே சிவனுக்கு அறிவித்ததமையாலென்க என்னை? "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன்" என்றபடி (பிரபஞ்ச விஷயங்களை) அறிவித்த சீவன் குருவாதலும் அவனாலறிந்த சிவன் சிஷ்யனாதலும் ஏற்புடைத்தாகலின்.



இனி, இவ்வுரையின் கண்ணே "சிவன் அவித்தையினால் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை அந்தக்கரண பிரதிபிம்ப சிதாபாஸ அறிவாகிய சீவாத்மாவின் வாயிலாக அறிவன்" எனக் கூறுகின்றார்களே; இவ்வவித்தையும் அந்தக்கரணமும் சடப்பொருளாமன்றோ! இவர்கள் கொள்கையின்படி சஜாதீய, விஜாதீய, சுவகத பேதரகிதமான பிரமம் ஒன்றே உள்பொருளாகவும், விஜாதீயமான சடப்பொருள் எங்கேயிருந்து முளைத்தது? அதிலருவப்பொருளாகிய பிரமம் எவ்வாறு பிரதிபிம்பித்தது? அந்தக்கரண முதலிய சடகாரிய உலகிற்கு அநாதி நித்யமான சடப்பொருளொன்று குடத்திற்கு மண்போன்று முதற்காரணமா யிருத்தல் வேண்டுமன்றோ! அங்ஙனமின்றிச் சித்துப்பொருளான பிரமத்தினின்றும் சடப்பொருளான பிரபஞ்சந் தோன்றுமென்பது அசம்பாவிதமேயாம்.

இனி, பிரமம் சர்வவியாபகப் பொருளாதலானும், அதற்கன்னியமாக வேறுபொருள் இருத்தற் கிடமின்மையானும், பிரமப் பொருளினின்றே பிரபஞ்சப்பொருள் தோன்றுமெனக் கொள்ளவேண்டுமெனின்; வேண்டா. என்னை? ஓர் உருவப்பொருள் இருக்குமிடத்தில் வேறுமோருருவப் பொருள் இருத்தல் கூடாதேயன்றி ஓர் அருவப்பொரு ளிருக்குமிடத்தில் மற்றுமோர் அருவப்பொருள் இருத்தல் கூடாதென்றாவது உருவப்பொரு ளிருத்தல் கூடாதென்றாவது கூறுதலடாதாகலின். ஆகவே பிரமம் சர்வ வியாபகப் பொருளாயிருப்பதுபற்றி அதினின்றே சடப்பொருளாகிய பிரபஞ்சம் தோன்றுமென்பது அசம்பாவிதமேயாமெனத் துணிக.

இன்னும், ஓர் வியாபகப் பொருளிருக்கு மிடத்தில் மற்றுமோர் அருவப்பொருளும், உருவப்பொருளும் இருத்தல் கூடுமென்பதனை, ஆகாயத்தினிடத்து வாயுவாகிய அருவப்பொருளும், மண்ணாகிய உருவப்பொருளும் இருத்தல் கண்டு தெளிந்திடுக.

இனி, சர்வவியாபகம் என்பதின் பொருள்தான் என்னை? ஓர் வியாபகப்பொருள், மற்றும்பல வியாப்பிய வியாத்திப்பொருள்களை வியாபித்திருத்தல் என்பதேயன்றோ! அற்றாக, சர்வவியாபகப் பொருள் இருக்குமிடத்து மற்றுமோர் பொருளிராதெனக் கூறுவது எவ்வாறுபொருந்தும்? சற்றும் பொருந்தாதென விடுக்க.

ஆகவே, சித்துப்பொருளாகிய பிரமத்தினின்றே பிரஞ்சமாகிய சடப்பொருள் தோன்றுமெனக் கூறுவது, உலகாயதரென்னுந் தேகான்மவாதிகள் ப்ருதிவிமுதலிய நாற்பூதக்கலப்பான சடதேகத்தினின்றும், சித்தாகிய தேகி (ஆன்மா) தோன்றுமெனக் கூறும் நாஸ்திகக்கூற்றேபோல்வ தொன்றன்றிப் பிறிதன்றெனத் தெளிக.

இங்ஙனமாக, இவ்விரு கொள்கையினரும் இன்னும் பலவகையிலொற்றுமையுடையராகவே காணப்படுகின்றனர். எவ்வாறெனின், இவருள் தேகான்மவாதிகள், வேதசிவாகமங்களால் வரைசெய்துணர்த்தும் அநாதி நித்தியப்பொருள்மூன்றில் பாசப்பொருள் ஒன்றையே வுளதெனக்கொண்டு

பசுப்பொருள் பதிப்பொருள் இரண்டிற்கும் நாத்திகூறுவர்; ஏகான்மவாதிகள் இப்பொருள் மூன்றில் பதி பிரமப் பொருள் ஒன்றையே உளதெனக்கொண்டு பசுப்பொருள் பாசப்பொருள் இரண்டிற்கும் நாத்திகூறுவர். தேகான்மவாதிகள் நல்வினை, தீவினை, புண்ணியபாவம், சுவர்க்கநரகங்களைப் பொய் என்பர்; ஏகான்மவாதிகளும் இவைகளைப் பொய்யென்றே கூறுவர்.

இதனைக் கந்தபுராணத்தில் சுக்கிராசாரியர் சூரபத்மனுக்கு உபதேசித்த ஏகான்மவாதக் கொள்கையினின்றும் தெளிந்திடுக.

இங்ஙனம் உள்பொருள்மூன்றில் இரண்டுபொருள்களை இல்பொருளெனக் கூறுவதிலும், புண்ணியபாவாதிகளை இல்லையெனக் கூறுவதிலும் இவ்விரு கொள்கையினரும் ஒற்றுமையுடையராயிருப்பவும் இவருள் ஒருகொள்கையினரை நாத்திகர் எனவும், மற்றொரு கொள்கையினரை ஆத்திகரெனவுங்கொள்வதற்குக் காரணம் யாதோ அறிகிலம்! உள்ளதை இல்லதெனக் கூறுங் கொள்கையெல்லாம் நாத்திகக் கொள்கையேயாமெனத் துணிக.

இன்னும், பிரபஞ்சகாரியத்திற்குப்பிரமத்தை உபாதான காரணமாகக் கொள்ளின், உபாதானகாரணப் பிரமத்தைப் பிரபஞ்சமாகக் காரியப்படுத்தும் வினைமுதலாக வேறுமோர் பிரமம் வேண்டப்பட்டுத் துவித பிரமங்கள் (இரண்டு பிரமங்கள்) சித்தித்து இவர்கள் ஏகான்ம வாதத்தைத் துவிதப் பிரமவாத மாக்கிவிடுமெனத் துணிக.

இனி, இவ்வாறெல்லாங் கூறுவதென்னை? ஓர் சிலந்திப்பூச்சியானது நூலாகிய காரியத்தைத் தன்னிடத்தினின்றும் தானேயுண்டாக்கி அக்காரியத்திற்குத் தானே நிமித்தோபாதானகாரணமா யமைதல்போலப் பிரமமும் பிரபஞ்சமாகிய காரியத்தைத் தன்னிடத்தினின்றும் தானேயுண்டாக்கி இக்காரியத்திற்குத் தானே நிமித்தோபாதானகாரணமாய் அமையுமெனின்; அமையாது. எதனாலெனின்? சிலந்திப்பூச்சி நூலை யுண்டாக்கியது தனது தேகமாகிய சடப்பொருளினின்றேயன்றி, தனது ஆன்மாவாகிய சித்துப்பொருளினின்றன்றாகலான். இத்திருட்டாந்தமும் நிமித்தகாரணப்பொருள் வேறு, உபாதான காரணப்பொருள் வேறு என்பதையே காட்டிவிட்டமையாலென்க. ஆகவே ஏகாத்மவாதிகள் கூறும் நிமித்தோபாதான காரணவாதம் சுருதி, யுக்தி, அநுபவங்கட்கு முற்றும் விருத்தமானதெனவும், சைவசித்தாந்திகள் "காரணகாரியங்கள் முதல்துணை நிமித்தங்கண்டாம், பாரின்மண் திரிகைபண்ணுமவன் முதல் துணைநிமித்தம், தேரின்மண் மாயையாகத் திரிகைதன் சத்தியாக, ஆரியன் குலாலனாய் நின்றுக்குவன் அகிலமெல்லாம்." என, அதாவது ப்ரபஞ்ச காரியத்திற்கு அநாதி நித்தியப் பொருளான மாயையைஉபாதானகாரண மெனவும், சிவசத்தியைத் துணைக் காரணமெனவும், சிவனை (பிரமத்தை) நிமித்தகாரணமெனவும் கூறும் பரமாதார நிமித்தகாரணவாதமே சுருதியுக்தி அநுபவங்கட்குமுற்றும் பொருத்தமாமெனவுங் கொள்க.

இனி இவ்வாறாகவெல்லாம் பிரமப்பொருளினின்று பிரபஞ்சப்பொருளுண்டாகுமெனவும், பிரமம் அதற்கு நிமித்தோபதான காரணமாயிருக்கு



மெனவும், மற்றும் பலவாறாகவும் கூறுவது, வியவகாரிகதசையிலன்றிப் பாரமார்த்திகதசையில் உண்மையில் இன்றாம். உண்மையில் இவையாவும் மித்தையேயாமெனில்; உலகத்தை மித்தையென (பொய்யென) க்கொள்ளவே இவ்வுலக காரியப்பாட்டின் சாட்சியத்தைக்கொண்டு, உண்டெனத் துணியப்பட்ட பிரமமும் மித்தையாய், அதனை யடையக்கருதி ஏகாத்மவாதிகள் செய்யும் சாதன சதுஷ்டயங்களும் மித்தையேயாய், அதனைக்கூறும் சுருதிகளும் மித்தையேயாய் அதனை உபதேசஞ்செய்யும் ஆசாரியரும், உபதேசமும் மித்தையேயாய், உபதேசத்தைக்கேட்கும் மாணக்கரும் மித்தையேயாய் முடிந்து, முத்தியடைதற்காக யாரும் எம்முயற்சியுஞ் செய்ய வேண்டுவதின்றெனத் துணிவிக்குமாதலின் இவ்வாறு கூறுவதும் நாத்திகக் கூற்றேயாமெனத் துணிக.

இனி. மேற்கூறியவாறு அவதாரிகைக்கும் சூத்திர உரைக்கும் மாறுபட்டதாகவும், மற்றும் பல ஆசங்கைகட்கு இடந்தரத்தக்கதாகவும் ராஜ— அவர்கள் கூறிய வடமொழிச் சிவஞானபோத உரையை ஸ்ரீமாந். பண்டிதர் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் "சுருதியர்த்தத்தைச் செவ்வேவிளக்கி, வருதலினது தான் மனமறு நெறிபெற. விழைவோர் தமக்கு விருந்துபோல்வதாம்" எனவும். தழைசெறிகடுக்கைத் தண்ணருளாளன், அருணெறி காட்டு மற்புதத் தீபமாமெனவும் புகழ்ந்து போற்றியதும்,

"முந்நூல்கண் முழுதுணர்ந்த மெய்கண்டார்போ லொருநூன்முற்றுவானு
தன்னேரில் சிவஞான முனிவரர்போ லொருரையைத் தரவல்லானு [ந்
மிந்நூலுக் கொப்பதொரு நன்னூலுமிந்த மகாபாடியம்போ
னன்னுவலர்போற்று பாடியமு நாநிலத்தி லில்லையில்லை."

என அறிஞராற் கொண்டாடப்பட்ட ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகளுரையை மற்றையோர் உரையோடுசேர்த்து "சிவஞானபோதமதற்குப் பொருளறியாம, லேதம்நிறைய வியற்றினர்பலர்" எனவும் "அவ்வுரைமக்கட்காணாது வெவ்வியதீமை விளைத்துவருவ" தெனவும் இகழ்ந்து தூற்றியதும் அம்மம்ம! கொடிதினுங் கொடிதே.

இனி இவ்வாறாகத் திராவிடமாபாடிய கர்த்தராகிய சிவஞானசுவாமிகள் உரையை, வெவ்வியதீமை விளைத்துவருவதெனக் கூறுவதற்குங் காரணமுண்டு. அதாவது; சிவஞானபோதத்திற்குச் சுவாமிகள்செய்த சிற்றுரையும் திராவிடமாபாடிய மென்னும் பேருரையும் வெளிப்பட்டு அநேக ஏகாத்மவாதிகளைச் சைவசித்தாந்திகளாக்கி ஏகான்மவாதக் கொள்கைக்குவெவ்விய தீமைவிளைத்தும், சைவசித்தாந்த கொள்கைக்கு செவ்விய நன்மை விளைத்தும் வருவதேயாம்.

ஏனைய பகுதிகட்கும் விரிந்த மறுப்பு புத்தகரூபமாக வெளியிடப்படும்.

தெ. ச. சுப்பிரமணிய பிள்ளை,
சைவசித்தாந்தசபைக் காரியதரிசி, தூத்துக்குடி.

## சமாச்சாரங்கள்.

பெங்களூர் தண்டு சித்தாந்த வகுப்பு—இவ்வகுப்பில் மேமீ 12, 13உ களில், சித்தாந்தசரபம்–அஷ்டாவதானம்–ஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் அனேக தமிழுபந்யாசங்களும், திவான்பகதூர் K. P. புட்டண்ண செட்டியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஆங்கிலேய உபந்யாசமும் நடந்தேறியன.

இச்சித்தாந்த வகுப்புத்தாபகராகிய ஸ்ரீமான் V. S. ஆறுமுக முதலியாரவர்கள் இவ்வருடம் வெளியிட்ட Tract No 10-ல் அடியில்வருமாறு எழுதியிருக்கின்றனர். "சித்தாந்த பத்திரிகையை ஆதரிப்பது ஒவ்வொரு சைவரின் அத்தியாவசியகமான கடமையாகும். அதற்கோர் மறுவுசொல்லிக்கொள்ள விரும்பம் அதாவது விருப்பமுள்ள பெங்களூர் நேயர்கள் ஒவ்வொருவரும் இச்சித்தாந்த வகுப்பின் ஆதரவிற்கு மாதம் ஆறணாவிற்குக் குறையாமல் சந்தாசெலுத்திவந்தால், ஒவ்வொருவருக்கும், "சித்தாந்தம்" என்னும் பத்திரிகை தருவித்து இலவசமாகக் கொடுக்கப்படும். இந்த விதமாகச் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்துக்கு நம்மூரார் உதவி செய்வது சுலபமாகும்."

திருமங்கையம்பதி (பேட்டை) சைவசமய சன்மார்க்க சங்கம்—இச்சங்கத்தில், மேமீ 13, 14உ களில், மதுரை பிரமஸ்ரீ கலியாணசுந்தர பட்டரவர்கள் தலைமையின்கீழும், 15உ மறைத்திருவள்–விருதை சிவஞான யோகிகள் தலைமையின்கீழும் நான்காவது யாண்டு நிறைவுவிழா கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ வில்லிபுத்தூர் சைவ சித்தாந்த சபை—மேமீ 7, 8உ களில், ஆண்டிபட்டி ஜமீன் ஸ்ரீமான் S. R. M. M. Ct. பெத்தாச்சி செட்டியார் R. A. S. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்மூன்றாவது ஆண்டு நிறைவிழா கொண்டாடப்பட்டது.

சைவசித்தாந்த மகாசமாஜம்—இச்சமாஜத்தினர் ஏப்ரல்மீ 30உ, மேமீ 4, 26உ களில் சென்னை மயிலாப்பூர் பிள்ளையார் தோட்டத்தில் முறையே ஆசிரியர் மாதவச்சிவஞான முனிவரர், உமாபதிசிவாசாரியர், தெய்வச் சேக்கிழார் இவர்கள் திருநட்சத்திரங்களைக் கொண்டாட, சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சிகாமணிகள் பலர் பற்பல மகோபந்யாசங்கள் செய்தனர்.

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கம்—இம்மாதம் 19, 20உ களில் இச்சங்கத்தினர் தெய்வச்சேக்கிழார் திருநட்சத்திரந் தன்று அவர் அவதாரத்தலமாகிய குன்றத்தூர்ச்சென்று அங்கு அவர் மகோற்சவங்கொண்டாடி, திருநாகேச்சுரம், கோவூர் தரிசனஞ்செய்து ஆங்காங்குத் தேவாரபாராயணம், சைப்பிரசங்க முதலியன நடத்தித் திரும்பினர்.

JUL 1917 MADRAS

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௬.] 1917ஸு ஜூன்மீ [பகுதி ௬.

## சாந்தோக்யோபநிஷத்து

### நான்காம் பிரபாடகம்.

### கண்டம் ௧.

பவுத்ராயனர் என்கின்ற ஜானசுருதி எனுமொரு அரசன் சிரத்தையுடன் தானஞ்செய்தும், போஜனம் பண்ணுவித்தும், பலசத்திரங்கட்டிவைத்தும் வந்தனன்.

௨. ஒருநாள் முனிவர்கள் அன்னவடிவங்கொண்டு அவ்வரசன் உபரிகையின் மேலிறங்கினார்கள். அப்போது ஒரு அன்னம் மற்றொரு அன்னத்தைப்பார்த்து, பல்லாட்ச! சுவர்க்கத்திற்குச் சமானமான ஜானசுருதியாசனின் ஜ்யோதியில் சம்பந்தப்படாதே அஃதுன்னைத் தகித்துவிடுமென்றது.

௩. பலாட்சன், நீ யாரைப்பார்த்துச் சொல்லுகிறாய், ஸயுக்வான் என்கிற ரைக்வனைப்பற்றிச் சொல்லுவதுபோல இந்த வற்பவரசனைப் புகழ்ந்து பேசுகிறாயென்றது.

௪. அந்தரைக்வான் எவன் அவன் எத்தகையன் என்று கேட்க அன்னம் கூறியது. ரைக்வர் நடத்தும் தருமங்களில் உலகினர் செய்யுந் தருமங்களெல்லா மடங்கும். அவருடைய அறிவில் மற்றைய ரறிவெல்லா மடங்கும் என்றது.

௫. இதனைக் கேட்டுக்கொண்டிருந்த ஜானசுருதி யெனுமரசன் படுக்கையை விட்டெழுந்திருந்து சாரதியை யழைத்து ரைக்வரென்னும் முனிவரை யழைத்துவா வென்றனன்.

௬. சாரதி தேடிப்பார்த்து அவரைக்காணமல் திரும்பி வந்தனன். எங்குப் பிராமணருளரோ அவ்விடத்திற் றேடிப்பா ரென்றனன் அரசன்.

௭. மறுபடியும் தேடிக்கொண்டுபோனபோது அம்முனிவர் ஒருவண்டியின்கீழ் சொறிகளைச் சொறிந்துகொண்டு உட்கார்ந்திருந்தனர். அவரைக்கண்டு ஐயா? நீர்தானு ரைக்வர் என்றனர். அதற்கு அவர் நான்தான் நீ தான் என்றனர். சாரதி இவர்தான் ரைக்வர் என்று தெரிந்துகொண்டு திரும்பி வந்தான்.

## கண்டம். ௨.

உடனே அரசன் அறுநூறு பசுக்களையும், ஒரு ஹாரத்தையும், ஒரு இரதத்தையும் எடுத்துக்கொண்டு முனிவரிடம் சென்றனன்.

௨. அரசன் முனிவரைநோக்கி ஐயா! இவைகளை நீ பெற்றுக்கொண்டு நான் உபாசிக்கவேண்டிய தேவதையையுபாசியு மென்றனன்.

௩. ரைக்குவர், அடே சூத்திர! இவையனைத்தும் உன்னிடத்திலேயே யிருக்கட்டும் என்றனர். மறுபடியும் அரசன் ஆயிரம் பசுக்களையும், ஒரு ஹாரத்தையும், தன் பெண்ணையும் அழைத்துக்கொண்டு அவரிடம் சென்றனன்.

௪. முனிவரே! இவையனைத்தையும் தாங்களேற்றுக்கொண்டு உபதேசஞ் செய் என்றனர்.

௫. முனிவர் அப்பெண்ணின் முகத்தைநோக்கி, மற்றவைகளையும் கிரகித்துக்கொண்டு, இவற்றின் மூலமாக என்னைப்பேசும்படி செய்தனை. நான் வாழும் இக்கிராமம் ரைக்வபாறு வெனப்பிரசித்த பெயருண்டாகக்கடவதெனச் சொல்லி யுபதேசிக்க ஆரம்பித்தனர்.



## கண்டம். ௩.

வாயுவேசவர்க்கம், எப்போது அக்கினி அணைகிறதோ அப்போதுவாயுவைச் சேருகிறது. சூரியனும் சந்திரனும் அஸ்தமிக்கும்போது அவை வாயுவை யடைகின்றன.

௨. ஜலம் வற்றும்போது வாயுவையே சேருகிறது. வாயுவை இவற்றை யெல்லாமிழுக்கிறது இது தைவதம்.

௩ இனி அத்யாத்மம் பிராணன், தூங்கும்பொழுது வாக்குப்பிராணனையே சேருகிறது, சட்சு, சுரோத்திரம், மனது இவைகளும் அங்ஙனமே.

௪. இந்த இரண்டு சம்வர்க்கங்களாகிய வாயுவும் பிராணனும் தேவர்களிடத்திலும் இருக்கின்றன.

௫. பிறகு சௌனகர் என்றகாபேயர் அபிப்ரேதாரின் என்ற காட்சஸேனி இவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள் அப்போது ஒரு பிரமசாரி பிச்சைக்கு வந்தான். அவனுக்குப் பிட்சை போடவில்லை.

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோயில்.

“ நினைப்பவர் மனமே கோயிலாக் கொண்டவர்.”

“ ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா யேகமாகிப் பெண்ணும்மா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி ”

“ கற்பனை கடந்த சோதி கருணையே யுருவுமாகி
அற்புதக் கோலநீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துண்ணின்று
பொற் புடனடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.”

குன்றாத வுருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே மாயை யெனும் திரையை நீக்கி
நின்னையா றறிய வல்லார் நினைப்போர் நெஞ்சம்
மன்றாக இன்பக் கூத்தாடவல்ல
மணியேயென் கண்ணே மாமருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோனஞான
மமைத்த சின்முத் திரைக் கடலே யமா ரேறே.

மேற்காட்டிய பாடல்கள் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்துள்ள திருக்கோயிலையும், அதன் ரகசியத்தையும் பற்றியது. நம்முடைய வேதவேதாந்தங்களையும் சாத்திரங்களையும் அறவே இழந்துபோனாலும் இத்திருக்கோயில்களாலும் அதிலிருக்கின்ற திருச்சின்னங்களாலும், நம்முடைய ஞானத்தையும் ஆசாரத்தையும் மீண்டும் உண்டாக்கிக் கொள்ளலாம். அந்த ரகசிய



ங்களைத் திறக்கும் சிறுதிறவு கோவில் நம்கையில் அகப்படின் என நாம்
வேறு இடங்களில் குறிப்பிட்டிருக்கிறோம். அநந்தகோடி மதங்கள் தங்
கள் தங்கள் மதமும் தெய்வமும் ஞானமுமே அதிபூர்வமென்றும் உண்மை
யென்றும் கூறிக் கதறும் இக்காலத்தில் நம் கோயில்களில் உள்ள ரகசியத்
தை நாம் சரியாய் உணரின், எதுதான் உண்மையான மதம் எதுஉண்மை
ஞானம் எதுபழையது என எளிதில் சோதித்து உணர இடந்தரும். ஆனால்
நம்முடைய நாட்டின் துர்பாக்கிய மென்னவெனில், எல்லா மதஸ்தரும்,
தங்கள் தங்கள் வேறுபடும் கொள்கைகளுக் கெல்லாம், ஒரேவிதமான சுரு
திப்பிரமாணங்களை ஆதாரமாகக்கொண்டு கையாண்டு வருவதிலும், அவர்க
ளுக்குச் சரித்திர ஞானம் போதாமையால் எதுதான் பழையது எதுதான்
புதியது என உறுதி செய்யும் ஞானமில்லாமலிருப்பதினாலும், சரித்திர
ஆராய்ச்சிக்குச் சரியான ருசுக்கள் இல்லாதிருப்பதினாலும், இவர்கள் உரை
யில் எதுதான் உண்மை எது பொய்யென உறுதி செய்வது கடுமையாயிரு
க்கின்றது. இத்தருவாயில் நாம் மேலே காட்டிய விசாரணை நல்லவழி
யாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. மேலும் சுருதிப்பிரமாணங்களை
அர்த்தம் செய்யும்போது, மொழிகள் சங்கட மில்லாமல் விளங்குமாயின்,
அந்தச் சுலபமான பொருளைவிட்டு அபார்த்தம் செய்வது அடாதாகும்;
மொழி மயக்கந்தருவதாயிருப்பின், வேறுவிதமான ஆதரவைக்கொண்டு
அதன் உண்மையினை விளக்கலாம். மேலும், ஒரு விஷயத்தைப்பற்றி விசா
ரிக்கும்போது, வாய்மொழி ருசு எவ்வளவும் போதாதா யிருப்பது யாவருக்
குந் தெரிந்தது. தஸ்தாவேசு சாட்சியாயிருப்பின், அதுவும் பழைய தஸ்
தாவேசா யிருப்பின், உண்மையை எளிதில் கண்டுபிடிக்க இயலும். இன்
னும், நடந்த சங்கதியைப்பற்றிப் பத்துபேர் பார்த்தவர்களை விசாரிக்கும்
போது, பலவிதமாய் ஏற்படும், அவர்கள் உண்மையை உரைப்பவர்களாயி
னும், புகைப்படம் எடுப்பின் நடப்பு விஷயம் உண்மையாய் விளங்கும்.
ஆகையால் நாம் மேல்காட்டிய சோதனை பழைய தஸ்தாவேசாகவும்,
சரியான புகைப்படம் எடுக்கும் கருவிபோலும் உண்மையினை விளக்கு
வதாகும். இதன் உண்மை, பூர்வீகர்களுடைய பாஷையே, படக்குறி
ப்புகளாலாகிய தென்பதை உணரின் இன்னும் போதரும். பழையபா
ஷைகளாகிய சுமெரியன், சால்டியன், இஜிப்ஷியன், சீனபாஷைகளனை
த்தும் படக் குறிப்பு பாஷைகளாகவும், இவர்கள் தங்கள் அதிமேலான
சமய சாஸ்திரக்கருத்துக்களைப் படங்களிலும், பதுமைகளிலும் கோயில்
கோபுரங்களிலும் அமைத்துள்ளார்களென்பது யாவருக்கும் தெரிந்ததே.

ஆகவே நாம் எடுத்துக்கொண்ட பரமரகசியத்தை விளக்கப்புகுமுன், அதன் நன்மையையும், நம் நொய்மையையும் கருதியவ்வழி நம்மால் ஒரு போதும் இயலாதெனினும், நம் சேக்கிழார்பிரான் அருளிய வண்ணம்,

"அளவு கூட வுரைப் பரிதாயினும்
அளவிலாசை துரப்ப அறைகுவேன்"
பேராசை பிடர் பிடித்துந்த
பின் வருமாறு வரைய லுற்றேன்.

அப்படி வரையுமுன்னர், இருதிறத்தாருடைய அவலக்கூற்றைஎடுத்துப்பேசுவது அவசியம். ஒருவர் இதெல்லாம் மதவாதமென்றும், (Sectarianism) மற்றொருவர் மதமறுபிறப்பின் மருள் (Revivalism) என்றும் கொள்வர். இவ்விருதிறத்தாருள்ளும் கன்னியமுள்ள சிலருள்ளாராயினும், பெரும்பாலார் பகருவது வெறும்பகட்டே. அவர்களுக்கு இதிலாவது அதிலாவது விசுவாசமில்லை. விஷயங்களை விசாரித்தறிய வேண்டுமென்கிற விருப்பமு மில்லை. அவைகளின் உண்மையை அறியவேண்டுமென்கிற உறுதியுமில்லை அவர்களே கொடிய மதவலையுள் சிக்கிக்கொண்டிருப்பதில், தாங்கள் சிக்கிக்கொண்டிருக்கிறோமென்கிற அறிவுமில்லை. தாங்கள் கொண்டதே கொள்கையென அகங்கரித்து மற்றெல்லாம் செத்தையென வொதுக்கி, ஒருவார்த்தையோ, தொடரோ அதைப்பற்றி குதர்க்கம் செய்து நிலைக்கிளப்பி எதிரிகளின்மேல் துகளைப் பூசுவதே அவர்கள் முக்கிய நோக்கம். எவற்றையும் இகழாமல், அவற்றின் உண்மையை அறிதலே நோக்கங்கொண்டு ஐயப்படும் பட்சம் நாம் மிகவும் அங்கீகரிக்கின்றோம். மனப்பூர்வமாக எவரையும் புண்படுத்த வேண்டுமென்பதில் நம்முடைய நோக்கமன்று. நம் தாயுமானசுவாமிகள் கூறிய வண்ணம்,

"பகர்வரிய தில்லை மன்றுட் பார்த்த போதங்கு
என்மார்க்க மிருக்கு தெல்லாம் வெளியே யென்ன
எச்சமயத் தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்."

அப் பொதுமன்றின் ரகசியத்தை யன்றோ நாம் ஈண்டு விசாரிக்க லுற்றோம்.

அவ்விடம் பரவெளியைத் தவிர வேறொன்றும் காணேமென்று யாவரும் கைகூப்பித் தொழா நிற்குமிடமன்றோ?



"சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமய சங்கேதப் பொருளும் தானொன்றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை."

என நம்சுவாமிகள் வேறுபடும் எல்லாமார்க்கங்களிலுமுள்ள எல்லாப்பொருளும் ஞானமும் ஒன்றாய்க்காணப்படும் சமயம் இதன்றி வேறின்று என சாதித்தாரன்றோ?

மேலும், நம் சுவாமிகள் அருளியபடி

"கன்மார்க்க நெஞ்சமுள எனக்குந்தானே
கண்டவுடனே ஆநந்தம் காண்டலாகும்."

என்றும் எவரேனும் அத்திருச்சிற்றம்பலத்தை ஒருக்காலேனும் தரிசித்தால் அப்பயன் பெறலாம். அன்புடையவர்களன்றி, சுத்த நாத்திகராயினும் அக்கோயிலைக் கண்டவுடன் ஆநந்தம் காண்டலாகுமென்றது சுத்த நாத்திக மதப்பிரவர்த்தகராகிய ஜைமினி பகவானும்கூட அச்சிற்சபையை நோக்கினவுடனே இருள் நீங்கி இன்ப மெய்தி வேத பாதஸ்தவம் என்னும் தோத்திரத்தை விளம்பினாரென்று யாம் கேட்கவில்லையா? ஆயிரக்கணக்காக அநேக திருக்கோயில்கள் எங்கும் உளவேனும், எல்லாருடைய மனமும் இம்மத்திய க்ஷேத்திரத்தை உவந்து நாடுகின்றதன்றோ? மேலும் சிதம்பரம், இந்தியாவின் (இவ்வகையுள்பட) மத்தியிலிருப்பதாகவும் நம்பப்படுகிறது. அண்டத்தையொப்ப, பிண்டத்திலும், இடை பிங்கலை நாடிக்கு மத்தியாக சுழுமுனைஸ்தானமாகவும் இது ஏற்படுகிறது. இருதயகமலமும், உடலில், உயிருக்கும், ஒளிக்கும் வெப்பத்துக்கும் காரணபூதமாகவு முள்ளது. அதுவும் எல்லா உடற் கூறுகளிலும் மிகவும் நுட்பமான உயிர்ஸ்தானமாயு முள்ளது. மற்றெல்லாவுறுப்புகளும், இவ்விருதயத்தின் ஏதுவினால் வளர்க்கப் படுகிறது. மற்ற உறுப்புகள் வெளியிலிருப்பதால் உறும் தீங்கினின்றும் காப்பாற்றப்படுகிறது. ஏனெனின், மற்றெந்த கூறுகளுக்குத் தீங்குநேரிடினும், ஒருவன் உயிர்த்திருக்கலாம். இருதயத்துக்குத் தீங்கு நேரிடின் உடனே உயிர்போம். மேலும் களங்கமில்லாத அன்புக்கும் இருப்பிடம் இதுவன்றோ? தீரம், இரக்கம், அருள் முதலியஅன்பின் கூறுகள். இவ்வுன்னத அன்பின்பின் மற்றெதுவும் நிலைநிற்குமோ? மூளையைத் தாரகமாயுள்ள அறிவெனின், இல்லையென உறுதிகூறுவோம். இருதயத்துக்கு கொஞ்சம் ஊனம் ஏற்படினும், மூளைவலியற்றுப்போம். இருதயத்தின் சுருங்கல் விரிதலுக்கு ஏற்ப மூளையுமே அசை

வதும், மற்றெல்லா வுறுப்புகளும் மூளையுடனும், ஒய்வுறும்' போதும், இருதயத்துக்கு ஒய்வு எப்போதுமில்லை. அதுபோலவே, அன்பினால் என்னதான் உயிர்பெறாது? அழி உள்ளத்துக்கு உயிர்ப்பும், அபலர்க்கு பலமும், தளர்ந்தவர்க்கு தயிரியமும் கொடுப்பதுடன், அன்பினால் அதியற்புதமாய் அறிவின் நிகழ்ச்சி நடந்ததையும் நாம் கேள்வியுறுகிறோம். உலகமே அன்பினால் கட்டுப்பட்டிருக்கிறதே யொழிய அறிவினாலல்ல. பண்டிதை ஹம்பிரி வார்ட் மாதரசி தம் ‘ராபர்ட் எல்ஸ்மியர்’ என்னும் கதையில், ஒரு அறிஞனுக்கும் அன்பனுக்கும் உள்ள வேற்றுமையைக் காட்டியிருப்பதை கவனிக்கற்பாலது. அதில் அறிஞன், உலகையே உறவாக்கும் அன்பின் ஒரு சொட்டுக்காக அவன் அகங்காரத்தினால் வெளியிடக் கூடாமல் உள்ளம் அழிந்ததை அறியவும். இவ்வுள்ளத்தில்தான் அச்சமயத்தவரும் இறைவனுக்கு உறைவிடம் கட்டி மகிழ்கிறார்கள். அவ்வுள்ளம் நிர்மலமாயிருக்க வேண்டியதுதான் ஒன்று. நிர்மலமான அந்த க்ஷணமே அகளமாயுள்ள ஆகாசத்தினின்றும் நீளமாகிய ஒளி நம்மிருளைக் கடிந்து அருளைப்பெறச்செய்யும்.

“வெளியான நீ என்மன வெளிபூடு விரவினையால்
வொளியாரு மென்கண்ணுமிரவியும் போலின்று லாவுவன் காண்.”

இயேசுநாதரும், “நிர்மல இருதய முள்ளவர்கள் அருட் பெருக. ஏனெனின், அவர்களன்றோ இறைவனைக் காண்பார்கள்” என்றார்.

“பரமவியோமத்தில் (இருதயக்) குகையில் ஒளித்திருக்கும், சத்தியம் ஞானம் அநந்தமாகிய பிரமனை அறிந்தோர் சர்வஞ்ஞனாகிய பரனோடு ஒன்றாய் எல்லா நலங்களையும் பெறுகிறான்” என்று அவர்க்குமுன்னமே தைத்திரிய உபநிடதமும் அறையவில்லையா? பண்டைமறையாகிய சாந்தோக்கியமும் பின்வருமாறு கூறிற்று.” தேடி அறியவேண்டுவது எது ஒன்று எனவும் தேடும் போதும், அதை எப்படி அறிவது எனவும் தெரிய விரும்பினாய்? கேள்! பிரமபுரம் (உடல்) ஒன்றுளது. குஹ்யமாகிய தகர புண்டரீக வீடொன்றுளது அதில் அந்தராகாசமுளது. அந்த ஆகாசத்திலிருப்பது அதைத்தான் நாம் தேடவேண்டும். அதைத்தான் நாம் அறியவேண்டும்.”

“இந்த ஆகாசம் எவ்வளவு அகலமோ இருதய ஆகாரமும் அவ்வளவு அகலம் வானும் உலகும் அதில் அடங்கிற்று. காலும், கனலும், சூரியனும், சோமனும், மின்னும் மீனும், அவன் கூறாகி உலகில் உள்ள எதுவும், அது வல்லாததும் இவையெல்லாம் அதில் அடங்கிற்று.” (சாந்தோ—VIII. 1-23),



இதற்கு முன் பிரபாடகத்தில், கூறியுளது: “உடல் பிராணனாகவும், உருவம் ஒளியாகவும், எண்ணம் சத்தியமாகவும், ஆகாசம் (அருபியும் எங்குநிறையும் தன்மையால்) போன்றும், எல்லா கர்மங்களும் எல்லா இச்சைகளும் எல்லா நற்கந்தமும், எல்லா ரசங்களும் அவனிடமிருந்து உளதாகின்றதோ அவன் சின்மயன் (சித்து). இருதயகுகையில் உள்ள ஆத்மா அரிசியிலும் சிறிது வாற்கோதுமையினுஞ் சிறிது, கடுகினும் சிறிது, தினையினும், சிறிது, தினையரிசியினுஞ்சிறிது. அந்த ஆத்மாவே புவனத்தின் பெரிது, ஆகாயத்திற் பெரிது, எல்லா அண்டங்களிற் பெரிது. (III 14.)

பின்னிடத்தில், பேசியது.” ஆகாசமெனப்பட்ட அவன் எல்லாநாம ரூபங்களையும் வெளியாக்குகிறான். இந்த நாம ரூபங்களெல்லாம் அடங்கிய அதுபிரமம் அமிர்தன், ஆத்மா? (VIII. 13. 1.) பின்வரும் வசனம், கடோபநிடதத்திலும். (I. 2-20) சுவேதாஸ்வதரத்திலும், (III. 20) தைத்திரியத்திலும், சிவமஹாபுராணத்திலும் காணப்படுகிறது.

“சிறிதிற் சிறிதாய் எனினும் பெரிதிற் பெரிதாய், இந்தச் சீவனின் இருதயம். குகையில் ஆத்மா (பரம்) அமர்கின்றது. அதனைத் தன் பற்றுகளினின்றும் விடுபட்டுத் தன் துன்பம் துடைக்கப்பட்டு, அந்த ஈசனையும் அதன் மகிமையையும், அவன் பிரசாதத்தினால் சீவன் பார்க்கிறான்.” கைவல்லிய உபநிடதம், இதனையே வேறுவிதமாகக் கூறிற்று. வானுக்கு அதிகம் எனினும், சீவனுடைய இருதயகுகையில் ஒளிக்கலாயிற்று. அவனை காமத்தினின்றும் விடுபட்டு, ஞானிகள் அடைகிறார்கள்.” ஸ்ரீ கிருஷ்ண பகவானும் இந்தப்பரம ரகசியத்தை தன் சீடனுக்கு உபதேசிக்கிறார்.” ஓ அர்ச்சுனா, ஈஸ்வரன் எல்லாருடைய இருதயத்திலும் வசிக்கிறான். தன் மாயையால் எல்லாவற்றையும், குயவன் சக்கரத்தில் திரிப்பதுபோல் சுழற்றுகிறான்.” இவ்விதம் கூறி அந்தப்பரம சாந்தமாகிய இடத்தை அவன் அருளால் அடையும்படி வற்புறுத்துகிறார். பின்வரும் வசனங்கள் மேற்கூறிய உபநிடதப்பொருள்களை யெல்லாம் தொடுத்துக் கூறுகின்றது.

“எங்குமுள்ள ஆகாயம், தன்னுண்மையால் எவ்விதம் அழுக்கடையவில்லையோ, அதுபோல் உடலில் எங்குமுள்ள ஆத்மாவும் (பரம்) அழுக்கடையவில்லை.” (XIII. 32)

"எல்லா பூதங்களுக்கும் ஆதாரம். அப்பூதங்கள் இதற்கு ஆதாரமல்ல. என் ஆத்மா (பரம்) அவைகளின் நிமித்த காரணம். ஆகாசத்தில் ஊன்றப்பட்டு மகத்தாகிய காற்று எங்கும் சலிக்குமாறுபோல், எல்லாம் என்னிடம் ஊன்றப்பட்டு என்னிடம் அமர்கின்றது." (IX. 6).

இந்தச் சர்வ ஆதாரமாயுள்ளவன், நியதியாயுள்ளவன், சாக்ஷி, போக்தா, மகேஸ்வரன் என்னும், பரமாத்மா, பரம புருஷனென்னும் அழைக்கப்படுகிறான். (XIII. 22).

சாந்தோக்ய மந்திரத்தில், பின்னும் காயத்திரி, உடலும் இருதயமாகும் எல்லா பூதங்களும் அவற்றில் நிலைத்தலால் என்று கூறியுளது. ஆகவே, தமிழ் மறையிலும், அதற்குப்பின்னும் முன்னும் முள்ள எல்லாம் தமிழ்த் திருமுறைகளிலும் பரமேஸ்வரனுக்கு உண்மையாகிய உறைவிடமாக உயிரின் இருதய கமலத்தையே பாடியருளினார்கள்.

"நினைப்பவர் மனமே கோயிலாக் கொண்டவர்." ஆகையினாலன்றோ நாம் பேசப்புகுந்த பரமாலயத்தை எல்லாக்கோயில்களிலும் சிறந்த திருக்கோயில் என்று கூறப்படுகின்றது. புண்டரீக வீடென்பது தகர வீடென்பதாம். அம்பலம், பொன்னம்பலம் என்பதும் இதனையே. இத்திருக்கோயில் உயிரின் உள்ளமே என்றமட்டில் இன்றுகாட்டி. மேல் அடுத்த மொழியில் அவ்விருதய மத்தியில் நின்று திருக்கூத்தாடா நின்ற பரமபதியைப்பற்றிப் பேசுவாம்.

ஜே. யம். நல்லசாமி பிள்ளை
B. A., B. L.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரம்.

---

இனி இம்மந்திர நலந்தெரிந்து விளக்கிய நல்லாசிரியர் நல மொரு சிலவற்றை எடுத்துரைப்பாம்.

"வம்பருவரிவண்டு மண நாறமலரு மதுமலர் நற்கொன்றை யானடியலாற் பேணுவெம்பிரான் சம்பந்தனடியார்க்கு மடியேன்" என்று



வன்றொண்டப் பெருந்தகையால் போற்றப்பெற்ற நஞ்சைவ சிகாமணியார், "மதிமுகிழ் முடித்த மாதியல்பாகரால் எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தளித்தருளப்பெற்று, மற்றப் பெருமானுரை யாமெலா முணர்ந்துய்தற்பொருட்டுப் பாமுகத்தால் மறித்தெஞ் செவியமுதாய் வார்க்கத் துவங்கிய பிள்ளை ஞான்று, மடையில் வாளைபாய மாதரார் குடைந்தாடும் மணிநீர் வாவித்திருக்கோலக்கா வெய்தி, இருக்கோலிட்டறி வரிய தேவர்பிரான் திருப்பாதம் போற்று நீர்மையில் நின்று "மடையில் வாளைபாய" என்னும் வாக்காற் கைந்நிறைந்த ஒற்றறுத்துக் கலைப்பதிகம் பாடுதலும், பொன்னித்துறைபெறுமணியின் கண்ணிய கைம்மலர் தம்மில் அண்ணலார் திருவருளால் அடைந்த செம்பொற்றாளத்தும், பஞ்சாக்கரம் பொறித்திருந்த தென்னின், மற்றதன் பெருமையை யாவரேயளவிட்டுரைக்கவல்லார்? பின்னுந் திருவரத்துறையார் தாமேவேண்டி ஏற்றுக் கொள்ளுமாறு பணிந்து முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துக்கானம் முதலிய அருளிய ஞான்றும், இம்மந்திரத்தையே ஓதி இவர்ந்தார் என்க.

மற்றும் நம்புகலிவேந்தர் உபநயனவிழாக்கொண்டு, எண்ணிகந்த புனிதமறை எடுத்தோதி அவற்றிற் கெல்லாம் முதன் மந்திர மிஃதாமென்று, "துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினு" மென்றெடுத்து "வேதியர்க்கந்தியுண் மந்திரமஞ் செழுத்துமே" என்றுணர்த்தியந்தணர் தமையுமறுத்தருளினார், இன்னுமப் பெருந்தகையார், தமிழ்மொழி தழைப்பவும், அதன் மாட்சி இணைத்தென்று நெருப்பும் நீரும் அறியவும், திருநீற்றுண்மை சிறக்கவும், சைவசமயம் செழிப்பவும், சமணசமயம் ஒழியவும் தென்றிசை இலங்கவும், உலகம் வயங்கவும் திருமறைக்காட்டினின்றும் திருவாலவாய்க்குச் செல்வான் திருச்சிவிகை இவர்ந்தஞான்றும் "ஒரு நாமத்தஞ்செழுத்துமோதி வெண்ணீற்றொளிவிளங்கு திருமேனிதொழுதார்" என்பது நம்மனோர் நன்கு கவனிக்கற்பாலது, மற்றுந் தந்திருமணங்கண்டோர் யாரும் தீதுறுபிறவிப்பாசந் தீர்த்தல் செம்பொருளாக்கொண்டு பரஞ்சுடர்த்தொழுது போற்றி வீட்டையளித்தழியும், அங்ஙனம் வீட்டையாவர்க்கும் ஈயவல்லதாய் நிற்பதிம் மந்திரமே என்றுணர்ந்தவான் நமச்சிவாயத்திருப்பதிக மோதி மாயிரு ஞாலத்தாருய்யு நெறிக்காட்டி "கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப்பிடர் பிடித்துத் தள்ளினாரென்றுணர்க.

இனி நம் நாவரசாய பெருந்தகையார் நம்பாருளாமையாற் சமண சமயம் புக்குறிற்புழி, சிவபெருமான் பண்டுபுரி நற்றவத்துப் பான்மையி

ஞற் சூலை நோய்க்குட் படுத்துத் தடுத்தாளுதி, நங் கற்பமையோராய திலகவதியாரால் பஞ்சாக்கரமோதித் திருநீறளிக்கப் பட்டமையானும் இம்மந்திரத்தின் பெற்றி இற்றெனை விளங்கும், பின்னுமப்பெரியாரைச் சமணமாக்கள் நீற்றறையிலிட்டபொழுது

நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே.

என்னுந் திருப்பாட்டை யுள்ளடக்கிய பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளவும், அந்நீற்றறையகத்து வெப்பமும், ஒளியும், ஆவியும், ஓசையுமெல்லாம், இளவேனிற் பருவத்துத் திங்களஞ் செல்வன் செழுநில வெறிக்கும் மாலைக்காலத்தே செங்கமலம்முதல் பன்மலர் நிறைந்த பசும்பொய்கையகத்து இளந்தென்றல் வீச இனியயாழோசை கேட்ப வீற்றிருக்குந் தன்மையதாய் விளங்கியதாயின் இம்மந்திரத்தின்பெற்றி எத்துணைச் சிறந்ததென்க, பின்னுங் கற்றூணைப்பூட்டிக் கடலிலிட்ட ஞான்றும் உற்றதற்றுணையாய் விளங்கிய திம்மந்திரமாகவே பிறவிப் பெருங்கடல் கடக்க உறும்புணையாவது இம்மந்திரமே என்பது வெள்ளிடை மலையென விளங்கிற்றென்க.

இதன் பெருமை யெல்லாம் ஒருங்குணர்த்தற் பொருட்டே திருஞானசம்பந்தப் பெருமான் இருபதிகங்களாலும், திருநாவுக்கரசரும் திருநாவலூரரும் ஒவ்வோர் பதிகங்களாலும் தனித்தெடுத் தோதியருளினரென்க, மற்றும் நம் மணிவாசகப்பெருமான் தம் திருவாசகத்து இதனை முன்வைத்து ஓதியருளியதும் மேற் கூறிய பதிகங்களின் உள்ளக் கிடக்கையோடு ஒப்புறவதேயா மென்க.

இன்னும் வரும்.

பாரிப்பாக்கம். கண்ணப்ப முதலியார்.

---

௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நன்னெறி.

“முன்னெறி யாகிய முதல்வன் முக்கண்ணன்
றன்னெறியே சரணாத றிண்ணமே
யந்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெல்லா
நன்னெறி யாவது நமச்சிவாயவே.”

பாடலிபுரத்திலே அரசு புரிந்திருந்த பல்லவராசன் தமது சமயாசாரியர்களாகிய சமணர்களின் வேண்டு கோளின்படி திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலே வீழ்த்தி விட்டபோது, அவர் அடியேனுக்கு யாது நிகழினும் நிகழுக. அடியேன் சிவபெருமானை தோத்திரம் செய்வேன் எனக்கருதி “சொற்றுணைவேதியன்” என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அத்திருப்பதிகத்தின் ஒன்பதாம் திருப்பாட்டு இத்தேவாரம் என்றுணர்க. இதின் திரண்டபொருள் முதற் சமயமாகிய சைவசமயமே யாவர்க்கும் பற்றுக்கோடா யுள்ளது. அம்மார்க்கத்தின்படி யொழுகிச் சிவனைத்தியானம் செய்பவர்களுக்கெல்லாம் நன்னெறி பயப்பது ஸ்ரீபஞ்சாக்ஷரம் என்பதாம். சைவசமயத்தை முன்னெறியென்று கூறியது என்னையென்றால் உலகத்துள்ள ஆன்மாக்கள் செய்த இருவினைக்கீடாக அவ்வவர்கள் சோபான முறைக்கண்ணின்று அவ்வவ்வினைப்பயன்களை யனுபவித்து மேல் நெறிக்கண் வந்து பரமுத்தி யெய்துதற்கு முதல்வனால் பகுக்கப்பட்ட பலபல சமயங்களுள் சைவசமயமே மற்றெல்லாச் சமயங்களையும் தனக்கு அவயவயங்களாக்கொண்டு தன்னுள்ளடக்கி தான் அவயவியாய் அவற்றிற்கெல்லாம் அரசாய்ச்சிறந்து அத்துவித முத்தியைப் பாலிக்கும் அருட்பெரும் சமயமாதலான் என்றுணர்க.

இக்கருத்துப் பற்றியே தாயுமான சுவாமிகளும்

ஆகாரபுவனம். செய்யரிய, இயல்பென்றும், அந்தோவீதிசயம், தக்கநெறி யென்று அருளிச் செய்துள்ளார்.

இனி ஞானிகளினுலே மெய்ப்பயனைக் கொடுக்கும் உண்மை சமய மென கருதப்படும் என்பார் முன்னெறி என்ருர் எனினுமாம். சைவசமயம் ஒன்றே அழியாப் பேரின்ப வாழ்வாகிய அத்துவிக முத்தியைக் கொடுப்பது என்பதும் ஏனைச்சமயங்கள் தத்தமக்கேற்ற சிறிய பயன்களைக் கொடுப்பன என்பதுங் கருதியன்றே

"சாவிபோம் மற்றச்சமயங்கள் புக்குநின்
ருவியருதே என்னுந் தீபற.
அவ்வுரை கேளாதே யென்றுந்தீபற" எனவும்

சைவ சமயமே சமயம் பின் சேரவரும் செகத்தீரே எனவும், ஆன்ருேர் அருளிச் செய்து போதரா நின்ருர் என்க.

முன்னெறி = என்பது வினைத்தொகை. முன்னுதல் கருதுதல்.

முக்கண்ணன் = சிவன், தன்னெறி = அவன் சமயம் எனவே சிவ சமயம் என்பதாம். சிவசமய மெனினும் சைவசமய மெனினும் ஒக்கும். சைவ சமயம் = சிவனை வழிபடும் மார்க்கம் எனப் பொருள்படும். சரண் = புகலிடம். சைவசமயமே யெல்லா வுயிர்களுக்கும் ஆதாரமாயுள்ள தென்பதைதாம் அனுபவத்தில் உணர்ந்துள்ளார் ஆதலின் சரணுகும் என்னுது சரணுதல் திண்ணமே என வுறுதிப்பொருள் பயக்கும் வாசகத்தால் கூறி யருளினுர்.

"அந்நெறியே சென்று அங்கு அடைந்தவர்க்கெல்லாம்" என்பதில் அந்நெறி யென்பது அச்சைவ சமயமே எனப் பொருளைப் பயத்தலேயன்றி அச்சைவ சமயத்திற்குரிய சரியை, கிரியை, யோகம் எனவும் பொருடந்து நின்றது.

சென்றடைதல் = அவ்வம்மார்க்கத்தில் நின்று அவ்வவற்றில் கூறும் விதிவிலக்குகளை யனுட்டித்து முடித்து மேன்மேற் சேறல்.

இனி அம்மார்க்கத்தின்படி வொழுகி சிவனைத் தியானித்து என்றலும் ஒரு பொருள். இங்ஙனம் அடைந்தவர்கட்கே ஸ்ரீ பஞ்சாக்ஷர மூலமாய் நன்னெறி சித்திக்கு மென்பார் "நன்னெறியாவது நமச்சிவாயவே" என்றருளிச் செய்தார்.

இன்னும் இதன்றியும் விரிக்கின் பெருகு மாதலான் இவ்வளவில் நிறுத்தி "நன்னெறி" யென்பதனைச் சிறிது ஆராய்வாம்.



நன்னெறி யென்பது நன்மை+நெறி யெனப் பிரிக்கப்பட்டு நன்மைகள் யெல்லாவற்றையும் தரும் மார்க்கமெனப் பொருள்படும். நன்மைகளாவன:— உலகத்திலேயுள்ள எல்லாச் சமயத்தவரானும் அங்கீகரிக்கப்பட்டனவாகிய கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்ச பாதகங்களையும் தவிர்த்து ஒழுகுதலாகிய பொது நன்னெறியும், அவ்வச் சமயங்கட்கு இன்றியமையாதனவாய்க் கூறப்பட்டுள்ளனவாகியகடவுள் வழிபாடுமாம்.

**வா. தி. கோவிந்தராஜ முதலியார்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமய மாட்சி.

இந்நிலவுலகத்திலே பரந்து விரிந்து கிடக்கும் எண்ணிறந்த மக்கட் பகுப்பினரால் எண்ணிறந்த வகையவாக வைத்து அனுசரிக்கப்பட்டுவருஞ் சமயங்கள் அல்லது மதங்கள் எண்ணிறந்தனவாய் இருக்கின்றன. அவைகளுள்ளே நமது சைவசமயமும் ஒன்றாயிருக்கின்றது. நம்முடைய அனுபவத்திற்கு அகப்பட்ட மதங்களையும் சைவசமயத்தையுங் இரண்டு பக்கத்தே வைத்து ஓரங் கடிந்து நிறுத்துப் பார்த்தமட்டில், நமது சைவசமயமே அவ்வெல்லா மதங்களினும் [illegible]கின்றது. இனி நமது அனுபவத்தில் வாராத [illegible]வேனும் சைவசமயத்தை ஒத்ததாகவேனும், அல்லது அதனின், மிக்கதாகவேனும் இருத்தலாகாதோ வென்றால், அதனைப்பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். அந்நிய மதங்களில் ஏதேனும் ஒன்று சைவசமயத்தின் கட்காணப்படும் எல்லாக் கொள்கைகளும் உடையதாய் இருக்குமெனில், அது வேறு பெயரால் வழங்கபடுமாயினும் கொள்கைகளிற் சிறிதும் வேறுபடாமையால் அதனையுஞ் சைவசமயமென்றே கோடல் இழுக்காது. இனி அவ்வந்நிய மதங்களுள் ஏதேனும் ஒன்று சைவசமயத்தில் இல்லாத அரிய பெரிய கொள்கைகள் உடையதாய் இருத்தலும் ஏலாத தொன்றும் என்னையெ

வின்; உலகத்திலுள்ள எல்லாமதங்களும் ஒரே முழுமுதல் அறிவுப்பொருளாகிய கடவுளையும், அற்பஅறிவுடைய சீவான்மாக்களையும், அறிவில்லாத உலகத்துச் சடப்பொருள்களையும் ஆராயும் முத்திறப்பட்ட ஆராய்ச்சியில் அடங்குவனவே யல்லாமல், இம்மூன்றில் அடங்காத ஒரு மதம் எங்கும் இல்லை யென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததேயாம். இவ்வுண்மை கடைப்பிடித்தே

"சான்றவ ராய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலா மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி யாருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென வகுப்ப ரன்னவே."

என்னுந் திருவாக்கும் எழுந்தது. கடவுள் உலகம் உயிர் என்னும் இம்முப்பொருள்களையும் பற்றி எழுந்த பலதிறப்பட்ட கொள்கைகளும், அக்கொள்கைகள் எல்லாவற்றையும் பற்றிய ஆராய்ச்சியும், அவற்றுட் பொருந்துவன இவை பொருந்தாதன இவை என்னும் பகுத்தறிவு நிகழ்ச்சியும் பொருந்துவனவற்றைத் தெளித்துரைத்து உண்மைமுடிபு காட்டுஞ் சித்தாந்தமும் ஆகிய இவையெல்லாம் நமது சைவசமயத்தின் கண்ணே அடங்கத் தான் எதிலும் அடங்காததாய் விரிநிற்றலின் சைவசமயம் ஒன்றே எல்லாவற்றினுஞ் சிறந்த உண்மைமதமாமென்று நாட்டப்படும்; இது பற்றியே தாயுமான சுவாமிகளும்

"இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி
யாதுசமயமும் வணங்கும் இயல்பதாகி"

என்றும், "சைவசமயமே சமயம்" என்றும் அருளிச் செய்வாராயினர். இனிச் சைவசமயமே எல்லாச் சமயங்களினும் மேற்பட்ட சிறப்புடைத்தாம் என்பதனை ஒருசிறிது வகுத்து ஆராய்ந்து பார்ப்போம். முதலாகக் கடவுளைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமாக. முதலாகக் கடவுளைப்பற்றி ஆராய்ந்தறிந்த வகையிலும் அம்முழுமுதற் பொருளுக்குப் பெயர்வைத்து வழங்கும் முறையினும் சைவசமயமே எல்லாச்சமயங்களினும் மேம்பட்ட சிறப்புடையதாய்ப் பொலிகின்றதென்பதனை மாத்திரம் ஈண்டு எடுத்துக் காட்டுவாம். அற்ப அறிவு உடையனவாய் உலகத்தின்கட் காணப்படும் எல்லா உயிர்வருக்கங்களுக்கும் துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெறும் முயற்சி ஒன்றிலே மாத்திரம் கருத்தூன்றி நிற்கின்றன. ஆன்மாக்கள் அனைத்திற்கும் முதன்முதல் அநுபவத்திற்கு வருவது துன்பமேயல்



லாமல் வேறில்லை; சிற்றறிவுடைய பிராணிகள் முதல் பேரறிவுடைய மக்கள் ஈறான எல்லா உயிர்களும் உடம்புகளிற் புகுந்து இந்நிலவுலகத்திற் பிறந்தவுடனே தம்அகத்துள்ள பசித்தீயினால் துன்புறுத்தப்படுதலை நம் கண்ணெதிரே காண்கின்றோம் அல்லேமோ? பின்னர் அப்பசித்தீயானது நாம் உட்கொள்ளும் உணவால் தணிந்தவுடனே மகிழ்ந்து இன்புறுதலையுங் காண்கின்றோம் அல்லேமோ? இதனால் உயிர்களுக்கு முதல் அநுபவமாய் நிற்பது துன்பமென்றும், அது நீங்குமுகத்தாற் சிறிதுநேரம் நிற்கும் பின் அநுபவமாய்வருவது இன்பம் என்றும் இனிது தெளியப்பெறுகின்றோம். பாருங்கள்! நங்கட்புலனுக்கு எட்டா மிகச்சிறிய புழுக்களுக்கும், இத்துன்பநீக்கமும் இன்பப்பேறும் எவ்வளவு முயற்சியோடும் எவ்வளவு சுறுசுறுப்போடும் இடையறாது நிகழ்ந்து வருகின்றன! கூரிய ஓர் ஊசிநுனியிற் றங்கிய ஒரு சிறு நீர்த்துகளைப் பெருக்கக் கண்ணாடியின் உதவிக்கொண்டு பார்க்குமிடத்து, அதில் அளவிறந்த புழுக்கள் பலவேறுவகையான வடிவுடையனவாய் உலவுதலும், அவற்றுள் வலிவாலும் வடிவத்தாலும் பெரியனவாயுள்ள புழுக்கள் அவற்றிற் சிறியபுழுக்களைப் பிடித்துத் தின்ன மிகவும் பரபரப்போடு உலவித்திரிதலும், அங்ஙனம் உலவும் அவற்றுள் ஒன்று ஒன்றை இரையாகப் பிடித்தமாத்திரத்திலே மற்றொன்றும் அவ்விரையைப் பிடித்தற்கு வந்து அதனோடு சண்டையிடுதலும், அச்சண்டையிலே வெற்றிபெற்ற புழு தன்னிரையைத் தின்று பசி நீங்கி இன்புற்று நிற்றலும், இங்ஙனம் கண்ணுக்கு எட்டா நிலையிலுள்ள அவ்வளவு சிறு செந்துக்கள்மாட்டுங் காணப்படுந் துக்க நிவர்த்தியும் சுகப்பிரார்த்தியுமே அறிவினும் நாகரிகத்தினும் மேலவராகக் கருதப்படும் தேவர்களிடத்திலும் அடுத்தடுத்து நிகழ்தலுங் கண்டு சிந்திக்குங்கால் எல்லாவுயிர்களும் துன்பநீக்கத்தையும் இன்பப்பேற்றையுமே அவாவிநிற்கின்றன என்பது புலப்படவில்லையா?

அற்றன்று, அறிவிற் சிறிய மிருகசெந்துக்கள் மாத்திரமே துன்பநீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையும் விரும்புகின்றனவன்றி அறிவிற் பெரிய மனிதருந் தேவரும் அவற்றை விரும்புகின்றிலராய் அறிவுவிளக்கத்தையே நாடிநிற்கின்றனரெனின்; ஒருநாள்முழுதும் மெய்வருந்தப் பாடுபடுகிறவர்களும், தமது உழைப்பினாற் பெறும் பொருளைக்கொண்டு பசிப்பிணியைப் போக்கி இன்புற்றுக் களித்தும் வாழ்ந்துவருகின்றார்கள்; பலவாண்டுகளாகக் கல்வி ஞானங்களை மிகவருந்திக்கற்றுப் பெரும்பொருள் ஈட்டுகின்றவர்களும் தமது பசித்துன்பத்தைப் போக்கித்தம் மனையாளோடு கூடி இன்புற்று வருகின்றார்கள். வேறு இன்னும் எந்தவகையான முயற்சியைச் செய்

பவர்களைப்பார்த்தாலும் அவர்கள், எல்லாரும் பசி காமம் என்னும் இவ்விருவகைத் துன்பத்தையும் போக்கி இன்புறும் நோக்கத்திலே உறைத்து நிற்கக் காண்கின்றோமல்லது பிறிதில்லையே. அங்ஙனமன்று, அறிவுடையார் சிலர் பசி காமம் என்னும் இவ்விரண்டன் பொருட்டாகவன்றி அறிவு நூல்களைக் கற்று அறிவு நிரப்பும் அம்முயற்சியில் மாத்திரமே உறைத்து நிற்கக்காண்கின்றோமேயெனின்; அங்ஙனம் அவர் அறிவுநூற் கல்வியில் முயல்வதூஉம் அந்நூல்களைக் கற்குங்காலத்தும் கற்றறியும் பொருள் நுட்பங்களைத் தேருங் காலத்தும் தம்மகத்தே விளைந்து தம்மை விழுங்கும் பேரின்பத்தின் பொருட்டாகவே யல்லது வேறில்லை யென்பது தெற்றென அறியப்பட்ட உண்மையேயாகும்.

அற்றேல், அறிவு பெரிதோ ஆனந்தம் பெரிதோ வெனின்; எல்லா ஆன்மாக்களுக்கும் ஆனந்தத்தையே நாடிநிற்கும் சுபாவமுடையன வென்பதை மேலே விளக்கிக்காட்டினோமாதலாலும், அறிவு விளக்கத்தின் பயனெல்லாம் ஆனந்தப் பேறாகவே முடியக் காண்கின்றோமாதலாலும், அவற்றினும் ஆனந்தமே பெரியதூஉஞ் சிறந்ததூஉமா மென்பது இனிது பெறப்படும். எனவே, ஆனந்த வயப்பட்டு நிற்பதாகிய பத்திமார்க்கமே அறிவின் வயப்பட்டு நிற்பதாகிய ஞானமார்க்கத்தினுஞ் சிறந்ததாமென்பதூஉம் இதுகொண்டு முடிக்கப்படும். அவ்வாறாயினும், ஞானமும் பத்தியும் ஒன்றையொன்று பிரிந்திராவாய் ஒன்று காரணமாயும் மற்றொன்று அதன் காரியமாயும், ஒன்று அறிவாயும் மற்றையது அநுபவமாயும் பிணைந்து நிற்குந் தன்மையவாய் விளங்கும். இதனை ஓர் உதாரணமுகத்தால் விளக்கிக் காட்டுவாம். தேனூறிப் பழுத்துக் குலைகுலையாய்த் தொங்குங் கனிகளை யுடைய ஒரு தேமாமரத்தின்கீழ் ஒருவன் நாடோறும் இருந்தாலும், அவன் அம்மரத்தின் பழம் மிக்க சுவையுடையதென்றும் அதையுண்பதனால் பசி நீங்கிச் சுகமுண்டாமென்றும் அறிந்திலனாயின், அவன் அங்கிருந்தே பசியால் துன்புற்று இறப்பன்; இனி வழிச்செல்லும் அறிவுடையான் ஒருவன் அப்பழத்தின் அருமை அறிந்து, வேண்டுமட்டும் அதனைப் பறித்துப் பசிதீர உண்டு இன்புற்று வாழ்குவன், இதனால் அறியாமை யுள்ளவளவும் அதனை யுடையானுக்குத் துன்பமே நிகழுமென்பதூஉம், அது நீங்கி அறிவு நிகழப்பெற்றவனுக்கு அவ்வறிவால் ஆனந்தமே விளையுமென்பதூஉம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளென விளங்குகின்றனவல்லவோ? அங்ஙனம் அறிவால் ஆனந்தம் உண்டாதலை விளக்கிய இவ்வுதாரணத்தில் தேமாங்கனியின் அருமையை ஒருவன் அறிந்து



நின்ற நிலைபோல்வதே ஞானமார்க்கமாகும்; அம்மாங்கனியின் அருமையை அறிந்தமாத்திரத்தாலே அதனைச் சுவைத்து மகிழும் இன்பம் பிறவாமல், அதனைப் பறித்துப் பிழிந்து அதன் இரசத்தை நாவிலிட்டுச் சுவைத்தபின் மாத்திரமே அவ்வின்பந் தோன்றுதல்போல, ஞானமார்க்கத்தால் அறியப்பட்ட பொருளை அறிந்தமாத்திரத்தாலே ஆனந்தந் தோன்றாமல் பத்திமார்க்கத்தால் அநுபவித்துக் காணும் உண்மைக் காட்சியிலேதான் ஆனந்தம் விளையுமா மென்பது இனிது புலப்படும். இனி ஒரு பொருளின் அருமையை அறிந்தவன் அதனை அநுபவியாது விடானாதலின், ஞானமார்க்கத்திற் சென்றவன் பத்தி மார்க்கத்திற் செல்லாதிரான் என்பதுந் துணியப்பட்ட பொருளாம். ஆகவே, அறிவின் வயப்பட்டு நின்ற ஞானமார்க்கம் இன்பவயப்பட்டு நின்ற பத்திமார்க்கத்தினைப்பயக்குங் காரணமாய் நிற்கப் பத்திமார்க்கமானது அதன் காரிய அநுபவ நிலையாய் அதனினுஞ் சிறப்புடைத்தாய் விளங்குமென்பது பெறப்பட்டது. இம்முறை சிற்றறிவு சிற்றின்பங்களையுடைய பெத்தான்மாக்களிடத்தும், பேரறிவு பேரின்பங்களை யுடைய முத்தான்மாக்களிடத்தும் பிறழாது காணப்படுவதேயாகும் என்றும் இவ்வாற்றால் ஆனந்தமே எல்லா ஆன்மாக்களுக்கும் முடிந்தநிலையா யுள்ள தென்பது காட்டப்பட்டது.

அங்ஙனமாயின் சிற்றறிவுடைய பிராணிகள் அவாவும் ஆனந்தத்திற்கும், பேரறிவுடைய மக்களும் முனிவரும் அவாவும் ஆனந்தத்திற்கும் வித்தியாசம் என்னையெனின்; ஆனந்தம் அறிவின் காரியமாய்த் தோன்றுவதென முன்னரே விளக்கிக்காட்டினமாகலின், அவ்வானந்தம் தனக்குக் காரணமாயுள்ள அறிவின் தரத்திற்கு ஏற்பப் பெரிதாயுஞ் சிறிதாயும் நிலையுள்ளதாயும் நிலையிலாததாயும் பலதிறப்பட்டுத் தோன்றுமென்பதும் அது கொண்டு தெளியப்படும். உயிர்கள் உலகத்துப் பொருள்களின் சேர்க்கையாலும், தம்மையொத்த உயிர்களின் சேர்க்கையாலும் இன்பம் எய்தக் காண்கின்றோம். உலகத்துப் பொருள்கள் அறிவில்லாதனவும் நிலையில்லாதனவுமாய்ப் போதலின் அவற்றின் சேர்க்கையாற் பிறக்கும் இன்பமும் நிலையில்லாமல் அழிந்துபோதலுடன் தானழிந்தபின் துன்பத்தையும் விளைவிக்கின்றது. இனி உயிர்களெல்லாம் அற்ப அறிவினவாயும் நிலையில்லாத உடம்புகளில் மாறிமாறி வருவனவாயும் இருத்தலின் அவற்றின் சேக்கையாற் றோன்று மின்பமும் நிலையின்றி அழிதலுடன் பின்னர்த் துன்பத்தையும் வருவிக்கின்றது, என்றும் அழியாது நிலைத்து நிற்கும் பேரின்பத்தையே அடையவேண்டும் என்னும் நோக்கத்தையுடைய உயிர்கள் அப்பேரின்

பத்தைத்தருதற்குரிய பேரறிவுப் பொருளை நாடாமல் மின்னல் போலத் தோன்றித் தோன்றிச் சிற்சிலகணங்களுள் மாய்ந்துபோகும் சிற்றின்பத்தைத் தந்து பின் துன்பத்தையே பயக்கும் உலகத்துப் பொருள்களையும் சிற்றுயிர்களையும் நாடுதல் தமக்குள்ள சிறிய மயக்கவறிவின் றன்மையினாலன்றோ? சிற்றறிவால் வருவது சிற்றின்பமும் பேரறிவால் வருவது பேரின்பமும் ஆகும். சிற்றறிவானது தனக்கு எட்டிய சிறுபொருளையே நாடும்; பேரறிவானது எல்லா அறிவும் எல்லா இன்பமும் நிறைந்த பெரும் பொருளையே நாடும். சிற்றறிவால் நாடப்படும் சிறுபொருட் சேர்க்கையாற் சிற்றின்பமும், பேரறிவால் நாடப்படும் பெரும் பொருட் சேர்க்கையாற் பேரின்பமும் வருதல் இயல்பேயன்றோ? மிருக செந்துக்களின் அறிவு பகுத்துணர்வோடு கூடாமல், உலகத்துப் பொருள்களை மாத்திரம் அறிவிக்குங் கருவிகளாவன மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளோடு இயைந்து நிகழ்தலின், அவை தமக்குப் பசி எடுத்த காலத்து இரை தேடித் தின்று பசி நீங்கி இன்புற்றும் உறங்கியும் அவ்வளவோடு தமது காலத்தைக் கழித்துவிடுகின்றன. இங்ஙனம் மிருக செந்துக்களின் அறிவு புறப்பொருள்களைப் பற்றிய புற அறிவாய் மிகச் சிறிதாய் இருத்தலின் அச்சிற்றறிவால் அவை யடையும் இன்பமும் மிகச் சிறியதாய்க் கழிகின்றது.

இனி மக்களாய்ப் பிறந்த நம்மனோர்க்குள்ள அறிவு புறத்தேயுள்ள உலகத்துப் பொருள்களை மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறி வாயிலாக அறிவதுடன், அங்ஙனம் அறிந்தவற்றைத் தமது அகத்தே கொண்டுபோய் வைத்து இது நல்லது இது தீயது எனவும், இது இதனை ஒக்கும் எனவும், இது இதனை ஒவ்வாது வேறாம் எனவும் பகுத்துணர வல்லதாயும் இருத்தலின், மிருகசெந்துக்கள் அறிவைவிட எத்தனையோ மடங்கு பெரிதான இவ்வகப்புற இன்பமும் அச்செந்துகள் எய்தும் இன்பத்திலும் எத்தனையோ மடங்கு பெரிதாய் நிகழுகின்றது. பசி எடுத்த காலத்து மாத்திரம் இரைதேட முயன்று, பசி ஒழிந்தபின் வாளாது உறங்கிக் கழியும் மிருக சாதிகள் பலவற்றைப்போல் ஆகாமல், அப்பசித் துன்பத்தை நீக்க முயலுதற்போதும் வருங்காலத்தைநாடி உழைக்கும் மக்கள் அறிவின் மேன்மையைப் பாருங்கள்! மிருகங்களிற் பெரும்பாலனவை நாளைக்கு என் செய்வோம் என்னுங் கவலை சிறிதுமே இல்லாதனவாம். மக்களோ நாம் முதுமையுற்ற காலத்து வருந்தாது இருந்து உண்ணல் வேண்டுமே என்னும் வருங்கால் அறிவுடையராய் இளம்பருவத்தே ஆனமட்டும் முயன்று வேண்டும் பொருளைத் தொகுத்துக்கொள்கின்றார்கள்.

இன்னும் வரும்.

சுவாமி வேதாசலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆரிய வேதபாராயணம்

நமது நாட்டிலே சிவாலயங்கள் தோறும் நடத்தும் பிரமோற்சவ முதலிய காலங்களில் ஆரியஸ்மார்த்தர்கட்குக் கூலிகொடுத்துச் சிவபெருமானுக்குப்பின் ஆரிய வேதம் பாராயணஞ் செய்யும்படி அவ்வவ்வாலய தருமகர்த்தர்கள் ஏற்பாடுசெய்து வருகின்றனர். ஸ்மார்த்தர்கள் வேதங்களிற் சிற்சிலபாகங்களை நன்றாக வரப்படுத்திக்கொண்டு கட கட வெனச் சொல்லுவர். இவர்கள் வேதங்களைப் பார்த்துப் படித்தவர்களன்று ஒருவர் சொல்லப் பலர் சூழ்ந்திருந்து கேட்டுவராப்படுத்தியவர்கள். பெரும்பாலோர்கட்கு அவற்றின் பொருள் தெரியாது. இவர்களுள் கனபாடியெனச் சிலருண்டு. அவர்கள் சிலபாகங்கள் அதிகமாக வரப்படுத்தியுள்ளவர்கள். இவர்கட்குச் சைவசமயத்திற் சிறிதும் பற்றில்லை. சைவசமயத்திற்குரிய சிவாகமங்கள் இவர்கட்குடன்பாடு கிடையாது. இவர்கள் தங்களை வைதிகரெனச்சொல்லிக்கொள்ளுவரே யன்றி, வைதிகசைவரெனச் சொல்லிக் கொள்ளத்துணியார். ஸ்மார்த்த சந்நியாசி யொருவர் இறந்துவிடின் அப்பிணத்தின்பின் சுடுகாடுவரையில் வேதபாராயணஞ் சொல்லத் துணியுமிவர்கள், பிரமோற்சவங்களில் பிட்சாடனமூர்த்திக்குப்பின் பாராயணஞ்செய்யப் பின்னிடுவர். பிட்சாடன மூர்த்தியை இவர்கள் தெய்வமாக வெண்ணின் அம்மூர்த்திக்குப்பின் பாராயணஞ் செய்ய கூசுவரா? இத்தகையரைச் சிவபெருமானுக்குப்பின் பாராயணஞ் செய்யும்படி அவர்கட்குக்கூலி கொடுக்கலாமா? பிட்சாடனருக்குப்பின் பாராயணஞ் செய்யத்தானே மறுக்கின்றனர். மற்றைய மூர்த்திகட்குப் பின் பாராயணஞ்செய்ய மறுக்கின்றாராயெனின் சிவபெருமான் வேறு மற்றைய மூர்த்திவேறு? சகல மூர்த்திகளும் சிவபெருமானே யன்றோ? பிட்சாடனரை வெறுத்தல் சிவபெருமானை வெறுத்தது போலன்றோ? என்ன கொடுமை! கொடுமை! தருமகர்த்தர்களே! நீங்கள் ஸ்மார்த்தர்களின் விபூதி உருத்திராட்ச வேடத்தைக் கண்டு மயங்கியிருக்கின்றீர்கள். சிவாகமங்களை உடன்பாடாகக் கொள்ளாத ஸ்மார்த்தர்கள், தமக்குபின் பாராயணஞ் செய்துவரச் சிவ

பெருமான்றான் சம்மதிப்பாரா? சிவபெருமானுக்கு விரோதமாகக் கூலி கொடுத்து பிட்சாடன மூர்த்தியை நிந்திப்பவரைக்கொண்டு பாராயணஞ் செய்வித்தல் புண்ணியமாகுமா? ஜெகதாச்சாரிய மூர்த்திகளாகிய சைவ சமய குரவர்கள் நால்வருக்குப் பின்னும் ஸ்மார்த்தர் பாராயணஞ் செய்யவிசையார் நால்வர்களைத் தெய்வமாகக் கொண்டொழுகும் சைவர்களே! எங்ஙனம் மனந்துணிந்து இத்தகைய ஸ்மார்த்தர்களுடன் நீங்கள் அளவளாவுகின்றீர். இவர்களை உங்கள் வீட்டில் நடத்தும் சுபாசுபங்கட்கு வரிக்கின்றீர்கள், உங்கள் திரவியங்களை அவர்கட்குக்கொட்டுகின்றீர்கள். அந்தோ! என்ன அநியாயம். இனியேனும் நீங்கள் தயை கூர்ந்து, வேதாகமங்களை உடன்பாடாகக் கொண்டு அவற்றின் வழியொழுகும் ஆதிசைவர்களைக்கொண்டு வேதபாராயணஞ் செய்வியுங்கள். ஆதிசைவர்கள் கூட்டமாகக் கூடி வேதபாராயணஞ் செய்யக்கிட்டாரேயெனின்? ஸ்மார்த்தர்களை மந்தை மந்தையாகக் கூட்டிப் பாராயணஞ்செய்வித்துச் சிவாபாரதம் சம்பாதித்துக்கொள்வதிலும், இரண்டொரு ஆதிசைவரைக்கொண்டு பாராயணஞ் செய்வித்துச் சிவபுண்ணியஞ் சம்பாதித்துக்கொள்ளுதல் மிக உசிதமன்றே? ஆதிசைவர் கிட்டாதபோது தமிழ் வேதியர்களாகிய ஓதுவா மூர்த்திகளைக் கொண்டு தமிழ் வேதபாராயணஞ் செய்வித்தல் உத்தமோத்தமமாகும். இக்காலத்தில் தேவகோட்டை நகரத்தார்கள் தென்தேயத்தில் பற்பல தலங்கள்தோறும் தேவார பாராயண பாடசாலை யேற்படுத்தியிருக்கின்றனர். அனேக ஆலயங்களில் நடக்கும் பிரமோற்சவகாலங்களில் அவர்களைக்கொண்டு பாராயணஞ் செய்விக்கின்றனர். இங்ஙனமே மற்றும் பலதலங்களிலும் செய்விக்கின் மிக நலமாம்.

இதனாலும் நாம் கூறியவாற்றால் ஆரியவேதத்தை நிந்தித்ததாக ஒருவருமெண்ணப்படாது. ஆரிய வேதத்தினுண்மை சித்தாந்த மென்பது திண்ணம். ஆரியவேதத்தினிருதயம் சிறிதுமறியாது வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் யாதொரு சம்பந்தமில்லை யெனக்கூறிச் சிவநிந்தை, சிவாகமநிந்தை, சிவனடியார்நிந்தை செய்து வாழ்ந்து திரியும் கூலிக்கு மாரடிப்பாரைக்கொண்டு பாராயணஞ் செய்வித்தல் எவ்வகையினும் அடாதென்பதே நமது கொள்கை. வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் சமரசமாகப் போற்றிவாழும் சில ஸ்மார்த்தர்களுளரே அவர்களைக்கொண்டு பாராயணம் செய்விக்கப்படாதோ வெனின்? அத்தகைய உத்தமர்கள் சிலருண்டென்பதை நாமறிவோம் அவர்கள் வைதிக சைவ பிரவர்த்தகத்தில் சத்காலக்ஷேபம் செய்துவருபவர்களேயன்றி வேறு வழியிற் பிரவர்த்தகஞ்



செய்யார். ஆகவே ஆரிய வேதத்தில் கூடமாய்ப் பிரதிபாதிக்கப் படுகிற சிவபெருமானையே வியக்தமாகத் தமிழ் வேதம் கொண்டாடுகிறபடியால், தமிழ் நாட்டிலே தமிழர்களாகிய நாம் தமிழ் வேதத்தையே பாராயணஞ் செய்யும்படி தமிழ் வேதியர்களை நியமிக்கவேண்டும். இது விஷயத்தில் சிவாலய தருமகர்த்தர்கள் ஒருங்குகூடி யாலோசிக்க வேண்டும். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுதல்போல, சிவாலய பரிபாலனஞ் செய்ய வேற்பட்ட தருமகர்த்தர்கள் சிவாபராதத்திற்குட்படுதல் தருமமன்று. இலௌகிகத்தில் உன்னதபதவியடைந்துள்ள ஸ்மார்த்தர்கள் சிலரின் தாட்சண்ணியத்திற்குட்பட்டுச் சாடையாயிருந்து விடாதீர்கள். ஆரிய வேதபாராயணத்தை நிறுத்திவிட்டால் பலபேர்கட்கு விரோதியாக நேரிடும் ஆகவே இது நடக்கிற காரியமா? பலநூற்றாண்டுகளாக நடந்தேறிவந்த வழக்கத்தை நிறுத்தலாமா? என ஆலோசிப்பீர்கள். இது சரியான ஆலோசனையன்று. இதுகாறும் நம்மவர்களை வேடத்தால் ஸ்மார்த்தர் வஞ்சித்து வந்தனர். இப்போது இவர்கள் வஞ்சனை வெளியாயிற்று. இனி விழித்துக் கொள்ளவேண்டும். இனி சரிவர காரியங்களை நடத்தவேண்டும். இதுகாறும் நம்மையறியாது சிவாபசாரம் நடந்தேறியது தெரியாததால் நம்மீது தோஷமில்லை. உண்மை தெரிந்த பின்னர் சாடையாயிருந்து விடுவோமாயின் நமக்குச் சிவாபாராதம் நமக்கு உண்டாமென்பதிற் றடையில்லை. ஆரிய வேதபாராயணத்தை நீக்கிவிடுதலினால் ஒன்று முழுகிப்போகாது. கெடுதியுமில்லை. திராவிட வேதபாராயணத்தைப் பாராட்டுங்கள். திராவிடவேதத்தில் நமது சிவபெருமானுக்குப் மிக்க பிரியமுண்டு. நால்வரிடம் சென்று தம்மீது தமிழ்வேதம் பாடும்படி பற்பலதரங் கேட்டுக்கொண்டனர். அத்தமிழ் வேதியர்கட்கு அனேக அற்புதஞ்செய்து காட்டினர். தாமும் அனேகத் தமிழ்ப்பாசுரங்களைப் பாடினர், தாமுநூலியற்றினர். தமிழ் நாட்டில் அறுபத்துநாலு திருவிளையாடல்களைச் செய்தனர். தமிழ்ப்பாட்டுக்களைக் கேட்டுப் பரிசீந்தனர். தமிழ்ச்சங்கத்தை நடத்தினர். தமிழை அவமதித்த அரசன்பாற் சீற்றங்கொண்டு அவர் ஊரைவிட்டு விலகினர். மறுபடியும் அவ்வரசன் தமிழை மதிக்க அவன் ஊருக்கு வந்தனர். ஆகவே தமிழின் மிகுந்த ஆசையைப் பலவகைகளிலும் காட்டிய தமிழ்த் தெய்வமாகிய சிவபெருமானுக்கே தமிழ்வேதபாராயணமே உரித்து. தருமகர்த்தர்களே! சிவாலயங்கள் தோறும் தமிழ் வேதியர்களைக் கொண்டு தமிழ் வேதபாராயணஞ் செய்யமுந்துங்கள்! முந்துங்கள்!

மணவழகு.

# சமாச்சாரங்கள்.

மாதவச் சிவஞான சுவாமிகள் சரித்திரம்: காரைக்குடிச் சைவசித்தாந்த சபைத்தலைவர் ஸ்ரீமான். S. V. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் ஆங்கிலேயத்தில் எழுதி ஷை சுவாமிகள் 133-வது குருபூஜை மகோற்சவ தினத்தில் விநியோகித்தனர். அதே தினத்தில் திருநெல்வேலி இந்துகலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியரும் ஷை சைவசித்தாந்தசபை கௌரவ பிரசாரகருமாகிய ஸ்ரீமான் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள் ஷை சுவாமிகளின் மீது ஆனந்தகளிப்பியற்றி யரங்கேற்றினர்.

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் குருபூஜை—ஜூன்மீ 2உ சென்னையில் சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தின் கீழ், குருபூசை மகோற்சவமும், மாகேஸ்வர பூசையும், பல வுபந்நியாசங்களும் நிறைவேறின.

திருவள்ளுவநாயனார் மகோற்சவம்—திருமயிலாப்பூரில் ஜூன்மீ 4உ நாயனாரது குருபூசைதினம் அவர் ஆலயத்தில், கொழும்பிலிருந்து வந்திருந்த கனம்-பொன்னம்பலம் இராமநாதம் துரையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் அநேக வித்வசிகாமணிகள் உபந்நியாசங்கள் செய்தனர். அன்றிரவு நாயனாருக்குத் திருவீதி மகோற்சவம் நடந்தேறியது.

மணிமங்கலம் திருநாவுக்கரசு சுவாமிகள் பக்தஜனசபை—ஜூன்மீ 22, 23, 24. களில் இருபத்தாறும் விழாவில் சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்-சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தில் பலவித்வசிகாமணிகளும் பெண்மணிகளும் பல உபந்நியாசங்கள் நடத்தினர்.

தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச்சங்கம்—ஜூன்மீ 23, 24 தேதிகளில் ஸ்ரீமான்-தி-செல்வகேசவராய முதலியார் M. A அவர்கள் அக்கிராசனத்தில் ஆறாம் ஆண்டின் திருவிழா கொண்டாடப்பெற்றது.

சைவசித்தாந்த மகாசமாஜம் மதுரைக்கிளைச்சங்கம்-ஜூன்மீ 15உ ஷை கிளைச்சபை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீமான்-ஜே-எம். நல்லசாமி பிள்ளையவர்களால் தாபிக்கப்பட்டது. விவரம் பின்வரும்.

OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK ... 5 SEP 1917 MADRAS

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௬.] 1917௵ ஜூலைமீ [பகுதி ௭.

## சாந்தோக்யோபநிஷத்து

நான்காம் பிரபாடகம்.

௫. அப்பிரமசாரி இரண்டு சதுரர்களை நோக்கிச் சொல்லுகிறார்.
யாரோவொரு தேவனிருக்கிறான். அவனெல்லாவற்றையும் புசிக்கின்ற
னன். உலகத்தைக் காக்கின்றான். அதிக வொளியோடு விளங்குகிறான்.
இத்தகையனை மனிதர்கள் கவனிக்கிறதில்லை. இவ்வன்ன மனைத்துமவனு
க்கேயிருக்க அவனுக்கன்னங் கொடுக்கப்படவில்லை.

௭. கேட்ட சௌனகர் யோசித்து, தேவர்கட்கும் மனிதர்கட்கும்
உற்பத்தி ஸ்தானமாயுள்ளவர், வலிவானபல்லுடையவர், புசிக்கத்தகுந்த
வர், அதிமேதாவி. இத்தகைய அவர் மகிமை மிக வுயர்ந்தது. அன்ன
முமவரே, அத்தாவுமவரே, எங்கட்குத் தெரியும் பிட்சையிடுவோம் என்
றனர்.

௮. பிட்சையிட்டனர், அவர்வாயு, அக்கினி, சூரியன், சந்திரன்,
ஜலம், பிராணன், வாக்கு, நேத்திரம், செவி, மனதுகூடிய விராட், அன்
னமாதியவரே. எல்லாம் இவற்றால் காணப்படுகிறது, எல்லாமிவற்றிற்கா
ணப்படுகிறது, இங்ஙனம் எவன் காணப்படுகிறானோ அவனே அந்நாதன்.

## கண்டம் ச.

க. ஜாபாலன் என்ற சத்தியகாமன் தனது தாயாராகிய ஜாபாலாவை நோக்கி நான் பிரமசரிய நிலையைக்கொள்ளப் போகிறேன், எனது கோத்திர மென்னவென்றான்.

உ. உன் கோத்திர மெனக்குத்தெரியாது, நான் பலவிடங்களில் வேலைசெய்துவந்தேன், யௌவனத்திலுன்னைப் பெற்றேன், நினது பெயர் சத்தியகாமன், எனது பெயர் ஜாபாலா இவற்றை யாரிடத்துஞ் சொல்லுக.

ங. அவன் ஹாரிதருமரர் என்ற கௌதமரிடஞ் சென்று பிரம சரியத்தை யனுட்டிக்கத் தங்களிடம் வந்தேனென்றான்.

ச. அவர் உன் கோத்திர மென்னவென்றனர். எனக்குத் தெரியாதென்றனன். தாய் சொன்னதையும் சொல்லினன்.

ரு. பிராமணன்தானெனமதித்து, சமித்தைக் கொண்டுவரச்சொல்லி உபநயனஞ் செய்வித்து, ஐய! இளைத்துள்ள நானூறுமாடுகளையும் கொண்டுபோய் மேய்த்துக்கொண்டிரு, அவை ஆயிரமாகப் பெருகியபின் இங்குவா வென்றனர். அங்ஙனமே யவன் ஓட்டிக்கொண்டு போயினான்.

சா. வாயுபகவான் ஒரு நாள் இடபத்திற் பிரவேசித்து, சத்தியகாம! இடபங்கள் ஆயிரமாய்விட்டன. எங்களை உன் குருவிடத்தி லோட்டிக்கொண்டுபோ வென்றனர்.

## கண்டம் ரு.

க. சத்தியகாம! பிரமத்தினுடைய பாதத்திற்குக் கிழக்கு ஒருகலை, தெற்கு ஒருகலை, மேற்கு ஒருகலை, வடக்கு ஒருகலை, இக்கலை நான்கும் சேர்ந்து ஒரு பாதம், இதற்குப் பிரகாசவான் என்று பெயர்.

உ. இவ்வுண்மை யறிந்தவன் இவ்வுலகில் பிரகாசிப்பான், பிரகாசலோகங்களை யடைவான் என்றனர்.

## கண்டம். சா.

க. மறுநாள் காலையில் எல்லா மாடுகளையும் குருவாசிரமத்தை நோக்கியோட்டிக்கொண்டுபோனான். சாயாட்சை ஒரு இடத்தில் தங்கி அக்கினியை மூட்டி அதற்குப் பின்புறமிருந்து பார்த்துக்கொண்டிருந்தான்.



உ. அக்கினி யவனை நோக்கி வாயுசொல்லியது போற்சொல்லி, பிருதிவி ஒருகலை, அந்தரிட்ச மொருகலை, சுவர்க்க மொருகலை, சமுத்திரமொருகலை, இந்த நாலுகலைகளும் சேர்ந்து ஒரு பாதம், இதற்கு அநந்தவான் என்று பெயர் என்றனர்.

ங. இவ்வுண்மை யறிந்தவன் இவ்வுலகில் அநந்தவானாகவும் உலகங்களை ஜெயிப்பனாகவுமிருப்ப னென்றனர்.

## கண்டம். எ.

க. சத்தியகாமனை அன்னமொன்று சந்தித்து, அக்னி ஒருகலை, சூரியன் ஒருகலை, சந்திரன் ஒருகலை, மின்னல் ஒருகலை, இக்கலைகள் நான்கும் ஒருபாதம் இதற்கு ஜ்யோதிஷ்மான் என்று பெயர்.

உ. இவ்வுண்மை யறிந்தவன் ஜ்யோதியுள்ளவனா யிருப்பனென்றது.

## கண்டம் அ.

க. சத்தியகாமனை நீர்க்கோழி யொன்று சந்தித்துப் பிராணனொருகலை, நேத்திரம் ஒருகலை, செவி யொருகலை, மனது ஒருகலை, இந்நான்கு கலைகட்கும் ஆயதநவான் என்ற பெயர்.

உ. இவ்வுண்மையைக் கண்டவன் எல்லோருக்கும் பிரயோசனமாகவிருப்பன் என்றது.

மணவழகு.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்,

# சந்தான குரவர்.

---

1916-ம் வருடம் டிசம்பர் மாதத்திய "சித்தாந்தப்" பத்திரிகையிலும், 1917-ம் வருடம் ஜனவரி மாதத்திய "சைவம்" என்னும் பத்திரிகையிலும் சந்தான குரவர் என்று தலைப் பெயரிட்டு வரைந்திருக்கும் விஷயத்தைக் கண்ணுற்றனம்.

இதில் சிற்றம்பல நாடிகளைப்பற்றிச் சில ஆசங்கைகள் நிகழ்ந்திருந்தன. அவையிற்றினைப் பரிகரிப்பான் வேண்டி ஈண்டு எழுதுவது அவசியமாயிற்று.

ஸ்ரீ சிற்றம்பல நாடிகள் என்பவர் மெய்கண்ட சிவாசாரியருடைய மாணுக்கர்தான்.

இவரன்றி, பெரிய பழுதுகட்டிச் சிற்றம்பலவர், சின்னப்பழுது கட்டிச் சிற்றம்பலவர் என இருவேறு இடத்தார் பிரசித்தியடைந்திருந்தார்கள்.

மெய்கண்ட தேவரின் மாணுக்கராகிய சிற்றம்பல நாடிகள் சீர்காழிப் பதியின்கண் அவதரித்தவர். அவர் மாயூரம் சித்தர் வனத்தில் ஞானப் பிரகாசர் உள்ளிட்ட அறுபான் நான்கு மாணுக்கர்களுடன் சமாதியிலெழுந்தருளினவர்.

சிற்றம்பலநாடிகளும் அவர் மாணுக்கர்களும் அவர் பரம்பரையில் வந்தவர்களும் அருளிச்செய்த நூல்கள்பல. அவை வட மொழியிலும் தென் மொழியிலும் உள்ளன. அவற்றிற் சில அச்சிடப்பட்டு வெளியில் நிலவுகின்றன.

அச்சிடாமலுள்ளன சைவாதீனங்களிலும் சைவர்களிடத்தும் இருக்கின்றன.

மேற்சொன்ன நூல்களில் ஆசிரியர் வணக்கம் கூறுங்கால் மெய்கண்டதேவர் மாணுக்கர் சிற்றம்பல நாடிகள் என்று கூறியிருக்கிறது.

தத்துவப் பிரகாசத்தில் கூறிய ஆசிரியர் வணக்கத்திற்கண்ட பாசுரத்தில் "சண்பையர் தலைவன்" என்பது சீகாழிப்பதியிலவதரித்த மெய்கண்டதேவர் மாணுக்கர். இச் சிற்றம்பலநாடிகளைக் கூறியதே ஒழிய திருத்துறையூரில் அவதரித்த அருணந்தி சிவாசாரியரைக் கூறவில்லை.

உமாபதி சிவத்தைக் கூறியிருப்பதால் உமாபதி சிவத்தின் ஆசிரியர் மறைஞான சம்பந்தர் அவரது ஆசிரியர் அருணந்தி சிவாசாரியர் ஆகையால் அவரைத்தான் "சண்பையர்தலைவன்" என்று கூறியிருக்கலாம் என்று சந்தேகப்பட்டு எழுதியிருக்கிறது.

அடியில் வருமாறு மேற்படி தத்துவப் பிரகாசச் செய்யுளுக்குப் பொருள் கொண்டால் மேற்காட்டிய சந்தேகம் நிகழ்வதற்குக் காரணம் சிறிதும் இல்லை. அதாவது:—



"முந்து சண்பையர் தலைவன்
கோற்றவன் குடியே முதுபதியாம் உமாபதி."

என்பதற்குச் சீகாழிச்சிற்றம்பலவர் முதலாக மெய்கண்ட தேவர் மாணுக்கர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவராகிய அருணந்தியார் பரம்பரையில் வந்த கொற்றவன்குடி உமாபதிசிவம் என்று பொருள் கொள்ளவேண்டும்.

இப்படிக் கொண்டால் முரண் ஏற்பட நியாயம் இல்லை

மெய்கண்ட தேவர் மாணுக்கர்கள் 49 பேர்களில் சிற்றம்பல நாடிகளைத் தவிர வேறு ஒருவரும் சீகாழிப்பதியில் அவதரிக்கவில்லை. ஆகையால் "சண்பையர் தலைவன்" என்பது சீகாழிச்சிற்றம்பல நாடிகளைக் குறிக்குமே யல்லது திருத்துறையூரில் அவதரித்த அருணந்திசிவத்தை ஒருக்காலும் குறிக்காது.

ஆசாரியர்கள் "சமய குரவர்" என்றும் "சந்தான குரவர்" என்றும் இருவகைப்படுவர்.

சந்தான குரவர் என்பார் பக்குவப்பட்ட ஆன்மாக்களைத் தீக்கையால் மலத்தைப் போக்கடித்துப் பதியிடத்தில் சேர்க்கும் தன்மைவாய்ந்தவர்: பதிக்கும் ஆன்மாவுக்கும் சந்திசெய்து வைப்பவர்களானதால் சந்தான குரவர் எனப்படுவார்.

உமாபதிசிவம் தாமியற்றிய சிவப் பிரகாசத்துள் நந்திமுதல் மறைஞானசம்பந்தர் இறுதியாகக் கூறியுள்ளார். மெய்கண்ட தேவருக்கு 49 பேர் மாணுக்கராதலால் மெய்கண்டதேவருக்கு அடுத்த பரம்பரை 49 பேர்களும் ஆவர். 49 பேர்களுடைய மாணுக்கர்களும் ஒவ்வொருவரும் தம்தம் ஆசிரியரைக் கூறுவார்களேயொழிய வேறில்லை. 49 பேர்களில் யாரைச்சொன்னபோதிலும் குற்றமில்லை.

உதாரணமாக.—மறைஞானசம்பந்தர் வணக்கம் அருணந்திசிவத்தைத்தான் கூறுவர். சிற்றம்பலநாடிகளைக் கூறமாட்டார். ஆனால் அது குற்றமல்ல. மரபு. ஞானப்பிரகாசர் வணக்கம் கூறினால் மெய்கண்டாருக்குப்பின் சிற்றம்பலநாடி களைத்தான் கூறுவார். அருணந்திசிவத்தைக்கூறமாட்டார்.

ஆகையால் மெய்கண்டதேவருக்குப்பின் 49 பேர்களில் யாரைக்கூறினும் எல்லாரையும் கூறினமாதிரியேதான்.

ஆகையாற்றான் உமாபதிசிவம் தம்முடைய பரம்பரையாகிய 'மெய்கண்டசிவம், அருணந்திசிவம், மறைஞானசிவம் இவர்களைக் கூறினார்.

தத்துவப்பிரகாச சுவாமிகளோ மெய்கண்ட சிவத்துக்குப்பின் "மூந்துசன்னையர் தலைவன் கொற்றவன்குடியே" என்று கூறினார். 'மூந்து' என்று அடைகொடுத்ததால் மெய்கண்டாருக்கு முதல் சீடர் சிற்றம்பல நாடிகள் என்பதைத் தெரிவிக்கிறார். ஆகையால் சிற்றம்பலநாடிகள் முதலாக உமாபதிசிவம் ஈறாக உள்ளவர்களுக்கு வணக்கம் கூறினார். ஆகையால் 49 பேர்களையும் மறைஞான சிவத்தையும் உள்ளடக்கிக் கூறியிருக்கின்றார். மறைஞானசிவத்தையாவது அருணந்திசிவத்தையாவது விட்டு விட்டார் என்பது இல்லை.

மேலும், உமாபதிசிவத்துக்குப் பின் தம்முடைய ஆசிரியராகிய சிற்றம்பல நாடிகளை தத்துவப்பிரகாசர் கூறியிருப்பதால் அச்சிற்றம்பலநாடிகள் யாரென்று ஒருசமயம் சந்தேகம் நிகழலாம். யாம் மேலே கூறியாங்கு பெரிய பழுதுகட்டிச் சிற்றம்பல நாடிகள் என்றும் சின்னப்பழுதுகட்டிச் சிற்றம்பலநாடிகள் என்றும் இருவேறு திறத்தார் பிரசித்தியடைந்திருந்தனர். தத்துவப்பிரகாசருடைய குருவானவர் இவ்விருவேறு திறத்தாரில் ஒருவராக இருக்கலாம். சீகாழிச்சிற்றம்பல நாடிகள் அல்ல என்று மாத்திரம் யாம் கூறமாட்டுவோம். இன்னும் இதைப்பற்றி விரிக்கிற் பெருகும். மேலே தெரிந்துகொள்ள விருப்பமுடையார் சைவாதீனங்களில் தெரிந்து கொள்வது விசேஷம்.

இப்படி உற்று நோக்கிப் பொருள் கொள்ளாமல் சந்தானசாரிய புராண சங்கிரக முடையாரை நிராகரித்துப் பேசுவது அழகல்ல.

ஆகையால் சந்தானசாரிய புராண சங்கிரகமுடையார் கூறினது சீகாழிச் சிற்றம்பலநாடிகளையென்றும், தத்துவப்பிரகாசர் "மூந்துசன்னையர் தலைவன்" என்றதும் அந்தச் சீகாழிச் சிற்றம்பலநாடிகளென்றும் "செந்திருவின்பயன் சிற்றம்பலநாடி" என்றது சின்னப் பழுதுகட்டி அல்லது பெரிய பழுதுகட்டிச் சிற்றம்பல நாடிகள் என்றும் உய்த்துணர்ந்து கொள்க.

தத்துவப் பிரகாசச் செய்யுளில் "மூந்துசன்னையர்தலைவன்" என்றும் "செந்திருவின் பயன் சிற்றம்பலநாடி" என்றும் ஒரே செய்யுளில் பரம்பரைக்கிரமமாகச் சொல்லிய படியால் இரண்டும் வேறு என்பது செவ்வனே வெளியாகிறது.

குடி. சைகிழார், அ. சிதம்பரனார்,



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நம்மிறைவனின் சர்வஞ்ஞத்து வாதி சாட் குண்ணியங்கள்.

முழுதுமுணர்தல், முழுதுஞ்செய்தல், நித்தமகிழ்ச்சி, அநாதியாகிய சுதந்திரத்தன்மை, கெடாத சக்தியுடைமை, அளவிறந்தசக்தியுடைமை என்னும் சாட்குண்ணியங்களாம்.

மேலேகூறிய நம்மிறைவனின் சர்வஞ்ஞத்துவாதி சாட்குண்ணியங்களை, தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார், கடவுள் வாழ்த்துத் திருக்குறளில், அமைத்துக்காட்டியதையும், எடுத்துக் கூறுவோம்.

பிருதிவி முதற் சிவதத்துவாந்தம் வரையுமுள்ள முப்பத்தாறு தத்துவ புவனங்களின் பொருள்களையும் எவ்வெக்காலத்தும் இருந்த இருந்தவாறே அறியும் பரப்பிரம்ம பகவானின் முற்றறிவு எனப்படும் சர்வஞ்ஞதையைத் திருவள்ளுவநாயனாராகிய முதற்பாவலர் கடவுள் வாழ்த்தின் இரண்டாவது திருக்குறளில் 'வாலறிவன்' என்றார்.

விசித்திர ரூபமாகிய மகாலிங்கத்தைத் தேவர்கள் புறத்தே பூசித்துத் தத்தம் மேலாகிய திவ்விய போகபதங்களை பெற்றவாறுபோல யாவராயினும் அன்பினோடு பிண்டமாகிய சரீரத்தினகத்தே தகரபுண்டரீகத்திலே பரப்பிரம்ம பகவானை ஆன்மலிங்கத்துக்கு நாயகராகக் கொண்டு அந்தரியாகபூசை செய்து வழிபடின் பரமானந்த கைவல்லிய லட்சுமி எனப்படும் தமது திருவை அவ்வன்பர்களுக்குத் தப்பாது பாலிப்பாரென்பதை உணர்த்துமாறே நந்தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் அவர் ஸ்ரீ பாதத்தைத் திருவடி என்பாராய் மூன்றாவது திருக்குறளில் 'மாணடி' என்று கூறினார்.

பரப்பிர்ம்ம பகவானாகிய தாம் எப்பொருள்களினும் வியாபகமுற்று நின்றாரேனும் அவர் அப்பொருள்களாற் சிறிதுந் தொடக்குண்ணார் என்பதையும் ஒவ்வொரு பொறிகளால் அவ்வவ்விஷயங்களைத் தனித்தனியே நுகரும் ஐம்புலன்களும்

" கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனு மொண்டொடி கண்ணே யுள "

என்றவாறுபோல, ஐம்புலன்களானும் ஒரேகாலத்தில் நுகரப்படும் சிற்றின்பப்பற்றை முற்றும் அறுத்தவர் என்பதையும் முறையானே உணர்த்துதற்கு நான்காவது திருக்குறளில் 'வேண்டுதல் வேண்டாமையிலா' னென்றும் ஆறாந்திருக்குறளில் 'பொறிவாயிலைந்தவித்தான்' என்றும் அருளினர்.

இதனால் இறைவர் காமரிபுவாதல் குறிப்பிக்கப்பட்டது.

சமஸ்த கல்யாண குணங்களினுமேலோங்கிப் பெரியபுகழ் படைத்தமையினாலன்றோ அப்பரப்பிர்ம்ம பகவானுக்குச் சிவ என்னுந் திருநாமம் போந்தது எனவும், அச்சிவசப்தத்தை எக்காலத்தும் எவ்விடத்தும் உச்சாரணஞ் செய்தல் வேண்டுமென்றும் அங்ஙனஞ் செய்தலால் உலகிற் பயின்ற பாவமனைத்தையும் தவிப்பது சிவ என்னுந் திருநாமம் என்பாராய் அச்சிவ சப்தத்தை 'பொருள் சேர்புகழ்' என்றமையினால் தெரிப்பித்தும் அதனை உச்சாரணஞ்செய்வாரைப் 'புரிந்தார்' என்றும் ஐந்தாவது திருக்குறளில் உபதேசித்தனர்.

வீரிய பலத்தினால் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் அப்பரப்பிர்ம்ம பகவானார் என்பதை உணர்த்துதற்கு 'தனக்குவமை யில்லாதா' னென்று எழாவது திருக்குறளில் அமைத்தருளினர்.

தருமை அரிய ஔதாரிய மகராலயர் அப்பரப்பிர்ம்ம பகவானார் என்பதை உணர்த்துதற்கு 'அறவாழியந்தண' னென்று எட்டாவது திருக்குறளில் வாழ்த்தினர்.

அங்ஙனம் ஸ்மிருதியிற்கண்டவாறு அப்பரப்பிர்ம்மபகவானுக்கு அவ்வாறு குணங்கள் உளவாமுறையை மேலே உரைத்த குணங்கள் தோறும் பிரயோகித்தமையோடமையாது சாமவேதத்தைச் சார்ந்த சாந்தோக்கிய உபநிடதத்திலும் சர்வஞ்ஞானோத்தரத்திலும் முறையே காணப்படும்.



"சர்வஞ்ஞதை முதலிய எண்குணங்களை குறிப்பிக்குமாறு ஒன்பதாங் குறளில் 'எண்குணத்தான்' என்றும் இவ்வியல்புடைய பரப்பிர்ம்ம பகவானாகிய கடவுளை அடைக்கலமெனச் சார்ந்தவரே ஜனனசக்கரத்தைக் கடக்கவல்லுநராவாரென்பதை விளக்குவாராய்ப் பத்தாந்திருக்குறளில் 'பிறவிப்பெருங்கடல் நீந்துவரென்றும் அருளினர்.

சு. நடேச தேசிகர்,
கவர்ன்மெண்ட் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,
மேலக்காசாக்குடி, நெடுங்காடு.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

பெரியீர்!

பதிபசுபாசம் அநாதிநித்த மென்பதற்கு ஆகமங்களிற் போலவே வேதங்களினும் பிரபல பிரமாணங்கள் பலவுள வென்பதை வேதவித்துக்கள் துணிந்துகாட்டுவாராயினும் வேதங்களை யாராய்ந்ததனை யறுதியிட்டுத்தெளிந்ததாக வெளிவந் துலாவும், வேதாந்த சாஸ்திரவாதிகள் துணிந்து கூறும் வாக்யங்களையே இதனடியிலெடுத்துக்கொண்டு அவர்கள் கூறும்வாக்யங்களாவது அவர்களுக் காதாரத்தை யுண்டுபண்ணுகின்றனவா வென்பதை விவேகிகளறிந்து அவைகள் முப்பொருளும் அநாதி நித்திய மென்பார்க்கே பரமசாதகமாயுள்ள வாதாரமா மென்பதை யுணருமாறு தெரிந்தவரை விளக்குகின்றேம். அவையாவன:—

வேதத்தில் பிரம மொன்றே சத்தியம் மற்றவை மித்தைகாலத்திரயத்தினும் பிரம மொன்றேயுள்ளது. இரண்டாவது பொருளில்லை என விளங்குகின்றது என்று வேதாந்த சாஸ்திரமென வழங்கும் நூல்களில் கணித்துள்ளார்.

ஆகமங்களில் பதி பசுபாச மென்று முப்பொருள்களும் அநாதிநித்திமாயுள்ளன வென விளங்குகின்றது என்று கணித்துள்ளார்.

இவ்விரண்டின் றுணிவும் ஒன்றே என்பதைச் சமஞ்செய்து சீர்தூக்குங்கோல்போ லமைந்தொருபாற் கோடாமையே தம்பெருங் குணமாகக் கொண்டொழுகும் நல்லோரியாவரு மறிந்ததே. அங்ஙனமல்லாதார் தத்தமக்கேற்றவாறே கூறியிடர்ப்படுவோராயினர், என்னே ?

மேலேகாட்டிய வேதாகமங்களின் வசனங்களால் வேதத்தின் றுணிபொருள் ஒன்று என்பதும் ஆகமத்தின் றுணிபொருள் மூன்று என்பதும் வியக்தமாகத் தெரிய அவ்விரண்டின் றுணிபொருளொன்றே எனக்கூறியது தவறே போலுமெனின் அற்றன்று! அவ்விரண்டின் றுணிபொருளொன்றே என்பதை நியாய வாயிலாய்க்காட்டி நிறுத்துவாம்.

வேதத்தில் பிரமம் ஒன்றே சத்தியம் என்பது பதியையும் மற்றவை மித்தை என்பது பாசத்தையும் விளக்கியபடி யாம். இவ்வுபதேசங்களைப்பெற்றுய்ய பதியுமாகாமல் பாசமுமாகாமல் நின்ற பொருளெதுவோ அதுவே ஆன்மா (பசு) வாம் எனப்பெறப்படும் நியாயத்தால் முப்பொருளும் அநாதிநித்தியமா மென்பது நன்கு விளங்கும். இங்ஙனம் வேதம் குறிப்பித்துணர்த்திய பதி பசுபாச மென்னும் முப்பொருள்களின் நிச்சயத்தையே ஆகமம் பாடியம்போல் நின்று திரிபதார்த்தமும் அநாதி நித்தியமா மென்பதைக் கண்டா கோஷமாய் முழக்குகின்றது என்பர் ஆகமவல்லுநர் இதுவொன்றே.

வேதம் பொதுநூலும் பிருதிவிதத்துவமுதல் நாததத்துவ மீறாய்க்கிடந்த முப்பத்தாறு தத்துவங்களு ளொவ்வொன்றனைப் பரமெனக் கொள்ளவேண்டிய பரிபாகி களையுத்தேசித்ததும் அன்றி உத்தம பரிபாகிகளால் தத்துவாதீதமாகிய சிவ (பிரம) மொன்றே பரமெனத் தாரகமாயுள்ளதென வறியத்தக்கதும் ஆகமம் சிறப்பு நூலும் அதில் எங்கும் பிரகாசிக்கும் சிவபரம் பொருளே பரமெனத் உத்தமசத்திநி பாதர்களே யடைந்து பதி பசுபாச நிச்சயங்களையுள்ளவாறு தெரிந்து பெத்தமுத்தி யிரண்டிடத்தும் விட்டு நீங்கா வுயிர்க்குயிராய் அத்துவிதமாய் நிற்கும் பரசிவபிரபுவுக்குத் தாமினாவடிமை யென்று கண்டன்புற்று ஒன்றோடிரண்டெனுச்சமரச சொருப சுகமடைந்துய்ய வேண்டியதுமாம் என்பர்.

இது "வேதமோடாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாதனுரையிவை நாடிலிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க்க பேதமே. என்றுந் திருமந்



திர வீதியானும், "வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க ளாதி நூலநாதியமலன் றரு நூலிரண்டு மாரண நூல் பொது சைவமருஞ் சிறப்பு நூலாம், நீதியினுலகர்க்குஞ் சத்திநி பாதர்க்கு நிகழ்த்தியது நீண்மறையினொழி பொருள் வேதாந்தத், தீதில் பொருள்கொண்டுரைக்கு நூல் சைவம் பிறநூல்திகழ் பூர்வஞ் சிவாகமங்கள்சித்தாந்தமாகும" என்னுஞ் சிவஞான சித்தியாரானும், "குடிலை யென்னுந் தடவயனுப்பணருள் வித்திட்டுக் கருணை நீர்பாய்ச்சி வேதமென்னும் பாதபம் வளர்த்தனை பாதபமதனிற் படுபயன் பலவே யவற்றுளிலை கொண்டுவந்தனர் பலரே யிலையோரீஇ, தளிர்கொண்டுவந்தனர் பலரே தளிரோரீஇ, யரும்பொடு மலர்பிஞ்சருங்கா யென்றிவை விரும்பினர் கொண்டு கொண் டுவந்தனர் பலரே யவ்வாறு றப்புமிவ்வாறு பயப்ப வோரும் வேதமென் றுச்சியிற்பழுத்த சாரங்கொண்ட சைவசித்தாந்தத்தேனமுதருந்தினர் சிலரே" என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானும் நன்கு விளங்கும்.

வேதத்தில் பிரமமொன்றே சத்தியமென்ப திங்ஙனமாகட்டும். இரண்டாவது பதார்த்தமில்லை யென்பதென்னுமோவெனின், முன்னைய வசனத்துக்குக் கூறிய பொருளையுய்த்துணர் வல்லார் இதற்குத்தாமே சமாதானங் கூறுவர். பிரம மொன்றேயுள்ளது என்றவேத ஒருவசனத்தானே பிரம மொன்றும் இங்ஙனமுணர நின்ற ஆன்மா (பசு) வொன்றும் இங்ஙனமுணர வொட்டாது இற்றைவரைத்தடுத்து நிற்கும் (பாச) மொன்றுமென மூன்றுபொருளுஞ் சித்திப்பதை விவேகித்துணரும் பாக்யமுடையாரறியாமற் போகார். பிரம மொன்றே சத்தியம் மற்றவை மித்தை என்பதாதிவேதோபதேசங்களைப் பெற்றுய்யவேண்டிய ஆன்மா (பசு) பிரமத்திற் கன்னியமாயாண்டும் வேண்டப்படுதலால் யாமேலே காட்டிய பொருளே சால்புடைத்தா மென்பதை நியாயவாதிகளறிவர். ஆயின் வேதாந்தநூல்களில் பிரமம் "சுசாதி விசாதி சுவகத பேதரகிதம்" என்று கூறியிருக்கப்பிரமத்திற் கன்னியமாய் ஆன்மா (பசு) யாண்டும் வேண்டப்படுதல் குற்றமாகாதோவெனின் "சுசாதி விசாதி சுவகதபேத ரகிதம்" என்று வேதாந்த நூல்களில் கூறப்படும் பிரமமே தன்னையிங்ஙனந் தெரிந்து கொள்ளவேண்டிய தவசியமில்லை என்பதைத் தன்னிலக்கணமுந் தலைவனிலக்கணமுமுள்ளவாறுள்ளுவா ரியாருந் தெள்ளிதினறிவதொன்றும். ஆகவே அவ்வுபதேசங்களால் உணரவேண்டியது ஆன்மாவேயாம் என்பது கண்கூடாம். இங்ஙன முய்த்துணருமாற்றலின்றியோர் ஆற்றலிருந்துந்தூர

பிமாணம் வழிவிடாமையோ எடுத்துக்கொண்ட கருத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்னு மிச்சையோவப்பொருட்டுணிவு கண்டிலர். பிரமம் தன்னை யிங்ஙனந் தெரிந்துகொள்ள வேண்டாதபோது "சுசாதி" என்பதாதி அவ்வுபதேசமே அவ்வுபதேசத்தைப் பெற்றுய்ய நின்ற ஆன்மா (பசு) வைத்தந்நு நிற்றல் கண்கூடாம். பாரமார்த்திகத்தில் வேதத்தின் ஞானி பொருள் ஒன்றே எனக் கொண்டாரும் வியவகாரத்தில் ஜகசீவபர மென்னுமுப்பொரு ளொப்புவதுண்டே யெனின், அஞ்சும் மூன்றும் வியவகார பார்மார்த்திகங்களினும் எட்டேயாவது போல வியவகார பாரமார்த்திகங்களினும், பதிபதியே பசு பசுவேயாம், பதிபசுவாகாது பசு பதியாகாது ஆயினும் பதிபசுவாயும் அல்லவாயும்,நிற்கும் பசு அங்ஙன நில்லா. இது "தருமுயிரவனையாகா வுயிரவைதானுமாகான் வருமவனிவைதானுயும் வேறுமாய் மன்னி நின்றே" என்றும் "சிவன் சிவனென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற் சிவனருட் சித்திவனருளைச் சேருஞ் சித்திவன்றான் பவங் கெடுபுத்தி முத்திபன்றுஞ் சித்தவற்றிற் படியுஞ் சித்தறிவிக்கப்படுஞ் சித்துமிவன்றான் அவன்றானே யறியுஞ் சித்தாதலினுலிரண்டு மனைந் தாலு மொன்று காதநந்நியமாயிருக்கும்" என்றும் "உலகெலாமாகி வேறுமுடனுமாய்" என்றும்வரும் சிவஞானசித்தித்திருவிருத்தங்களாலும்;நன்கு விளங்கும். பிரமம் சுஜாதி விஜாதி சுவகத பேதரகிதம் என்று உபநிடதங்களில் யாண்டும் கூறப்பட்டின்று, அனுல் சுவேதாசுவதரத்தில் சருவஞ்ஞன் கிஞ்சிஞ்ஞன் இருவர் அநாதிநித்யர் என்றும் பிறப்பற்றஅநாதி யானமாயை ஒன்றுளதென்றும் இன்னும் பலவாறாய் முப்பொருளுண்மை கூறப்பட்டுள்ளது. பின் உபநிடதங்களிலும் ஒரு மரத்தில் இருபறவைக ளிருக்கின்றன. ஒன்று கர்மப்பயனையருந்துகின்றது மற்றொ ன்றையு மருந்தாமலே விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆயின் முத்தி யென்பதென் னையோ வெனின் பெத்த சசையில் மலமிக்குமு முத்திதசையில் சிவம் பேறு மெய்துதலாம் "சித்தமமைதவிக்துச் சிவமாக்கியெனையாண்ட" வென்றார் தமிழ்வேத மிதற்குச் சான்றும்.

இன்னும் வரும்.

தி. சு. செறியாப்பிள்ளை,
நார்தக்குடி.

சிவமயம்,
திருச்சிற்றம்பலம்.

# இருமணி.

## (சத்தும் சதசத்தும்.)

"எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்தும்
தானேயாகிய தயாபரன் எம்மிறை."

திருவாசகம்.

முன்வாசகத்தில் (கடவுளும் உலகும்) குறித்துள்ள இரண்டு திருமந்திரங்களின் பொருளை விளக்கப் புகுவாம். இவ்விருமந்திரங்களும் ஒருவாறு ஒன்றாகத் தோற்றுவதால், யூகித்துணராவிடின், அவைகளின் பொருள் கெட்டுவிடும்.

பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம்
தன்னை மறைத்தது தன் கரணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கரணங்களாம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்.

இம்மந்திரங்கள் உயிரின் பந்தமோட்சநிலைகளை யுணர்த்தி, அது தத்துவ தரிசனம், ஆத்மதரிசனம், சிவதரிசனம் ஆகிய முத்திமேணியில் ஏறிச் செல்வதை விளக்கும். முதன் மந்திரத்தில் பார்ப்பவன் கண்ணுக்குப் புலப்படுவது ஒரு பொன் அணி. இதில் இருவகைக் காட்சியுளது. அதை பொன்னாகவாவது அல்லது அணியாகவாவது நோக்கலாம். பொன்னாக நோக்குங்கால், அதன்நிறம், மாற்று, இடைமுதலியவை முன்னுக்கு முனைத்து நிற்கும். அப்பொழுது அது அணியென நமக்குத் தோற்றாது. அது போலவே, அதை அணியாக நோக்குங்கால் அது காதணியோ, கழுத்தணியோ கையணியோ கால் அணியோ வென்பன முனைத்து நின்று அது இன்னவிதமான பொன் என மனத்தில் வாராது. ஆயின் இவ்விருவிதக் காட்சி நிகழும்காலத்திலும், பொன்னுவது, அணியாவது, பார்ப்பவனுவது

உளதாகாமற்போகவில்லை. அவைகளை மித்தையென்றும் பொய்யென்றும் சொல்லுவதற்கிடமில்லை, அவசியமுமில்லை. பொருள் ஒன்றுயிருந்தும் காட்சி பேதத்தால் வேறுகின்றதன்றி நாம் எவ்விதத்திலும் மருண்டதில்லை. ஒருபொருளை இருகாட்சியுடைத்தாயிருப்பதில், நம்முடைய மனமும் ஒரு காட்சியினின்றும் மற்றொரு காட்சிக்கு மாறும் இயல்புடையதாயிருக்கின்றது. இவ்விருகாட்சியினும் பயனுண்டு. ஒருவன் ஒரு நகை வாங்கவேண்டுமென்று ஒருநகைவியாபாரியின் கடைக்குச்சென்று நகையைப் பரீட்சிக்குங்கால் அவன், பொன்னும், நகையும் நாமரூபமாத்திரந்தானே, அவையெல்லாம் மித்தைதானே யென்று திடங்கொண்டு பேரம் செய்வானுனால் அவன் மோசம் போகானே! ஒருவன் தனக்கு என்ன மாற்றுத்தங்கத்தில் என்ன நகை வேண்டுமென்று நிச்சயஞ் செய்துகொண்டு, வியாபாரி கொடுக்கும் நகை தான் கோரும் மாற்றிலிருக்கிறதாவென்று பார்த்து, பார்த்து, பிறகு தனக்குப்பிடித்தமான நகையா வென்றும் சோதிப்பான். இவ்வுதாரணத்தை மேற்கொண்டு, திருமூலநாயனாரும், உயிர்க்கும் உடலுக்கும், (Subject and Object) உள்ள இயைபினை உணர்த்தப்புகுந்தார். 'தன்' என்னும் பதம் உயிர், சீவன், பசு, ஆன்மா என்னும் பரியாயபதங்களால் உணர்த்தப்படும் புருஷனை உணர்த்தி நின்றது. 'தன்கரணங்களாம்' என்றதனாலும் இதன் பொருள் மேலும் நிலைநாட்டப்பட்டது. அப்படிக்கன்றி 'தன்' என்னும் மொழி மாயாவாதிகள் கூறுவதுபோல் பரம்பொருளையுணர்த்தாது. 'தன் கரணங்களுக்கு' மேல் நின்றது அவர்கள் மதப்படி பரமானதால் அவர்களும் இப்பொருள் கூறி இடர்ப்பட்டார்கள். இப்படி தப்பர்த்தம் செய்யக்கூடுமென்று எண்ணியோ, நம் நாயனாரும், "மரத்தை மறைத்தது" என்று எடுத்துப் பின்னும் அருளிச் செய்தார். 'உயிர் உடல்' (Mind and Body) என்ற முன்னொரு வியாசத்தில், நம் நாயனார் கருத்தின்படி இவற்றிற்குள்ள சம்பந்தம் இன்னதென விளக்கினோம். அதுவும், உயிர் உடலுக்கு இதம்தரக்கூடிய பொருளையும் செயலையும் நாடி அவ்வுடலுக்கே உழைத்து உலகோடு விஷயீகரித்து நிற்கையில், தன் உயிரும் உலகோடொன்றாகி, தான்கெட்டு நிற்கின்றான், மறைந்துவிடுகின்றான். நம் நாயனாரின் சொற்கூற்றைக்கவனிக்க ஒவ்வொருசமயமும், இதுவெல்லாம் மித்தை மித்தை யென்று மொழியவில்லை. 'மறைத்தது', 'மறைந்தது' என்றே மொழிந்தார். உயிராவது உடலுலகாவது மித்தையன்று, பொய்யன்று. உயிர் உடலோடு ஒற்றி விஷயீகரித்து நின்றபோது (Objective condition) உயிர் உடலினால் (Object) மறைக்கப்பட்டது.



உயிரும் உலகை மறைந்து உலகோடொற்றி நில்லாதபோது, உலகு மித்தையானதில்லை. உயிரில் மறைந்தே நின்றது. இழந்து நின்றது. சிலமதவாதிகள் இவையெல்லாம் சொல்வாதமென்பர்கள். ஆயின், ஒவ்வொரு மொழியும் ஒரே பொருளில் உபயோகிக்க வேண்டுமென்னும் தர்க்க நியாயத்தைக் கைப்பற்றி, ஒவ்வொரு மொழியையும் சரியாகப் பிரயோகிக்க வேண்டியது அவசியமன்றோ? இவ்விதமாக மொழிகளைச் சரியான பொருளில் உபயோகப்படுத்தாமல் மயக்கம் கொள்ளும்படி கூறுவதனாலன்றோ அநேக துர்விவாதங்களும் தலையெடுத்தன. இதுநிற்க. இவ்விதமாக உயிர் உடலோடு ஒற்றி மறைந்து கிடக்கும் நிலை அதன் பந்தநிலை அல்லது பாசபசுநிலை யென்றபேர். உயிரை மறைத்து நிற்பதற்குப் பந்தமென்றும் பாசமென்றும் மலமென்றும் அவித்தை யென்றும் பேர். தன்னையும் உலகையும் வேறுபடுத்தி, இவ்விரண்டின் உண்மைச் சொருபத்தை உணர்வது, தான் உலகல்ல வென்று தன் சொருபத்தில் நிலைக்கும்போது, உயிர் தத்துவ தரிசனத்தையும் ஆன்மதரிசனத்தையும் அடைந்ததாகும் (இவைகளின்விவரங்களை உண்மைநெறிவிளக்கத்திலும், சித்தாந்தத்தில் வெளிவந்த 'திரிபதார்த்த தசகாரியத்திலும்' பார்க்கவும்). இவ்வுண்மையுணர்வினால், உண்மைநீதிபோதம் (Ethics) முற்றும் விரிகின்றது. ஒருவன், உலகாசையில் முழுகி நிற்கவும், தன் அறிவு இச்சையெல்லாம் மழுங்கி, தீயசெயல்களைச்செய்து, துன்பத்தில் ஆழ்கிறான். இவ்வுலகப் பற்றினின்றும் விடுபடவும் விடுபடவும், தானும் துயரினின்று விடுபட்டு, தன்மேலான குணங்களையும், அறிவையும் விளக்கிப் பழக்கத்தினால், ஆன்மசுத்தி அடைகிறான். இவ்விதமாவதும், உயிரின் ஓர் முக்கிய தன்மையாகிய அதுவது ஆதல் தன்மையால் உண்டாகியதென்று முன் வியாசத்திலேயே விரித்துள்ளோம். நாம் கண்டமட்டும், இவ்விரிவும், சைவசித்தாந்த நூல்களிற் கண்டதன்றி, மற்றெந்த மதவாதிகள் நூல்களினும் விரிக்கக் கண்டிலேம். இத்தன்மையினால், இது சத்தும், அசத்தும் ஆகாமல் நடுவே நின்று சதசத்தென்று பேர்பெறுகின்றது,

இத்தன்மையை, ஆணும் பெண்ணும் அல்லாத அலியென்று ஆன்மாவை "ஒழிவிலொடுக்கம்" என்னும் அரிய நூலில் கண்ணுடைய வள்ளலார் கூறுகின்றார். அலியெனினும், அதன்பாலைக் கூறும்போது, ஆணுறுப்பு மிகுந்தால் ஆணாகும், பெண்ணுறுப்பு மிகுந்தால் பெண்ணாகு மென்று தமிழ் இலக்கணம் கூறும். ஆகையால், அலியாகிய ஒருவனை 'அவன்' என்றாவது 'அவள்' என்றாவது அழைக்கப்படுமன்றி, 'அது' என அழைக்கப்

படான் அதுபோலவே, உயிரும், அசத்தாகவாவது, சத்தாகவாவது நிலை பெற்று வாழுமன்றி, தனித்து வாழாது. அதாவது, இவ்விருபொருளுடன் பற்றி நில்லாது தானாகத் தனித்து நில்லாது. கடவுளாவது உலகமாவது இல்லாவிடில், உயிர் என்ற ஒருபொருளே இருக்கமாட்டாது. ஆகையினால் நம் மெய்கண்டநாதரும் இந்நிலையை இரண்டு உதாரணமுகத்தால் விளக்குகின்றார். அவையாவன ஊசலும் (ஊஞ்சல்) சிறைசெய் நீருமாம். ஊஞ்சல் கயிற்றினால் ஒன்றில் கட்டியிருக்கவேண்டும். வடம் அற்றால் பூமியிற்றான் விழவேண்டும். ஆகாயத்தில் தனித்து நில்லாது. ஒரு ஏரியில் கட்டுண்ட நீரும், கரையுடைந்தவழி அங்கு நில்லாது வேறு புலத்து விரைந்து செல்லும். முற்கூறிய உதாரணத்தை முன்னிட்டு நம நாதர் 'அத்திப்பழம் ஏன் கீழே விழுகின்றது' என்னும் கேள்வியின் பொருளை உணர்ந்திருந்தாரென்று வெளியாகிறது. மரத்தின் பலத்தால் தாங்கப்பெற்று அதன் ஆதரவால் ஊஞ்சல் மேல் நின்றது. அதன் வலிவு குன்றியவழி, இன்னொருசத்தியால், பூமியின் ஆகருஷண சக்தி (Force of Gravity) யால் இழுக்கப்பட்டு பூமியில் சேருகின்றது. இவ்விரண்டு சக்தியின் ஊஞ்சல் இடைப்பட்டு நின்றது. எனினும், அது மரம் அல்லது பூமியுடன் இணைந்தே நிற்கவேண்டும் பூமியின் அபாரசத்தியால் இழுக்கப்பட்டும், மரத்துடன் கொஞ்சகாலம் சேர்ந்து நின்றது கொஞ்சகாலம் மட்டுந்தான். மரத்தின் கொம்பில் பழம் பழுத்தவுடன் கொம்பு எவ்வளவு இழுத்தாலும் பழம் நில்லாது, மண்ணுடன் சேர்ந்து மண்ணாய்விடும்.* அற்றதும் பூமியைப்பற்றியதும் ஒரே சமயம். அதுபோலவே பாசம் கழன்றால் பசுவுக்கிடம் பதியாம்.

இன்னும் வரும்.

ஜே. யம். நல்லசாமி பிள்ளை

B. A., B. L.

* இவ்வுதாரணத்தை இனிது கவனிக்கக் கோருகின்றேன். உயிரும் மரமும் உயிரும் உடலுமாம். மரத்தின் உயிர்நிலையே மீண்டும் பழமும் வித்துமாகும். அரும்பு, பூ, பிஞ்சு, காயாயிருக்கும் வரை மரத்தின் சாரம் (Sap) அவைகளில் சென்று கொம்பில் ஒட்டியிருக்கும். மாம்பிஞ்சை ஒடித்தால், பால் ஒழுகக் காண்கின்றோம். இதுதான் வினைப்போகம். சாரம் செல்லாமல் பால் அற்றபோது பூவும் உதிரும், பிஞ்சும் உதிரும், காயும் உதிரும். இவை சகல ஒழுங்கு காயில் சார்முற்றிலும் ஊறினபின்பேசில் பழமாகி, பாலற்றுநின்ற மேல் பழம் தானும் உதிரும். இது வினைப்போகம்முற்றிலும் துய்த்தநிலை. இருவினையொப்பும் மலபரிபாகமும் எய்திய நிலை. மண்ணாய் விடினும், வித்து மடிவதில்லை. அநேககாலம் மண்ணில் புதைந்து கிடக்கும்.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# கிரியாமார்க்கம்.

மானுடப்பிறப்பெடுத்து, முன்செய்த புண்ணியவசத்தால் சற்சமயமாகிய சைவசமயத்தை அனுட்டிக்கும் பெரும்பேறுவாய்க்கப்பெற்ற ஆன்மாக்கள் கடைத்தேறுதற்குரிய சோபானக்கிரமம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குபாதங்களுமாம் என்பது சித்தாந்த நூற்றுணிபு.

எல்லாச்சமயங்களுக்கும் பொதுவகையால் வேண்டப்படும் ஒழுக்கங்களிற் சிறந்து, அதன் பின்னர் சைவசமயத்துக்குச் சிறப்புவகையால் வேண்டப்படும் இலக்கணங்கள் அமைந்து, சிவநேசம் உடையராய், திருக்கோயில் அலகிடல், மெழுகல், திருநந்தவனம் வைத்தல், மலர்பறித்தல், பூமாலைகட்டுதல் முதலிய சிவகைங்கரியங்களைச் செய்வோர் சிவநாட்டம் பெரிதும் வளரப்பெறுவர். இவர்கள் தமது உடலைச் சிவபணிக்கு அர்ப்பணம்செய்து அங்ஙனம் செய்யுமுகத்தால் தமது உடற் செயல் வாயிலாகச் சிவனைத்தரிசித்தலின், இவர்களது தரிசனம் படர்க்கைத்தரிசனம் எனப்படும். இதுவே சரியாமார்க்கம் எனப்படும்.

இந்தச்சரியை வாயிலாகச் சிவனைப் புறப்புறமாகக் கண்டு, அக்காட்சியின் முதிர்ச்சியுற்றார், தம்மிடத்தே முன்னிருந்த சிவநாட்டம் பின்னும் ஒரு மடங்கு விருத்திபெற்றுச் சிவகர்மமுடையராகி அந்தச்சிவனை முன்னிலைப்படுத்துப் பூசித்தலாகிய சிவார்ச்சனை முதலிய பணிகளில்நிற்பர். இவர்கள் சிவனைத்தரிசிக்கும் தரிசனம் முன்னிலைத் தரிசனம் எனப்படும். இந்தத்தரிசனம் சிவனைத் தமக்குப் புறத்தேகாணும் தரிசனமாதலின் புறத்தரிசனம் எனவும்படும்.

இந்தமுன்னிலைத்தரிசனத்தினும் முதிர்ச்சியுற்றுத் தம்மிடத்துள்ள சிவநாட்டம் பின்னுந்தடிக்கப் பெற்றார் சிவனைத் தம்முட்காண்டற்குரியதாகிய யோகத்தைச்சாதித்து, அந்தச்சாதனை வாயிலாக அப்பெருமானைத் தமது இருதயகமலத்தின் வைத்துக்காண்பதாகிய தன்மைத்தரிசனம் கைவரப்பெறுவர்.

இந்தத்தரிசனத்தால் இவர்கள் சிவனைத் தம்முன்னே காண்பாராயினும், தம்மை அவரின் வேறெனத்துவித பாவனை பண்ணுதலால் இத்தரிசனம் அகப்புறத்தரிசனம் என்னப்படும்.

இந்தத்தன்மைத்தரிசனத்திலும் முதிர்ச்சியுற்று, தமது செயலிறந்து, அங்ஙனம் செயலிறத்தல் காரணமாக மனமும் இறந்து, சிவத்தைத் தம்மின் வேறாகாத அத்துவிதப் பொருள் எனக்கண்டு சிவானந்தத்தின் முழுகுவோர், தன்மைமுன்னிலை படர்க்கை எனும் இடவேறுபாடுகள் சிறிதும் இன்றி எல்லாம் சிவமாகத்தோன்றும் ஆனந்தத்தை அநுபவிப்பார். இதுவே உண்மைத்தரிசனமாதலின் இது அகத்தரிசனம் எனப்படும். இந்தத்தரிசனம் முதிரும் இடத்து இதற்குத்தரிசனம் என்னும் பெயர்தானும் அமைவது கூடாதாகும். இது மனவாக்கிறந்த அநுபவமாகும்.

இறுதிக்கண் நிற்பனவாகிய யோகஞானங்களுக்கு வழிகாட்டிகளாகவுள்ளன முதற்கண் நிற்பனவாகிய சரியை கிரியைகளாதலானும், யோகஞானங்களை அனுட்டித்தற்குரிய பக்குவம் மிகச்சிலர்க்கன்றி இல்லாமையானும், சரியை கிரியைகளை அனுட்டித்தல் சைவசமயிகள் சகலருக்கும் இன்றியமையாது வேண்டப்படும் சாதனமாகும்.

நாம் மனத்தாற் கடவுளை வணங்குதற்கெல்லாம் காயத்தால் அவரைச் சேவித்தல் பெருந்துணையாகுமாதலால், காயத்தாற் செய்யப்படுவனவாகிய சரியை கிரியைகளைச் சமய சாத்திரங்கள் சொல்லும் நெறியில் நின்று கிரமந்தவறாது அனுட்டிப்பது எமக்குப் பெரிதும் வேண்டப்படும். மனத்தை ஒடுக்கிக்கடவுளிடத்தே ஒடுக்குதற்கு எல்லாரும் பக்குவமிலை அல்லராதலானும், இங்ஙனம் ஒடுக்குதற்கு எம்மிடத்தே சிவநாட்டம் பெரிது வேண்டப்படுமாதலானும், இந்தச்சிவ நாட்டம் நாம் எமது காயத்தைச் சிவப்பணியிற் செலுத்துவதால் எம்மிடத்தே மிக எளிதின் வந்து சித்திக்குமாதலானும், சரியை கிரியைகளை எல்லாம் நாம் தப்பாது அனுட்டித்தல் வேண்டும். இந்த உண்மையை அறியாத இக்காலத்துள்ள நவீனவிவேகிகள் சிலர் சரியை கிரியைகளை ஏளனம் செய்வர்.

சீவர்கள் எல்லாம் உலகத்திற் சேட்டையுற்று அந்தச் சேட்டைகாரணமாக, தம்மைச்சேட்டிப்பிக்கும் திருவருளை அநுபவித்து, அவ்வநுபவகாரணமாகவே அவர்கள் எல்லாம் படிமுறையாக ஏற்றமுறுதல் வேண்டும் என்பது கடவுளுடைய பஞ்சகிருத்திய பிரயோசனத்தை நுணுகி ஆராய்வார்க்கு இனிது புலப்படும். ஆகவே சீவர்கள் எல்லாம் சேட்டையுறுதலாகிய செயன்முறை அவர்களுக்கு அத்தியாவசியமாக வேண்டப்படுமென்பது நன்றாகநிச்சயிக்கப்படும். கீழ்ப்படிக்கணுள்ளசீவர்கள் செயன்முறை பற்றியே விருத்திபெற்று, அங்ஙனம் விருத்திபெற்றபின்னரே அவ



ர்கள் கடவுளை அறிவினும், அதன்பின்னைத் தமது உணர்விலும் காணவல்லவராவர். இந்தக்கிரமத்தால் நாம்எல்லாம் தாவரதோற்றங்களும் மிருகதோற்றங்களும் படிமுறையாக அடையும் விருத்திகொண்டு இன்றறியலாம். இந்தவிருத்திக்கிரமத்தை எமது சமயசாத்திரங்கள் ஆன்மதத்துவம்பற்றி அடையும் விருத்தி, வித்தியாதத்துவம்பற்றி அடையும் விருத்தி, சிவதத்துவம்பற்றி அடையும் விருத்தி என்று மூன்றுவகையின் வைத்துவிளக்கும். ஆன்மதத்துவம்பற்றி அடையும் விருத்தியே ஆன்மாக்கள் எல்லாம் தங்கள் காயத்தாற் செய்யும் செயன்முறைபற்றி அடையும் விருத்தி எனப்படுவது.

இந்தச்செயன்முறைகள் தம்முள்ளும், நல்வினைகளைச் செய்வதால் ஆன்மாக்களுக்கு விருத்திபெரிதும் உண்டாகும். நல்வினைகளிலே சிவசத்தி அதிட்டானம் மிகப்பெரிதாகையினாலே, எந்தநல் வினைகளைச்செய்வோர் எல்லாம் அந்தச்சிவ சத்தியை அதிகமாக அநுபவித்து, அவ்வநுபவகாரணமாக அதிகமான விருத்தியைப்பெறுவர்.

நல்வினைகள் தம்மினும் சிவனை முன்னிலைப்படுத்தி அவருடைய திருவடிகளுக்கு நாம் செய்யும் கிரியைகளிலே சிவசத்தி அதிட்டானம் பின்னும் அதிகமாக உண்டு ஆதலால், எமக்குச் சிவார்ச்சனை முதலிய கிரியைகளும் அவற்றிற்கேதுவாகிய சரியைகளும் நல்வினைகளினும் அநந்த மடங்கு அதிகமாகிய பயனைத்தருவனவாகும்.

எமது சமயக்கிரியைகள் எல்லாம் பலதத்துவார்த்தங்களைக் குறிப்பாய் விளக்கி, எமது அந்தக்கரணங்களிலே அந்தத் தத்துவார்த்தங்களின் பயனை அபுத்திபூர்வமாகவும் பதியச்செய்து அங்ஙனம் பதியும் பயிற்சி வசத்தால், காலாந்தரத்திலே அந்தத்தத்துவக் கிரமங்களை நாம் எல்லாம் அநுபவத்தில் அதற்குரிய சிறந்தசாதனங்களாகும். அந்தக்கிரியைகள் எல்லாம் அதிரகசியமாகிய அந்தரங்கத்துறைகளுக்கு அறிகுறிகளாகப் பரமஞானமாகிய இறைவனால் அமைக்கப்பட்டுள்ளனவாம். ஆகவே அந்தக்கிரியைகளைச் சமயங்கற்பித்தவாறு சற்குருமுகத்துப் பெற்றுச் சிறிதும் வழுவாது எம்மால் அனுட்டிக்கற்பாலனவாகும். உபாத்தியாயரிடத்துக் கிரமமாகப் பாடங்கேட்டு அந்தப்பாடத்தை அவர் சொல்லிய முறைப்படி நாம் கிரமமாக அப்பியாசம் செய்தாலன்றி அந்தப்பாடத்தால் எமக்குச் சிறிதாவது ஒருபயன் வாய்க்கமாட்டாது. சமயக்கிரியைகள் லௌகிகபாடங்களினும் பெரிதுவிசேடமுடையனவும் அதி அந்தரங்கமானவுமாம். ஆதலால், நாம் எமது மனம்சென்றவாறு அவற்றை எடுத்தாளாது கிரமவழி நின்று அவற்றை அனுசரித்தல் ஒருதலையான் வேண்டப்படும் என்க.

ச. சபாரத்தின முதலியார்,
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமய மாட்சி.

:o:

தொகுதி 6. பகுதி 6 பக்கம் 142. தொடர்ச்சி.

அதுமாத்திரமேயோ, தமக்குமாத்திரமேயோ, தமக்கு மாத்திரமே வேண்டுமென்று பொருள் தொகுத்துக்கொள்ளாமல் தமது இன்பத்திற்கு உதவியாய் நிற்கும் மனைவி மக்கள் பெற்றோர் உற்றார் நண்பர் முதலாயினார்க்கு வேண்டுமளவும் பொருள் தொகுத்துக்கொள்கின்றார்கள். அங்ஙனம் பொருள் தொகுக்குமிடத்தும் பலர்க்கும் பயன்படுங் கைத்தொழில் உழவு வாணிகம் முதலிய முயற்சிகளிற் புகுந்து தாம் பயன்பெறுத லல்லாமலும் பிறரையும் பயன் பெறுத்துகின்றார்கள். இவ்வாறு விரிந்த அறிவு கொண்டு தாம் இன்புறுங் காலத்து அதனாற் பிறக்கும் இன்பம் விளைதலால் அவ்வின்பத்தைக் கண்டு மக்களாயினார்க்கு மேலுமேலும் இன்பமே விளையாநிற்கும்.

"தாமின்புறுவ துலகின்புறக்கண்டு
காமுறுவர்கற்றறிந்தார்."

என்ற திருவாக்கின்படி பிறர் அடையும் இன்பத்தைக் கண்டு இங்ஙனந் தாமும் மகிழும் மகிழ்ச்சி மிருகங்களுக்கு உண்டோ சொல்லுமின்! இன்னும் மக்களிற் கற்றவராயுள்ளார் ஏனைக்கற்றறிவில்லார் எய்தும் இன்பத்தினும் மிகச்சிறந்த இன்பம் எய்துகின்றார். கல்லாத மாந்தருக்கும் கற்றறிவுடைய நல்லாருக்கும் அகத்தும் புறத்தும் அறிவு நிகழுமாயினும், அவ்வறிவு கற்றவரிடத்து ததும்பி விரிந்து பெருகிப் பேரின்பந் தருதல்போலக் கல்லாதவருக்குத் தரமாட்டாதாகும்; இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும்

"கல்லாதான்ஒட்பங்கழியநன்றாயினும்
கொள்ளாரறிவுடையார்".

என்று அருளிச்செய்தனர். சாமானிய அறிவினையுடையார் மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் புறப்பொருள்களை ஆய்ந்தறிந்து அறிவுபெருகி மிக்க இன்பம் அடையமாட்டுவாரல்லர்; மிருகங்களைப்போல உண்டு உறங்கிக் கலந்து அவ்வளவினாலே மகிழ்ந்து ஒழிவர். கல்வியறிவுடையாரோ உலகத்துப் பொருள்களின் பலவகைத் தோற்றங்களையும் அவற்றின் அற்



புத அமைவுகளையுங் கண்டும், இனிய ஓசைகளையும் இசைப்பாட்டுக்களையுங் கேட்டும், பலவகைப்பட்ட சுவைகளையும் நறுமணத்தையுங் கவர்ந்தும், மெல்லென்ற பொருள்களைப் பரிசித்தும், இவற்றோடு மாணவறிவாற் பல கலைஞான நூல்களை ஓதியுணர்ந்தும் ஏனைச்சாமானியர்க்கு எட்டாத ஓர் அரிய இன்பத்தைப் பெறுவர். கல்வியறிவில்லாதவர் மனிதருள் மிருகங்களாவார்; இவ்வுண்மையை உணர்த்துதற்கன்றோ தமிழ்வேதமும்

"விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்று கூறுவதாயிற்று.

இனி இத்துணைப் பெரியகல்வி யறிவினையுடையவரும் நிலையில்லாத உலகத்துப் பொருள்களையும் நிலையில்லாத சிற்றுயிர்களையும் அவற்றின் நுட்பங்களையும் முற்றுணர்ந்து, அதனாற் பெருகிய விசேட அறிவால் விசேடமாகிய ஆனந்தத்தை அடைகின்றாரென்றாலும், அவரால் ஆராயப்பட்டனவும் நிலையில்லாத சிறு பொருள்களாய்ப் போதலின் அவற்றை அறிந்த அக்கற்றோ ரறிவும் சிறியதாய் ஒழிய, அவரைப்பற்றிய அறியாமையும் முற்றும் நீங்காததாய் நிற்க, அவ்வறியாமை வாயிலாக வருந்துன்பமும் அவரை விட்டு நீங்காமல் பிறவிகடோறும் அவரையும் துன்புறுத்தியபடியாகவே தொடர்ந்து வரும். ஆ! கல்வியால் எத்துணைப் பெரியவராயினும், அவர் உலகத்தணுப்பொருள்களைப்பற்றியும் தம்மையொத்த சிற்றுயிர்களைப்பற்றியுமே தமதறிவை இயங்க விடுவார்களாயின், அவர் ஏனைச்சாமானியர்க்கு எட்டாத விசேட இன்பத்தை அடைந்தாலும், இவ்வின்பமுங் கடைசியிற் சிற்றின்பமேயாய் நிலையாது கழியப் பின்னர் அவர் பெருந்துன்பவயத்தராயே பிறவிகளிற் பட்டு உழலுவர்! இதுபற்றியன்றோ செந்நாப்போதரும்

"கற்றதனாலாயபயனென்கொல்வாலறிவன்
நற்றாள்தொழாஅரெனின்"

என்று அருளிச்செய்வாராயினர். இனி இக்கற்றோரினும் மேம்பட்ட முனிவரோ உலகத்துப் பொருள்களின் நிலையாமையினையும் சிற்றுயிர்களின் சிற்றறிவியல்புகளையும் இனிது உணர்ந்து அவற்றின்கட் சிறிதும் பற்றில்லாமல் எல்லாப்பொருள்களினும் பெரியதாய், உயிர்ப்பொருள் உயிரில்பொருள் என்னும் எல்லாவற்றினும் நுண்ணியதாய், எல்லா அறிவுகளினும்

மேலான தூயபேர் அறிவினையுடையதாய், இங்ஙனம் பேரறிவுடையதாய் இருத்தலின் அவ்வறிவோடு பேரின்பமும் உடன் நிகழப்பெறும் பேரின்ப நிலையமாய், என்றும் நிலைபேறுள்ள அழியா முழுமுதற்பொருளாய் விளங்காநின்ற ஒப்புயர்வில்லா ஒரு தனித்தலைமைப்பெருங்கடவுளையே அறியும் பேரறிவுகொண்டு அப் பேரறிவோடு ஒருங்கு நிகழும் பேரின்ப அமிர்தசாகரத்திற் றிளைத்துப் பேரின்பவுருவாய் நிலைதிரியாது அமர்ந்திருப்பர். இங்ஙனம் முனிவரால் அடையப்பட்ட ஆனந்தமானது எல்லையற்ற பேரானந்தக் கடலாய், எல்லா ஆன்மாக்களுங் கடைசியாக எய்துதற்குரிய முடிந்த பதமாய் விளங்கும்.

என்று இதுகாறுங் கூறியவாற்றால் முழுமுதல் முனிவரர் ஈறான எல்லா ஆன்மாக்களும் துன்ப நீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையுமே அவாவி முயன்றாலும், அவ்வான்மாக்கள் எல்லாம் தத்தமக்கு அறிவு எட்டியவரையிலே உலகத்துப் பொருள்களைப்பற்றியும், தம்மையொத்த சிற்றுயிர்களைப் பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலான கடவுளைப்பற்றியும் நின்றமையால், அவ்வான்மாக்கள் மாட்டுத் தோன்றிய ஆனந்தமும் பலதிறப் பட்டதாயிற்று.

(தொடரும்)

சுவாமி வேதாசலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்,

# யாக்கை நிலையாமை.

எண்ணிலாத பிறவிகளுள்ளே மிக்க மேலாகிய பிறவி மானுடப்பிறவியே. அங்ஙனம் இம்மனிதப்பிறவியில் வருதல்மிக அருமையேயாம். அஃதெவ்வாறென ஆராயுங்கால் ஒருவன் கடலைக் கையால் நீந்திக் கரையேறுவது போலாம். இவ்வருமையான மனிதப் பிறப்பை யுண்டாக்கியது கிருபா வெள்ளமாகிய சிவத்தன்மை. திரிகரணங்களினாலும் வழிபட்டு முத்தியின் பத்தைபெற்றுய்தற் பொருட்டேயாம். இத்தன்மைத்தாகிய அச்சரீரம்



கருப்பையிலழியினுமழியும், பாலாவத்தை, தருணாவத்தை, விருத்தாவத்தைகளிலழியினுமழியும். இச்சரீரம் நிலையின்றி அழிவதுண்மையாதல் பற்றியன்றே, கபிலர் "உலகத்தீரே, உலகத்தீரே" நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து சாற்றக்கேண்மின் சாற்றக்கேண்மின், மனிதற்கு வயது நூறல்லதில்லை, ஐம்பது இரவில் அகலும், துயிலினால் ஒட்டிய இளமையில் ஓரைந்து நீங்கும், ஆக்கை இளமையில் ஐமூன்று நீங்கும், எழுபதுபோக நீக்கியிருப்பன முப்பதே என்றும்" பட்டினத்தார் "முடிசார்ந்த மன்னருமற்று முள்ளோரும் முடிவிலொரு, பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்த, ப சார்ந்தவாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர், அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே' இதைப்போன்றே இன்னுமனேகர் யாக்கை நீரிற்குமிழி யென்றும் அருளிச்செய்திருக்கின்றார்கள். குளிக்கப்போய் சேரணிவரர் சீலமாய் நாம் இச்சரீரநிலையாமையை யறிந்தும், பட்டினத்தார் "ஊருஞ்சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற, பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளும், சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல செகந்தனிலே, யாருஞ்சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே" என்றவாக்கையுமறந்து கடவுளின் வழியொழுகி அவரருளிச்செய்த நூல்களைக்கற்றுணர்ந்து முத்தியின் பதத்தைப்பெறநாடாது இவ்வுலகப்பொருளை இச்சித்துப்பஞ்சமாபாதகங்களுள் மூழ்கிப் பிறர்வாழ்வில் பொறாமை கொண்டு யானெனதென்னும் மமதையடைந்து செருக்குற்றலைவது எவ்வளவோரறியாமை. நமது ஜீவியபிரயாணத்தைச் சரியாய் முடிப்பதே நமதுகடனென எண்ணாது என்றும் வாழ்வோமென எண்ணியோ அன்றி பிறிது கருத்துகொண்டோ நம்மவரில் அனேகர் பெற்றாரை மறந்து பகவானருளிய கண்ணொளி தமது பொருண்மேன்மையால் மழுங்கப்பெற்று ஏழைகளை வஞ்சித்து அவர்களின் பொருளைக் கவர்ந்து அவர்களையும் அனேகவித கேடுகளுக்காளாக்கி கடைசியில் தாங்களும் கேடுகெட்டு அலைந்துலையும் வழியைத்தேடுகின்றார்கள். இவ்வித நிலையாமையை யுடைய நமதுயாக்கை அநித்தியமென்பதையுணராது வேறுசிலர் தம்பகை முதலியவற்றை சாதிப்பது ஆலயம், தனியிடம், மூலைமுடுக்கு முதலியனகண்டு நமதெண்ணம் ஈடேறுங் காலம் பார்த்துத் தம்பகைஞரைக் குத்தியும் வெட்டியும் அடித்துமிடித்தும் இவ்வித அனேக பாதகங்களைச்செய்து ஈற்றில் போலீசார் கைக்குளகப்பட்டுச் சிறைச்சாலையேகித் தூக்குமரத்துக்கு மாளாகின்றார்கள்.

இவ்வித சரீரம் இவ்வாறான நிலைமையுடையதாமென மனமுருகி "இப்பிறவிதப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ" வென அஞ்சி இவ்வுலகமோ மாய்கை ஆகவே இவ்வுலகவின்பங்கள் முதலிய யாவு மாய்கையேயன்றி நித்திய மன்றென்னும் உண்மையறிந்து பேரின்பமய மாகிய சிவபெருமான் குஞ்சிதபாதமே தஞ்ச மென்னும் அவரருள் வழி நடத்தலே முத்தியின்பத்தைப் பெறுதற்கு வழியென்றுணர்ந்து நடப்பதே கற்றுணர்ந்தவர்களுடையவும் அவர்களைச் சார்ந்தவர்களுடையவும் முக்கிய கடமையாதலால் சுய நலத்தை மட்டும் பாராது யாவர் சுகத்தையுங் கருதி இயன்ற மட்டும் அறம்புரிந்து நற்பெயரடைவதே மேலான காரியம்.

அ. பழனிவேலாயுதம் பிள்ளை,
காரைக்கால்.

---

## சமாசாரங்கள்.

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச்சங்கம்—ஜூலை மீ 1௳ 46, 47-வது தலயாத்திரையாகக் (கோடம்பாக்கம்) புலியூர், சாலிக்கிராமஞ் சென்று, சிவாலயவழிபாடு, தமிழ்வேதபாராயணஞ்செய்து, சிவஸ்ரீ-யதீந்திர சுவாமிகளைக்கொண்டு உபந்நியாசம் செய்வித்துத் திரும்பினர்.

---

சேலம் ஓமலூர் சன்மார்க்க சங்கம்—ஜூலை மீ 21௳ மாலை செவ்வாய்ப்பேட்டைச் செந்தமிழ்ச்சங்கம் பிரசிடெண்ட் ஸ்ரீமான் P. V. பொன்னுசாமி நாய்க்கர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழும், 22௳ காலை பாகல்பட்டி மிட்டாஜமீன்தார் ஸ்ரீமான் P. L. இராமசாமி நாய்க்கர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழும், அன்றுமாலை கோயமுத்தூர் வக்கீல் ஸ்ரீமான் C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள் அக்கிராசனத்தின் கீழும் பலவித்துவ சிகாமணிகள் பற்பல விஷயங்கள் உபந்நியாசஞ் செய்ய நான்காவதுவருட மகோற்சவ நிறைவேறியது.

---

மானாம்பதி ஸ்ரீகலியாணசுந்தர பக்தஜன சபை—இச்சபையானது சென்னைச்சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் கிளைச்சபையாக வேற்படுத்தப்பட்டு ஜூலை மீ 27௳ ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநட்சத்திர மகோற்சவமும், மாகேசுவர பூசையும், பிரசங்கமும் அச்சபையார்நிறைவேற்றினர்.

---

சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம்—சிவஞானபோதத்திற்கு மாதவச் சிவஞானமுனிவரர் இயற்றிய சிற்றுரையை யாவரும் எளிதில் விளங்கிக்கொள்ளுமாறு விளக்கமொன்று எறக்குறைய நூறுபாரங்களில், திருவாவடுதுறை யாதீனத்துச் சைவப்பிரசாரகர் ஸ்ரீமான்-பொ-முத்தையபிள்ளை யவர்கள் அச்சிட்டு முடித்தனர். சீக்கிரம் வெளிவரும்.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௯.] 1917ஆம் ஆகஸ்ட்மீ [பகுதி ௮.

## சாந்தோக்யோபநிஷத்து

### நான்காம் பிரபாடகம்.

#### கண்டம். ௯.

ஜாபாலன் ஆசிரியரை யடைந்தான். ஆசிரியர் அவனைநோக்கிக்கூறுகின்றனர்.

௨. பிரமத்தினைத்தெரிந்து கொண்டவன்போல் நீ விளங்குகின்றனை. உனக்குபதேசித்தவர் யார்.

மனிதத்தன்மையினைக் கடந்தவர் உபதேசித்தனர். ஆயினும் நீரும் அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டும்.

௩. ஆசிரியரால் உபதேசித்தாலல்லது சாந்தமுண்டாகா தெனப் பெரியார் சொல்லுகின்றனர்.

உடனே ஆசிரியர் சோடசவித்தையினை முற்றும் உபதேசித்தனர்.

#### கண்டம் ௧௦.

௧ உபகோஸலர் (காமாலயனர்) சத்யகாமனை ஆசிரியராகக் கொண்டிருந்தார். இவர் பனிரண்டுவருடகாலம் அக்னியை யுபாசித்துக்கொண்டு

சீடராக விருந்தார். உபகோஸலர் தம்மையடுத்த மற்றைய சீடர்களுக்குஉபதேசித்து ஸமாவர்த்தனம் (முடிவு) செய்து அவரவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டனர்.

உ. ஒருநாள் சத்யகாமன் மனைவி நாயகனைநோக்கி ஐய! இந்த உபகோசலர் அக்னியைஉபாசித்துக்கொண்டு தங்களிடம் சீடராக விருந்துகொண்டிருக்கின்றனனே. இன்னம் இவனையேன் வீட்டிற்கு அனுப்பவில்லை. இங்ஙனம் செய்தால் அக்கினி தங்களைக் கோபித்துக் கொள்ளாதோ என்றாள். ஆசிரியர் மவுனமுற்றுச் சீடனிடத்து வேலைவாங்கி வந்தனர்.

ந. உபகோஸலர் துக்கத்தால் புசியாதிருந்தார். ஆசிரியர் மனைவியவரைநோக்கி ஏன்புசிக்கவில்லை யென்றாள். அதற்கவர் என்னிடத்து அனேக இச்சைகளிருக்கின்றன அவைகளின் வியாதியால் புசிக்கவில்லை யென்றனர்.

ச. இவரிடத்து அக்கினிகள் மிகப்பிரீதியடைந்து இவன் நம்மிடத்து மிகத்தொண்டு செய்கிறான். இவனுக்கு உபதேசம் செய்யவேண்டுமென எண்ணின.

ரு. பிராணன் பிரமம், கம்பிரமம், க்கப்பிரமம் என்றன. பிராணனைத் தெரிந்தேன் மற்றைய இரண்டும் தெரியவில்லை என்றனர். கம் மாகாயம், க்கம் ஆனந்தம், முடிவில் மகாகாயமும் ஆனந்தமும் பிரமமே என்றன.

கண்டம் கக.

க. காருகபத்தியமென்ற அக்னி அவரைநோக்கி ஐய! பிருதிவி அக்கினி அன்னம் ஆதித்தியன் இந்நான்கும் என் சரீரங்கள். ஆதித்தியனிடத்தில் எந்தப்புருடன் தோன்றுவனோ அவனே நான், நான் அவன்.

உ. இங்ஙனம் அறிந்து எவன் உபாசிப்பனோ அவன் பாபரகிதனாகி மேலுலகமடைவன். தீர்க்காயுள் பெறுவன், சோதியாய் விளங்குவன், வம்சம விருத்தியடைவன். அவனை இம்மைமறுமையில் நாங்கள் இரட்சிப்போம் என்றது.

கண்டம் கஉ.

க. பின்னர் தட்சணாக்கினி, அவரை நோக்கி ஐய! நீர், திக்குகள், நட்சத்திரங்கள், சந்திரன் இவை யென்சரீரங்கள். சந்திரனிடத்துள்ள புருஷன் நான்.



உ. இங்ஙனம் அறிந்து எவன் உபாசிப்பனோ அவன்பாபரகிதனாய், மேலுலகமடைபவனாய், தீர்க்காயுள் வகித்தவனாய், சோதியாய், வம்சவிருத்தியுடையவனாய், இம்மை மறுமையில் எம்மால் போற்றப்படுபவனாயிருப்பன் என்றது.

கண்டம். கந.

க. பின்னர் ஆகவனீயாக்கினி அவரை நோக்கி ஐய! பிராணன், ஆகாயம், சுவர்க்கம் மின்னல் இந்நான்கும் என் சரீரங்கள். மின்னலில் தோன்றும் புருஷன் நானே.

உ. இங்ஙனமறிந்து எவன் உபாசிப்பனோ அவன் பாபத்தினின்றும் நீங்கி, மேலுலகமடைந்து, தீர்க்காயுள்பெற்றுச்சோதிசொரூபமாய், வம்சவிருத்தியடைந்து, இம்மைமறுமையிலும் எம்மால் ஆதரிக்கப்படுவான் என்றது.

கண்டம் கச.

க. இந்த அக்னி வித்தையே ஆன்மவித்தையாம்; இனி உனது குரு வந்து இனி உபதேசிப்பர் என்றன அக்கினிகள். ஆசிரியர் உபகோஸலரைக் கூப்பிட்டார்.

உ. ஏன் என்றனர். நினது முகம் பிரமசாயை போன்றுவிளங்குகின்றதே யார் உபதேசித்தது என்றனர். எனக்கார் உபதேசிப்பர், இங்கு அக்கினி முன்போல வில்லாமல் இப்போது வேறு விதமாகத் தங்களுக்கு முன் விளங்குகிறதே என்றனர். அக்கினிகள் உபதேசித்தனவோ என்றனர்.

ந. அக்கினி உபதேசித்த விதங்களைச்சொன்னார். ஆசிரியர், அக்கினி உலகங்களைப் பற்றியுபதேசித்தனர். தாமரை நீர்போல சம்பந்தமில்லாமல், பாபம், கன்மம் சம்பந்தமில்லாமல் உள்ளவித்தையினை நான் உபதேசிக்கிறேன் என்று உபதேசம் ஆரம்பித்தனர்.

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்,

# இருமணி.

## (சத்தும் சதசத்தும்.)

தொகுதி 7. பகுதி 6. பக்கம் 162. தொடர்ச்சி.

உயிரை மலம் மாயை கன்மம் பற்றியிருக்கும்போது, உயிர்இறைவனுடன் ஒன்றுன உயிர் இருவினை யொப்படைந்து மலபரிபாகம்பெற்றபோது மலத்தின் வலியிழந்து இறைவனுடன் ஒன்றுகின்றது. மலத்தின் ஒன்றுபட்டு நிற்கும்வரை, பக்குவமாகாதவரை, அதன்நிறமும், இனிமையும் காண்பதில்லை. பழுத்தவுடன் அதன் மேன்மைக்குணம் விளங்குகின்றது, பதியுடன் கூடுகின்றது. எனினும் பந்தத்திலும் சகல நிகழ்ச்சியில், இறைவன் சர்வ ஆதாரபூதனாய் நிற்கின்றான். காய்க்குக் கொம்பும் மரமும் ஆதாரமாயினும் அவற்றிற்கு பூமியே ஆதாரம். சிறைசெய்நீரும், கரை உடைந்தபோது ஒழுகியோடி கடையில் கடலிற்சேரும். இங்கு நீர் உயிர், கரை பாசம், கடல் சிவம். இப்பாசம், பந்தம், காமம், ஆசை, என்பதனையே பற்றென்று கூறுவது. இதனை பின்வரும் திருக்குறள் எவ்விதம் விளக்கிக் கூறுகின்றதென்பதைக் காண்க.

> "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றினைப்
> பற்றுக பற்று விடற்கு."

அக்கருத்தினையே, நம் மணிவாசகப்பிரான் என்ன அழகாய்க் கூறுகின்றார்.

> "சுற்றிய சுற்றத் தொடர் வறுப்பான் றொல்புகழே
> பற்றியப் பாசத்தை பற்றற நாம் பற்றுவான்
> பற்றிய பேரானந்தம் பாடுதுங் காணம்மானாய்."

மேல் நாம் கூறிப் போந்த உயிரின் உண்மை, அநாவான்மவாதமும் பற்றி நிற்றலாகாமையும், மற்றமதப்போக்குக ளெல்லாம் முக்கிய ஆதாரமுடையது. பௌத்தனும், அஞ்ஞாதவாதியும் (Agnostics) இரண்டாவது பற்றிய சர்வ ஆதாரத்தை மறுக்கின்றார்கள். சூனிய வாதமாகின்றது (Nihilism), ஆன்மா வொன்று இல்லவேயில்லை யென்கின்றார்கள்



(அனாத்தா—அநாத்மாவாதம்). பௌத்தமதப்படி, நிர்வாணநிலையே சர்வநாசநிலையாகின்றது. இதுமட்டன்றி, பௌத்தரின் தற்கால சிஷ்யவர்க்கத்தில் சேர்ந்தவராகிய அன்னிபெசன்டு அம்மையார் கூறுகின்றப, வேதங்களில் அடிக்கடி படிக்கப்படும் "நபுனராவர்த்ததே நபுனராவர்த்ததே" "மீண்டும் பிறப்பதில்லை—மீண்டும்பிறப்பதில்லை" என்றும் மந்திரங்கள் வெற்றுரை, வரம்பிலின்பமாகிய வீடு ஒன்றென்பதில்லை" வேதாந்தத்தின் விலைபெற்ற உள்ரகசியமாகிய சம்சாரவாதத்தை யொட்டிய நியதி வலியால், உயிர் என்றும் மாறுமனும், மீண்டும் மீண்டும் உளவாகியும், பிறந்திறந்துழலவேண்டும். 'இங்குக் கடைகோடிசேரும்' (Extremes meet) என்பதற்கு உதாரணம் காண்கின்றோம்.

அஞ்ஞாதவாதி கடவுளை உள் பொருளாகக் கொண்டானல்லன். உடலோடொன்றிய உயிரை விசாரித்து, அது உடலோடன்றி நில்லாமையோர்ந்து, அது தனிமுதற் பொருள் அல்லவெனக்கொண்டு, உடலற்ற வழி உயிருமற்றதென உரைத்து, உயிர் அநாதியாயும் நித்தமாயுமுள்ளதென்பதை மறுக்கின்றான்.

வேதாந்தியோ, பரத்தினின்றும் மக்களாகியும்,தேவராகியும், புல்லாகியும், புழுவாகியும் உதிக்கின்றவிதம் விளங்காதவழி, உயிர் வீடடைந்த வழியும், மீண்டும் மீண்டும் புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப்பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப்பேயாய் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாஅ நின்ற வித்தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும்"

ஏன் கூடாதென்று ஐயுற்று, உயிர் தனிமுதல் இல்லை யெனவும் துணிகின்றான்.

எனினும், மேற்காட்டிய உயிரின் உண்மையினின்று சங்கரமதத்துக்கு ஒரு போக்குக்காட்டலாம். அம்மதத்தினைச்சார்ந்த அறிவாளிகளில் சிலர் நாம் சொல்வதை உண்மையெனவும் ஒப்புக்கொண்டதன்றி, வேறுவழி, சங்கரமதம் நிலைபெறுதெனவும் கொண்டார்கள்.

எப்படியெனின், உயிர் இறைவனுடன் ஒற்றி நின்றவழி, உயிர்உலகினை மறந்து, தான்வேறு கடவுள்வேறு என்பதனையும் மறந்து, தன்னையும் மறந்து (தற்சொருபம் நாசமடைந்ததன்றி), சிவசொருபத்தில் மடிந்து, அன்பாகிய பேரானந்தத்தில் ஆழ்ந்துகிடப்பதன்றி, தான் அனுபவிக்கின்

றேன் என்ற அறிவும் அழிந்து சிவாநுபவம் ஒன்றே நிலைபெறும். 'அந்நிலையில், "சிவ ஏவகேவல:" "ஏகஏவருத்ரோநத்விதியாதஸ்தே" சிவன் ஒன்றே தவிர வேறுபொருள் இல்லையென ஸ்ரீ சங்கரர் கூறலோம். இதுதான் சித்தாந்தநிலை." தான் என்னும் சித்தாந்தம். "ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும்போய, நான்கெட்டு சிவமானவா" "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறைசிவன்."

"நானெனல்காணேன் பூரணவொளியில்."

ஆயினும் இங்ஙனம் கூறுவதால், பதார்த்தங்களின் உண்மை இலக்கணம் கூறினதாகமாட்டாது. மேற்காட்டிய பர அவஸ்தை அல்லது துரியா துரிய அவஸ்தையில் நான் எனும் ஞானமும் உலகின் ஞானமும் நான் அநுபவிக்கின்றேனென்ற ஞானம் இல்லையாயினும், ஆன்மாவின் உண்மைச் சொரூபம் குன்றியதில்லை இத்துரியாதுரிய நிலையையே மற்றொரு திருமந்திரத்தில் விளக்குகின்றார்.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தின் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைத்தது பார்முதற் பூதம்."

பார் பரத்தை மறைத்தது. (பரம் இல்பொருள் அல்ல) பரம் பாரை மறைத்தது" (பார் இல்பொருள் அல்ல). "தன்னை மறைத்தது தன்கரணங்கள்', 'தன்னின் மறைந்தது தன்கரணங்கள்' என்னும் வாக்கியங்களின் இரண்டு பதங்கள், பதார்த்தங்கள், உயிரும் உலகும்' மட்டே உள. இவ்வாக்கியங்களை யுணரவும் பொருட் படுத்தவும் வேறுபதங்கள், பொருள்கள் வேண்டா. ஆயின் 'பரத்தை மறைத்தது' என்ற சொற்றொடரினையுணர பரமும் பாரும் இருந்தால் மட்டும் போதுமா? அப்பொருள் விளங்குமா? இவ்விருபொருளும், காண்பான் ஒருவனுக்கு முன்னின்றாலொழிய, மரப்பொம்மையைப்போல, அவ்வாக்கியங்களின் பொருள் விளங்கா. மரத்துக்கு தன்னையானை மறைத்ததென்ற ஞானமில்லை யானைக்கும் தன்னை மறைத்த ஞானம் இல்லை. பின்னை இவ்விருதிறக்காட்சியும் ஞானமும் யாருக்கென்றால் பார்ப்பவன் ஒருவனுக்கே. நாம் சாதாரணமாய்ப் பேசும்



வார்த்தைகளிலும், வாதங்களிலும், சிலசொல் தொக்குநிற்கவே நிற்கும், இடைநிலைச் சொல்.

அதுபோலவே சத்தையும் அசத்தையும் காண்பவனாகிய சதசத்து ஒன்று உளதாதல் வேண்டும். நாம்மேலே சொல்லியவை, பின்வரும் சிவஞான போதச் சூத்திரத்தை நன்கு விளக்கும்.

யாவையும் சூனியம் சத்தெதிர்
சத்தேயறியாது, அசத்து இது அறியா.
இருதிறனறிவுளது இரண்டலா ஆன்மா.

நாம் மாயையால் மூடப்பட்டிருக்கிறோம் என்பது காட்சி. இக்காட்சியை எவ்வெவ்விதமான கூரிய அறிவையும் உறுதியாகிய உணர்வையுங்கொண்டு எவ்விதசொற்புரட்டினாலும், சாலத்தாலும் மறுக்கமுடியா: "நாம் அறியாமையும், பழியும் பாவத்தையும், இடரையும் கொண்டு இங்கிருக்கிறோம். இவற்றினின்று தப்புவதற்கு வழியறிந்து கொண்டோம். ஆயின் இப்பந்தத்துக்கு காரணம் என்ன வென்று வினவுவது அறிவீனம்." என்பது உண்மை. எவற்றின் காரணத்தை அறியவிரும்பு*கிறோமோ, அதுவே கடைசியாய் நிற்கும் காட்சியாகுமாயில், அதற்குக்காரணம் கேட்பதைவிட அதிக அறிவீனம் ஒன்றுமில்லை. "ஒரு அவுன்ஸ் காட்சிப்பிரமாணம், ஒருடன் யுக்திக்கு மேலாகும்" என்று வக்கீல்கள்கூறுவார்கள். இதுதர்க்கத்துக்கு மொத்ததே. ஆனால் பூர்வபட்சிகள் கூறுவது: சீவன், பரத்தின் பகுப்பல்ல, வேறல்ல, பரிணமமுமல்ல. ஆகையால் சீவன், முழுதும் பரமே. பரமாக, சீவன் அகண்டிதன், எங்கும் நிறைந்தவன், நித்தியன், காலம் இடம் காரணம் கடந்தவன். எனினும் இந்தச் சீவன், கட்டையில் அக்னி மறைந்ததுபோல் அல்லது கட்டையில் யானை மறைந்ததுபோல) மாயை அவித்தைகளால் மூடப்பட்டிருக்கிறது. இதன் காரணமென்ன. நிர்மலமான பொருள் மலத்தால்மூடப்பட்டு, மலமுள்ளதுபோல் மயக்குறுவானேன்? ஈங்குப்பால்டாய்சன் பண்டிதர், தம்சங்கரர் உள்பட இந்தியஞானிகள், கிரேக்க ஞானிகள் எல்லாரும் பிழைப்பட்டார்களென்றும், தம்முடைய தேசத்தவராகிய காண்ட் பண்டிதரே, இந்தக்கேள்வி முற்றிலுமே அசங்கதமென்றும் காட்டினாரென்றும் கூறுகிறார்.

* பால்டாயஸன் பண்டிதரின் 'எலிமெண்ட்ஸ் ஆப்மெடபிஸிக்ஸ' Page 334.

கேள்வி அஸங்கதமென்பது நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். மான்ட்பண்டிதரை இவர் எவ்விதமாய் உணர்ந்திருப்பினும் இக்கேள்விமுற்றிலும் அசம்பாவிதம். முற்றிலும் உண்மையற்றது. சுத்தப்பொய் பரம்பொருள் என்றும் அவித்தையாலாவது மாயையாலாவது மூடப்பட்டதில்லை. அப்படி மூடப்பட்டிருந்தாலல்லோ, என மூடப்பட்டதென்று கேட்க வேண்டும். நம் பண்டிதர் தம் ஏழைப்பிரமத்தை கைதியாக்கிக் கூட்டிலேற்றி, பெருங்குற்றத்தை அதன் தலைமேல் சுமத்துகிறார் (இவர்கள் இப்படிச்சொல்வதில் எவ்வளவாக தேவதூஷணம் செய்கிறார்களென்று எண்ணுகின்றார்களில்லை. வாதமாத்திரையாக யாம் எழுதுவதிலும் நமக்கு மனம் அஞ்சுகின்றது). சுமத்திய குற்றத்தை ருசுபடுத்தாமுன், ஏன் இப்பிரமம் குற்றஞ்செய்ய வேண்டுமென்கிற கேள்வியை அநாவசியமாக எழுப்புகிறார். இக்கேள்வியை அசந்தர்ப்பமென்று எந்த நீதிபதியும் தள்ளுவார். மேல், கைதியும், கைதிக்காக ஏற்படுத்திய வக்கீலும், குற்றத்தை ஒப்புக்கொள்ளும்போது, அல்லது குற்றம், ஏராளமான சாட்சிகளால் ருசுப்படுத்தப்பட்ட பின்னும் இக்கேள்வியை அசம்பாவிதமென நீதிபதி ஒதுக்குவர்.

நம் பண்டிதருடைய குற்றக் கேஸ், அப்பப்போது நாம் படிக்கும் அநியாயமாய் தண்டிக்கப்படும் கொலைக்கேசுகளை ஒக்கும். ஒரு பெரிய குற்றம் நடந்துவிட்டது கூகூ முறையோவென சத்தம் எழும்பிற்று. யாரையாவது பிடித்துத் தண்டிக்கவேணும் எப்படியாவது பழிக்குப் பழி வாங்கவேண்டும். போலீஸ்காரர் தாங்கள் அதிககாலம் கண் வைத்திருந்த ஒரு பழைய கைதியைப் பிடிக்கிறார்கள். போலிஞானிகள் தங்கள் சுவாநுபூதியோடும் சாட்சி சொல்ல ஏராளமாய் ஓடிவருகிறார்கள். கைதி பழைய குற்றவாளியெனக் காட்டக்கூடிய பழைய தீர்மானங்கள் (வேதவாக்கியங்கள்) கண்டெடுத்து ருசுப்படுத்தப்படுகிறது.

ருசுவோ சொல்லும்படியாயிருக்கிறது. ஏழைக்கைதியும், எவ்வளவு நிரபராதியாயிருந்தும், திகைப்பினால் சும்மாயிருக்கிறான். தான் குற்றவாளியல்லவென்று ருசுக்கொடுக்க முயற்சிக்காமல் அவன் சும்மாயிருத்தலையே அவன் குற்றவாளி என்பதற்கு அடையாளமாக எண்ணி, நீதிபதியும் அவனைத்தூக்கும்படி தீர்மானிக்கிறார். அந்தோ! அவன் எலும்பு வெளுக்குமுன், உண்மையில் குற்றஞ் செய்தவன் முன்வந்து தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறான். முடிவில் முதல் தீர்மானம், குற்றவாளியும் தண்டிக்கப்பட்டவனும் ஒரேவித முகச்சாயலை யுடைமையால் நேர்ந்த



தென்று வெளியாயிற்று!!! முன்னரே, எங்ஙனம் உயிரை கடவுளாக மயங்க இடமுண்டாகின்றதென்றும், உயிர்தான்கடவுளென மயங்குகின்றதென்றும் காட்டியுள்ளோம்.

நம் மெய்கண்ட நாதனும், தம்மாணுக்கனைச் சிவோகம்பாவிக்கச் சொல்லிய இடத்துக்கு முன்னும் பின்னும், தன்னைக் கடவுளாகமருளாதே என எச்சரிக்கிறார்.

“யாவையுஞ் சூனியம் சத்தெதிர்.” சத்தின் சந்நிதியில் அசத்தம் பிரகாசியாது எனெனில், மெய்யினிடத்து பொய் அப்பிரகாசமாய் நிற்றலால், ஒளியின்முன் இருள் நிற்றலாகாததுபோல். சத்தே யறியாதென்றதன்கருத்தும், இறைவனுக்கு வெளியில் எதுவும் இல்லாததால், அவற்றை விஷயமாக (Object) அறியான். உயிர்போல், சுட்டறிவு கிடையாது. இக்கருத்தை, “ஆங்கு அருக்கனும் மதியும் தாரகைகளும் பிரகாசிக்கவில்லை. அதற்குப்பின் இந்த நெருப்புக்கு ஒளியேது. பிரகாசனாகிய அவனால், இவையெல்லாம் பிரகாசப்படுகிறது. அவன் ஒளியால் இவ்வுலகெல்லாம் விளங்குகிறது.” என்னும் மந்திரம் எவ்விதமாய் நன்கு விளக்குகின்றது. இப்பரஞ்சோதியின் சந்நிதானத்தின், சூரியனும் சந்திரனுமே மழுங்குமெனின், அதன்முன், இருளும் அவித்தையும் மாயையும் தன்தலைகாட்டுமோ? அதனை மூடி அதனின் பிரகாசத்தை மறைக்குமோ? அம்மறைப்பினால், பரம்பொருளும் தான் இவ்வசத்தாகவும், உடலாகவும், கரணங்களாகவும், உலகாகவும் மருளுமோ?

‘இருள் பொதிந்தபானு வுளதேல் உடலையானென்
மருள் பொதிந்த சித்துளதிம் மன்’

என்றும்,

‘நின்மல மென்றே யதனை நிகழ்த்தினையதற்குப்
பின்னவித்தையுண் டென்கைபித்து.’

என்றும் சித்தாந்தியார் கேட்பது பிசகாகுமோ? ஆயின் குருடன் சூரியனை இருள் மறைத்திருக்கிறதென்று சொல்லின், அவன் தனக்குக் கண் குருடு என்று நினையாமல் தன்குற்றத்தைச்சூரியன்மேல் ஏற்றுகின்றான். “யாவையும் அவன்பின் பிரகாசிக்கின்றது உலகெல்லாம் அவன் ஒளியால் விளங்குகின்றது. ஆம், ஆண்டவனே, நாங்கள் எல்லாம் உம்முடைய சிதறிய ஒளிகளே! எங்களில் ஒளிக்கும் சிறுஒளி யெல்லாம் உம்மினின்றும் இரவல் வாங்கியதே! இவ்வொளியற்றபோது, அந்தகாரத்தில் அழுந்திக்கிட

க்கும் வயிர மணியைப்போலும் நாங்கள்! பந்தநசையில், மணியைக்கழுவி, சாணையில் வைத்து அரைத்துச்சுத்தப்படுத்தாதபோது, உம்முடைய திவ்ய சோதி பிரதிபலிக்காது! நாங்கள் வயிரக்கற்கள் போலும் தாம் அதில் பிரகாசிக்கும் ஒளி! வெண்பளிங்கின் உட்படுத்த சோதியானே." பளிங்காகவும் நாங்கள் இருளில் இருளாகவும் ஒளியில் ஒளியாகவும் ஆகின்றோம்." யாதொன்றுபற்றின் அதன் இயல்பாய்நின்ற பந்தமறும் பளிங்கனையம் யாம்." தாம் மரகதம்போலும் சார்ந்ததனை தன் வண்ணமாக்கும் தன்மையர்!

"எவ்வெவர் தன்மையும் தன் வயிற்படுத்தும்
தானேயாகிய தயாபரர்!"

சார்ந்ததன் வண்ணமாகும் வயிரம் பளிங்கும், சார்ந்ததன் வண்ணமாக்கும் மரகதமும், இவ்விருமணிகள் தாம் சதசத்தாகிற ஆன்மாவையும், சத்தாகிய சிவத்தையும் முறையே குறிக்கும் சொற்கள். இந்தத் திவ்ய ஒளியுமே, அஞ்ஞான்று திகைப்புற்ற தேவர்களுக்கு, ஆகாயத்தினின்று (பரமாகாசம்—சிதாகாசம்) தம்நாயகராகிய பரம்பொருளைக் காட்டிய இமையவன் பாவையாகிய உமையம்மையார். இறைவனை அவனருளாகிய சிற்சத்திகாட்ட அவர்கள் உணர்ந்தார்கள். அவள் நிறம் பச்சை—மரகதம். அவள் அருளைப்போற்றி, பின்வரும் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் பாடல் ஒன்றினைத்தீட்டி, இச்சிறு மொழியினை முடிவு செய்வாம்.

பண்ணுறு கிளிமொழிப் பாவை நின்றிருமேனி
பாசொளி விரிப்பவந்தண்
பவளக்கொடிக்காமர் பச்சிளங்கொடியதாய்
பருமுத்தம் மரகதமாய்த்
தண்ணுறு மல்லற்றிறைச் சிறையனங்கனி
தழைக்கும் கலா மஞ்ஞையாய்ச்
சகலமும் நின்திருச் சொருப மென்றோதிடும்
சதுர்மறைப் பொருள் வெளியாகும்.

ஜே. யம். நல்லசாமி பிள்ளை,
B. A., B. L.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
முளை

# முளை யென்பது அங்குரம்.

—:0:—

முளையென்னுஞ் சொல் முதல் மூங்கிலையும், மூங்கிலில் கணு இருத்தலால் கணுவையும், அக்கணு உறுதியுடைய மூட்டாதலால் மூட்டினையும் உணர்த்திற்று.

மூட்டு=சந்திப்பு; பொருத்து.

முட்டிக்கால், முட்டிக்கை, என்பவற்றால் தெளிக. மூட்டினடுவில் முதல்வேரும் பிறகு முளையும் உண்டாதலால், முளையென்பது வேரினையும் முளையினையும் உணர்த்தி நிற்கும். வித்தினின்று கீழ் நோக்குவது வேர்; மேல் நோக்குவது முளை. வித்தின் கண்ணும் மூட்டிருத்தலால் அம்மூட்டின் நடுவினின்று தான் வேரும் முளையுமுண்டாகின்றன. முருங்கை, பூவரசு, கள்ளி, கீரை முதலியவற்றினும் மூட்டினின்றுதான் தளிருண்டாகின்றது. கொடிகளிலும் மூட்டினின்றுதான் மற்றோர் கொடிகிளைக்கின்றது.

"குப்பைக்கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்து கொண்டப் பின்று"

(பு—று) (௧௫௯)

குப்பையின்கண் படுமுதலாக எழுந்த கீரையினது முன்பு கொய்யப்பட்ட கண்ணிலே கிளைத்த முதிராத இளந்தளிரைப் பறித்துக்கொண்டு என்பர்.

இங்கே கண்ணென்பது மூட்டெனக் கொள்ளவேண்டும். பொன்னாங்கண்ணி, கரிசலங்கண்ணி, முன்னை, காணுங்கீரை, களிமண்கீரை, பரட்டைக்கீரை, முட்டி, அறுகு, பிரண்டை, நீர்முள்ளி, தென்னை, கமுகு, ஆமணக்கு, கரும்பு, அலரி, எருக்கு, மல்லிகை, முல்லை, வேர்க்கடலை, பொடுதலை, நாகதாளி, முதலிய வற்றிலும் மூட்டினின்றுதான் வேருண்டாகின்றது. இவைகளைப் பதிவுபோட்டுப் பார்க்கின் அவ்வுண்மை தெளிந்து கொள்ளலாம். பொன்னாங்கண்ணி கரிசலங்கண்ணி என்பதற்கு மூட்டுடைய தென்பது பொருள். காணுங்கீரை காணுங்கீரையாயிற்று.

கண்—காணுங்கரை. கண்=முட்டு.

முட்டியென்பது ஓர்கிளை. முட்டுதோறும் தளிர்த்துப் படர்வதென்பது பொருள். முட்டம் முட்டியாயிற்று. கண்டி யென்பது சிறுகிளையையும் கண்டமென்பது சந்தியையும் உணர்த்திநிற்கும். முறையே முட்டுதோறும் தளிர்ப்பது; முட்டுதோறும் விழுதுவிடுவ தென்பது பொருள். முட்டை=கோழிமுட்டை முதலியன. முட்டம் முட்டையாயிற்று. முட்டியுண்டாவதென்பது பொருள். முட்டம்=முட்டு மாதந்தோறு முண்டாகும் பூப்பினை முட்டென்பர். கருக்கொள்ளும் பொருட்டு முட்டியுண்டாவதென்பது பொருள்.

கரு=வேர், முளை, கருப்பம் முதலியன.

கிழங்கெல்லாம் வேராம். கருணைக்கிழங்கு, உருளைக்கிழங்கு முதலியவற்றை நாலைந்து பத்தைகளாகப் பிளந்து நடின் ஒவ்வொன்றிலும் நரம்புகளின் முட்டிருத்தலால் அம்முட்டினின்று தான் வேரும் முளையுமுண்டாகின்றன. உருளைக்கிழங்கிலுள்ள பள்ளம் கணுவாதலால் அதனை அறிந்து பத்தைபோட வேண்டும். ஆல், சித்தில் முதலியவற்றின் விழுது கீழ் நோக்குவதால் வேராகின்றது. பச்சை மூங்கிலை வைக்கோற்புரி சுற்றி நீர் விட்டுக்கொண்டுவரினும், எதிவாங்கி அதனைக் குறுக்காகப் புதைத்து நீர்விட்டுக்கொண்டு வரினும், கணுக்கள் தோறும் போத்திறங்கிப் பெருகும் புதராகின்றது. நெல்லு, கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவற்றிலும் முட்டினின்றுதான் வேரும் முளையுமுண்டாகின்றன. ஆல், மருக்கொழுந்து, புகையிலை, முதலியவற்றில் விதை மிகச் சிறியனவாயினும் அவற்றிலும் முட்டினின்றுதான் வேரும் முளையுமுண்டாகின்றன. இரண்டு பொருள்களின் சந்திப்பில்லாமல் ஓர் பொருளுண்டாகாது. அதாவது தோற்றமென்பது இரண்டு பொருளாலாவதன்றி ஒரு பொருளாலாவதன்றென்பதாம்.

முட்டினடுவில் தான் தோற்றமுண்டாகிறது. தோற்றம்=உற்பத்தி வாழை, தென்னை, பனை, கமுகு, சேம்பு முதலிய வற்றில் குருத்துகள் நடுவிலுண்டாகின்றமையானும், விலங்கு பறவைகளுக்கும் மக்களுக்கும் கரு என்பது உடம்பின் நடுவிலுண்டாகின்றமையானும்; கிரகங்களின் நடுவிலுள்ள சூரியனால் உலகத்தோற்றமுண்டாகின்றமையானும்; முட்டினடுவில்தோற்றமுண்டாகின்றதென்பது வலியுறுகின்றது. அண்டயோனி=



சூரியன் திருவருட்சந்நிதியில் உலகத்தோற்றம் செய்வோ னென்பது பொருள். அண்டம்=உருண்டைவடிவு, உலகம், முட்டை, நடு சுக்கிலம் முதலியன. அண்டமென்னுஞ் சொல் முதல் உருண்டை வடிவினையும்; பின் உருண்டை வடிவமுடைய உலகத்தையும், அவ்வடிவமுடைய முட்டையையும் முட்டையுண்டாகுமிடம் முட்டினடுவாதலால் நடுவையும்; அந் நடுவிடத்திற் பாய்வது சுக்கிலமாதலால் சுக்கிலத்தையும், உணர்த்திற்று. இதுமுறைமையிற் பொருள்கோளென்னும் இலக்கணம் அதாவது ஆகுபெயரென்பது. இதனால் முதல் முதல் மக்கள் தோற்றமும் * உலகின் நடுவில் தான் உண்டாயதென நிச்சயித்தல் வேண்டும். நடுவாவது சூரியன் மையவரிக்குட்பட்ட இடம்.

மையவரி=நிரட்சரேகை.

இனி வேர் முளை முதலியவற்றை யுணர்த்தும் சொற்களும் இப்பொருளிலேயே வரும். உ—ம்.

மூலம்=மூங்கில், கணு, முட்டு, வேர், முளை, இளமை, வளர்ச்சி, சிறுமை, கூர்மை, நுண்மை, நெருக்கம், இசை, வட்ட முதலியன. மூலமென்பது முதல மூங்கிலையும் மூங்கிலில் கணு இருத்தலால் கணுவையும், கணுவிருக்குமிடம் முட்டாதலால் முட்டினையும், முட்டினின்று முதல்உண்டாவது வேராதலால் வேரினையும், வேரின்பின் உண்டாவது முளையாதலால் முளையினையும், முளையினின்று வளர்ச்சியுண்டாதலால் வளர்ச்சியையும், முளைசிறிதாகவும் கூர்மையுடையதாகவும் நுண்ணியதாகவும் இருத்தலால், சிறுமையையும் கூர்மையையும் நுண்மையையும்; மூங்கிற் புதர் நெருங்கியிருத்தலால் நெருக்கத்தையும், மூங்கிற்குழலில் இசை யுண்டாதலால் இசையையும், மூங்கிற்புதர் வட்டமாக வளர்த்தலால் வட்டத்தையும் உணர்த்தி நிற்கும்.

முலம்=வளர்ச்சி.

(க) முலம்—முலை=கொங்கை. குழந்தைகளை வளர்ப்பது.

முலம்=வேர்.

முலம்—முலை=முள்ளங்கி (இந்து)

முலம்=முளை.

முலம்—முலவேரு=முளைக்கச்செய் (தெலு)

முலம்=முளை.

முலம்—முலகம்—முலகை=முளை (தெலு)

* மொழிநூல் பாயிரவியல் கக-ம் பக்கம் பார்க்க.

முலம்=கூர்மை.

முலம்—முல்லு=முள் (தெலு)

முல மென்பது பழந்தமிழ்ச் சொல்.

முலம்—மூலம்=வேர், கிழங்கு, விழுது, காரணம், ஆதி, சம்பம், புதர், வீடு முதலியன. சமீபமாவது நெருக்கம்.

மூலம்—முலகம்—முள்ளங்கி=ஓர் கிழங்கு.

முலம்—முளம்=மூங்கில், கணு முட்டு, முளை, இளமை முதலியன.

முளம்—முள=மூங்கில், முளை, (மலை)

முளங்கை—முழங்கை—கணுவுள்ளது.

முளங்கால்—முழங்கால் ,, ,,

முழம்=ஓரளவு முழங்கை கொண்டது.

முளம்—முளி=கணு, ஒரு முளிப்பிரம்பு, மா முதலியவற்றின் கணுவுமாம்.

முளம்—முளவன்=சிறுவன்.

முளவி=சிறுமி.

முளம்—முனி=செவிக்குறை. முள்ளினுலாவது முளிக்காது, முளிச்சட்டி.

முளம்—முளவு=முள்ளம்பன்றி.

முளம்—முளா=முள்ளங்கி.

முளம்—முருப்பை—முழுப்பை=சிறு புதர்.

முளர்—மோழை—மோழைக்கருப்பு=ஓர்நெல் (பயிரிடப்படுவது)

முளம்—முளரம்—முளரி.

முளரி:—

(க) மூங்கிற்காடு

(உ) காடு

(௩) நெருப்பு. மூங்கிற்காட்டிலுண்டாவது.

(௪) கடைக்கொள்ளி

(௫) ஓமவிறகு

(௬) விறகு

(௭) முட்செடி

(௮) தாமரை, முள்ளுடைய தன்மையது.

"முள்ளரை முளரிப்புத்தேன்" (காந்தம்.)

(௯) நுண்மை.



* முளம்—முளை=மூங்கில், அங்குரம், மகன், ஆப்பு, முளையாணி முதலியன. கான்முளை=பிள்ளை. உ-பதம்.

முளை அடிபருத்து வர வரச் சிறுத்துக் கூர்மைபெற்றிருத்தலால் ஆப்பு முதலியனவும் அவ்வாறேயிருத்தல் வேண்டும். மண்ணினை உருவி மேல்வந்து வாயுவையும் ஆகாயத்தையும் மெல்ல மெல்ல உருவி இடம் செய்துகொண்டு வளர்வதற்கு முளை அவ்விலக்கணம் பெற்றுள்ளது. வேருக்கும் இவ்விலக்கணம் உண்டு உருவலென்பதற்கும் அப்பொருளேயாம்.

உரு—உருவல். உரு=முளை. (இன்னும் வரும்)

இது காலஞ்சென்ற மொழி நூலாசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள் எழுதிவைத்த குறிப்பிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

**மாகறல்-பொன்னுசாமி முதலியார்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இறைவன் அருளுரு.

---

மறையவன் அரசன் செட்டிதன்முதை வயங்குநாற் சூத்திரன் புவ
பறைதரு நல்லசங்கரன் வேடன் பணிசிவன் விளங்கு முக்கனக்கன்
அறை செயம் பட்டனகமது புறத்தேகாலியாட் டரவமாரிடையன்
பறையனு முன்னரான நீயின்று பள்ளனுனமை தெரிந்தேன் யான். னம்

(பேரூர்ப்புராணம்.)

என்னும் பாசுரப்படி சிவபெருமான் ஆனவர் அன்பருக்குகந்து அவ்வச்சமயங்களில் அவரவரை ஆட்கொள்ளு நிமித்தம் இச்சாமாத்திரையால் எடுத்த உருவங்கள் பல. அவ்வுருக்களில் ஈங்கு எடுத்துக்கொண்டது **வேடன்** என்னும் உருவத்தை.

சிவபெருமான் வேட உருவந்தாங்கினது விசயன் தவஞ்செய்தகாலத்து அவன் தவத்தைச் சோதிப்பான் எடுத்த வேடம். இக்கதையானது பாரதம் முதலிய இதிகாசங்களிலும் புராணங்களிலும் வருவதை யாவரும் அறிவர்.

தேவாரங்களிலும் சமயாசாரிகள் இடை யிடையே இக்கதையைக் கூறியிருக்கின்றார்கள்.

ஆனால், சிவபெருமான் சமயாசாரிகளில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாருக்கு வேடனாக வந்து காட்சிகொடுத்த சங்கதியை இதுவரை ஒருவரும் கவனித்திருக்கமாட்டார்கள், அதை ஈண்டு எழுதுகிறேன். எல்லோரையும் கவனித்துப்படிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிதியெலாந் தனித்தனி தருவது வெளியம
மதியெலா முயர்விப்பது மருள்வினை மாற்றிச்
கதியெலா முணர்த்திடுவது திகரநெடுங்கரத்தால்
நதியெலாமணி கொழிப்பது கோங்கு நன்னாடு.

(திருத்துடிசைப்புராணம்.)

என்று பெரியோர்களால் புகழ்ப்பெற்ற கொங்குநாட்டின்கண் பூமகட்கோர் திலகமென்ன ஒளிருவது * திருத்துடிசையம்பதி என்னும் தலம். இத்தலமானது 'உமையாள் ஓங்கல்' என்னும் பெயரிய குருவிருந்தமலைக்கு ¶ அடிவாரஸ்தலமாக இருக்கிறது. இத்தலமானது அருணகிரிநாதரால் திருப்புகழ் பெற்றது.

“ மதுரமெனு நதி பெருகியிருகரை
வழிய வகை வகை—குதிபாயும் ”

என்ற வாக்கின்படி **மதுரம்** ‖ எனும் நதிக்கரையில் உள்ளது.

இத்தலத்தினுடைய மகிமைகளைக் குலோத்துங்கச்சோழன் அவைக்களத்துள்ள ஒரு சிறந்த வித்துவசிகாமணியானவர் புராணமாக இனிய செந்தமிழ்ப் பாக்களால் பாடியுள்ளார்.

* திருத்துடிசை=இப்போது துடியலூர் என்று வழங்குகிறது. பேரூர் மேட்டுப்பாளையம் இருப்புப்பாதையில் உள்ளது.

¶ குருவிருந்தமலை=குருடிமலை யென வழங்குகிறது.

‖ மதுரநதி=இப்போது தன்னாசிகோவில் பள்ளம் என வழங்குகிறது.



மேலும், அகத்திய முனிவரானவர் வில்வலன் வாதாபியைக் கொன்ற பழியை இத்தலத்தின் கண்ணேதான் சிவபெருமானைப் பூசித்து மாபாதகம் தீர்ந்து சென்றார்.

இதுமட்டோ

பொன் மடந்தையும் பூவுலகேத்துசெஞ்
சொன் மடந்தையும் தங்கமிகுஞ் செய
நன் மடந்தையும் ஞான மடந்தையாம்
மென் மடந்தையும் மேவுவதன்னகர்.

(திருத்துடிசைப்புராணம்.)

என்ற பிரகாரம் சகல வளப்பங்களாலும் நிறைந்துள்ளது அத்தலம்.

(தொடரும்)

**துடிசைகிழார். அ. சிதம்பரனார்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தமிழர்க்கான சில குறிப்புகள்.

(முன் தொடர்ச்சி தொகுதி-6 பகுதி-2 பக்கம்-35.)

## 12 நரர்.

நரர் என்ற பதமானது மானிடரைக்குறிக்கும். அவர்களுக்கு எக்காரணம் பற்றி அப்பெயர் அமைந்தது என யோசிக்கும் பட்சத்தில் சரியான காரணத்தைக்கொண்டே மானிடருக்கு நரர் என்ற பெயர் அமைந்திருக்கிறது. காரணம் வருமாறு:—

மனிதரானவர் நரை, திரை, மூப்பு, சாக்காடு என்னும் நால்வகைப் பிணிகளுக்கு உட்பட்டவர் என்பது எல்லாருக்கும் செவ்வனே தெரிந்தது. இந்நால்வகைப்பிணிகளும் மனிதருக்கு மாத்திரமா? அல்லது எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவா? என்று நாம் நினைத்துப்பார்க்கும் பட்சத்தில் திரை, மூப்பு, சாக்காடு என்னும் மூன்றும் பொதுவாயிருக்கக் காண்கின்றோம். “ நரை ” மாத்திரம் மனிதருக்குச் சேர்ந்த சிறப்பான பிணி

யாயிருக்கிறது. வேறு பிராணிகளுக்கு அப்பிணி இருக்கிறதாக ஏற்படவில்லை. ஏனென்றால் மனிதன் மாத்திரம் வயதானவுடன் நரைத்து விடுகிறான். மற்றப்பிராணிகள் நரைப்பதில்லை. பச்சைக்கிளி வயதானால் வெள்ளைக்கிளியாக மாறுகிறதில்லை. கறுத்தபசு, சிவத்த பசுக்கள் வயதானால் வெளுத்த பசுக்களாக மாறுகிறதில்லை. மனிதனுடைய உரோமம் மாத்திரம் நிறம் மாறுகிறதே யொழிய மற்றப்பிராணிகளுடைய உரோமத்தின் நிறம் பிறந்தவண்ணம் இருக்கிறது. ஆகையால் நரைத்தல் மனிதருக்குச் சிறப்பானது என்று ஏற்படுகிறது. நரையை உடையவர்களானதால் மனிதர் நரர் எனப்படுவர்.

நரர் என்னும் பதமானது சமஸ்கிருதபத மென்று சிலர் மயங்குவர். அவர்கள் எல்லாம் மயங்காமைப் பொருட்டே "மூலப் பொருள் விளக்கம்" என்னும் நூலிலிருந்து இரண்டொருவார்த்தைகள் எழுதத் துணிந்தேன்.

## 13 பொய்கை.

பொய் என்றால் மறைவு என்று பொருள்.

பொய் சொன்னான் என்றால் உண்மையை மறைத்துச் சொன்னான் என்பதே. பொய் என்றால் அடுப்புக்கும் ஒருபேர். ஏனென்றால் மறைவான இடத்தில் உள்ளது என்பது பொருள். சமையல் செய்யும் இடத்தை எவரும் பார்க்கக்கூடாதென்பதும், அது மறைவான இடத்தில் இருக்க வேண்டுமென்பதும் இதனால் வெளியாகிறது. இப்போது அந்தப்பதமானது தெலுங்கு பாஷையில் அந்தப்பொருளில் வழங்குகிறது. தெலுங்கு தமிழின் பிரிவானதால் அப்பதம் அங்குச்சென்றது. இனிப் பொய்கை என்றால் என்னபொருள் என்று கவனித்தால் பொய் என்ற பகுதி அடியாகப் பிறந்த பதமாய் இருக்கிறது. அதற்கு மறைவான இடத்தில் இருக்கும் குளம் என்று பொருளாகும். பூர்வத்தில் தமிழ் அரசர்களும் செல்வவான்களும் தங்களுடைய மகளிர்கள் குளிப்பதற்கும் நீர் விளையாடுவதற்கும் உய்யானவனங்களில் மறைவான இடத்தில் குளங்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். மகளிர்கள் நீராடுவதை ஆடவர்கள் பார்க்கக் கூடாதாகையால் மகளிர்கள் நீராடும் பொய்கை மறைவான இடத்தில் இருக்கவேண்டியது அவசியமே. இக்கருத்தை உத்தேசித்தே நம் பெரியோர்கள் மகளிர் நீராடுவதைப் பேசுங்காலத்திலெல்லாம் பொய்கையென்ற பதத்தையே உபயோகித்திருக்கிறார்கள்.



திருவாசகம்.

"மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்ன" இத்திருப்பாசுரம் திருவெம்பாவைப் பதிகத்திலுள்ளது. மகளிர் நீராடப்போகும் விடயத்தைப்பேச எழுந்தது.

ஆகையால் பொய்கை என்றால் மகளிர் நீராடும் குளம் என்று பொருளாகிறது.

இதுவும் "மூலப்பொருள் விளக்கத்தினின்று எழுதப்பட்டது.

அ. துடிசைகிழார்-சிதம்பரனார்.

உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

தொகுதி 6. பகுதி 7 பக்கம் 158. தொடர்ச்சி.

சிவமாக்கி என்றதில் இனிப்பிறவா மங்கள சொருபமாக்கி யென்பதையும் அங்ஙனமாயவிடத்தும் அப்பொருள் (ஆன்மா) சிவசமவாத ஏகான்மவாதங்களிற் றடுமாறாது) எனையாண்ட வென்றமையால் ஆளுந்தன்மையானுள்ள தென்பதையும் தமிழ் வேதம் விளக்கும் வாய்மையை அநுபவித் துணருமறிவாளிகளறியாமற் போகார் "மீளாவடிமையுனக்கேயாளாய் என்ற தமிழ்வேதமுஞ் சான்றும்" ஆணவத்தோடத்துவிதமான படிமெய்ஞ்ஞானத்தாணுவினோடத்து விதஞ்சாருநாளென்றோ." வானாட்டங்கும் வளிபோல வின்புருவாங்கோனாட டங்குங் குறிப்பறிவதென்றோ" எட்டத்தொலையாத வெந்தைபிரான் சன்னிதிக் கீழ்ப்பட்டப்பகல் விளக்காய்ப் பண்புறுவதென்றோ."-ஞாதுரு ஞான ஞேயங்களற்றவர்க்கருத நட்புடைக்கலப்பே ".“ என்றும் பகலோன் வெயிலிற் பாயிருள் விண்மீன் சகசமாய்க்கலந்த தன்மையும் பெற்றேன்" என்றும். நின்னறிவினொழித்து நீயாகி நின்றிடல்போ லென்னறிவினை யொழித்தேயா

றுமி யென்னுரு நிற்கவல்லையாமாயில் நின்சரணம் போக்குதற்குக் கற்க
வல்லதேது மில்லைகாண்" என்றும் வரும் ஆப்தவாக்கியப்பிரமாணங்களு
மேஅுண்மையை வலியுறுத்தும். முத்தியடைய வேண்டியது பிரமமல்லவெ
ன்பதெவர்க்கு முடம்பாடானதால் பிரமத்திற் கன்னியமாய்ப் பெத்தமுத்
திகளையடைய ஆன்மா (பசு) வொன்று வேண்டும் என்பது நிர்விவாதமே
அது (பசு) வேண்டாதபோது வேதாகமங்களும் அதிற் பிரதிபாதிக்கப்படு
மெய்ப் பொருளும் சோபான முறைகளுமுத்தியுஞ் சொன்மாத்திரையே.
அதாவது பொய்யேயாகிக் கழியுமன்றி யாதும் பயன்படாவாம். இங்ங
னம் "பங்கயாசனன் முதற் பலதேவரும் பாருள 'பெரியோருங் கங்கை
யாதியாந் தீர்த்த முந்தே சமுங்காலமு மறை நாலுமங்கமாறு மந்திரங்
களுந் தவங்களும் சத்தியம்" எனக்கூறும் நூலுமுளவேயெனின், வேதத்
தின் றுணிபையுள்ளவாறுணர்ந்து சுகமடையப் பாக்கியமில்லாப் பரிபாகி
கள் தமது கன்மம் வழிவிட்டவாறே யொருசார்பொருள் கொண்டுழலும்
நெறியாமன்றி யுண்மை நெறியாகாவாம். அதாவது அவர்கள் கூறுகிறபடி
வேதாதிகலைகளும் அதிற்போந்த சோபான முறைகளு முத்தியுஞ் சொன்
மாத்திரையே. ஆதாவது பொய்யேயாயின் நாஸ்திகர் கொள்கையிலுமிவை
மேம்பாடுடைய தென நல்லோர் கழகத்தில் நம்பச்செய்வதவர்கள் பொறு
ப்பாம். உண்மையாய் நமது சொருபத்தை யுலகரறிவரெனின் நாஸ்திக
ரென நகையாடா நிற்பரென நாணங்கொண்ட அந்த நாஸ்திகர் கொள்
கையேயாம் என்பது "பரமேது வினைசெயும் பயனேது பதியேது பசு
வேறுபாசமேது பத்தியேதடைகின்ற முத்தியே தருளேது பாவபுண்ணி
யங்களேது" என்று நாஸ்திகர்களைச் சுட்டியும் "நாம் பிரமம் நமையன்றி
யாம் பிரமம் வேறில்லை நன்மை தீமைகளுமில்லை நவில்கின்ற வாதியார்த
மிரண்டிறு மொன்ற நடுநின்றதென்று விளுட் போம் பிரம நிதிகேட்
போர் பிரமையாகவே போதிப்பர் சாதிப்பர்தாம்" என்று ஏகான்மவாதி
களைச் சுட்டியும் வரும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் திருப்பாடலானும்
நன்கு விளங்கும்.

இனி ஒரு பொருளையே பயக்கும் பிரமம் சிவம், பதி என்னும் வாக்
கியங்களே யதன் மறுதலைப்பொருளாகிய ஆன்மாவைத் தந்தும், நன்மை
என்றது தீமையையும் உண்மை என்றது இன்மையையும் பெத்த மென்றது
முத்தியையும் நரக மென்றது சுவர்க்கத்தையுந் தந்து நிற்றல் போலவே
அறிவு என்ற சொல்லே அறியாமையைக் குணமாகக் கொண்டொழுகும்
அதாவது சிற்றறிவுடைப் பசுப்பொருளைத் தந்து நிற்பனவாம் அறியாமை



க்கிலக்காயுள்ள பொருளொன்று முற்றுமில்லாமற்போம் போது அதற்கு
முன்பே அறிவுடைப்பொருளுமில்லையாய் முடியும் என்னை, சிவன் பிரா
மணனெனின், மற்றொருவன் ஏனைய வருணத்தானாயிருந்தாலன்றி முடியா
தெப்படியோ அப்படியாம் இது இது வென்று சுட்டியுணர்தற்கன்றோ
உவமானமாம். சுட்டிறந்துணரும் உணர்ச்சியாய் ஏக உணர்வன்றி வேறு
பொருள் கிடையாதென்பதற் குவமானமாகுமா, எனின் சுட்டிறந்துண
ர்தலும் சுட்டியுணர்தலும் ஆன்மாவின் பரிபாக வேற்றத்தாழ்வையுணர்த்
துமன்றிஏக அறிவை அல்லது பிரமத்தைத் தவிர வேறு பொருளில்லை
யென்பதற்குச் சுட்டிறந்துணர்த லென்னும் பிரயோக மிடந்தருகின்ற
வா, என்பதைக் கூர்ந்து யோசிக்குமாறு வேண்டுகின்றோம். என்னை,
சுட்டிறந்துணர் தற்கும் சுட்டியுணர்தற்கும் ஆதாரமாய்க் காட்டாய் கோ
சரமாய் நிற்கும் பொருளெதுவோ அதுவன்றோ பரம்பொருள் சுட்டியுண
ர்தல் தற் (சீவ) போதமேலிட்டபோதும், சுட்டிறந்துணர்தல், சிவ (பதி)
போதமேலிட்டபோதும் நிகழத்தக்கது என்பது பதிநூலிற் பழகுமவர்
க்கு மினிது விளங்கத்தக்கது. இது கண்ணொளிக்கும் கதிரொளியில் வாய்க்
கும் லாபமின்னதென வுணரவருங்கால் கண் தன்னையுணர்தற்கும் தனக்கு
க்காட்டாயுள்ள கதிரோனையுணர்தற்கும் ஆதாரமாய் நின்ற கதிரொளி
போலச் சிவபோதம் சீவன்றன்னையுணர்தற்கும் தலைவனையுணர்தற்கும்
ஆதாரமாய் நின்றதென அறியத்தக்கது.

இனிபரனிடம் முத்திகாலத்தும் உயிர்களிருப்பதாயின் அத்துவிதமெ
ப்படியாம் பூரணம் எப்படி நிலைபெறும் எனவினவுகின்றனர். பெத்தமுத்
தியிரண்டிடத்தும் விட்டு நீங்கா துயிர்க்குயிராய் அத்துவிதமாய் நிற்கும்
பரனிலக்கண முள்ளவாறுணர்ந்தும் பதிநூலிற்பழகுமவர்கள் தெள்ளிதின
றியத்தக்கது. பெத்தகாலத்து மலத்துண்மறைந்தும் முத்திகாலத்துச் சிவ
த்துண்மறைந்து மிலகுவதே ஆன்மாவெனவறிய வேண்டும். இதனையே
"ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத்தாணு வினோடத்துவிதஞ்
சாருநாளென்றுளோ" வென விளக்கியுள்ளார் மேலோர். பெத்தமுத்தி
யிரண்டிடத்தும் விட்டு நீங்காதுயிர்க்குயிராய் அத்துவிதமாயுள்ள தென்
பது "கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற்கொண்டுணர்வார் தங்கருத்தின்நோக்கரிய
நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே, போக்கும் வரவும் புணர்வுமிலாப்
புண்ணியனே" என்னுந் தமிழ் வேதத்தானும். தத்துவாதீதத் திமிர்ப்பட
ங்கிற்றற் செலவுமத்தின் வரத்துமசையாத சுத்தம்" என்னும் ஒழிவிலொ
டுக்கத் திருவெண்பாவானும் நன்கு விளங்கும். இன்னும் விரிப்பிற் பெரு
கும்.

இனி சதோதயமாகிய அறிவில்லை யென்பதெவர்க்கு முடம்பாடல்லவானதால் அவ்வறிவுள்ளபோது அதனை விளக்குதற் குபகரணமாயுள்ள அறியாமையைக் குணமாகக் கொண்டொழுகும்பொருளாம் (ஆன்மாவு) முள்பொருளாம்.

இனி, பிரம மொன்றேயுள்ளது என்றவேதவாக்கியம் இரண்டாவது பிரமமில்லை யென்பதுடன் உள்ளதுபோலக்காணும் உலகம் அநித்தியமென்பதைக் காட்டியும் இங்ஙனமுணரநின்ற வான்மாவைக்காட்டியுமுபகரிக்கும் அமிர்தவசனமாகவே கொண்டு குணப்படுவர் பெரியர் என்க. இது "ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றேபதி, பசுவாமொன்றென்ற நீ பாசத்தோடுளைகாண்—ஒன்றின்றால், அக்கரங்களின் றாமகரவுயிரின்றேல் இக்கிரமத்தென்றுமிருக்கு" என்றும் ஒன்றெனுமதனு லொன்றென்றுரைப்பதன்று "என்றுமுண்மை நூற்பிரமாணங்களாலும் நன்கு விளங்கும். ஆகவேபிரமம் தன்னைப்பிரம மொன்றேயென வுணரவேண்டிய தின்று. சடமோ வெனின் உணரவேமாட்டாது இதனால் பிரமமாகாமலும் சடமாகாமலும் உணரவேண்டிய பொருளொன்று வேண்டப்படுவது நிதரிசனமாம் அதுவே யான்மா (பசு) வாம். அறிவனுமல்லை யறியானல்லை செறியருள் காட்டத்தேர்ந்து காண்பவனி" என்றும், இந்த வுடலறிவறியாமையு நியல்லையாதொன்று பற்றி னதனியல்பாய் நின்று பந்தமறும்பளிங்கனைய சித்து நீ யுன்பக்குவங்கண்டறி விக்கும் பான்மையேயாம்" என்றும் வரும் ஆப்தவாக்யப் பிரமாணங்களுமேலுண்மையை வலியுறுத்தும் "அறிவனுமல்லை" என்பது முற்றறிவனல்ல வென்பதையும் "அறியானல்லை" யென்பது அறிதற்கெழிலே யில்லாத சடமல்ல வென்பதையும் செறியருள்காட்டத்தேர்ந்து காண்பவனி" என்பது கதிரோன் காட்டக் காணுங்கண்டன்மைபோல் வாயென்பதையும், விளக்கியபடியாம் "யாதொன்றுபாவிக்க நானது வாதலாலுன்னை நா னென்றுபாவிக்கினைத்துவித மார்க்க முறலாம்" அடுத்ததின் றன்மையான்மாவாகும் "எதனை எதனை யானென நின்றான் அதனதன் சுபாவமானான்" எனும் பிரமாணங்களால் ஒளியோடு சேர்ந்தவிழி யொளியாயும் இருளோடு சேர்ந்தவிழி இருளாயு நிற்குங்கண்டன்மைபோல மாயாகாரியமாய் அழிதன்மாலைத்தாகிய தேகாதிபிரபஞ்சங்களை ("தேகநானென்று வல்வினைபுரிந்து மயங்கினையர்தத் தொல்வினைப்பயன்கள் சூட்டினம்") எனும்பிரமாணப்படி மெய்ப்பொருளென மயங்கியதுவாகி ஜனன மரணசம்சார துக்கத்திற்பட்டுழன்றும் அவைக்கு விலட்சணமாகிய சிற்கனமேனியே திருவுருவாய் பிறப்பிறப்பில்லா முழுமுதற் பரசிவப்பொருளேமெய்ப்பொருளென்பதைத்திருவருளாலேதெரிந்து அதிற்பிரிப்பில்லா நிலையெய்தும்போது அதன்றன்மையாகிய, பிறப்பிறப்பில்லா முத்தத்தன்மையாகி ஜனன மரண சம்சார துக்க நீங்கி முத்தனுகுதலுமாம் இங்ஙனம், முத்தனாய் நிற்றற்கும் யாண்டும் ஒரு பொருள் வேண்டப்படுவது நியாயவாதிகள் சர்வ சம்மதமாம் என்பது ஒருதலை.



தி. கு. சிறியாப்பிள்ளை.
தூத்துக்குடி.

---

## சமாச்சாரங்கள்.

### புத்தக வரவு.

**தேவாரம் வேதசாரம்**—சிவஞானதானவள்ளல்களாகிய ஜெகதாசாரிய மூர்த்திகளாம் சமயகுரவர்கள் நால்வர் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதங்களில், அகண்டவைபவ சச்சிதானந்த பிழம்பாகிய பரசிவப்பிரபுவே தெய்வமென வச்சிரலேபமாகத் தாபித்திருப்பதுபோலவே, வடமொழி வேதங்களிலும் உபநிடதங்களிலும் நிறுவியுள்ள உண்மையினை தென்மொழி வல்லுநரும், வடமொழிவல்லுநரும் தெளிவாகத்தெரிந்து கொள்ளுமாறு **தேவாரம் வேதசாரம்** எனவொரு அரியபெரியநூல் அச்சிடப்பட்டுள்ளது.

உலகோபகாரமாக இவ்வரியநூலை இயற்றினவர் தென்கலையிலும் வடகலையிலும் மிகப்பாண்டித்தியமுற்றவரும், சுவமதஸ்தாபனமும், புறமதநிக்கிரகமும் செய்துவருபவரும், சுத்தாத்துவித சித்தாந்த பிரவர்த்தகாசிரியரும், சைவசமய விளக்கத்தின்பொருட்டுத் தமது உடல் பொருள் ஆவியைத் தத்தஞ்செய்து வருபவருமாகிய ஸ்ரீ காசிவாசி-சாம்பவஸ்ரீ-செந்தினாதையரவர்களாகிய விப்பிரர் சிகாமணியாம்.

சிவபுண்ணிய விருத்தியொன்றினையே மேற்கொண்டிருப்பவரும், சைவசித்தாந்த மகாசமாஜத்தின் வனிதையர்பக்கத்துக் காரியதரிசியும், ஸ்ரீமத் ஏகாம்பர முதலியாரவர்கள் மனைவியாருமாகிய ஸ்ரீமதி மங்கையர்க்கரசியாராகிய அம்மையார் ஷ "**தேவாரம் வேதசாரம்**" என்றநூலை அச்சிட்டுபகரித்திருக்கின்றனர்.

மேலுமேலும் இத்தகைய சிவபுண்ணியமான நூல்கள் அச்சிட்டு வெளிப்படுத்த அவ்வம்மையாருக்கு மிக ஊக்கமுண்டாகும் பொருட்டு வைதிக சைவரனைவரும் "**தேவாரம வேதசாரம்**" எனும் நூலைவாங்கி வாசி

த்துச் சிவபெருமானின் அனந்தகல்யாண சுந்தரகுணங்களையறிந்து கொள்ளுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றனம்.

இந்நூல் விரும்புவார் சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை சாமிபண்டாரம் வீதி 24-வது என்றுள்ள வீட்டில் ஷை முதலியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 3 0 0

---

**மனத்திற்குறுத்தும் மதி விளக்கம்**—இந்நூல் இம்மைக்கும் மறுமைக்கும் அத்தியாவசியம் வேண்டிய சாதனங்களையும், விதிவிலக்குகளையும் மனதிற்கு வற்புறுத்திக் கூறுகின்றது, இனிய நன் மொழிகளினடுக்குகளைப் புணர்த்திய எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இந்நூலியற்றியவர் ஸ்ரீமான் வித்யாவதா-எம்-பி-பொன்னுவேற்பிள்ளையவர்கள். இதன் விலை அணா 4. விரும்புபவர்கள் சென்னைப் பிரம்பூர்ச் செம்பியம்-புழலை-முனிசாமி முதலி தெருவிலுள்ள இந்நூலாசிரியரிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

---

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கம்—இச்சங்கத்தினர் ஆகஸ்டுமீ 3௨ சுக்கிரவாரம் காலையில் மேலூர் திருவுடையம்பாளையும், பகல் திருவொற்றியூர் வடிவுடையம்பாளையும், இரவு திருமுல்லைவாயல் கொடியிடையம்பாளையும் தரிசித்து, சிவாலயவழிபாடு, தேவாரபாராயணம் செய்து, சிவஸ்ரீ-யதீந்திரசுவாமிகளைக்கொண்டு உபந்நியாசஞ் செய்வித்துத் திரும்பினர்.

---

அங்கம்பாக்கம் சைவசித்தாந்த சமயாசாரியர் பக்தசனசபை—இச்சபையினர் ஆகஸ்ட்மீ 18, 19௨களில் வாலாஜாபாத்துக் கடுத்த அங்கம்பாக்கத்தில், சித்தாந்தசரபம்- அஷ்டாவதானம்-சிவஸ்ரீ- கலியாணசுந்தர யதீந்திரசுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் பல வித்துவசிகாமணிகளும், ஒரு பண்டிதைசிகாமணியும் உபந்நியாசங்கள் செய்ய 27-வது வருடமகோத்சவங் கொண்டாடினர்.

---

சைவசித்தாந்த மகாசமாஜம்—ஆகஸ்ட்மீ 20௨ சந்தான குரவருளொருவராகிய மறைஞான சம்பந்த சிவாசாரியர் குருபூஜைதினமாகையால் அன்று சமாஜத்தார் திருமயிலைப் பிள்ளையார் தோட்டத்தில் பல சைவசிகாமணிகளைக்கொண்டு பற்பல மகோபந்நியாசங்கள் செய்வித்தனர்.

---

திருவண்ணாமலை சுத்தவிலாசசன்மார்க்க சபை—ஆகஸ்ட்மீ 25, 26௨களில், சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்-சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் பல பண்டிதமணிகளும், ஒரு பண்டிதைமணியும் பல உபந்நியாசங்களைச் செய்ய இரண்டாவது வருடமகோற்சவத்தை இச்சபையினர் நிறைவேற்றினர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 21 OCT 1917 MADRAS

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௬.] 1917ஆ செப்டம்பர்மீ [பகுதி ௬.

## சாந்தோக்யோபநிஷத்து.

நான்காவது பிரபாடகம்.

### கண்டம் ௧௫.

கண்ணில் புருஷனாகக் காணப்படுகிறான், அவன் பிரமம் ஆத்மா, அழியாதவன், பயமில்லாதவன்.

௨. இவனை "ஸம்யத்வாம" என்பர். என்னை? மங்களசொருபனாகலின், இவனை யுபாசிப்போர் மங்களசொருபராவார்.

௩. இவனை "பாமநீ" என்பர். என்னை? எல்லா உலகங்களிலும் விளங்குகின்றானாகலின், இவனை யுபாசிக்கின் எல்லா உலகங்களினும் விளங்குவான்.

௪. இவனை "வாமநீ" என்பர். என்னை? புண்ணியபலனைக் காட்டிவைக்கிறானாகலின், இவனை யுபாசிப்பவன் புண்ணியபலனை யனுபவிக்கின்றான்.

௫. இவ்வுண்மை யறிந்தவன் மரணமடைந்த பின்னர் இவன் தேகத்திற்குக் கன்மம் நடத்திடினும் நடத்தாவிடினும் அவன் காந்தியையடைந்து, சுக்கிலபட்சம், உத்திராயணம், வருஷம், ஆதித்தமண்டலம், சந்திரமண்ட-

லம் முதலியவற்றிற்குரிய தேவதைகளை முறையே யடைந்து சேவனுகி விடுகிறான்.

௩. இவன் கடைசியாகப் பிரமத்தை யடைகிறான் இது தேவமார்க்கம், இவன் திரும்பமாட்டான்.

## கண்டம் கசு.

வாயு யஞ்ஞத்திற்குச் சமம், வாயு எங்குஞ் சஞ்சரித்து எல்லாவற்றையும் சுத்தமாக்குகின்றது. இதற்கு இரண்டுமார்க்கங்கள் உண்டு வாக்கு ஒன்று, மனது ஒன்று.

௨. ரித்விக் வாக்கினை மனதால் சம்ஸ்காரம் செய்கிறான் ஹோதா, அத்வர்யு, உத்காதா இவர்கள்மனதை வாக்கால் சம்ஸ்காரஞ்செய்கிறார்கள்.

௩. யக்ஞம் ஆரம்பித்தற்குமுன் ரித்விக் பேசிவிட்டால் யக்ஞம் கெடுகிறது. யஜமானனும் பாபியாய் விடுகிறான்.

௪. மௌனமாயிருந்தால் இரண்டுவழிகளும் சம்ஸ்கரிக்கப் படுகிறது. யஞ்ஞம் பலனடைகிறது.

௫. யஜமானன் சிரேயஸ் அடைகிறான். இருகாலால் நடக்கிற புருஷனும் இரண்டு சக்கரமுடைய வண்டியும்போல நடைபெறுகிறது.

---

## கண்டம் கஎ.

பிரஜாபதி உலகங்களைக்குறித்து எது சாரமென நினைத்தார். பிருதிவியில் அக்கினியும், ஆகாயத்தில் வாயுவும், சுவர்க்கத்தில் சூரியனும் சாரமென வறிந்தார்.

௨. பின்னரும் அக்கினியில் இருக்குவேதமும், வாயுவில் யஜுர்வேதமும், சூரியனில் சாமவேதமும் சாரமெனக் கண்டுபிடித்தார்.

௩. மறுபடியும் இருக்கில் "பூ" என்ற வியாகிருதியும், யஜுசில் "புவ" என்ற வியாகிருதியும், சாமத்தில் "ஸ்வ" என்ற வியாகிருதியும் சாரமாகக் கண்டார்.

௪. யஞ்ஞம் செய்யும்போது இருக்கில் தோஷம்வந்தால் "பூ" என்று ஹோமம்செய்யப் பிராயசித்தமாம். யஜுசில் "புவ" என்றும், சாமத்தில் "ஸ்வ" என்றும் ஹோமம் செய்க.



## ஐந்தாவது பிரபாடகம்.

பிராணன் ஜ்யேஷ்டமாயும், சிரேஷ்டமாயும் இருத்தலினுல் இதை யறிகிறவன் ஜ்யேஷ்டமாயும், சிரேஷ்டனுயுமிருப்பன்.

௨. வாக்கானது வசிஷ்டம், இதை யறிகிறவன் தன் கூட்டத்தாருள் வசிஷ்டனுவன். வசிஷ்டமாவது எல்லாவற்றையுமறைத்துக்கொண்டு தான் முன்னிட்டுப் பிழைத்திருக்கிற தன்மை.

௩. பிரதிஷ்டைதான் சட்சு, இதையறிகிறவன் இம்மை மறுமையில் பிரதிஷ்டையுள்ளவனுயிருப்பன்.

௪. சம்பத்துத்தான் சுரோத்திரம், இதை யறிகிறவன் சம்பத்துள்ளவனுயிருப்பன்.

௫. ஆயதனம்தான் மனது, இதை யறிகிறவன் தன்னைச் சார்ந்தவர்கட்கு இருப்பிடமாயிருப்பன்.

மணவழகு.

## நீதி.

ஒருவன் தான் இவ்வுலகில் எவ்விதத் தருமத்தையாவது, அதருமத்தையாவது தன் சத்திக்கு மிஞ்சினதாகச் செய்தால், உலகத்தார் அவ்விதச் செயல்களைப் பற்றி மனங்களித்துப் புகழ்ந்துபேசினுலும், வயிறெரிந்து சபித்தாலும் அவற்றின் பலன்களை அவன் இவ்வுலகத்திலேயே மூன்றுவருஷத்திற்குள்ளாவது, மூன்று மாதங்களுக்குள்ளாவது, மூன்று பட்சங்களுக்குள்ளாவது அனுபவிக்கிறான்.

எவன் தன் நன்னடத்தைகளினுல் தன் மாதா பிதாக்களைச் சந்தோஷப்படுத்துகிறானே அவனே பிள்ளையாவான். எவள் தன் கணவனுக்கு ஹிதமானவைகளையே செய்கிறாளோ, அவளே நல்ல பெண்சாதியாவாள். எவன் தன் தோழனுக்குச் சுகம் வந்தாலும், கஷ்டம் வந்தாலும் அவனுடன் சிநேகம்விடாமல் அவனுக்கு எப்போதும்போல் அனுகூலங்களையே செய்கிறானே அவனே தோழனுவான். இம்மூன்றும் உலகத்தில் புண்ணியம் செய்தவர்களுக்கே கிடைக்கும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தத்துவங்களும் அதற்கப்பாலும்.

“ நேதிநேதி யாத்மா கிருஹ்யோ நஹி கிருஹ்யதே
சீரியோ நஹிசீரியதே ஸங்கோ நஹிசஜ்யதே
ஸிதோ நவ்யததே நரிஷ்யதி விஜ்ஞாதாரமரே கேந விஜாநீ’

பிருகதாரண்ய உபநிடதம்.

VI. 5-15.

அல்லை யிது அல்லை யிதுவென உரைக்கப்படும் இந்த ஆத்மா அவன் பிடிக்கப்படமாட்டான் பிடிக்கப்படமாட்டானாகலின், அவன் அழியாதவன், அழியப்படமாட்டானாகலின், அவன் தொய்வடையான், தொய்வடையானாகானாகிலும், கட்டுப்பட்டவனன்றாகலின், அவனுக்குத் துன்பமில்லை உயிப்பிலை ஏகாதலி! அறிபவனை யார் அறிவது.

அஜம் த்ருவம் ஸர்வதத்வைர் விசுத்தம்
ஞாத்வாதேவம் முச்யதே ஸர்வபாசை:

சுவேதா உப. II-15.

‘பிறப்பிலே ஸர்வ தத்துவங்களாலும் கடந்தவன் அத்தேவனை அறிய எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகிறான்.

இத்துடன் தத்துவப்படம் ஒன்று அச்சிட்டுத் தந்திருக்கிறது. இதன் முன்னர் அநேக படங்கள்வந்திருக்கின்றன, இது அதிக சுலபமாகவும் சுருக்கமாகவுமிருப்பதனால், பொருள் யாவர்க்கும் எளிதில் விளங்குமென்று எண்ணுகிறோம். மற்றப்படங்களில் காணப்படாத சிற்சில இதில்காணப்படும். அதாவது 36 தத்துவங்களுக்கும், மூவகை உயிர்களுக்கும் உள்ள இயைபும் நவந்தருபேதங்களின் கூறும் இதனால் விளங்கும். முப்பொருள் விளக்கமும் காணலாம்.

தத்துவங்களின் விபரம் முதலியன தமிழில் உள்ள அநேக தத்துவக் கட்டளைகளில் காணலாம். அந்தந்த மதச்சார்பு பற்றித் தத்துவக்கட்டளைகள்எழுதி யிருக்கின்றார்கள்.



சித்தாந்த மரபட்டவணை, சித்தாந்தக் கட்டளை, திருவாலவாய்க் கட்டளை முதலியன சித்தாந்த மரபைச் சேர்ந்தது. நாஞசிவ வாதக்கட்டளை வேதாந்தமென்ற மாயாவாத மரபைச் சேர்ந்தது.

இம்மதங்களில், இத்தத்துவங்களின் எண்களைப்பல்வேறாகக் கூறுவார் கள். 19, 24, 25, 28, 36, 96-ஆகக்கூறப்படும் இம்மதங்களும் எண்ணின் மேல் நிற்றலால், வடமொழியில் * தத்துவ ஞானத்திற்கு ‘சாங்கியம்’ (சங்கை) என்னும் தமிழில்‘எண்’(எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும்) என்றும் வழங்கிற்று.

இம்முறையில் கபில சாங்கியர்கள் கொண்டது 19-தத்துவங்கள். வைணவர்கள் 24. மாயாவாதிகள் 25. வேதாந்திகள்(உண்மைவேதாந்தம்) 28, சித்தாந்திகள் 36. இவற்றினை விரித்து 96-ஆகவும் கூறுவார்கள். ஆயினும் வேதாந்திகளும் சித்தாந்திகளும் நீங்க மற்றவர்கள் அநேகமாக அதே தத்துவங்களைக் கொண்டவர்கள். இவர்கள்கொண்ட தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு அதிகமாக வேதாந்திகளும் சித்தாந்திகளும் கூறுவார்களாயினர்.

மேலித்தத்துவங்கள் எல்லாம், மாயையினின்றும் உண்டாகி அதன் கூறுகளாகின்றதே தவிர அவித்தை அல்லது ஆணவம், கர்மம்; ஆத்துமா, கடவுள் என்றபொருள்களுக்குச் சம்பந்தமே யில்லை.

ஆணவத்தின் அழுக்கை அலசும்பொருட்டுப்பிறப்பிறப்பென்னும் சுழியிற்படும் உயிருக்கு, பல்வேறு காலங்களின் பல்வேறு நிலைக்குத்தகுந்த பல்வேறுருக்குமதுலமாகும் பல்வேறு சரீரஉடல்கள் அல்லது சட்டைகளாகும் இந்தப் பல்வேறு மாயாதத்துவங்கள் கர்மானுசாரமாக ஆனால் இவைகள் பரம்பொருளாகிய பரசிவனுக்கு இவைகள் சட்டைகளாகா. அவன் தத்துவாதீதன்,’‘குணாதீதன்’என்று பேசப்படுதலால். சீவனும் ஒவ்வொருகால் இம்முப்பானாறு தத்துவங்களுக்கு அப்பாற்பட்டமையால் இவ்வாறுபேசப்படினும், சீவனுக்கும் சிவனுக்கும் உள்ள வேற்றுமை உணரற்பாலது. உயிர் உடலோடு ஒற்றி நின்றபோது உடலாய் (சடப்பொருளாய் அசத்தாய்) நிற்கும். இறைவனோ எப்பொழுதும் சுட்டுப்பொருள் (Object) ஆகான்,

* சாங்கியம் என்றமொழி பிற்காலத்தில், நிரீஸ்வர கபிலசாங்கிய மதத்துக்குப்பேராயினும், ஆதியில் பொதுப்படத்தத்துவஞானமென்றே பொருள்பட்டது(Theory of Religion)அதுபோலவே யோகம் என்றசொல் சாதனமென்றே பொருள் (Practice)கீதையில் இவ்வழக்கத்தைக் காண்க.

இத்தத்துவங்களின் என்றும் அடிப்படையிலிருந்து மேற்படிவரையில் அளக்கப்படும் தத்துவ ஆராய்ச்சியும், நமக்குப் புலப்படும் கீழ்ப்படியிலுள்ள தத்துவங்களை முன்னிட்டு அவற்றிற்குமேல் மேலாயுள்ள நமக்குப் புலப்படாத அவற்றின் கூறுகளை உணர்தல்மேற் செல்லுதலால் இதுவும் அளவை நூல் நெறியாற் செல்லும் நெறியும் ஆகவே ஒவ்வொரு மதத்தினரும், கீழிட்ட பொருள்கள் முதல் சிற்சிலவற்றை உள்பொருளாகக்கூறி, அதற்குமேல் பொருளில்லையெனப் பேசும் லௌகாயதர் அல்லது நாத்திகர் எனப்பட்டார் நிலம், நீர், நெருப்பு, காற்று என்ற நான்கு பூதங்களைமட்டும் உள்பொருளாகஒப்பி ஆகாசம் என்ற தத்துவத்தை மறுப்பார். பௌத்தரும் ஜயினரும் இந்நான்கு தத்துவங்களை ஒப்பினர். இவர்களிடம் மனம் முதலிய அந்தக்கரணங்கள் உண்டே என்றுசொல்லின் அவர்கள் இவையெல்லாம், இந்நான்கு தத்துவங்களினின்றும் காரியப்படும் மூளை முதலிய புறக்கரணங்களின் செயலேயெனவும் கூறுவர். இவர்களுக்கு மேற்படியில் மனம் புத்தி என்ற அந்தக்கரணங்கள்தான் உள்ளது, அவற்றினின்று புறக்கரணங்களும் உலகமும் விரிந்தது, அவைகள் உள்பொருள்கள் அல்லவெனவும் அறைவர். இதற்குமேல் உயிர் உண்டே என வினவின், உம்மைமுட்டாள் என மொழிந்து, உம்மைவஞ்சிக்கச் சீவன் சிவன் என்று பேசியதெல்லாம் இந்தப் புத்திதான் என்றும் பகர்வர். புத்திமேற்பட்டு அதற்குக் காரணமாயுள்ள மூலப்பிரகிருதி, என்ற தத்துவத்தைக் காண்கிறோம். இது பிரதானமென்றும், பிரகிருதியென்றும், மாயை என்றும், அவ்வியக்தமென்றும் அழைக்கப்படும். இது 24 ஆவது மேற்பட்டு 25 ஆவது தத்துவமாகக் காணப்படும். நம்மிந்து மதச்சார்பினர் இதற்குமேல் தத்துவங்கள் இருப்பதாக ஒப்பார். அதற்குமேற் கூறப்பட்ட தத்துவங்களும் இவைகளுக்கடங்கியனவே என்று கதறுவர். அதுமட்டன்றி, சடப்பொருள் (அறிவில்லாத பொருள்) இவ்விருபத்துநான்கு தத்துவங்களோடு நில்லாது, மிகவும் நுண்மையதாய், அறிவாய்க் காணப்படும் என்பதை ஓர்கிலர். அப்படி ஓர்ந்தபோதும், இவ்வதிக தத்துவங்களை மாயையின் கூறுகளாகக் கொள்ளாமல், அவைகள் சீவன் சிவன் என மயங்குவர். இம்மயக்கத்துக்கும் காரணம் இவ்வதி சூக்குமமாகிய தேகங்களில், சீவனும் சிவனும் அதிகப்பிரகாசமாய் விளங்குதலாகும்.

இது நிற்க. குணம் * என்பதும் மூலப்பிரகிருதியின் தன்மைக்குப் பெயராகி, சத்வம், ராஜஸம், தாமஸம் என முத்திறப்படும். அக்குணமும் பிரகிருதிக்குமேற்பட்ட தத்துவங்களின் குணமும் ஆகாது, மூவகை உயிருள் கீழிட்ட சகலர்களுடைய சட்டையாகும்.

* இந்த மதத்தருள், சிலர் முக்குணம் பிரதானத்தின் குணமென்பர். சிலர் பிரதானமே யென்பர். முடிவில், குணம் என்னும் பதம் பிரதானத்தின் குணமென்றே பொருள்தந்து, பின் எல்லாப்பொருளின் இயல்புக்கும் பெயராயிற்று.



இச்சகலரும், அணுக்கள் முதல் அரும்பதம்பெற்ற கடவுளர்கள் ஆவர்கள். கீழிட்ட உயிர்களில், தாமஸம் அதிகமாகவும் மற்றகுணங்கள் கொஞ்சமாகவும் காணப்படும். மேலிட்ட உயிர்களில் சத்வகுண மதிகரித்திருக்கும். அப்படி அதிகரித்திருக்கும் சகலர்கள் கடவுளர்களாகி, சிருஷ்டி முதலிய பெருந்தொழில்களைச் செய்வர்கள். இதனாலும், நம்முடைய சிறுமையினாலும், இத்தேவர்களையே பரமசிவமாக எண்ணி மயங்குவதுண்டு. அதிலும், திரிமூர்த்திகளில், ருத்திர மூர்த்தியை சாரூபத்தினாலும், பெயரொற்றுமையினாலும் சதுர்த்தனும் மூவர்கோனுமாகிய உமாபதியாக அதிக மயக்கப்படுவர். இம்மூர்த்தி அப்படி சாரூபம்பெற்றதும் அவருடைய சுத்ததனுவின் மகத்துவமென்க. எப்படியெனின் தேகம் வெண்மையாதலின், பளிங்கைப்போல் சார்ந்ததின் வண்ணமாகி, தன்னுருவும் பெயரும் விளங்காது ; உள்ளொளிக்கும் பரமபதியின் உருவமும் பெயரும் பெற்றதென்க. இதனை ஓராது சிலர் திரிமூர்த்தி ருத்ரன் சகுணப்பிரமமென்றும் அதன் உபாசனை கீழிட்டபடிகளிற் பயன்படுமென்றும், சிவத்தின்வேறாகிய நிர்க்குண பரப்பிரமத்தின் உபாசனை தான் முத்தியைத் தருமென்றும் சொல்வர். அதனால் நிர்க்குண உபாசனை, சகுண உபாசனையைவிட என்னமோ அதிகமென்பது அவர்கள்கருத்து, மாயையில் உண்டாகிய மேல் தத்துவங்களிலிருந்து சரீரம்பெற்ற நிர்க்குணப் பிரமங்கள் அநேகர் உளராதல் ஓராது. பிரளயாகலரும், விஞ்ஞானகலரும் இவ்வித நிர்க்குணப்பிரமங்கள் ஆவார். அவர்களுக்கு இப்பூமியிற் பிறப்பும் இறப்பும் இல்லை.

கபில சாங்கியர்களும், மாயாவாதிகளும், பிரகிருதி அதன் 24-தத்துவங்களையும் கூறி, அதற்குமேல் 25-தத்துவமாகப் புருஷன் (ஆத்மா) அல்லது பிரமம் என்ற ஒரு பொருளைக் கூறுவார்கள். நிர்க்குணமாகிய இந்தப் பிரமம், முக்குணங்களோடு தோய்ந்து மும்மூர்த்திகளாகிய சகுணப்பிரமங்கள் ஆவதாகக் கொள்வர். ஆயின் நின்மலன், நிராமயன், குணாதீதன், தோய்விலான் என்று பேசப்படும் பிரமம் மலத்திற்கட்டுப்படுவ தெப்படி தோய்வுறுவதெப்படி எனவினவின், சிலர்கன்னியமாய்த் தங்களுக்குத்தெரியாதென்பர். சிலர் வார்த்தை வீணாகப் பிரயோகம்செய்து பலவித சாலங்காட்டி நிர்க்குணப்பிரமம் சகுணமாகிய ஈசுவரன், சீவன் ஆவதில்லை. ஆவதைப்போல் காண்பது மித்தை மருள் என்பர். ஆயின் இது மருள் இல்லையேல், இருள்பொதிந்த இயமானன் (ஆத்மா) ஒன்றுளதேல், சீவனைப்போல் நின்ற பிரமத்தைத்தவிர வேறுபொருளும் இல்லையேல் பின்பரம்பிரமமாகக் கொண்ட அதுவும், சீவனாகவே ஏற்படும். ஏனைய மதத்தினர் மாயையும்,

புத்திரியையும், மாலயன் முதலியோரையும், பரம்பொருளாகக்கொண்டு மரு
ண்டவர்போலவே இவர்களும் சாதாரண சகலசீவனையே பியமாகக்கொண்டு
நின்றவர்கள் ஆவார்கள். இவ்விஷயத்தை முடிக்குமுன்னர், சகுணவாதிகள்
கூறும் ஒரு கூற்றைப்பற்றிப் பேசிப்போவோம். அவர்களுக்குக்கடவுள் நிர்க்
குணன் என்ற சொல்வது அவ்வளவு சம்மதமில்லை. ஆனால், வேதங்களில்
அவனை அப்படிப்பேசிற்றே எனின், நிர்க்குணன் என்பதற்குக்கெட்டகுணங்
கள் இல்லாதவன் (ஹேய குணரகிதன்) சகுணன் என்பதற்கு சுத்த சத்வத்
தில்உண்டாகிய நல்ல குணங்களையுடையவன் என்பர். ஆனால் அவர்களுக்கு
வேதத்திலும் அதிக செலாக்கியமான கீதையில், கடவுளை முக்குணங்கடந்த
வனென்றும், முக்தனுமே முக்குணங்களையும் கடக்கவேண்டுமென்றும்
முறையிடுகின்றதேயெனில், முக்குணங்கள் இல்லாமையான் சத்துவகுண
மில்லையென்று சொல்வது அடாதென்பர்!! இப்படிப் பிரமாணங்களை
யெல்லாம் குதர்க்கம்செய்து ஆபாசப்படுத்துவதும், எங்கே தங்கள் கட
வுள், பரம்பொருளாகாமற் போகின்றதோ என்கின்ற அபிமானமும் துக்க
முந்தான். நாம் அடிக்கடி கூறியிருக்கின்றோம். கடவுளை எந்தப்பெயரினு
லும் அழைத்து வந்தனை வழிபாடு பண்ணலாம். ஆனால் தியானிக்கப்படும்
பொருள் இறப்பிலி பிறப்பிலியாகவும், முக்குணங் கடந்ததாகவும் இருக்க
வேண்டும். ஆகவே இது வெறும்வார்த்தைச் சண்டையாகாது, அவர்கள்
சில இடுகுறிப்பெயரால் வழங்கும் பொருள்களே வேற்றுமையுள்ளதாகக்
காண்க.

---

இது நிற்க, சகலருக்குமேல் பிரளயாகலர் எனப்பட்ட உயிர்கள் நிர்க்
குணராய், 26-முதல்-30-வரையுள்ள தத்துவங்களினின்றும் தேகம் பெறு
கிறார்கள். இத்தத்துவங்களாலாகிய மேனிய உடலினின்றும்வேறாகியும் நுண்
ணியதாயுமிருப்பதால், இவ்வைந்து தத்துவங்களுமே ஒன்றாய்ச்சேர்ந்துப்
புருஷ தத்துவம் அல்லது ஆத்ம தத்துவம் எனப்பேசப்படும். இதனால்
ஆத்மாவைவிட அவ்வியக்தம் பெரிது, அவ்வியக்தத்தைவிட பரமாத்மா
பெரிது என்ற வசனங்களின் உண்மை என்னவென வெளியாகும். இங்கு
ஆத்மா என்றது சீவனாகாது, ஆத்ம தத்துவமாகும். இவ்வாத்தும தத்து
வம் 31 தத்துவமாகிய அசுத்தமாயையினின்று பிறப்பதைக் காண்கின்
றோம். மூலப்பிரகிருதி, 30 ஆவதாகிய கலையினின்றும் உண்டாகிறது. இத
ற்கு மேலிட்ட 5தத்துவங்கள் மிகவும் உன்னதபதவியிலுள்ள விஞ்ஞான
கலர்ஆகிய உயிர்களுக்கு உடலாகிச்சுத்தமாயையினின்றும் உண்டாகின்றது.
அவர்களிற் பக்குவப்பட்டோர் மகேச்வரர், சதாசிவர், பிந்துமூர்த்தி, நாத



மூர்த்திகளாகின்றார்கள். கடைசியாகநின்ற பிந்து நாதமூர்த்திகள் கடவுளு
க்கு அதிகம் அணுகியிருத்தலால், சிவம் சத்தியின் பூர்ணகலைகளும் அவர்க
ளின் விளங்கப்பட்டுச் சிவம் சத்தி என்றும் அவர்களுக்குப் பேர்வந்தது.
எனினும் நவந்தருபேதத்தில்,மேனின்ற சகுணப்பிரமங்களாகிய மும்மூர்த்தி
களும் நிர்க்குணப்பிரமமாகிய மகேச்வர பிரமம், சதாசிவப்பிரமம், விந்துப்
பிரமம், நாதப்பிரமம் ஆகிய நால்வரும் சீவர்களேயாகில் அசுத்தமாயை,
சுத்தமாயையினின்றும் உடலைப்பெறுகிறார்கள். இந்த மூர்த்திகளையும்,வேத
உபநிடதங்களில் பரம்பொருள்களாகவும் பேசப்படுகிறது. இதனாலும்,
திரிமூர்த்தி ருத்ரரிலிருந்து மேலிட்டமூர்த்திகளுக்குப் பரமேச்வரனுடைய
நாமங்களாகிய சிவன், சங்கரன், சம்பு, பவன், சர்வன், பசுபதி, அரன்,
ருத்திரன் என்ற நாமங்கள் அதே உருவம் காளகண்டம், திரிநேத்திரம்
உமாசகாயத்வம் முதலியன பேசப்படுவதாலும் நம்மதத்தினருங் கூட
மயங்குகிறார்கள், பிறர் மயங்குவதற்குக் கேட்பானேன். இதன் காரணம்
மேல் கொஞ்சம் காட்டினோம். இந்த ஈச்வரர்கள் சகலர்போலப் பிறப்பு
இறப்பு இல்லாதவர்களாதலாலும், கீழ் பதவிக்கு வரமாட்டார்களாதலா
லும், பரமேச்வரனை அணுகி நிற்றலான் அவன் சுயம்பிரகாசமும் உன்னத
மகிமையும் இவர்களிடம் பிரகாசிக்கின்றது. சாக்கிரதை, சொப்பனம், சுழு
த்தி, துரியம்என்ற நாலவஸ்தைகளும் சகலருக்கேயன்றி,பிரளயாகலர்,விஞ்
ஞானகலருக்கில்லை. ஆகவே பரமாத்மா துரிய அவஸ்தையிலிருப்பதாக
ஒருவர் கூறியிருப்பது * பரநிந்தையாகும். அப்படி ஒருபொருள்
துரிய அவஸ்தையிலிருப்பதானால், சித்தாந்திகள் கூறுவது அப்பொருள்
சீவனேயாகுமல்லது சிவனாகமாட்டாது. ஆயின் பரம்பொருளை 'சிவம் அத்
வைதம், சாந்தம், சதுர்த்தம்' என்று வசனங்களில் நாலாவதாகப் பேச
ப்படுகிறதேயெனின், அங்கு மும்மூர்த்திகளுக்கு மேலானவனென்றே
பொருள்படும். இவ்விதம் பரமசிவன் துரியப்பொருள் பேசப்பட்டது
கால அளவில் புதுபுது மதங்கள் உண்டாகி வளர்ந்ததினாலும், அதனை
நன்கு ஞாபகத்தில் வைக்காததினாலும் புறச்சமயிகள் நம் ஹிந்து மதத்தை
த்தூஷிப்பதற்கு இடங்கொடுத்ததென்க. கிறிஸ்டியன் காலேஜ் பத்திரிகை
ஒன்றில், ஒரு பாதிரியார் வேமன யோகியைப் பற்றிப் பேசப்புகுந்து,
பரம்பொருள் திரிமூர்த்திகளுக்கு அப்பாற்பட்டவனென்றும், அப்பொருளை
தேவன், பரமாத்மா, பிரமம் என்ற பதங்களால் பேசியுமிருக்கவும், இக்கா
லத்துத் தெலுங்கு நாட்டில், நாராயணனே பரமபதியாகக் கொண்டிருக்க

---

* Theosophy of the Vedas Vol I. P. 7.

வும், வேமனயோகி, சிவனே பரப்பிரமமாக என்று கூறுகின்றாரென அதிசயிக்கின்றார். ஒரு வேளை வீரசைவ மதப்பிரவேசத்தால்போலும் என்று சந்தேகிக்கின்றார். ஆயின் லிங்காய மதம் உண்டாவதற்கு அநேக காலங்களுக்கு முன்னே உள்ள அதர்வசிரம் முதலிய உபநிடதங்களிலும், மகிம்நஸ் தோத்திரம் முதலிய நூல்களிலும் உள்ள பிரமாணங்களையும் நாம் வேறு இடங்களில் உதகரித்து இருக்கின்றோம். முடிவில் இச்சிறுமொழிக்கு மேற்கோளாகக்காட்டியிருக்கும் மந்திரங்களின் உண்மை இந்தத் தத்துவ ஆராய்ச்சியால் எவ்விதம் நன்கு புலப்படுவதைக் காண்க. மாணுக்கன் 'சேதன அசேதனப் பிரபஞ்சங்களில், வெளியாகக் காணப்படும் சக்திகளை அதற்கு மேல் வெளியாகாத சக்திகளையும், மேலும் மேலும் உள்ள அறிவையுடையவும், கீழுள்ளவற்றை 'அல்லை யீது' 'அல்லை யீது' என மறுத்துச்சொல்லவும் சத்தும் அசத்துமாகிய அவ்வியக்தம், ஆத்மாவைக் கடந்துசெல்லவும்.

"ஏகோ தேவஸ் ஸர்வபூதேஷு கூடஸ்ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா
கர்மாத்யக்ஷஸ் ஸர்வபூதாதிவாஸஸ்ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணச்ச."

ஸ்வேதாஸ்வதர VI-11.

'ஒரே தேவன், எல்லாபூதங்களிலும் மறைந்துள்ளான், எல்லாவற்றிலும் நிறைந்துள்ளான், ஒவ்வொரு ஆத்மாவுள்ளும் அந்தராத்மாவாயுள்ளவன்; எல்லா கர்மங்களையும் அளக்கின்றவன், எல்லாவற்றிலும் வசிக்கின்றவன், சாக்ஷி, சேதனன், நிர்க்குணன்.

"தமீச்வராணாம் பரமம் மஹேச்வரந்தம் தைவதாநாம்
பரமஞ்ச தைவதம்;
பதிம், பதீநாம் பரமம், பரஸ்தாத் விதாமதேவம்
புவனேச மீட்டியம்." Do. VI-7.

ஈச்வரர்களுக்கெல்லாம் ஈச்வரன், மகேச்வரன், தேவர்களுக்கெல்லாம் தேவன், பதிகளுக்கெல்லாம் பதியாயுள்ளவன், எல்லா பரத்துக்கும் தேவன், புவனங்களுக்கெல்லாம் ஈசன்.

"நித்யோ நித்யாநாம், சேதனச் சேதநாநாம்
ஏகோ பஹூநாம் யோவிததாதி காமாந்;
தத்காரணம் ஸாங்கிய யோகாதி கம்யம் ஞாத்வா
தேவம் முச்யதே ஸர்வ பாசை." VI-13.



"நித்யரில் நித்யன், சேதனங்களிற் சேதனன், ஒருவனாயும், யாவருடைய இச்சைகளையும் கொடுப்பவன், அந்தகாரணன், சாங்கிய யோக முதலியவற்றிற்கு நெறியாயுள்ளவன், அவனையறிந்து வழிபடில், எல்லா பாசங்களின்றும் விடுபடுகிறான். என்று பேசப்பட்டும் அப்பரஞ்சோதியின் அருட்பிரகாசம் நம் கண்ணுக்கு எதிர்ப்படவில்லையா!

இங்குச் சகுணநிர்க்குணப் பிரமங்களைப்பற்றிப் பேசினோம். சாதாரண வழக்கில் இதன் உண்மை சரியாக ஓராமல், ஆங்கிலேயத்தில் பொருத்தமில்லாமல் (Personal Impersonal God) என்று மொழிபெயர்க்கிறார்கள் இப்பதங்களின் உண்மைப்பொருளையும் வேற்றுமையையும் பற்றி இன்னொரு பத்திரிகையிற் பேசுவோம்.

ஜே. யம். நல்லசாமி பிள்ளை.
B. A., B. L.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# விக்கிரக ஆராதனை அவசியம்.

சர்வலோகைக நாயகனாகிய பரமேசுர பிரபுவானவர் பாய இவ்வுலகின்கண் சர்வ சீவராசிகளும் தம்மை வழிபட்டு முத்தி யின்பம் பெறும் பொருட்டே திருவுருக்கொண்டு விளங்குகின்றாரென்பது ஆகமநூற்றுணிபு.

சொரூபம்—தடத்தம்
அநாதி—ஆதி
இயற்கை—செயற்கை.
மெய்—பொய்
காரணம்—காரியம்.

நமது சமயாசாரிய சுவாமிகளாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் இவர்கள் மூர்த்தி தலந் தீர்த்தத்தின் மகிமையை இக்காலத்திலுள்ளவர்களும் நன்குணர்ந்து, பின்பற்றி யொழுகவேணுமென்று பெருங்கருணையோடு பல தலங்களினுஞ்

சென்று நம்பிரானவன் திருவுருக்கொண்டு விளங்கும் திருவருட்டிறத்தைப் பல அற்புதச்செயல்களால் விளக்கிய தன்மையும் அறியற்பாலதொன்றும். அவர்கள் புரிந்த அற்புதச்செயல்களெல்லாம் பன்முகமாக அறியக் கிடந்தனவாதலின், அதனை விரித்துப் பெருகுமென்றஞ்சி விடுத்தாம்.

ஒருவழியிலாயினும் மனம் நிலைபெற்றிராது இக்காலத்திலுள்ள சிலர், பிரமமென்றும், ஞானமென்றும், சுவாமிகளென்றும் இன்னுஞ்சிலர் வேதாந்தமென்ற சொல்லுக்கே பொருள் கட்டுரையாற் தெரியாது வேதாந்திகளென்று பெயரைமாத்திரம் வெற்றுச் சுமையாகத் தாங்கிக்கொண்டு கோயில், குளம், தீர்த்தம் இவற்றில் என்ன இருக்கிறது ஒன்றுமில்லையெனச் சிலர்க்கு வற்புறுத்திக்கூறித் தங்களுடைமையாக அவர்களையுந் துணைகொண்டு எரிவாய் நரகத்திற்கு ஆளாகின்றார்கள்.

"மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று வேதாந்த சித்தாந்த சமரசத்திலும் மௌனநிலையிலும் மேம்பட்டு விளங்கிய மகா ஞானியாகிய தாயுமான சுவாமிகள் அருளிச்செய்திருக்கின்றார்.

நம்பிரானவன் வாக்கு மனங் கோசரமல்லனாயினும் உயிர்கள் தம்மை வழிபட்டு உய்யுநிமித்தம் மூர்த்திதலந் தீர்த்தங்களிலே தம்முடைய திருவருளை விளங்கச்செய்து அவ்விடத்திலே தம்மை வழிபடுவோர்க்கு அருள் வழங்குவார் என்பதுபற்றியே தான், "மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று அருட்பெருஞ்செல்வர் அருளிச்செய்தார். கடவுள் வணக்கத்துக்கு மூர்த்தி மிக அவசியமானது. மூர்த்தி என்றும் விக்கிரகம் (அல்லது) திருமேனி என்று அர்த்தமாம். கடவுள் நாம் தம்மை வழிபடு நிமித்தம் விக்கிரக முதலிய திருமேனிகளைத் தம்முடையவைகளாகக் கொள்ளுகிறார்.

அது எதுபோலவென்னின் அக்கினி நமக்கு உபகாரஞ்செய்யும்பொருட்டு விறகு திரி முதலியவற்றைப்பற்றி நின்று விளங்கி உபகரித்தல்போலென்க.

எனவே அக்கினியின் உபகாரத்தை நாம் பெறவேண்டுமானால் அக்கினி ஒரு இந்தனத்தைப்பற்றுதலேயன்றி நாம் பெறுவதில்லை. அதுபோலவே



கடவுள் இவ்வாறு ஒரு திருவுருவைக்கொள்ளாத நிலையில் நாம் அவரை வணங்குதற் கியலாது.

ஆனால் இவ்வியலாமை கடவுளின் பாலதன்று கடவுள் எவ்வாறுமின்றும் அநுக்கிரகிக்க வல்லவரே யாம்.

அவர் அறிவில்நின்று உணர்த்துதலை ஏற்கும் வல்லமையுடைய விஞ்ஞானகலர்க்கு அவ்வாறே அநுக்கிரகிக்கின்றார். அவ்வன்மைபெறாத பிரளயாகலர்க்கு ஒரு திருமேனிகொண்டு முன்னின்றுணர்த்துகின்றார். சகலர்களாகிய நமக்கோ குரு லிங்க சங்கமங்களின் வாயிலாக அநுக்கிரகம்பண்ணுகின்றார். ஆதலால் அவ்வவ்வியலாமை உயிர்களிடத்துள்ளதேயன்றி கடவுளின் பாலதன்று.

கடவுள் நமது ஏலாமையை உணர்ந்தே நமது சக்திக்குகேற்ப இவ்வாறு விக்கிரகத் திருமேனியில் எழுந்தருளிநின்று அநுக்கிரகம் பண்ணுகிறார்.

அவ்விதம் விக்கிரகத்திருமேனியில் எழுந்தருளுதற்கு ஒரு முக்கிய நியாயமிருக்கிறது. அது யாதெனில் நம்முடைய அறிவு கண்ணிந்திரியத்தைத் துணைகொண்டு அதன் வாயிலாக கண்டவற்றையே யறியும் அவையல்லாதவற்றை அறியமாட்டாது. அதனால் அக்கண்ணிந்திரியத்துக்கு விஷயமாகத் தக்க ஒரு விக்கிரகத்தில் தம்முடைய திருவருளையிருத்தி அவ் விக்கிரகத்தைத் தமக்குத் திருமேனியாக ஏற்கிறார்.

நாம் அதை நம்முடைய சக்திக்கேற்ப கண்ணினாற்றரிசித்துப் பேறுபெறுகின்றோம். இதைத் தவிர நமக்குச் சிறந்தசாதகம் வேறில்லை என்பது பெற்றாம். பெறவே விக்கிரக வணக்கம் நமக்குப் பெருஞ்சாதகமானதொன்றென்பது யாரும் இலகுவில் அறியற்பாலதே.

இன்னும் நம்பிரானவன். எவரெவர் எந்தெந்த விக்கிரகமாக உட்கொள்ளினும் அவர் அந்தந்த விக்கிரகத்தினிடமாகநின்று விளங்கி அநுக்கிரகிக்கின்றாரென்பது புராணேதிகாச மிருதியாதிகளிற் பிரசித்தம்.

"யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகி யாங்கே-
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்ற சிவஞான சித்தியார் திருவிருத்தத்தானும்,

"மொக்கணி யருளிய முழுத்தழன்மேனி சொக்கதாகக் காட்டிய

தொன்மையும்" என நமது மணிவாசகப் பெருமானருளுந் திருவாக்காலும், இன்னும் பன்னூல்களாலுந் தெளியக் கிடந்தன.

அதிவிரைவில் விக்கிரக ஆராதனை அவசியம் என்னும் விஷயத்தைச்சிறு புத்தகமாக வெளியிட்டு நமது அன்பர்களுக்குபயோகிக்க எண்ணியிருப்பதால் இது விஷயத்தை இம்மட்டோடு நிறுத்தினேன். சுபம்!

S. நடேச தேசிகன்.
கவர்ன்மெண்ட் ஸ்கூல் தமிழ்ப் பண்டிதன்,
திருமலைராஜன் பட்டணம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஞானம்.

---

சைவ சித்தாந்த சாத்திரங்களிலே முத்தியுபாயங்கள் என்று எடுத்துப் பேசப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களுள்ளும் ஞானமே தலைமைபெற்றுச் சிறந்தது. இந்த ஞானத்துக்கு முதன் மூன்று பாதங்களும் சோபானங்களாகும்.

"விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றே பராபரமே"

இந்த மூன்று பாதங்களும் ஞானத்துக்கு ஏதுவாகுமன்றி நேரே முத்திக்கு ஏதுவாக மாட்டாவாம். முத்திக்கேது ஞானமாத்திரமே யாகும்.

"உரைசெயிற் பரமஞான மொன்றமே முத்திக்கேது
சரியைகள் கிரியையோகந் தாமொரு மூன்றுஞான
மருவுதற் கேதுவென்றே மறைபுகன் றிடுமால்"

இந்த ஞானத்தை, சாத்திரப்பயிற்சி வாயிலாகப் பெறப்படும் அறிவு மாத்திரையே என மயங்கி அறிவாரும் பலர் இந்தக் காலத்துள்ளார். ஜீவான்மாவைப் பரமான்மா என்று அறிவதே முத்தியுபாயம் என்று அசுத்த வேதாந்திகளாகிய மாயாவாதிகளிற் சிலரும் தடுமாறுவர். அறிவுக்கும் ஞானத்துக்கும் பெரிது பேதமுண்டு; அறிவு மாயாவரைப்பினுட்பட்டு



தொருபொருள். ஞானம் அந்த மாயா வரைப்பினுக்கு அப்பாற்பட்ட உண்மை அனுபவம்.

அறிவுக்கும் அனுபவத்துக்கும் மிகப் பேதமுண்டு. வெல்லம் தித்திக்கும் என்று அறிவதும், அத்தித்திப்பை நாவால் சுவைத்து அனுபவிப்பதும் தம்முண் மிகப் பேதப்படும்.

அறிவு மாயாகருவிகளின் உபகாரங்கொண்டு ஈட்டப்படுவது ஞானம். அக்கருவிகளைக் கழன்றுநின்று அனுபவிக்கப்படும் அனுபவமாகும். இந்த ஞானத்துக்கு அறிவும் ஒரு சிறிது உபகாரமாகும். ஆனால் ஞானத்துக்கு முக்கியமான ஏது அன்பே யாகும்.

அறிவில்லாரும் 'ஓர் ஓர்.' காலத்தில் அன்புடையராகக் காணப்படுவர். இந்த அன்பு மெய்யன்பெனப்படாது. உண்மையை அறியாமற் செய்யப்படும் அன்பு "குருட்டுப்பத்தி" எனப்படும். உண்மையை உள்ளபடி அறிந்து, அவ்வறிவு காரணமாக அந்த உண்மையிற் செய்யப்படும் அன்பே மெய்யன்பெனப்படும் இந்த மெய்யன்பு காரணமாக உண்மையை அனுபவிக்கும் அனுபவமே ஞானம் எனப்படும்.

கடவுளோடு நாம் எல்லாம் அத்துவித சம்பந்தம் உடையேம் என்று அறிதன் மாத்திரையால் (அதாவது எமது மனதில் நினைத்தன் மாத்திரையால்) நாம் முத்திக்குப் பக்குவிகளாகிவிடமாட்டேம். கடவுள் எம்மை உயிர்க்குயிராய்நின்று ஆட்டுகின்றார். எமக்கு யாதானும் ஒருசெயல் இல்லை என்பதை அனுபவத்திற்கண்டு, எமது நினைவு செயலற்று நிற்கும் அந்த நிலையே நாம் கடவுளுடைய அத்துவித சம்பந்தத்தை அனுபவத்திற்காணும் நிலையாகும். இந்த நிலையைப் பரமபதியாகிய சிவபெருமானே இனைத்தென்று எடுத்து வாயாற்சொல்வ தரிதெனக்கொண்டு, "இருந்தபடி இருந்துகாட்டிச் சொல்லாமற் சொன்னார்" என்றால் நாயினுங் கடையேமாகிய நாமா அதனைஎடுத்து விளக்கவல்லேம்!! இந்த நிலைக்கும் எமது அறிவுக்கும் எத்துணைப் பேதமுண்டு என்பதை எடுத்துக் காட்டுதற்பொருட்டே நாம் அந்த நிலையை ஒருசிறிது விளக்கத்துணிந்தேம். இங்ஙனமான தொரு அதீத நிலையை எமது அறிவு நிலை என மயங்குவது எத்துணைப்பேதைமை யாகும்!!

இந்த ஞானமே முத்திக்குரிய ஏகசாதனம் என்பதே அறியாத வேறு சிலர், கர்மயோகத்தாலும் முத்திகூடலாம், பக்தியோகத்தாலும் முத்தி

கூடலாம், இராஜயோகத்தாலும் முத்தி கூடலாம், ஞான யோகத்தாலும் முத்தி கூடலாம் என்று மயங்குவர். இவர்கள் ஞானயோகம் என்று எடுத்துப்பேசுவதும் சாத்திர ஞானமாகிய அறிவையே யாகும். இவர்களுடைய கொள்கைப்படி நிரதிசயானந்தமாகிய பரமுத்தி, சற்குருமுகத்தாலும் பத்தி மாத்திரையாலும், யோக சாதனையாலும், ஞான முதிர்ச்சியினாலும், ஒப்பவே அடைதற்பாலது என்றபடியாகும். இவர்களுடைய இந்தக்கொள்கை முத்தி யிலக்கணத்தை உள்ளபடி விளங்கிக்கொள்ளாமையால் எய்திய விபரீத விளக்கமாகும். இவர்கள் இங்ஙனங்கொள்வது மாத்திரமன்றி, எல்லாச் சமயங்களும் முத்திக்குரிய நெறிகளாமெனவும் மயங்குவர். இந்த மயக்கம் எல்லாம் சமயத்தின் பிரயோசனத்தையும் அதனால் எய்தற்பாலதாகிய உறுதிப்பயனையும் அறியாமையால் வந்த கேடேயாகும். இக்காலத்திலே தலை எடுத்துப் பெருமுழக்கிடும் லௌகிகத்துக்கு ஏற்புடைத்தாகச் சமயக்கொள்கையையும் திரிபுறுத்துக் காட்டிவிடுமாறு பலர் முயன்று நிற்பது "கலியின் வண்ணம்" போலும்! லௌகிகத்திலே அமிழ்ந்துகிடப்பார் மெச்சிக்கொள்ளுமாறு சமயத்தை விளக்கிக் காட்டுவாருண்டானால் அவர்களாற் பெரிது நன்கு மதிக்கப்படலாம் என்பது இவர்கள் கருத்துப்போலும்! ஆனால் லௌகிக சன்மானத்தின் பொருட்டாகச் சமயத்தைத் திரிபுறுத்துக் காட்டுவது உய்தியில் பெருந்துரோகமா மென்க.

எல்லாச் சமயங்களாலும் ஓர் ஓர் பயன் சித்தித்தல் கூடும் என்பதை நாம் சிறிதும் ஆக்ஷேபிப்பதில்லை. ஆனால் எல்லாச் சமயங்களாலும் உறுதிப் பயனாகிய பரமுத்தி சித்திக்கமாட்டாதென்பதே நமது சமயக்கொள்கை. சரியை கிரியை யோகங்களாலும், அவற்றை ஒருவாறு விளக்கிக்காட்டும் கர்மயோக பத்தியோக இராசயோகங்களாலும் எய்தற்குரிய பயன் சாலோக சாமீப சாரூபங்களன்றி உறுதிப்பயனாகிய சாயுச்சியப் பேறன்றாம். இந்தப் பெரும்பேறு ஞானத்தால் மாத்திரமே சித்தித்தற்குரியது.

இந்த ஞானம் சாத்திரங்களைக் கற்றன் மாத்திரையால் எய்தற்குரியதல்ல. இது தனக்குச் சோபானங்களாயுள்ள சரியை கிரியை யோகங்களைச் சாத்திர வழிநின்று கிரமப்படி அநுட்டித்து, ஞான சாத்திரங்களைக் குருமுகமாகக் கேட்டுத் தெளிந்து, ஞானாசாரியர் வாயிலாக அச்சாத்திரப் பொருள்களை அநுபவத்திற்கண்டு, அங்ஙனம் கண்டமைபற்றிச் சிவாநுபூதி பிறந்து, நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை அநுபவித்தலினால் சித்தித்தற்குரியது. இங்ஙனமாகவும் இக்காலத்துள்ளார் சிலர் சமய சாத்திரங்களிற் சிலவற்றைக் கற்றுவிட்டுத் தாம் எல்லாம் ஞானிகள் என்றும்



தமக்குச் சமயாநுட்டானங்கள் சிறிதும் வேண்டற்பாலன அல்ல என்றும் அகங்கரித்துத் தமக்கும் பிறர்க்கும் பெருங்கேடு சூழ்வாராயினர். இவர்களைக்கண்ட லௌகிக ஞானிகளும், தாம்பிராகிருத சாத்திரங்களிலே பாண்டித்தியம் படைத்துளார் என்றும், ஆகவே தமக்குக் கிரியைகள் சிறிதேனும் வேண்டற்பாலன வல்ல என்றும் மதர்ப்புறுவாராயினர். கிரியாமார்க்கம் அறிவின்குறைந்த சனங்களுக்கு மாத்திரமே உரியது என்பது இவர்கள் கருத்து. பின்னும் சிலர் தாம் கடவுளிடத்தே பத்தியுடையார்போலக் காட்டிக் கடவுளை அடைதற்குச் சாத்திர அறிவு சிறிதும் வேண்டற்பாலதன்றென்றும் "வித்தையென் முத்திதருமோ" என்றும், கடவுளை அடைதற்குப் பத்திமாத்திரமே வேண்டியதென்றும் பிணங்குவர். இவர்கள் ஒருவராவது உண்மை நெறியில் நிற்கின்றார் என்று சொல்லத்தக்கதல்ல. கடவுளை அடைதற்குப் பத்தியும்வேண்டும் (பத்தியே விசேடமாக வேண்டப்படும்) அறிவும் வேண்டும், சமயாநுட்டானம் வேண்டும். இவற்றுள் ஒன்றாவது தானே தனித்து முத்திக்குரிய சாதனமாக மாட்டாது. இவை எல்லாம் கூட்டியவழியும் ஞானம் உதித்தாலன்றி முத்தி சித்திக்கமாட்டாது. ஞானம் உதித்தற்கு இவை எல்லாம் இன்றியமையாது வேண்டப்படும் சாதனங்களாம்.

ஞானம் உதிப்பதும், கீழ்ப்படிகளாகிய சரியை கிரியை யோகங்கள் சாத்திரஞ்சொல்லிய வழிநின்று கிரமந் தவறாது அநுட்டிக்கப்பட்டாலன்றிக் கூடாதாம். அவை கிரமந்தவறாது அநுட்டிக்கப்படுதலாற்றானே, அவ்வநுட்டான வாயிலாகச் சிவசத்தி நம்பாற்பதிந்து, ஞானஞ் சித்தித்தற்கு வேண்டப்படும் பயிற்சி எம்பாற் படிமுறையா அமைந்து, நாம் எல்லாம் ஞானத்துக்கும் பக்குவிகளாவேம். வைத்திய வித்தையைப் பயில்வார் எல்லாம், வைத்திய சாத்திரவிதிக்கும் முறையைக் கிரமமுற அநுசரித்தலின்றித் தம்மனம்போனவாறு ஓர் ஓர் முறையை அநுசரித்தால் வைத்திய வித்தையைக் கற்றுத்தேறுவது சிறிதும் கூடாது. பரம வைத்தியமாகிய ஞானத்துறையைக் கற்பதற்கு இந்தக் கிரமம் மனமடங்க அதிகமாக அநுட்டிக்கப் படுதல்வேண்டும்.

ச. சபாரத்தின முதலியார்,

யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முத்தியாவது என்ன?

முத்தியடையவேண்டும் முத்தியடைய வேண்டும் என்று எல்லாச் சமயத்தாரும் சொல்லிக்கொண்டாலும் முத்தியாவது என்ன என்பதைப் பற்றி அச்சமயத்தார்கள் நன்கறியமாட்டார்கள். முத்தியாவது இன்னதென்று நன்றாக அறிந்து தெளிவாகப் போதிக்குஞ்சமயம் சைவ சித்தாந்தம் ஒன்றுமே யாம்.

முத்தி வீடு மோக்ஷம் என்பன ஒருபொருட் சொற்கள். முச் இ என்னும் இரண்டு பதங்கள்சேர்ந்து முத்தி என்றாகியிருக்கின்றது. முச்-பகுதி. இ-தொழிற் பெயர் விகுதி. இவற்றுள் முச்-என்பது விடுதல் என்று பொருள்படும். படவே, முத்தியென்பது விடப்படுதல் என்றாகும். வீடு, மோக்ஷம் என்பனவும் இப்பொருளவே யாம்.

விடப்படுதல் என்றால், எதிலிருந்து விடப்படுதல் அல்லது எவற்றிலிருந்து விடப்படுதல் என்று வினா வுண்டாகும். இந்த வினாவுக்குத் தக்க விடையை அறிந்துகொண்டால் முத்தியாவது இன்னது என்பதையும் அறிந்துகொள்ளலாம். அநேகர் இதன் பொருளை நன்றாக அறிந்து கொள்ள வில்லை. விடப்படுதல் முத்தியெனவே விடப்படவேண்டியது ஒன்று விடுவது ஒன்று என இரண்டுவகைப் பொருள்கள் ஏற்படுகின்றன. விடப்பட வேண்டியதும் விடுவதுமாகிய இரண்டு பொருள்களும் முன்னர்ச் சேர்ந்து விடாதிருந்தபடியால் இவற்றை உரியகாலத்து விடுவிக்க வல்லமற்றொரு பொருளும் உண்டென்பது தானே போதரும். விடப்படுவதும் விடுவதும் விடுவிப்பதுமான மூன்று பொருள்களையும் நன்றாக உணர்ந்தவரே முத்தி யடையுந் திறமுடையவராவர். இம்மூன்றனுள் விடப்படுவது பாசம், விடுவது ஆன்மா, விடுவிப்பது சிவம் என்னும் மூன்று பொருள்களின் இலக்கணங்களைக் குறைவற உணர்ந்து தெளிந்தவரே முத்தியடைவர்.

இவற்றுள் சிவம் ஒன்று, ஆன்மா எண்ணில்லாதன; பாசம் ஆணவம் கன்மம் மாயை என மூவகைப்படும். ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுவர். ஆணவம் ஒன்றே அனந்த சத்தியுள்ளதாய் இருக்கும். கன்மம் ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தம் என மூவகைப்



படும். மாயை சுத்தமாயை அசுத்தமாயை என்றிருவகைப்பட்டு, அசுத்த மாயையின் காரியமான பிரகிருதி மாயையையுஞ் சேர்த்து மூவகையாய் எண்ணப்படும். இந்த மூவகை மாயையும் சுத்தம் மிச்சிரம் அசுத்தம் என்னும் மூவகைப் பிரபஞ்சங்களைத் தோற்றுவிக்கும். இவற்றுள், சுத்தமாயையின் காரியம் சுத்தப் பிரபஞ்சம், அசுத்தமாயையின் காரியம் மிச்சிரப்பிரபஞ்சம், பிரகிருதிமாயையின் காரியம் அசுத்தப் பிரபஞ்சம், உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசங்களாலே கட்டப்பட்டு இந்த மூவகைப் பிரபஞ்சங்களிலும் பிறந்திறந்துழலா நிற்பர். உயிர்களையும் பாசங்களையும் தொழிற்படுத்தி நடத்துபவர் பதியாகிய சிவம்.

இங்ஙனமாக உலகத்து வழங்கும் சமயாவாதிகள் பிரபஞ்சப் பகுப்பின் ஒரு பகுதியை யுணர்ந்தவரும், சில பகுதியை யுணர்ந்தவரும், மாயையை யுணராதோரும், மாயையின் ஒரு பகுதியை யுணர்ந்தோரும், கன்மத்தை யுணராதோரும், கன்மத்தின் ஒருபகுதியை யுணர்ந்தோரும், ஆணவ மலத்தை யுணராதோரும், அதனை யுணர்ந்தோரும், ஆன்மாவை யுணராதோரும், ஆன்மாவின் உபாதி நிலையில் ஒவ்வொரு பகுதியை யுணர்ந்தோரும், பதியை யுணராதோரும், பதியின் அதிட்டான மூர்த்திகளுள் ஒவ்வொருவரை யுணர்ந்தோரும், பதியின் தடத்த நிலையை யுணர்ந்தோரும், பதியை யுணர்ந்தோருமாகி இவ்வாறு அறிவால் வேறுபடுவர். அதனால் அவர்கள் உண்மையாகிய முத்தியை யடைதற்கு ஏலாதவராய்ப் பிரபஞ்சபேதத்துட் சிக்கிப் பிறந்திறந்து உழலாநிற்பர். பாசமும் ஆன்மாவும் சிவமுமாகிய மூன்று பொருள்களையும் முற்றஉணராதவர் ஒருபோதும் முத்தியடையவே மாட்டார். சைவ சித்தாந்தத்திலே இந்த முப்பொருளின் உணர்ச்சி முற்றுப்பேறுயுள்ளது. மாயை மூன்றும் உயிர்களுக்குத் தநுகரண புவன போகங்களாம் நிலையும், கன்மபேதங்கள் உயிர்களைத் தொடர்ந்திருக்கு நிலையும், ஆணவ மலம் உயிர்களின் இச்சாஞானக்கிரியைகளை விளங்கவொட்டாது தடுத்திருக்குநிலையும், ஆன்மாக்கள் இந்த மும்மலங்களோடுங்கூடிச் சோபாதிகராய்ப் பசு புருடன் சீவன் முதலிய உபாதிகளையுற்று நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின் எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களிற்பட்டு மேலும் கீழும் நடுவுமாகிய உலகபேதங்களிற் பிறந்திறந்துழலும் தடத்த நிலையும், தன்னியல்பில் வியாபகமாய்ச் சேதனமாய்ச் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுள்ளதாயிருக்குஞ் சொருப நிலையும், பிரமாவும் விட்டுணுவும் உருத்திரனும் அனந்தரும் பதியின் சத்தியினால் அதிட்டிக்கப்பட்டு நின்று பிரகிருதி மாயை அசுத்தமாயைகளைத் தொழிற்படுத்து

முறையும், பதி சுத்தமாயையைத் தொழிற்படுத்தி இலயம்போகம் அதிகாரம் என்னும் மூன்றவத்தையுற்றுச் சிவன் சதாசிவன் மகேசுரன் எனப்பெயர்பெற்று நிற்கும் தடத்த நிலையும், அதிகாரஞ்செய்து நிற்கும் பதி அதிகாரத்தினின்று நீங்கி சிவமெனப்பெயர் பெறுஞ் சொரூபநிலையும் பதியினுற் செய்யப்படும் சிருட்டிதிதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்னும் ஐந்தொழில்களின் விவரணங்களும் அவற்றின் பிரயோசனங்களும் பதியின் ஐந்தொழிலிற்பட்ட உயிர்கள் பாசத்தினீங்கி முத்திபெறும் நிலையும், முத்தியால் ஆன்மாக்கள் பாசநீங்கிச் சிவத்தையடைந்து சிவானந்தத்தை யனுபவித்திருக்கும் உண்மையும் என்னும் இவை யெல்லாம் சைவ சித்தாந்தத்திலே ஐயந்திரிபற வெள்ளிடை மலைபோல விளங்கவுரைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின்கண் வரும் ஐயங்களையெல்லாம் நீக்கிச் சித்தாந்த நிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால், இந்தச் சைவ சித்தாந்த நெறியை நன்குணர்ந்தவரே முப்பொருளின் இலக்கணங்களை யுணரவல்லவராவர். அவ்வாறுணர்ந்தவரே விடவேண்டிய பாசங்களைவிட்டுப் பெறவேண்டிய சிவத்தைப் பெறுவர்.

பாசங்களை விடுதலாவது இந்த உடம்பு நானல்ல, உடம்புக்கு மூலமான பூதங்கள் நானல்ல, பூதங்களுக்கு மூலமான தன்மாத்திரை நானல்ல, உடம்பின் புறத்துள்ள கர்மேந்திரிய ஞானேந்திரியங்கள் நானல்ல, அகத்துள்ள அந்தக் கரணங்கள் நானல்ல, முக்குணங்கள் நானல்ல, மனிதன் நானல்ல, சீவன் நானல்ல, புருடன் நானல்ல, உள்ளாந்தக்கரணங்கள் நானல்ல, பசு நானல்ல, சுக துக்க மோகங்கள் எனக்கில்லை, ஆகாமிய சஞ்சித பிராரத்த கன்மங்கள் எனக்கில்லை, நான் தேகாதிகளல்ல, தேகியுமல்லன், நான் சுகியல்ல, துக்கியல்ல, கர்மங்களைச் செய்பவனல்லன், அநுபவிப்பவனல்லன், சதேகியல்லன், போக்கு வரவுறுபவனல்லன், ஆணவ மலத்தினுலே ஞானக்கிரியைகள் தடைப்படப் பந்தமுறுபவனல்லன், மாயா சம்பந்தம் எனக்கில்லை, கர்ம சம்பந்தம் எனக்கில்லை, ஆணவமல சம்பந்தம் எனக்கில்லை, நான் ஆன்மா, வியாபி, சேதனன், நான் எவ்வகை யுபாதியுமடைந்தவனல்லன், சர்வோபாதிரகிதன் என்று உணர்ந்து அவற்றினீங்கி அருளையடைதலாம். சிவத்தைப் பெறுதலாவது, அருள்தாரகமாகச்சென்று பரையையுணர்ந்து அப்பரையின் வியாபகத்துள் அடங்கிநிற்கச் சிவம் வெளிப்படும். ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகள் மூன்றும் அச்சிவத்தையே பற்றிநிற்கச் சிவானந்த மேற்படும். ஆன்மா சிவத்தோடு அத்துவிதமாக நின்று அச்சிவானந்தத்தை நித்யமாக அநுபவித்துக்கொண்டிருக்கும் இதுவே சிவப்பேறும். இவ்வாறு பாசத்தினீங்கிச் சிவத்தையடைந்து சிவானந்தத்தை யநுபவித்தலே முத்தியென்று சொல்லப்படும். இந்நிலையே பந்தமீளாத ஆனந்த நிலையாம் இதுவல்லாத நிலையெல்லாம் மீட்சியுடைய பந்த நிலைகளாம்.



இனி, முத்தி வீடு என்பன விடப்படுதல் என்னும் ஒரு பொருளையே பயத்தலால், ஆன்மா பாசத்தை விட்டு நீங்குதலே முத்தியென்றாற் போதாதோ, சிவத்தைப் பெறுதலும் வேண்டுமோவென்னின், ஆன்மா மலத்தை அல்லது சிவத்தை இரண்டிலொன்றைப் பற்றி நிற்பதல்லது தனித்து நிற்கும் பொருளன்றாதலாலும், சார்ந்ததன் வண்ணமாமியல்புடைய ஆன்மா சிவத்தைச் சாராதபோது மலத்தைச்சார்ந்து பந்தப்பட வேண்டி வருமாதலாலும், சிவத்தைச்சார்ந்து சிவானந்தத்தை நித்தியமாக நுகராதவழி மீளப்பாசம் வந்து தலைப்படுமாகலானும் மீளப்பாசம் வந்து தலைப்படாவண்ணம் சிவப்பேறு ஆவசியகம் வேண்டற்பாலதா மென்க.

ஏனைச்சமயிகள் பாசமூன்றையும் முற்று உணராமையினாலும், ஆன்மா வாகிய தனது சொருபத்தை நன்குணராமையினாலும், தனக்கு நித்திய தாரகமாகிய சிவத்தை யுணராமையினாலும் விடவேண்டிய பாசத்தைவிட்டுப் பெறவேண்டிய சிவத்தைப் பெறமாட்டார். ஆதலால், அவர் அடைவது முத்தியாகமாட்டாது.

இந்த உண்மையை ஒருவன் நன்குக உணரவேண்டும். அப்படி யுணர்ந்தவனே முத்தியாவது இன்னது என்பதை யுணர்வான்.

அ. பழனிவேலாயுதம் பிள்ளை,
காரைக்கால்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

**தொகுதி 6. பகுதி 8 பக்கம் 193. தொடர்ச்சி.**

இனி மகாகாய கடாகாயம்போலவே பிரமம் கூடஸ்தர்களென்றும் தன்னைமறத்தலினால் அல்லது அவஸ்தையினால் சீவனென்று பெயர்பெறு மென்றும் இங்ஙனமாய உண்மையை யுணர்ந்தபோது கடாகாயம் மகாகா யத்தையன்றி வேறில்லாவாறு போலவே பிரமத்தையன்றி யாதுமில்லை என்று கூறுமவர்கள் உண்மையையுணரவேண்டிய பொருள் உண்மைக்கு வேறுயுண்டென்பதையும் வேண்டப்படுவதையும் கூர்ந்து யோசிக்கும். தன்னுணர்வின்மையாவது மலமறைப்பின் காரணமாமன்றி வேறியா

தெனப்பேம். "அருளுடைய பரசிவன்றே யன்றதானேயாதுமானென்னும் எனக்கே யானவாதிபெருகுவினைக்கட்டுடைன்ற மெய்ஞ்ஞானக் கட்டிப்பேசி யதன்றே யருளாற்பெறிற்றன்றே" "என்றனைநீ யன்றுணர்ம்யாம்' 'என்பதித ன்னை என்றும். "விடென்றுரைதருசொற்குப் பொருளோ விடுதலையாதலி னால் விக்குண்டோறுங் கட்டிமாக விளங்குற்றிடமாகப் பிறுதகட்டுத் தானும் விட்டுப் பெயராதிரு சடமாம்பிணிபட்டோ ஸசுதந்தரனுமிப்பிணி நீக்ச் செய்வோன் நீடு சுதந்தரமுள்ளானு மொருவனொரு மிப்பேதமிதனால் நிகழ் பதி பசு பாசமென முப்பொருள் நிச்சயம் என்றருளி," என்னுவரும் சப்பிர மாணங்களை யுள்ளவாறய்ந்துணரும் பாக்கிய முடையார் திரிபதார்த்தங்க ளுங் காலத்திரையத்து முள்ளன வென்பதைக் கண்டு மறவார் மறவார். "யாதொன்றுபற்றின தனியல்பாய் நின்று பற்றமறும் பளிங்கனைய சித்த நீ" என்ற வுண்மை யுபதேசத்தைச் சிந்திக்கும் பாக்கிய முடையார்க்கே மேற்போந்தவைகளி னுண்மை விளங்கும்.

இன்னும் "பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு மருளானு மாணாப்பிறப்பு" என்னும் தமிழ்வேதம் விரித்தார் திருவாக்கானும் முப் பொருளுண்மையை விசாரிப்பாம். மேற்போந்த திருக்குறளில், பொருளல் லாதது க, பொருள் க, பொருளல்லாதது பொருள் எனத் தெளியவே ண்டியது க, என முப்பொருள் சித்திக்கின்றது. இதுவே பாச பதி பசு வாம் இதனால் பொருளாகியவற்றையே பொருளெனத் தெளியும் ஞானத் தால் பிறப்பிறப்பு நீங்கும் எனும் உண்மைஞானம் பிரகாசிக்கின்றது. இவ் வுண்மை பூதங்களல்ல என்ற செய்யுளால் நன்கு விளங்கும். அன்றியும் "ஆவதுபதி சகலத்தாருவது மாங்கவனே, கேவலத்தின் முற்றிட்டபடியிது, காவழுந்த-வில்லாத சுத்தத்திருப்பதுவு மிம்முன்று,மில்லானே செயலென் றிரு" என்னுஞ் சிவபோக சாரவெண்பாவானும் பிறப்பிறப்புகளின் மொத் தன்டலேதலும் அவைகளினீங்கி முத்தியடைந்து சுகித்திருத்தலும்,சுகாதீத மடைதலும், ஆன்மாவேயன்றி "முத்தாமுத்தி தரவல்ல முதல்வா" என் னுஞ் சுருதியிற் போந்தபடி முத்தி தரவல்ல முதல்வனுக்கல்ல வென்பது இனிது விளங்கும்.

இனி மேலே விளக்கிக்காட்டிய பிரபல பிரமாணங்களானும் நியாயத் தானும் எவ்வகையானும் பரம்பொருளுக்கு வேறாய் பெத்தமுத்திகளை யுடைய ஆன்மாவென வொரு பொருள்வேண்டப்படுவதால் வேதத்தில் இரண்டாவது பதார்த்தமில்லை என்றசொற்குப் பொருள்தானென்னவென வாராய்வாம். இரண்டாவது பதார்த்தமில்லை யென்றது பிரமத்தைப் போன்ற மற்றொருபொருளில்லை என்பதே யதனுண்மைப் பொருள் என் பதை மேலே விளக்கிப் போந்தாம் அன்றியும் ஒருவன் நான் நித்திரை செய்கின்றேன் என்றும், ஒருவன் எனக்கு நாவில்லை என்றும், ஒருவன் எனை ஈன்றுள்மலடி என்றும் சொல்வதாகக்கொள்வோம் இச்சொற்களுக் குப் பொருளென்னை. சொல்லிருப்பதால் நித்திரைசெய்யவில்லை என்றும் நாவைக்கொண்டுதான் நாவில்லை என்ற சொல் தோன்றிற்றென்றும் பெற்



றாளையன்றி பிள்ளையில்லை என்றும் எப்படி வெள்ளறிவினருங் கொள்ளக் கிடக்கின்றனவோ - அதுபோல இரண்டாவது பொருளில்லை என்ற வேத வாக்யமே அவ்வுபதேசத்தையுணர்ந்துய்ய நின்ற ஆன்மாவைக்காட்டி யுப கரிப்பதாம் அன்றியும் தான் பிறர் என்னுஞ் சுட்டுதலாலேயே அதுதி தொட்டிதுகாறும் ஜனன மரண சம்சார துக்க நீங்காதிருப்பதை மாற்றுவ தின்பொருட்டாக எல்லாம்வல்லவிறைவனுணர்த்திய இதோபதேசமுமாம்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ. சு. சின்னைய பிள்ளை,
சைவப்பிரகாச சபை,
விருதுபட்டி.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# தேவாரம் வேதசாரம்.

சைவ சமயத்தின் சமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்க வாசக சுவாமிகள் ஆகிய நால்வரும் திருவாய்மலர்ந்தருளிய தேவார திரு வாசகங்களில் பரசிவப்பிரபுவே தெய்வம் என நன்குக நிலைநாட்டி யிருப் பதுபோல் வடமொழிவேதங்களிலும், உபநிடதங்களிலும் அப்பெருமானே தெய்வமென காட்டியுள்ள பரத்துவ உண்மையினை உலகோர் யாவரும் அறியும் வண்ணம் "தேவாரம் வேதசாரம்" எனப் பெயரிய ஒருநூலை ஸ்ரீ காசி-வாசி, சாம்பசிவ செந்திநாத அய்யர் அவர்களைக்கொண்டு இயற் றுவித்துச்சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வனிதையர் பக்கத்துக் காரிய தரிசியும், ஸ்ரீமத் ஏகாம்பர முதலியார் அவர்கள் மனைவியாரும் ஆகிய ஸ்ரீமதி-மங்கையர்க்கரசியாரென்னும் அம்மையார் வெளியிட்டுள்ளனர். இப்புத்தகம் சைவர் யாவர்க்கும் பயன்தருவதோடு இதன் விற்பனையால் வரும் பொருளைக்கொண்டு வேறு சில சைவ நூல்களை அச்சிடுவதற்கு உதவி யாயுமிருப்பதால் இவ்வித சிவ புண்ணியத்தைச்செய்யும் அம்மையார் அவர் களுக்கு ஊக்கம் உண்டாகும்படி சமாஜத்தின் அங்கத்தவர் ஒவ்வொருவரும் ஒவ்வோர் புத்தகம் வாங்கிக்கொள்ளும்படி பிரார்த்திக்கின்றேன்.

இதன் விலை ரூபா 3 0 0

புத்தகம் கிடைக்குமிடம், சி. ஏகாம்பர முதலியார், 24. சாமிபண் டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை.

இங்ஙனம்,
கி. குப்புச்சாமி,
காரியதரிசி,
சைவ சித்தாந்த மகாசமாஜம்.

---

குறிப்பு:-இச்சஞ்சிகையில் "தத்துவங்களும் அறற்கப்பாலும்" என்ற விஷயத்தில் குறித்துள்ள படமானது அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1917ஹு ஜூலை, ஆகஸ்டு மாதங்களின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூபா. | அ | ப | செலவு. | தொகை. ரூபா. | அ | ப |
|---|---|---|---|---|---|---|---|
| 1917ஹு ஜூன்மீ 30உ இருப்பு .... | 583 | 3 | 10 | சஞ்சிகை அச்சுக்கூலி (ஏப்ரில் மேமீ) | 47 | 11 | 0 |
| சாமாசிகர் வருட சந்தா ... | 13 | 4 | 0 | மிகுதர் சம்பளம் (ஜூன, ஜூலை) ... | 40 | 0 | 0 |
| சேவிங்ஸ் பாங்கி வட்டி வரவு | 12 | 7 | 3 | தபால் செலவு முதலியன ... | 31 | 11 | 0 |
| | | | | | 119 | 6 | 0 |
| | | | | 31-8-17-ல் இருப்பு | *489 | 9 | 1 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 490-0-0 | | | |
| ஆ மொத்தம் | 608 | 15 | 1 | ஆ மொத்தம் | 608 | 15 | 1 |

K. Kuppusawmy Mudaliar, Secretary. M. Kandaswami Mudaliar, B. A., Auditor. W. T. Govindaraja Mudaliar, Treasurer.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.


# சித்தாந்தம்.

தொகுதி ௬.] 1917ஹு அக்டோபர்மீ [பகுதி ௧௦.


## சாந்தோக்யோபநிஷத்து.

### ஐந்தாவது பிரபாடகம்.

௬. வாக்கு, நேத்திரம், செவி, மனசு, பிராணன் ஆக வைந்தும் தங்களுக்குள் நான் பெரிது நான் பெரிது என்று பூசலிட்டு, பிரமனிடத்துச் சென்று எம்முள் பெரிது எது என்று கேட்டன, சரீரத்தினைப்பிரிந்து எது வெளிப்பட்டால் அச்சரீரம் உபயோகம் இல்லாமற் போய்விடுமோ அது பெரிது என்றனர்.

எ. வாக்கானது சரீரத்தினின்றும் வெளிபோய் ஒருவருடந் தங்கியிருந்து மறுபடி வந்து, என்னையன்றி நீங்கள் எவ்வாறு பிழைத்திருந்தீர்களென, ஊமையானவன் எவ்விதம் பேசாமல், பிராணனை வைத்துக்கொண்டு செவியாற்கேட்டும், நேத்திரத்தால் பார்த்தும், மனதால் நினைத்தும் எங்ஙனமிருப்பனோ அங்ஙனமிருந்தோ மென்றன. வாக்குச் சரீரத்தில் பிரவேசித்தது.

௮. பின்னர் ச்ரோத்ரம், செவி, மனது, முதலியனவும் வாக்கினைப் போல வெளிபோய் மறுபடி வந்துகேட்க, மற்றவை பழையபடி பதிலுரைத்தன.

௯. பிறகு தன்னைக்கட்டியுள்ள முளையைப் பிடுங்கிக்கொண்டு குதிரை வெளி கிளம்புவதுபோல பிராணன் வெளியேபோக நினைத்தவுடன் மற்றவை பிராணனைநோக்கி எங்களுக்குள் நீதான் சிரேஷ்டன் இச்சரீரத்தினைப் பிரியாதே யென்றன.

௧0. ஆகவே வாக்கு முதலிய பிராணனைத்தும், பிராணனே யெல்லாமா யிருக்கின்றன.

## கண்டம் ௨.

பிராணனானது மற்றவைகளைநோக்கி எனக்கு அன்னமெதென்றது. பிராணிகள் யாவும் எவ்வெந்த அன்னத்தைப் புசிக்கின்றனவோ அது வதுவே உனக்கன்னமென்றன. ஆகவே பிராணனுக்கு அன்னமே யாதாரம் ஆதலின் பிராணனுக்கு 'அந' எனவோர் பெயருண்டு.

௨. பிராணனானது மறுபடி மற்றவைகளை நோக்கி எனக்கு வஸ்திரமேதென்றது. பிராமணர் புசிப்பதற்கு முன்னும் பின்னும் ஆசமனஞ்செய்வதால் அந்நீரே வஸ்திரமென்றன.

௩. இவ்வித்தையினை உலர்ந்த கட்டையினுக்குச் சொல்லினும் அக்கட்டை அளிர்க்குமென, ஜாபாலர் கோச்ருதிக்குச் சொல்லினர்.

## கண்டம் ௩.

பாஞ்சாள தேசத்தரசனுடைய சபையிலே யோர் நாள் சுவேதகேது சென்றனன். அச்சபையில் பிரவாகணர் அவனைநோக்கி ஏ புத்திரனே பிதா நினக்கு உபதேசித்துள்ளாரா என, ஆம் என்றனன்.

௨. நீ உபதேசிக்கப்பட்டிருந்தால் இவ்வுலகத்து ஆன்மாக்கள் எவ்விடம்போய் சேருவார்கள் அறிவாயா?

அறியேன்.

எவ்விதமாக அவர்கள் திரும்புவர்

அறியேன்.



தேவயான மார்க்கமாகச்செல்லும் ஞானகர்மிகளும், பிதிர்யாக மார்க்கமாகச்செல்லும் கேவல கர்மிகளும் அடையும் வியோகஸ்தானமெது?

அறியேன்.

௩. பிதிர்லோகத்தில் எவ்வகையில் யாவரும் போகிறதில்லை

அறியேன்.

ஆகுதியில் அப்பானது எங்ஙனம் புருஷவாச்சியங்களாகின்றன

அறியேன்

௪. இங்ஙனமாக ஒன்று முனக்குத் தெரியாததாக நீ உபதேசிக்கப் பட்டதாகக் கூறியதென்னை? கேட்ட சுவேதகேது மனத்தாங்கலடைந்து தனது தந்தைபாற் சென்று, எனக்கு உபதேசியாதிருக்கவும், உபதேசித்த தாகக்கூறியதென்னை? என்று கேட்டான்.

௫. பிரவாகணர் எனைநோக்கி ஐந்து வினாக்களை வினவினர். ஒன்றினுக்கும் நான் பதில் கூறவில்லை. தந்தை புத்திரனை நோக்கி இக்கேள்விகளை யின்று தான் கேட்டேன். பதில்சொல்ல எனக்குத் தெரியாது.

௬. கௌதமர் பிரவாகனரை யடுத்து என் புத்திரனைக்கேட்ட கேள்விகட்குப் பதில் சொல்லென்றார்.

௭. இவ்வித்தை யிது பிராமணருக்குபதேசித்ததில்லை. க்ஷத்திரியருக்கே உபதேசிக்கப்பட்டு வந்தது. அதை நானுனக்குச் சொல்லுகிறேன்.

பணவழகு.

## நீதி.

துர்ஜந : பரிஹர்த்தவ்யோ வித்யயாலங்க்ருதோபிஸந்
மணிநாபூஷிதஸ் ஸர்ப்ப : கிமஸௌந பயங்கர :

துஷ்டன் நல்ல கல்வி பயிற்சிசெய்து அதிக தேர்ச்சியடைந்து எங்கும் கொண்டாடப் பட்டாலும் அவனை நல்லவர்கள் சேர்த்துக் கொள்ளக் கூடாது. எங்ஙனமெனின், கொடிய விஷமுள்ள சர்ப்பத்தின் தலையில் மாணிக்கமிருந்தாலும், அந்தச் சர்ப்பம் பார்ப்போருக்கு பயங்கிறமாக விருக்கிறதல்லவா?

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரம்.

தோத்திரம் - ௬ - பத்தி - ௬ - பக்கம் - ௧௩௪ - தொடர்ச்சி.

இன்னும், நம்மாருயிர் வேய்ங்குழலிசையாற்பாடப் பூம்பொழிற் கைலை தந்ததும் இம்மந்திரமாம். இருமையுமீய வல்லதாயிதன் பெற்றி தேரும் பேதை நீரார்.

பூவனூர்ப் புனிதன் றிருநா மந்தான்
நாவி னூறுநூ றாயிர நண்ணினார்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே.

என்ற திருநாவுக்கரசரது திருவாக்கை அநுபவித்துக்காட்டிய நம் நாவலூர்ப் பெருந்தகையாரது நாமறவாத இம்மந்திரத்தாலெய்திய நற் செல்வத்திலும் மிக்கதாய், வேறு விழைவது யாதோ வறியேம். இவ்வுண் மை உணர்தற்பொருட்டன்றே,

"அற்புதத் தெய்வ மிதனின் மற்றுண்டே
யன்பொடு தன்னை யஞ்செழுத்தின்
சொற்பதத் துள் வைத் துள்ள மள்ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவா யவர்பணை முலையுங்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை கொண்ட
சோளேச்சரத் தானே"

என்ற திருவிசைப்பாவும் எழுந்தது.

மற்றும்

"மலர்தலை யுலகத் துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை யொக்கலை பொரீஇக்
காடுமலையும் புக்குக் கோடையிற்
கைம்மேனியிர்த்துக் கையொன்று முடக்கி



யைவகை நெருப்பி னழுவத்து நின்று
மாரி நாளினும் வார்பனி நாளினு
நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்
சடையைப் புனைந்துந் தலையைப்பறித்து
முடையைத் துறந்து முண்ணா துழன்றுங்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவு நீரும் வந்தன வருந்தியுங்
களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டுந்
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவ
ரம்மை முத்தியடைவதற்காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்ப
நீங்கிவை செய்யா தியாங்களெல்லாம்

* * * *

மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை யலங்கல் குழன்மிசைப் பொலிய
மஞ்சொன் மடந்தைய ராகந்தோய்ந்தும்

* * *

பூசுவன பூசியும் புனைவன புனைந்துந்
தூசுநல்லன தொடையிற் சேர்த்தியு
மைந்து புலன்களு மார வார்ந்து
மைந்தரு மொக்கலும் பிறழு மனமகிழ்ந்
திவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை
மந்திர வெழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலி னந்த
முத்தியு மிழந்தில முதல்வவத்திற
நின்னது பெருமை யன்றேயென்னின்

* * *

நலத்தின் வழார்நின் னுமகவின்றேரே"

என்ற முற்றத்துறந்த பட்டினத்தடிகளாரது கட்டுரையை உற்றோர் தேருவார் இம்மந்திரத்தின் பெற்றி இற்றென உணர்வர். இதுபற்றி யன்றே "எத்துணையர்க் கிடரான கெடுப்பன" என்றும், "அல்லல்கெடுப்பன" என்றும், இம்மையினை யடர்த்தெய்தும் போழ்தினும் அம்மையினுந் துணை" என்றும், "வித்தக நீறணிவார் வினைப்பகைக் கத்திரமாவன" என்றும்,

“செம்பொருள் இலக்கம் முதலாந்தெலாம்” என்றும் “தந்தவானவர் சிறந்தகு விப்பது” என்றும் “சித்தம் வல்வினை செல்வழு மல்லுமாம்” என்றும் “நற்றுணையாவது” என்றும் “நாவினுக்கருங்கலம்” என்றும், “பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை நண்ணிநின்றறுப்பது” என்றும், “நலிக்கத் தைக் கெடுப்பது” என்றும் “நம்களுக்கருங்கலம்” என்றும் “நலமிகக் கொடுப்பது” என்றும் “நன்னெறியாவது” என்றும் “மங்கையார் திரு நாம நமச்சிவாய வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே” என்றும் “நான்மறைக்கிறு சொல்லுரா” என்றும் தமிழ்மறையாளர்களாற் றுதி செக்கப்பெற்றது, இங்ஙனம் விளக்கெடுத்தோதிய பயன்களெல்லாம் செக்கு செக்கு நினைந்தன் றுருரு மவர்தம்மால் பெற்றபாலவாமல்லது, ஏனையோர்க்குப் பெறலாவதன்று. இதனை யுணர்த்தவே,

“காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
யோதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது”

என்ற ஆளுடையபிள்ளையாரது அருமைத் திருவாக்கும், “வஞ்சனையா லஞ் செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயானே” என்ற ஆளுடைய அரசுகளது அருமைத் திருவாக்கும் எழுந்ததாமென்க. முன்னர் காட்டிய பட்டினத் தடிகளாரது திருவாக்கின்கண்ணும் “நாவிடை நவையாது நின்றநின் னஞ் செழுத்தலி னக்கு முத்தியுமிழுந்திலை” யென்னுந் தொடரும் இக்கருத் தையே கருக்கொண்டுள்ளதாம் என்க.

இன்னும் நமது அருண்மொழியரசராம் சேக்கிழார் பெருமான் “அருத்தின் பயனு மெழுத்தஞ்சு” என்றும் “முந்தை முதன் மந்திரங்க ளெல்லாந் தோன்று முதலாகு முதல்வனு மெழுத்தஞ்சு” என்றும் “ஒரு நாமந் தஞ்செழுத்து” என்றும் “திருமந்திர மஞ்செழுத்து” என்றும் “ஞானமெய்ந்நெறி தான்யார்க்கும் நமச்சிவாயச் சொலாம்” என்றும் ஆண்டாண்டு இயைபுநோக்கி எடுத்துக்கூறும் ஒப்புமைப் பிறபலவும் அறிவுடையோரான் உய்த்துணரற் பாலனவாம்.

இதுகாறுங் கூறியவாற்றான் உலகின்கண்ணுள்ள ஆன்மாக்களெல்லாம் இன்பத்தையே யநுபவிப்பான் விழைவனவாமென்பதூஉம், அங்ஙனம் விழையுமவ்வான்மாக்களால் இவ்வுலகத்தே இன்பமென் றநுபவிக்கப்படுவன யாவுஞ்சிற்றின்பமேயாமென்பதூஉம், இவ்வுலக இன்பமெல்லாம் சிற்றின்ப மாக முடியவே எண்குணமுடைய ஒன்முதற் பொருளாம் இன்ப உருவின னுறவி இரண்டறக்கலந்தநுபவிக்கும் அப்பரஞானாநுபவமேயென்றும்



பொன்றுதலில்லாப் பேரின்பமென முடிக்கப்படுமென்பதூஉம், அங்ஙனம் எண்குணமுடையானும் வேதமேதிகா சாதிகளால் போற்றப்பெறும் முழு முதற் செழும்பொருள் சிவபெருமான் ஒருவனே யாமென்பதூஉம், ஏனைச் சமயக்கடவுளர்களான தத்துவப்பதிகளெல்லாம் பிறப்பிறப்பாற் கட்டுப் பட்டவர்களே யாவரென்பதூஉம். அஃது அவ்வச்சமயத்தாரது நூல்க ளானே யுணரக்கிடத்தலின் பேரின்ப மனுபவிக்க விழையும் ஆன்மாக்க ளெல்லாம் சிவபெருமானொருவனையே தியானிக்கப்பாலார் என்பதூஉம், இவ்வுண்மை யுணர்த்துப்பொருட்டே வடமொழிவேதமும் தன் இருதயத் தின் கண்ணே சிவநாமத்தை ஓதியருளியதா மென்பதூஉம் ஏனைய வேதா ந்தமெனப்படும் உபநிடதங்களும் சைவாகமங்களும் மற்றும் அருமறை விரி த்த ஒரு பெருங்கடவுளா, லளிக்கப்பட்டு உலகின்கண்ணுள்ள எல்லா ஞான நூான் முடிபுகளையும் தன்னுளடக்கித் தான் அவற்றுளடங்காது ஞானப் பிழம்பாய் ஒளிரும் சிவஞானபோதமும் இவ்விவ்வாற்றான் சிறப்பித்தும் சாதன இலக்கணம் கூறியும் விளக்கிற்றுமென்பதூஉம், இங்ஙனம் சிறந்து விளங்கும் சிவநாமமாம் பஞ்சாக்கரத்தின் பொருள் இன்னின்னவாமென் பதூஉம், பதிபசு பாசச் சொற்றொடரொன்றே முறையானும் பெயரானும் நடுக்கின்றி நிலையுறுவதாமென்பதூஉம், காரண மகாகாரண முத்திபஞ்சாக் கர முதலியன குருமுகத்தாற் றெளிதற்பாலனவாமென்பதூஉம், சிவமுத லாகக் கூறும் சூக்கும பஞ்சாக்கர முறையொன்றே நம்மால் கவனிக்கற் பாலதாமென்பதூஉம்; பஞ்சாக்கரம் தானே இயங்கிப் பயன்றரவல்ல தனிமந்திரமாமென்பதூஉம், தில்லைத்திருச்சிற்றம்பலத்தின்கண் திருநடஞ் குயிற்றும் பரமேசனது திருவுருவம் பஞ்சாக்கரமே என்பதூஉம், இவ்வுண் மை யுணர்ந்து தரிசித்தபேர்களால் எய்தப்பெறுவது பேரின்பவாழ்வா மென்பதூஉம், நம் பரமாசாரிய மூர்த்திகள் இம்மந்திரங்கொடு துய்த்து விளக்கிய நலங்கள் இன்னின்னவாமென்பதூஉம், அம்மை முத்தியொடு இம்மைப்பேறும் அளிக்கவல்ல திம்மந்திரமென்பதூஉம், இவ்விரு பெரும் பேறும் அளிக்கவல்ல அருமையையே பல்லாற்றானும் பரிந்தெடுத்தோதி யது நந்தம் செந்தமிழ்ப்பழமறை என்பதூஉம் பிறவும் ஒருவாறு விளக்கப் பட்டன.

பாயவா ருயிர் முழுவதும் பசுபதி யடிமை
யாய வெவ்வகைப் பொருள்களு மவனுடைப் பொருள்கண்
மேய விவ்வண மலதுவேறின் றெனவுணர்ந்த
தூயமெய்த் தவத் தடியவர் துணையடி தொழுவாம்.

சிவஞான முனிவர் சேவடி வாழ்க.

**பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியார்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நாம் யார்.

## க. ஆத்மா உண்டென்பது.

நான் என்பது ஒருமைச்சொல். நாம் என்பது தன்மைப் பன்மைச் சொல். இச்சொற்களை ஒவ்வொருவரும் பேசுகின்றோம். நாம் என்ற வார்த்தையைத் தேகமுள்ளபொழுது கூறலாமன்றித் தேகமில்லாதபோது சொல்லமுடியாது. இதனாலே தேகத்தினுள்ளே ஒன்று இருந்து இயக்குவதாகவும், பேசுவதாகவுந் தெரிகின்றதன்றோ! அதுதான் உயிர். உயிர், ஆத்மா, இயமானன் முதலிய பெயர்கள் ஒரு பொருளுக்கே வழங்குவன.

இவ்வுயிரையுந் தேகத்தையும் தமது சக்தியினாலே அசைவித்து நடாத்துபவரே கடவுள். கடவுளைப் பதி, சிவன், ஈசன் முதலிய திருநாமங்களானே பெரியோர் வாழ்த்திவணங்குவர். இவ்வுடற்பற்று விட்டால் ஈசனை ஆன்மாக்களடையும். தடைசெய்து பிறவியை மேலும் மேலும் உளவாக்குவது மலம். அது ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். ஆணவ மல சம்பந்தம் எப்பொழுதுந் தொடருமியல்புடையது. அதுபற்றியே ஆன்மாக்களை அணுவென்பர் அறிந்தோர். ஆன்மா என்பதற்கு வியாபகமுடையது என்று அர்த்தமாகும். முதல் ஆணவ மலத்தினாலே உண்டாகும் அகங்கார மமகாரங்களை விடுதல்வேண்டும்.

அகங்காரமாவது:— நானே எவரினும் பெரியோன் என்று மிகைத்துக் கூறுதல்.

மமகாரமாவது:— எல்லாம் என்னுடையது என்று எண்ணுதல்.

## உ. ஆத்மா இருவென்பது.

இப்படி எப்போது நினைக்கின்றோம்? ஆன்மா உள்ளபொழுது நினைக்கின்றோம். எது நினைக்கின்றது? இந்நினைவைச் செய்வதே ஆன்மா. ஆன்மா இல்லாவிட்டால் ஒருவித சிந்தனையுமுண்டாகாது. தேகம் ஆன்மாவன்று. உறுப்புகளும் ஆன்மாவன்று, இந்திரியங்களும் ஆத்மாவாகா. இவற்றிற்கு வேறாய்த் தேகத்தை அசைவிப்பதே ஆன்மா என்று முன்னே கூறப்பட்டது. ஆன்மா இல்லாவிட்டால், தேகம் இயங்காது. பிரேதமாகக்கிடப்பது பிரத்யக்ஷமன்றோ?



## ௩. ஆத்மாவும் வேறு; பரமாத்மாவும் வேறு.

இங்ஙனம் கூறிய ஆத்மாவையே ஜீவாத்மா வென்றும், ஜீவாத்மாவைக்காத்து நல்வழிப்படுத்தற்காகப் பாரபட்சமின்றிக் கன்மத்திற்கேற்பச்சரீரங்களைக்கொடுத்துக் காப்பாற்றுபவரையே பரமாத்மா என்றும், ஆன்றமை புலனுடைச் சான்றோர் புகலுவர். பதி ஒருவர். ஆன்மாக்கள் அளவிறந்தன. ஆத்மா சாத்வீகத்துவமான ஆவி. ஆங்கிலத்தில் "அழிவற்ற ஆவி" என்று ஒருவர் எழுதியிருக்கின்றார்.

## ச. ஆத்மாவுடைய பிரமாணம்.

பண்டைக்காலத்திலே ஆத்மாவின் பிரமாணங் கூறப்பெற்றதாக எனக்குத் தெரியவில்லை. தற்காலம் அமெரிக்காவிலுள்ள தேகாராய்ச்சியிற் சீர்த்திபெற்ற பண்டிதர் ஒருவர் ஆன்மாவின் நிறை "மூன்று அவுன்ஸ்" என்று கணக்கிட்டு எழுதியிருக்கின்றார்.

ஆத்மலக்ஷணத்தைச் சித்தாந்த வேதாந்த நூல்கள் விரித்துக் கூறுகின்றன. அவைகள், நல்லாசிரியரிடம் பல்லாண்டுபடிப்பினுந் தெவிட்டாத இன்பு காட்டும். நமது யாழ்ப்பாணத்திலே அவதரித்து இலங்கை இந்தியா ஆகிய ஈரிடங்களினும் அருந்தருமங்களை நிறுவியும், சைவசமய ஸ்தாபனஞ் செய்தும், செந்தமிழ் விளக்கிய சித்தாந்த வரோதய பாநுவாகிய ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானவர் இயற்றிய இரண்டாஞ் சைவ வினாவிடையிலே, கூறப்பட்டதை இங்கே சொல்வது ஆவஸ்யகமாகும் அவையாவன:—

## ரு. ஆத்மலக்ஷணம்.

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய்ச், சேதனமாய், பாசத்தையுடையவைகளாய், சார்ந்ததன்வண்ணமாய் சரீரந்தோறும் வெவ்வேறாம் வினைகளைச்செய்து வினைப்பயன்களை அநுபவிப்பவைகளாய், தமக்கொரு தலைவனை யுடையவைகளாய், பிறப்பு இறப்பு உடையவைகளாய் இருப்பன என்பதாம்.

ஆன்மாக்கள் தாமே எல்லாவற்றையும் செய்யமாட்டா. ஆன்மாக்கள் அடிமை கடவுள் ஆண்டான். இதனை ஒருவாறு சூசிக்கு முகத்தானே சுந்தரமூர்த்தி நாயனாரும் தம்மை யடிமையென்று பாடியருளினர். "மீளா அடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே" (பாசுரக் குறிப்பு.)

## ௬. அநாதி நித்திய வஸ்துக்கள் மூன்று.

ஆன்மாக்களும், பாசமும், பதியும் அநாதியாயுள்ளன. இக்கருத்தை விளக்கவே நமக்கு, உருவத்திருமேனிகொண் டெழுந்தருளியிருக்கும் ஆலய வழிபாட்டை முதலிலே வைக்கப்பெற்றிருக்கின்றது. ஒரு உருவத்தையும் மனம் பற்றுதிருத்தல் கூடாது. ஒரு உருவத்தில் அமைக்கப்பெற்ற மனம் பின்பு அருவ வழிபாடு செய்வதற்கு பற்றதாகும். ஐமயாம் தேகத்தை யொப்பாக விளங்கும். அது சம்பந்தமாக இங்கே விரியாது திருமூல யோகிகளருளிச்செய்த ஒரு பாவைக்கூறி அப்பாற்செல்லுகின்றேன். நுகம ஆராய்ச்சி யுடையார்க்கு இவைகள் இனிது விளங்கும்.

" ஆய பதிதா னருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவு மடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை யாய்ந்துகொள் வார்க்கே."

பதி பசு பாசம் என்பன அநாதி என்பதை "பதியினைப்போற் பசு பாச மநாதி" என்ற சுதாசிவ ரூபச் செய்யுள் வலியுறுத்தும். நிற்க;

மலமறைப்பினாலே அறிவுருயான கடவுளையும், சுத்த சாத்வீகனுமிய தன்னையும் அறியமுடியவில்லை. தன்னை என்றது இங்கே ஆத்மாவின் மேற்று. திரோதான சத்தியானது முன்னே மறைத்து நின்று பின்னர் அருட்சத்தியாகமாறும். ஆன்மாக்களைச் சிவத்துடன் சேர்ப்பது திருவருட் சத்தியாகும். சிற்சத்தி, பிரேரகசத்தி எனச் சத்திபேதங்கள் பலவுள. சத்தி இறைவன் திருவருளேயாம். அருட்சத்தியை அறியாதிருக்குமின்று கடவுள் எல்லாவற்றையுஞ் சங்கற்ப மாத்திரையாலே சிருஷ்டித்தருளுவார். ஆணவ மலத்தைக் காணமுடியாது.

சில பிரமாணம்.

" அந்த மலமா மறியாமை யுண்டாயே
அந்த அறிவுநீ யையனே—தொந்தவிருள்
போனதே யுன்னைவிட்டுப் போக்கித் திரோதையரு
ளானதே கண்டா யறிந்து.

வட நூலில்.

சிவஸ் சங்கல்ப மாத்ரேண ஸிருஷ்டா பகாஸ் சதா!
(சிவன் சங்கற்பமாத்திரையாலே சிருட்டித் தருளுவார்.)



## எ. கடவுள் வன்கண்மையில்லாதவர்.

இப்படிச் சிருட்டிசெய்து நிர்விகாரியாகிய ஜீவனை வன்கண்மையி னாலே பிறப்பிக்கின்றாரென்று தோஷங்கூறுதல் கூடாது ஈசுவரனுடைய செயல்கள் யாவும் திருவருளேயாம். எப்படியெனில், ஒருவர் வறியவரும், ஒருவர் செல்வரும், ஒருவர் அழகுடையரும், ஒருவர் அவலக்ஷணமுடை யரும், ஒருவர் ரோகியும், ஒருவர் அரோகியும், ஒருவர் அங்கஹீனரும் என்று நாங்கள் பார்க்கக்கூடிய பன்னூறுபேதங்களுங் கடவுளாற் பார பக்ஷம்பற்றிக் கொடுக்கப்பெறுது, அவ்வவ்வுயிர்களின் புண்ணியபாவ வேது க்களினாலே கொடுக்கப்பட்டனவாகலின் கடவுளிடத்துள்ள கிருபைத் தன் மை இலகுவி லுணரலாகுமென்க. புண்ணியம் நற்செய்கையால் வளரும். விஸ்வாசகாதம், பொறாமை, உலோபம். இரக்கமின்மை இவைகளை ஆட்சிப் பண்ணும் மனிதர்கள் எதுசெய்தாலும் தீமையே வளரும். இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! பாவந் தீச்செயல்களால் வளர்வது சொல்லவும் வேண்டுமா? வேண்டாம். நல்லறமுடையோரையும், தீச்செயல்புரிந்தோ ரையும் எப்படி உணர்வது என்றால், திருவள்ளுவ நாயனார் உத்தர வேதத்தில்

" அறத்தா றிதுவென வேண்டாசிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்றாராகலி னறியத்தகுமெனவுரைக்க. இஃது இலௌகிக நிரையிற் காட் டப்பெற்ற உதாரணமேயன்றி, வைதிக பக்திமார்க்க சூசகமன்று. அஃதா வது திருஞானசம்பந்த சுவாமிகளை அப்பர் சுவாமிகள் வேறுபாடின்றி வணங்கியதும் திருஞானசம்பந்த சுவாமிகளிவர்ந்துவந்த பல்லாக்கைத் தாம் தாங்கிச் சென்றதும் சிவஞான வழித்தான செயலாகலின், ஆத்ம ஞானம் கிஞ்சித்துமில்லாது, அகங்காரப்படுகுழியிலும், மங்கையரின நலத் திலும் மனதை வீழ்த்தி, உலகப்பற்று விடாது அலையும் எங்கள்செயலுக்கு அஃது ஓரணுவளவேனு மொப்புவதென்றன மறுக்க.

கடவுள் எங்கும் வியாபகராயிருக்கின்றார். அவருடைய கிருபை யாவ ரிடத்துமுண்டு. பக்குவமடைந்த ஆன்மாக்கள் மோக்ஷமடைவர். மோக்ஷம்- விடுதல். முச்-என்பது தாது. முன்னே மோக்ஷமடைந்தோர் பலர்; தற் காலமடைகின்றோரும் பலர்; இன்னும் மோக்ஷத்தைப் பெற நிற்போரும் பலரே.

உபமானம்,

ஒரு தடாகத்திலுள்ள தாமரை அரும்புகளிலே சூரியரஸ்மி சரிவரப் பட்டாலும், அவற்றுள் அலரும் பக்குவமுடையதே முதன்முதல் விரிகின்

று. அதுபோல இறைவனுடைய திருவருள் எல்லா ஆன்மாக்களுக்கும் இருந்தாலும், சிற்சத்தி பதிந்த அதிதீவிர தரமுடைய ஆன்மாக்களே மோக்ஷமடையுமென்பது தெளிவாகும். இதனாலே ஈசுவரனுடைய காருண்ணியத் தன்மையு முணரலாம்.

"பகலைர்த்தான் நாமன்ற நேரொத்து" என்பது (ஆப்தமூர்த்தி திருக்கார்த்துச் சிவஞானபோதம்.)

## ௮] சிவனே நிமித்தகாரணர்.

பூமியில் சகல ஜீவகோடிகளுக்கும் சூரியகிரகணம் இன்றியமையாதது போல, சமஸ்த சராசரங்களுக்கும் மூலகாரணராகிய சிவபெருமானுடைய திருவருள் முக்கியமானதாம். அவருடைய அருட்பிரகாச மில்லாவிட்டால் உலகத்தில் ஒன்றும் விருத்தியடையமாட்டாது என்பது உண்மை நூற்றுணிபு. ஆன்மாக்களுக்குக் காட்சிப்பொருளாவாரும், காட்டியாவாரும் பதியே. காண்பான் ஆத்மாவே ஆத்மாவைக் காண்டால் திருவருளில் வழிக்கூடாது.

மேற்படி பிரமாணங்கள்.

தௌர்ப்மலோமாஸ்யேந சமஸ்தஜெகதாத்மநோ!
(அபியுக்தர்.)

சர்வோதர்ல விகாசாத்மா தஸ்யதஸ்ய விதாயிவ:
தஸ்மாத் தஸ்மிந் பாரம்பர்ய ம்ருர்யா தாத்மோ:
பகாசே:
(சிவஞான போதம்.)

"அவனருளே கண்ணாகக் காணினல்லால்"
"காண்பானார் கண்ணுதலாய் காட்டாக்காலே"

(திருவருட் சுருதி)

காண்பவன்முதலியதிறமுங்காட்டுவான்
மாண்புடையோனுமாய்வலிகொள்வான்றொடர்
பூண்பதின்றாய்மலப்புணர்க்கும்புங்கவன்
சேண்பொலிதிருநடச்செயலையேத்துவாம்.
சேன்ஞானாகாசம். அதே திருச்சிற்றம்பலம்.

(கச்சியப்பசிவாச்சாரிய ஸ்வாமிகள்)

உண்மைநிலைமையினை விசாரியாது ஒன்றைப் பற்றிக்கொள்ளுதலும், எதை சொன்னாலும் கேட்டபொழுதுமாத்திரம் உடன்பட்டுப் பின்பு மறுத்தலும்,



இன்னது செய்வதெனச் சிலபோது தெரியாது மயங்குதலும் மனதின் சுபாவமாகும்.

## ௯ மலநீங்க வுபாயம்.

தேகமுள்ளபொழுதே இந்நிலையுண்டு மல மறைப்பினாலே இவை நிகழுகின்றன. ஸ்ரீமந் - மணிவாசகப்பெருமானுக்குத் திருவடிதீக்ஷை புரிந்தருளிய பரமாசாரியராகிய ஈசுவரன் உபதேசித்த அரியபாசுரம் இப்பொழுது ஞாபகமாகின்றது. அது "களிம்பு தோய்ந்த செம்பென வுணமருவுங் கருமைகூர்பலங் கண்டதுகலக்கும், பளிங்குபோன்றதன் மனம் மலப்பற்றினாலுடல்பல வெடுத்துழன்றாய்" என்னும் பாகமாகும். இதனாலே தேகம் எப்பொழுது கிடைத்ததோ அப்பொழுதே ஆன்மாக்களுக்குப் பாசமுகிழ்ப்பு உண்டாய்விடும். பாசத்தை நசிக்கச்செய்வது சிவத்தியானமேயாகும். சிவத்தியானத்தினாலே ஆன்மாக்கள் சிவாநந்தப் பெருவாழ்வடையும். சிவம் என்றும் விகாரமடையமாட்டாது. ஆன்மாக்கள் விகாரமாந்தன்மையுடையன. உடல் பொருள் ஆவி ஆகியன யாவுந் தேவரீருடையனவே என்று அர்ப்பணஞ் செய்தல்வேண்டும். இதனாலே சிவபோத வளர்ச்சி தலைப்படும். சிலர், பதியும் பசுவும் ஒன்றென்பர். சிவமும் ஆத்மாக்களும் வேறானவைகளே! சிவ சீவ பேதமுணர்ந்து வழிபட்டால் நிர்மலப்பொருளாகிய இறைவனை ஆன்மாக்கள் சேர்ந்து சுகமடைய ஏதுவாகும். முதலிலே நான் பிரமம் என்றால் வளர்வது அகங்காரமேயாகும். ஸ்ரீமந்-மணிவாசகப் பெருந்தகையாரது அருந்தேறல்வாக்கைச் செவிமடுத்து இன்பமடையாத பிறவி பிறந்ததா? "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றபடியே!

திருச்சிற்றம்பலம்.

"வான்கெட்டு மாருதமாய்த் தழனீர்மண் கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மைய னுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுங்கெட் டென்னுள்ளமும்போய்
நான் கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

திருச்சிற்றம்பலம்.

இத்தத்திருவாசக அனுபூதிவாக்கு எவ்வளவு பெருமைவாய்ந்திருக்கின்றது

## ௰. சிற்றின்பம்.

இவ்வுண்மைகளை ஆராயப் போதியஅவகாசம் எங்களுக்குக் கிடைப்பதில்லை. நடைப்பிணம்போல இருப்பதை நாங்கள் சிந்திப்பதில்லை. சிற்றின்

பங்களை மிகவும் நாங்கள் மதிக்கின்றோம். சிற்றின்பமெனவே பேரின்பமு மொன்றுண்டென்பதைக் கனவிலும் நினையாமை அறிவின்மையே! பேரின்பமே ஆன்மாக்களடையவேண்டியது. சிற்றின்பம் இழிவுடையது. அஃது,

"அடுகரி தொடரவீழ வைந்தலை நாகங் காண
இடிகரை கிணற்றின் வேரைப் பற்றிஞான்றிட அதையு மோரெலி
கடுகவே வந்து கறித்திட வொருதுளி தேனக் கின்பம்
போலுமிப் பிறவி யின்பம்."

"மங்கையர்தம் யோனிமிசை வைத்திடு மாசைதனைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துத்— திங்களணி
வேணியன்றன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணுக்கதி."

## ௧௧ கடவுளை யடையும் வழி.

ஆகவே, மானுடர்களாகிய நாங்கள்-கடவுளை மனம் வாக்குக் காயம் என்ற மூன்றினாலும் வழிபாடு செய்து, ஆசையை நீக்கவேண்டும். ஆசை யகன்றால் ஆத்மஞான முண்டாகும் ஆத்மஞானத்தினாலே உலகத்திலுள்ள நித்த அநித்தப்பொருட்களை யுணரச் சிவஞானங் கைகூடும். சிவஞானத்தினாலே பேரின்பங் கிடைக்கும். நாம் என்றது ஆன்மாக்களை. தேகமும் ஆத்மாக்களும் வேறுயுள்ளன. பதி பசு பாச ஞானங்களினாலே உணரக் கூடாத முதல்வர் இவைகளைக் கரதலாமலகமென்னத் தொண்டர்களுணர்வார்கள். ஆத்மா சதசத்தன் என்பதை, வாதவூரடிகளும்,

"சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணைநின் திருப் பாதப் போதுக்காக்கி, வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்மணி வார்த்தைக் காக்கி யைம்புலன்க ளார, வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத், தந்தனைசெந் தாமரைக்கா டனையமேனித் தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே."

என்று தெளிவுறத். தெரிவித்தருளினார். இதனாலும் ஆன்மாவின் நிலைமை அறிவுடையார்க்குக் கிரித்திபமென்னத் திகழுதற்பான்மைத்தே! இனி ஆன்மாக்களைச் சிவபெருமான் மற்கடசம் பந்தமாகவும், மார்ச்சார சம்பந்தமாகவும் அடிமைக்கொண்டருளுவார். ஆதலின் தம்மையுணர்ந்து தலைவனைப் பத்தியாற் பரவினால், பிறவிப்பிணியினின்றும் நீங்கி இன்புற்றிருக்கலாம்.



"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்."

## உபசம்ஹாரம்.

அன்பர்களே!

இதுவரையும் சிற்றறிவுடையேன் உபந்நியாசமாகவும், பிரசங்க முறையாகவும் பேசியவற்றின் திரட்டுரை யாதெனில்;

நாம் என்றது ஆத்மா என்றும், ஆத்மாக்கள் தேகத்தோடு கூடி நல்வினை தீவினைகளைச் செய்யும் என்றும், இருவினையொப்பும் மலபரிபாகமு மடைந்த ஆன்மாக்களே மோக்ஷமடையும் என்றும், தேக இந்திரியாதிகள் ஆத்மாக்களன்று என்றும், ஆசையைப் படிமுறையானே குறைத்துப் பக்தியைப் பெருக்கிச் சிவபெருமானை வழிபட்டாற் பிறவி நீங்கும் என்றும், பிறவியை எடுத்த ஆன்மாக்கள் பாசப்பற்றுடையனவாகும் என்றும், ஆன்மாக்களுடைய பிரயோசனத்தையே திருவுளத்திற்கொண்டு திருவருள் பாலிப்பவர் நியந்தாவாகிய கடவுளே என்றும், கடவுளுக்குவேறாய்த் தேகத்துடனிருக்கும் ஆத்மாக்கள், இறைவனை அன்புடன் உபாசித்தால், நற்கதியடையலாம் என்றும், தேகத்துடன் வாழும் நாட்களில் ஜீவகாருண்ணியம், சத்யம் முதலிய தர்மலங்களை யாவரும் ஆற்றிவரவேண்டியது ஆவஸ்யகமாகும் என்றும், சுருக்கிக் காட்டப்பெற்றமை யறிக. சுகானந்தத்தைப் பெற முன்னிற்பது மனித ஜன்ம சாபல்யமாகும். அதிகம் விரிப்பிற் காலவெல்லை கூடுமாகலின், இவ்விஷயத்தை இவ்வளவிலே சுருக்கிப் பூர்த்தி செய்கின்றேன். திருச்சிற்றம்பலம், சுபமஸ்து.

அன்பைப்பெருக்கி யெனதாருயிரைக் காக்கவந்த
இன்பப்பெருக்கே யிறையே பராபரமே.

குருவாழ்க.

**வ. மு. இரத்நேசுவரையர்,**
தமிழ்ப் பண்டிதர்,

—(o)—

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அருளிலக்கணத்தின் ஓர் பகுதி.*

அருட்பெரு வெளியில் அருட்பெரு வுலகத்து
அருட்பெருந் தலத்து மேல் நிலையில்
அருட்பெரும் பீடத்து அருட் பெருவடிவில்
அருட்பெருந்திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே அருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்தி என் அமுதே
அருட் பெருங்களிப்பே அருட்பெருஞ் சுகமே
அருட்பெருஞ் சோதி என் அரசே.

திருவருட்பா.

உலகத்திலே காட்சிப்பொருளாக நிலை பெற்றுள்ளன சூரியன், சந்திரன், பூமி, மலை, கடல் முதலியன. குழந்தை முதல் மஹாமேதாவிகள் வரை இப்பொருள்களைப் பார்க்கின்ற காலத்துத் தங்கள் தங்கள் உணர்ச்சிக்கு ஏற்றவாறு ஆச்சரியப்படுவதையும், இவைகளின் அருமை பெருமைகளைப் பலவிதமாகக் கொண்டாடுகின்றமையும் காண்கின்றோம்.

பூமியானது ஒரே தட்டுப்போல் பரந்த பெரும் பரப்பு என்றும், சூரியன் உதித்து அஸ்தமித்தலால் பூமியைச்சுற்றுகின்றான் என்றும் உண்பன உடுப்பன அணிவன முதலிய கொடுத்தலால் பூமிபெரும்பயன் தருவதொன்று என்றும் சாதாரணமனிதர்கள் எண்ணுகிறார்கள். இது Ordinary Consciousness (சாதாரண ஞானம்) என்று பெயர் பெறும்.

பூமி பலகை வடிவுடையதோ என்றும் பூமி ஏனைய கோள்களைப் போல் சுற்றுகிறதா அல்லது அசைவின்றி நிற்கும் நிலையுடையதா என்றும் இங்ஙனம் பல வினாக்கள் நிகழ்த்தி அவைகளுக்கு இயன்ற வரையில் விடை பெற்று மண்ணின் இயற்கை அமைப்பு இத்தன்மைத்து என அறிய அவாவுகின்றோர் மேற்கூறிய சாதாரண மனிதனிலும் சிறிது சிறப்புடையவர். "சாதாரண மனிதருடைய நோக்கம் பெரும்பான்மையாய்ச் சொற்ப முயற்சியாற் பெறும் சுயநல இன்பமே. சற்று காட்சிப்பொருள்களின் அமைப்பை ஊன்றி ஆராய்தல் திடீரெனப் பொருள் கொடாதபடியால் ஆராய்ச்சியில் பிரவேசிக்கமாட்டார்கள்.

* 1915ஆம் டிசம்பர்மீ தஞ்சாவூரில் கூடிய சைவசித்தாந்த மகா சமாஜத்தில் வாசிக்கப்பட்டது.



ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற நிலைபெற்ற ஊக்கத்தோடு இயற்கை அமைப்பை நோக்குவார் தமது நுண்ணறிவால் பலதிறமாகவும் பலதுறையான முடிவுக்கு வருவார்கள். இதுதான் Scientific Consciousness (சாஸ்திர ஆராய்ச்சியின்) உற்பத்தி.

மண்ணினது நிலைமை இதுவென ஆராயப்புகுந்த பௌதிக சாஸ்திர நிபுணர் (Professor of Physics) மண்ணினைப் பகுத்துப் பகுத்து Molecules என்னும் அணுக்கூட்டங்களாகப் பகுத்தறிகிறார். இவர் மண்ணுலகம் முழுதும் இவ்வணுக்கூட்டம் இயற்கை சத்தியின் கூட்டுறவாலே திரண்டு உருண்டு விளங்கும் பிண்டமெனத் துணிவர்.

இவருடைய ஆராய்ச்சி இவ்வளவில் நிற்க ரஸாயன சாஸ்திர ஆசிரியன் (Professor of Chemistry) இன்னும் சிறிது ஆராய்ச்சி செய்து இந்த Molecules என்னும் அணுக்கூட்டங்களை இன்னும் விசேடித்த துணைக்கருவிகளைக் கொண்டு பரம அல்லது சிற்றணுக்களாக (Atoms) ப்பிரித்து அநேக பரம அணுக்கள் சேர்ந்தே ஒரு (Molecule) அணுவாகும் என்று முடிவுக்கு வருவார்.

இவருடைய ஆராய்ச்சி இந்த அளவில் நிற்க (Professor of Geography) பூகர்ப்ப சாஸ்திர விற்பனர் பூமியை வெட்டிப்பார்த்துப் படைபடையாக இலைக்கட்டுபோல் மெல்லிய மண் நாளடைவில் ஒருங்கு சேர்ந்து திண்மைபெற்று மேலும் மேலும் படிவதாகி லக்ஷக்கணக்கான வருஷங்கள் சென்ற பிறகே இப்போது காணப்படுவதாகிய வன்மையோடு கூடிய மண் பரப்பு என்பது உண்டாகியது என்று அறிவுறுத்துகிறார். மண்ணின் கூட்டம் மிகத்திரண்டு இருத்தலே மலை என்பர். அது போலவே காலாந்தரங்களிலே கடல் நாடாவதும் நாடு கடலாவதும் உலக அமைப்பின் சரித ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மை. காடு நாடாதலும் நாடு காடாதலும் தேச சரித்திரத்தால் விளங்கும்.

இம்மூன்று ஆசிரியர்களும் மண்ணுலாகிய பூமியை இந்தவிதமாகப் படிப்படியாக ஆராய்ச்சி செய்ய ஜோதி சாஸ்திர ஆசிரியர் (Professor of Botany) வேறுவிதமாக இம்மண்ணின் ஆற்றலை உணர அவாவுவர். அவரது ஆராய்ச்சி திண்மை, வன்மை, கடினம், பரப்பு முதலிய கொண்டுள்ள பூமியை நோக்கி இம்மூன்று ஆசிரியர்கள் கவனிக்காது விட்டதோர் அதிசயத்தைக் காண்பார்.

அஃதாவது மனிதனுடைய முயற்சியில்லாமலே செடிகள் புல் பூண்டு முதலிய தாவரங்கள் இம்மண்ணில் தோன்றி வளர்கின்றன என்று கண்டு மண்ணை ஆராய்ச்சிசெய்வதே போதும் என நில்லாது மண்ணில் உண்டாகும் புல் பூண்டுகளின் தன்மைகளை ஆராய்வான் புகுந்து அவர்களால் காணப்பெறாத பல சிறப்பியல்புகளை அதனிடத்தே காண்கின்றார். மண் காற்றின் வேகத்தால் அசையாதும் மேன்மேலும் வளராதும் இருந்தநிலையில் இருக்கிற தன்மையை உடையது. புல் பூண்டுகள் மண்ணில் உண்டாயினும் வளர்ச்சி என்கிற விசேட பண்புடையன. மரத்தின் சிறுவித்து முளைகிளம்பிச் சிறிது சிறிதாக முற்றிப் பருத்து ஓங்கிவளர்ந்து பெரியதோர் சேனையும் இளைப்பாறத்தகுந்த நிழல் தரும்படியான மரமாகின்றது 4,000 வருஷம் ஓர் மரம் இருக்கும் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

இந்நான்கு ஆசிரியருள்ளும் இவரே வளர்தல் விருத்தியாதல் அது பல்வாக்கிளைத்தல் என்னும் அரிய பொருளின் குணங்களை ஆராய்ச்சி செய்கின்றனர். அடுத்தபடியாக எழுகின்ற விசாரமானது சற்றும் இடம் விட்டும் விலகாதும் தொடுதல் தவிர ஏனைய உணர்ச்சி ஒன்றும் இலதாய்த் தளிர்த்தும், அரும்பியும், மலர்ந்தும், பூத்தும், காய்த்தும், பழுத்தும், உதிர்ந்துபோகும் இயற்கையளவான முயற்சியே எதிர்பார்ப்பதுமான புல் பூண்டாதிகளைப் பார்க்கிலும் புல் பூண்டுகளைப் போலவே வளர்தலும் அசைதலும், பயன்படுதலும் அல்லாமலும் இடம்விட்டுப்பெயர்ந்து நெடுந்தூரஞ் செல்லுதல் ஒன்றோடொன்று கூடுதல் குலாவுதல், கூட்டமாகச் செல்லல் காப்பவனைக் கண்டகாலத்து நயம்பாராட்டல் தொடுதல் என்பதோடு மற்றைய உணர்ச்சிகளையும் சுவை ஒளி நாற்றம் முதலிய உடைய விலங்குகளைப் பற்றியதாகும். இவ்வாராய்ச்சி Zoology (உயிர்நூல் ஆராய்ச்சியாகும்.

முதல் மூன்று ஆசிரியர்களும் மண்ணின் காரியப்பாட்டைக் கவனிப்பதே தொழிலாகக் கொண்டவர். நான்காவது ஆசிரியர் ஓங்கிவளர்வதான விருக்ஷங்களின் நிலையை உணர்ந்தும் ஐந்தாவது ஆசிரியர் அவைகளிற் சிறந்த முக்கியமான வேறுபாடுற்ற ( consciousness ) என்று கூறப்படும் மனம் ஒன்று உள்ளதாகப் புலப்படுகின்ற மிருகங்களின் சுபாவகுணத்தை ஆராய்ச்சி செய்தலால் ஆராய்ச்சியில் சற்று மேல்நிலை அடைகின்றார். இனி வளர்ச்சி ஒன்றினில் மரமும் மிருகமும் மனிதனும் ஒன்றாயினும் மரமும் மிருகமும் அடையாத பலகோடி அற்புத சத்திகள் மனிதனிடம் காணப்



படுகின்றன என்று வாதித்து மிருகங்களிடத்தே காணப்பெறாத அறிவு விகற்பங்களும் சித்த மகிழ்ச்சிபேதங்களும் அறிவு, ஆற்றல், அன்பு, ஞானம், முயற்சி, ஆகாரம், தொழில், நடை உடை பாவனைகளும் மனிதனை மேம்படுத்துகின்றன. ஆகவே மனிதனுடைய மனோபாவனைகளின் சாமானிய விசேடங்களையும் அச்சம், மறதி, ஞானம், ஈகை முதலிய விசேடங்களையும் ஆராய்ச்சிசெய்வதே தொழிலாகக் கொண்டுள்ளார். இவர் ( Psychology) என்னும் ஆத்மிக சாத்திர ஆசிரியர் ஆவர்

இனி (Philosophical Consciousness) (தத்துவ சாஸ்திர மனோநிலை) ஆரம்பமாகும். பூகோள சாஸ்திரங்களை அறிந்து ஆராய்ச்சிசெய்து நுட்பநோக்கால் பல அருமைகளை அறிந்து அவைகளைப்பற்றிய அறிவு விசாலிக்க விசாலிக்கத் தனது கற்பனா சக்தியினால், அளக்கப்படாத பூலோகத்தை அறிவின் நுட்பத்தால் கண்டு பிடித்த கருவிகளைக்கொண்டு அளந்து முன்பு கண்டு பிடிக்காத நுண்மைகளைக் கண்டு பிடிக்கிறான். ஆனால் அறிவின் நுட்ப மேம்பாட்டினால் இவ்வளவு தூரம் உலகத்தில் விருத்தியடைந்த பிறகு இதுபோலவே எல்லாவற்றையும் மனிதனே உண்டாக்கலாம். நீராவியந்திரங்களும் புகைக்கப்பல்களும் மனிதன் அறிவு மேம்பாட்டால் ஆனவைகளே. ஆயினும் மனிதன் அறிவுக்குமேல் விசேடமான இத்தகைய அற்புதங்களை மனிதன் கண்டுபிடித்துக் காலாந்தரத்தில் இயற்கைஅமைப்பிலே அறியக்கிடக்கிற பலநியாயமுறைகளை (Laws of Nature) க்கொண்டு உலகத்துள்ள எல்லாப்பொருளையும் எல்லாக்காட்சிகளையும் பௌதிக நியாயமுறைகளைக்கொண்டே விளக்கிவிடலாம் என்று (Scientific Concious ness) (பௌதிக சாத்திர மனோநிலை) உடையவர்கள் நினைப்பார்கள். அவ்வளவோடு நின்றுவிட்டார் சிலர்.

ஏனெனில் Philosophical Consciousness (தத்துவ சாத்திர மனோநிலை) Science என்கிற பௌதிக ஆராய்ச்சி ஒருசிறிது தூரம் செல்லுமே அல்லாமல் எல்லாப் புவனங்களுக்கும் ஊடுருவிச்செல்லும் என்று ஒருவாற்றானும் கொள்ள இடமில்லை, கொள்ளுவோர் இடர்ப்படுவர். எங்ஙனம் எனின் மனிதனுடைய அறிவின் பெருந்துணையைக்கொண்டு இயற்கை அமைப்பின் நிலைமையை அனேக துறையாக வகுத்துக்கொண்டு சிறிது சிறிதாக காலாந்தரங்களில் பௌதிக சாத்திர ரஸாயனம் முதலிய அறிவு நூல்கள் வெளிவந்தனவே யல்லாமல் பௌதிக நியாயங்கள் தாமே கவனிக்கும் ஆற்றலுடைய அறிவாளியில்லாவிடின் வெளிவந்து நின்று நிலவுமோ எனின் ஒரு சிறிதும் நிலவா.

(இன்னும் வரும்)

மோ. கந்தசாமி முதலியார். B, A,

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

---

தொகுதி 6. பகுதி 9 பக்கம் 217. தொடர்ச்சி.

இன்னும் ஒருமாணவன் நல்லாசிரியரை யடைந்தெனக் குபதேசம் பண்ணவேண்டுமெனக் கேட்டான். அப்பா நான் கெட்டவிடம் [illegible] பெற்றுக்கொள்வாயென விடை பகர்ந்தார். அப்பொருளறியாது திகைத்து நின்றானுக்கு அப்பா நான் கெட்டவிடம்பார் என்றது நானென்றெனும் ஆணவ வலிமையற்றபோதென் றருளியாட்கொண்ட மேன்மைக மணியின் கருணைபோல வேதாகமங்களை யறிந்த [illegible] மெய்ப்பொருளை யுய்த்துணர்ந்துய்யுமாறு செய்தாலன்றி முடியாதென்பதே யநுபவ வேத்யமாய் விளங்குகின்றன.

இன்னும், "நீயற்றவன்னிலையே நில்" என்ற உபதேசத்தையுஞ் சிந்திப்பாம். நானற்றபோது நிலையில் நிற்பதென்றென மயக்கம் வாராமைப் பொருட்டு "நீயற்றவன்னிலையே நிட்டைபதி நீயிலையோ என்றுமுளாய், வாயற்றவனே மயங்காதே போயற் றிருந்தாலுன் போகாய் பசு சும்மா வருந்தாதே யின்பமுண்டுவா" என்னுந் திருவெண்பாவில் (ஆன்ம) வுண்மையைப் பசுமரத்தாணியென நாட்டினர். இதில் வாயற்றவனே என்றது சொல்லாய தொகுதியெல்லாங் கடந்துநின்ற சொரூபத்தோ டத்துவித நிலையில் நிறகு நிலையை இன்னதெனக் கூறவராது அழுந்து மௌனநிலை என்பதை விளக்கியபடியாம். கல்லாலினிழல்தனி லொரு நால்வர்க்குங் கடவுணீ யுணர்த்துவங்கை காட்டென்றார் சொல்லாமே சொல்லப்படுமோ" என்றும் "ஊமைகண்ட சொப்பனம்போல் [illegible] தெனச் சொற்றிடவு நன்றாமோ" என்னும் [illegible] உண்மையை வலியுறுத்தும், தற்போத [illegible] முத்தியெய்து மாறு பொதுவாயுஞ் சிறப்பாயுங் கூறும் வேதாகமங்களினுண்மைக்கருத்தறியாமல் திரிபுணர்ந்து [illegible] காணியக்கிறாக நிலை [illegible] உண்மையான உணர்ச்சியல்ல வென்பதேயாம். "வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர்மண் கெடினுந்தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையருங் கூன்கெட்டுயிர் கெட்டுணர்வு கெட்டென்னுள்ளமும் போய் நான் கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" என்னும் தமிழ் வேத[illegible] வலியுறுத்துவதாம். [illegible] "நான் கெட்டவா பாடி" [illegible] வித்தா [illegible] பிறக்



திறத்தலில்லாந் பேரானந்த நிலைபெற்ற நிரதிசய வின்ப அதிசயத்தை விளக்கியபடியாமன்றி முதலுக்கு மோசங் கூறுநிலையல்லவென் றுணர வேண்டும்.

இனி பரன் எண்குணங்களொவ்வொன்றை விசாரிக்கப் புகின் "தன்வயத்தனாதல்" என்னுங் குணத்தின் மறுதலை "பரவயத்தனாயிருத்தல்" என்னுமுறையே மற்றைய குணங்களும் அதனதன் மறுதலைக்குணங்களைத் தந்து நிற்பனவாம். ஆனால் பிரமம் குணரகிதம் அல்லது "நிர்க்குணம்" என்றல்லவா படிக்கப் பெறுகிறது அதற்குக் குணத்தையு மொப்பி அதற்கு மறுதலைப் பொருளுண்டென்று சாதித்தல் முறையாமாவெனின், பிரமம் "குணரகிதம்" அல்லது "நிர்க்குணம் என்பது நிலைப்பதற்கு "குணசகிதம்" அல்லது "சகுணம்" என்னுமொரு பொருள் காலத்திரையத்திலுமிருந்து தீரவேண்டிய தவசியமாமென்பது யாமேலே விளக்கிக் காட்டிய நியாயங்களால் நன்கு விளங்கும். இங்ஙனம் "குணரகிதம்" குணசகிதம் "நின்ற பொருள்களே குண குணிபாவமாகி" தாடலைபோ லுங்காறலைபோலுங்கூடலை யென்னாற் கூறவும்படுமோ" என்றபிரமாணப்படி நிரதிசயானந்தத்தை யடைந்து சுகிக்கவேண்டியதாம் இதுவேமுக்தியின் முடிவாம் பிரமம் நிர்க்குண மென்பதற்கு யாதொருகுணமு மில்லாத தெனக்கண்ட பொருள் மிகச்சிறப்புடைத்து எண்குணம் அறுகுணம் என்று வேதாகமங்களை கூறும் வசனத்திற்கு பொருளியா தெனக்கொண்டனரோ வறியோம்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ சு சீனியா பிள்ளை,<br>
சைவப்பிரகாச சபை,<br>
விருதுபட்டி.

—— (o) ——

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

## பரீக்ஷைகள்.

---

சித்தாந்தம் தொகுதி-6-பகுதி-2-பக்கம்-45-ல் குறிப்பித்தபடி அக்டோபர்மீ 28உ ஞாயிற்றுக்கிழமை பரீட்சைகள் நடத்துவதற்குப் போதுமான காலத்தில் விண்ணப்பத்திரங்கள் எனக்குக் கிடைக்காமையால் ஷை பரீட்சைகள் நவம்பர்மீ 11உ ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இங்ஙனம்,<br>
கி. குப்புச்சாமி<br>
காரியதரிசி.

# திரிபதார்த்த தத்துவப்படம்.




ஜே. யம், நல்லசாமி பிள்ளை. B. A., B. L.,

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1917ஆ செப்டம்பர் மாதத்தின்

வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூபா. | அ. | ப. | செலவு. | தொகை. ரூபா. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1917ஆ ஆகஸ்டுமீ 30உ, இருப்பு .... | 489 | 9 | 1 | சஞ்சிகை அச்சுக்கூலி (ஜூன் ஜூலை ஆகஸ்டுமீ) ... | 62 | 14 | 0 |
| | | | | காகிதம் ... | 24 | 8 | 0 |
| விளம்பர வரவு ... ... | 3 | 0 | 0 | குமாஸ்தா சம்பளம் ... | 20 | 0 | 0 |
| | | | | தபால் செலவு முதலியன ... | 16 | 6 | 9 |
| ஆயுள் சபாசிகர் சந்தா ... | 5 | 0 | 0 | | 123 | 12 | 9 |
| | | | | 30-9-17-ல் இருப்பு | *383 | 12 | 4 |
| | | | | * ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 495-0-0 | | | |
| ஆ மொத்தம் | 507 | 9 | 1 | ஆ மொத்தம் | 507 | 9 | 1 |

K. Kuppusawmy Mudaliar, *Secretary.* M. Kandaswami Mudaliar, B. A., *Auditor.* W. T. Govindaraja Mudaliar, *Treasurer.*

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி சு.] 1917ஆ நவம்பர்மீ பகுதி [கக.

## சாந்தோக்யோபநிஷத்து.

### ஐந்தாவது பிரபாடகம்.

#### கண்டம் ச.

இந்த உலகம் அக்கினி, இதற்குச் சூரியன் சமித்து, கிரணங்கள் புகை பகல் பிரகாசம், சந்திரன் தணல், நட்சத்திரம்பொறிகள், இவ்வக்கினியில் சிரத்தையினை ஓமஞ்செய்வர், இதில் சோமராஜன் உண்டாகின்றனர்.

#### கண்டம் ரு.

பர்ஜயன் அக்கினி, இதற்கு வாயு சமித்து, மேகம் புகை, மின்னல் பிரகாசம், இடி தணல், சத்தங்கள் பொறிகள், இவ்வக்கினியில் தேவர்கள் சோமனை ஓமஞ்செய்கிறார்கள், இதனால் மழையுண்டாகின்றது.

#### கண்டம் சு.

பிருதிவி அக்கினி, இதற்கு வருஷம் சமித்து, ஆகாயம் புகை, இரவு பிரகாசம், திசைகள் தணல், திசைமூலைகள் பொறிகள், இவ்வக்கினியில், தேவர்கள் மழையை ஓமஞ்செய்கிறார்கள், இதில் அன்னமுண்டாகின்றது.

## கண்டம் ௭.

புருஷன் அக்கினி, இதற்கு வாக்கு சமித்து, பிராணன் புகை, நாக்கு பிரகாசம், விழி தணல், சுரோத்திரம் பொறிகள், இவ்வக்கினியில் தேவர்கள் அன்னத்தை ஓமஞ்செய்கிறார்கள் ரேதஸ் உண்டாகின்றது.

## கண்டம் ௮.

பெண் அக்கினி, உபத்தம் சமித்து, பெண்ணையழைத்தல் புகை, யோனி பிரகாசம், சம்போகம் தணல், ஆனந்தம் பொறிகள், இவ்வக்கினியில் தேவர்கள் ரேதசை ஓமஞ்செய்கிறார்கள், இதில் கர்ப்பமுண்டாகின்றது.

## கண்டம் ௯.

இவ்வைந்தாவது அக்கினியில் ஓமஞ்செய்த ஜலம் புருஷசொரூபமாகிறது. இது கருப்பப்பையிலிடத்துச் சுத்தமாகி, அவஸ்தையுற்றுப் பத்துமாதம் வயிற்றுள் தங்கிப் பின்னர் வெளிப்படுகிறது.

இங்ஙனமுதித்தவன் (தனது) ஆயுள்வரையில் வாழ்ந்து (பின்னர்) மரணமடைவன். இவனெந்த அக்கினியிலுதித்தனனோ அந்த அக்கினியில் தபிக்கப்பட்டவனாகிறான்.

## கண்டம் ௰.

இதுகாறுங் கூறிய பஞ்சாக்கினியினை, இல்லறத்தான், வானப்பிரஸ்தன், சந்நியாசி, நைஷ்டிக பிரமசாரி ஆகியவிவர்கள் சிரத்தையுடன் செய்கின்றனர். இவர்கள் மரணத்திற்குப்பின் தேவதையை அடைகின்றனர். பின்னர் சுக்கிலபட்சம், உத்தராயணம், வருஷம், சூரியன், சந்திரன், மின்னல், அபிமானதேவர்கள் இவர்களை முறையே அடைகிறார்கள். பின்னர் தேவர்களாய்ப் பின்னர்மரணத்தை யடைகின்றனர் இந்தவழி தேவயானம்.

௨. கர்மிகளான இல்லறத்தினர் யஞ்ஞம், தானம் முதலிய அனுஷ்டித்து, அபிமான தேவதையை யடைந்து, முறையே இரவு கிருஷ்ணபட்சம், தட்சணாயணம், பிதிர்லோகம், ஆகாயம், சந்திரன் முதலியவற்றிலடைந்து சோமராஜாவினிடம் அன்னமுண்ணுகிறார்கள்.

௩. சந்திரனிடம் தங்கள் கருமம் நசிக்கும்வரையிலிருந்து, முறையே ஆகாயம், வாயு, புகை, மேகம், தானியமாகி இத்தானிய முண்ணுகிறவனுக்கு ரேதஸாகி, மாது கருப்பத்தில் பிரவேசிக்கிறார்கள்.



௪. தேவயானம், பிதிருயானம் வழியேசென்று, பல அயனங்கள் தங்கி ஞானி உத்திராயணத்திலிருந்தும் தேவலோக மடைகிறான். கன்மி தட்சணாயணத்திலிருந்து பிதிருலோக மடைகிறான்.

௫. புண்யவான்கள் உத்தம சன்ம யோனிகளை அடைகின்றார்கள் பாபிகள் கீழ்ப்பட்ட சன்ம யோனிகளை அடைகிறார்கள். இங்ஙனம் மாறி மாறிப் பிறப்பர். இவர்கள் சிலரே பிதிர்லோகமடைவர். எல்லோருமடைவதில்லை.

௬. அந்தணர் பொருளைக் கிரகிப்பவன், சுராபானஞ்செய்பவன், குருதார கமனஞ்செய்பவன், இவர்களுடன் நட்புகொள்ளுகிறவன் இவர்கள் ஜனன மரணங்களில் அடிக்கடி கட்டுப்பட் டுழல்கின்றனர்.

௭. பஞ்சாக்கினிவித்தை யறிந்தோர் பாபத்தினின்று விலகிப் புண்ணியத்தினை யடைகிறார்கள்.

மணவழகு.

## நீதி.

"ஸூர்யதாம் தர்மஸர்வஸ்வம்
ஸ்ருத்வர்ச் சைவவிசார்யதாம்
ஆத்மநா ப்ரதிகூலாநி
பரேஷாம் நஸமாசரேத்"

யாவரும் சகல சாத்திர தருமங்களையும், நீதியினையும் பெரியோரிடங் கேட்டு, சந்தேகநீங்கி, நல்லவருடன் பழகி, பலவற்றிலும் தேர்ந்து; பிரதிகூலங்களைப் அயலாருக்குப் போதியாது இருத்தல்வேண்டும்.

:0:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நிலையா வாழ்க்கை.

ஒருமனிதனைக் கரிய யானை பின்பற்ற அம்மனிதன் பெரியதோர் வனத்தினிடமாகச் செல்லுங்கால் இடையிலுள்ள பாழுங்கிணற்றைத் தனக் குறை விடமாகக்கொண்டு புக, அங்கு ஐந்தலை நாகமிருத்தலைக் கண்டஞ்சிப் பின்னர் அப்பாழுங்கிணற்றின் மத்தியிலுள்ள அருகின் வேரைப்பற்றித் தொங்க, அவ்வருகின் வேரையும் அதிவிரைவாக ஒரு எலிவந்து கறிக்க, அவ்விதம் கறித்த முதிர்ச்சியினால் முன்பே அவ்வருகின் வேரினிடமாகவுள்ள தேனடையினின்றும் துளித்தேன் சிதறிவிழ, அத்தேனை கீழே விழாவண்ணம் சுவை பார்த்தவனது தன்மையை இவ்வுலக வாழ்க்கை நிகர்க்குமெனப் பின்வருஞ் செய்யுளா னறியக் கிடந்தது.

"அடுகரி தொடர வீழ வைந்தலைநாகங்காண—இடிகிணற் றருகின் வேரைப் பற்றினன்றிட விவ்வேரைக்—கடுகவோ ரெலியும்வந்து கறித்திட வதன் நின்றோனுக்—கிடைதுளி தேனக்கின்பம் போலுமிப் பிறவியின்பம்"

இச்செய்யுட்கு இன்னும் சமுத்திர கலச நியாயம்பற்றி அறிஞர்கள் பல்வேறுவிதமாகவும் பொருள்கோடற்கும் இடந்தரக் கூடியதே.

இவ்வுலக வாழ்க்கை நிலையுளதோ, நிலையிலதோ, என்று சிந்தித்து அறியவேண்டியது அவசியகமாயினும். பெரும்பான்மையும் சிலர் இதனை சிந்திப்பதே யில்லை.

சர்வ உயிர்களும் பிறந்து இறந்து அநித்தியமாய் ஒழிதலை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அதனால் இவ்வுலக வாழ்க்கை நிலையிலதென்பது தெற்றென புலப்படும்.

பிறப்பென்று கூறப்படுவது உயிர் உடம்போடு கூடுதலும், இறப்பென்று கூறப்படுவது உயிர் உடம்பைவிட்டுப் பிரிதலுமாமென்க. இவ்



வகை பிறப்பும் இறப்பும்; எல்லா சீவராசிகளிடத்துங் காணப்படுகின்றன.

"இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே"

என்றார் தாயுமானார்.

"நெருநலுள னொருவனின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்றார் திருவள்ளுவர்.

'மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார்வாழ்வும்-எண்டரு பூதபேத யோனிகளியாவுமெல்லாங் - கண்டவிந் திரமாசாலங் கனக்கழு திரதங்காட்டி-யுண்டுபோலின்றாம்பண்பி லுலகினை யசத்துமென்பர்"

என்று சிவஞானசித்தி திருவிருத்தத்தானுந் தெள்ளிதிற் புலப்படும். ஆதலால் உடம்போடு கூடிய உயிர் வாழ்க்கை என்பதும் அழிவையுடையதேயா மென்க.

உலகவாழ்க்கை இப்படியிருக்க, சிலர் இவ்வுலகமுழுவதையும் தாமே தனினின்று அரசாளவேண்டுமென்று கருதுகிறார்கள். வேறு சிலர் மாடமாளிகைகள் இயற்றி அதில் வாழவேண்டுமென்றும் கருதுகிறார்கள். இன்னுஞ் சிலர் வரம்பிலா திரவியங்களையும் ஆபரணதிகளையும் ஈட்டி அழகிய மாதரோடு சல்லாபமாயிருக்கவும் கருதுகிறார்கள். இவை மாத்திரமன்றிப் பல்லாயிர வருடமிருப்பினும் இறத்தற்கு மனமில்லாதவர்களாய்த் துன்புறுகின்றார்கள்.

மிகுந்த விருத்தராய்ப் பல்லிழந்து, கண்ணிழந்து, காதும்செவிடுபட்டு, முதுகெலும்பும் வளைந்து தோலுஞ்சுருங்கி இரத்தம் வற்றி உணவுஞ்செல்லாமல், நோயும்மிகுந்து காலுந்தளர்ந்து விழுபிணமாய்க் காடுவாவென்ன வீடுபோவென்ன இப்படிப்பட்ட அந்தரநிலையிலிருப்போர்க்கும் இவ்வுலக வாழ்க்கையில் ஆசைவிட்டு நீங்கக்கண்டிலேம்.

இதுபற்றியே நமது குமரகுருபர சுவாமிகள்

"பல்லுயிர்த் தொகுதியும் பவக்கடலழுந்த-வல்லல்செய்யு மவாவெனப் படுமவ்-வறுமையினின்றும் வாங்கி யறிவின் செல்வமளித்தருளெனக்கே"

என்றார்.

இவ்வுலக வாழ்வை சிலர் சுகமெனக் கருதுவதென்னையோ? உயிர் முன்செய்த நல்வினை தீவினைக்கீடாக இவ்வுலகத்திலே மானிடர் முதலிய சன்மங்களாய்ப் பிறந்திருக்கிறதென்றும் ஒரு கணப்போதாயினும் வாளாவிராது வினைவசத்துக்கு ஈடுபட்டிருக்கிறதென்றும் ஒருசெயலும்வினையின்படி நடப்பதேயன்றி வேறுவிதமாய் நடக்கவில்லை என்றும் இவ்வுலக வாழ்வை உற்றுணர்ந்து நோக்குவார்க்குப் பெருந்துன்பசாகர மென்பது இனிது புலப்படும்.

ஒருயிர்க்கு விற்பதிந்து வளருங்காற் படுந்துன்பத்தையும் யோனி வாய்ப்பட்டுப்பிறக்குங்காற்படுந்துன்பத்தையும் பிறந்துவளருங்கால் நோய்கள்வந்து வருத்த அதனாற் படுந்துன்பத்தையும் அதன் பின்னர் பொருளீட்டுதலாற் படுந்துன்பத்தையும், மனை மக்களோடுகூடி இல்வாழ்க்கையை வைத்து நடத்துங்கால் வருந்துன்பத்தையும் அவ்வக்காலத்து தனக்கும் மனைவி மக்களுக்கும் வரும் நோய்களாற்படுந்துன்பத்தையும் தளர்ந்த பருவத்திலே படுந்துன்பத்தையும், பின் மரணகாலத்திலே படுந்துன்பத்தையும் உற்று நோக்குவோர்க்குச் சுகமெனக் கருதவும்படுமோ, இவ்வுயிர் சரீரத்தைவிட்டு நீங்குந் தன்மை,

“புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந் திட்டைமேலுந்தி”

என நமது சமயாசாரிய சுவாமிகளாகிய திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்காலும்,

“ஐயினான்மிடற டைப்புண்டாக்கைவிட் டாவியார் போவதுமே”

என நமது திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகத்தாலும் தெளியற்பாலதே.

அறிவுடையோர் இவ்வுலகவாழ்வைச் சுகமென ஒருபோதுஞ் சொல்லமுன் வரார். இவ்வுலகவாழ்வு மாத்திரமன்று இதன்மேலுள்ள சுவர்க்கலோக புவர்லோக முதலிய மேலுலகவாழ்வுகளும் அதல விதல முதலிய கீழுலகவாழ்வுகளும் பிரமலோக விஷ்ணுலோக வாழ்வுகளும் புண்ணிய பாவ கன்மவசத்தான்வந்து வினைப்பயனாகிய இன்பதுன்பங்களைத் தருவனவாய்ப் பிறப்பிறப்பிற்கு வித்தாயிருத்தலின் முடிவிற் றுன்பகரமேயாய்ப் பரமபந்தமாயிருக்குமென்றறிஞர்கள் தெளியத் திகழ்கின்றன.



இதுபற்றியே நமது குமார குருபர சுவாமிகள் ஆசிரியப்பா.

“ஐந்தருநிழற்கீழ் முரசு வீற்றிருக்கு
மிந்திரனாகி வாழ்ந்திருப்பதோ வன்றே
மலரோனாகி மன்னுயிர்த் தொகுதி
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ வன்றே
யடலராவணையி லறிதுயி லமர்ந்த
கடவுளா யுலகங் காப்பதோ வன்றே”

அவைதாம்

‘ஆராவின்பமென் றரும்பெயர் பெறினும்-வாராவல்வினை வருவிக்குமே’

எனக் கூறியுள்ளார்,

வினைத்தொடர்பு உள்ளளவும் இருந்து பின்பு நீங்கிவிடுதலின் அவ்வாழ்வுகளும் அநித்திய வாழ்வுகளேயாம். அன்றித் துன்பந்தருவனவுமாம்.

ஆதலால் இவ்வுலக வாழ்க்கையை நித்தியமென்றாவது, சுகமென்றாவது ஒருபோதும் கருதுதற்கிடமில்லை துன்பத்திற்கிடமாகிய உலகவாழ்க்கையை என்று விட்டு நீங்குகிறோமோ அன்றுதான் துன்பம்நீங்கி இன்பம் பெறுவோம் அவ்வின்பம் பெறுதற்கு பரமேசுரனுடைய திருவருள் வந்து நம்மிடத்துத்தங்குங்காலம் என்றோ? அன்று வினைகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கும் அவை நீங்கவே இவ்வுலக வாழ்க்கைத் தொடர்பும் நம்மைவிட்டு நீங்கும்.

நாம் இவ்வுலக வாழ்க்கையைவிட்டு நீங்குதற்கும் வினைத்தொடர்பை அறுத்தற்கும், சிவானந்தாமிர்தத்தை நுகர்தற்கும் திருவருட்பேறே பெருஞ்சாதனமாதலால் இவ்வுலக வாழ்க்கையில் முழுகி ஆழாமல் திருவருட்பேற்றை யடைதற்குரிய சாதனங்களை இம்மையிலேயே இயற்ற முயலுதல் விவேகிகளின் சிறந்த குணங்களாம். சுபம்.

இங்ஙனம்,

S. நடேச தேசிகன்.
கவர்ன்மெண்ட் ஸ்கூல், தமிழ்ப்பண்டிதன்,
திருமலைராஜன் பட்டணம்.

—— (o) ——

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகமங்களின் முப்பொருட்டுணிவு ஒன்றே.

தொகுதி 6. பகுதி 9 பக்கம் 239. தொடர்ச்சி.

இனி திரிபதார்த்தமுங் காலத்திரையத்து முள்ளது அல்லது நித்திய மெனக் கொள்ளும்பக்ஷத்தில் மேலே "மற்றதுமித்தை" என்றது பாசத்தை விளக்கியபடியாம் என்றது குற்றமாகாதோவெனின், ஆகாது என்னை? "தேன்முகம் பிலிற்று பைந்தாட்செய்யபங் கயத்தின்மேவு நான்முகத் தேவே நின்னுற்ட்டிய வகிலமாயை, கான்முயற்கொம்பே யென்கோ கானலம்புனலே யென்கோ - வானகமுளரி யென்கோ மற் றென்கோ விளம்பல்வேண்டும்" என்னுந் திருவாக்கில் பாசகாரியமாகிய உலக லட்சணத்தை விளக்கியுள்ளவிதத்தைத் தெரியின் நன்குவிளங்கும். இதுவொன்றே "வருவான்வந்தே னெனல்போல் மன்னியழியுஞ் சகத் தைத் தெரிவாக வில்லையென்ற திரம் பராபரமே" என்றும்.

"மண்டனில் வாழ்வும்வானத் தரசயன் மாலார்வாழ்வு
"மெண்டரு பூதபேத யோனிகளியாவு மெல்லாங்
"கண்டவிந்திரமரசாலங் கனுக்கமு திரதங்காட்டி"

"புண்டுபோலின்றும் பண்பி லுலகினை யசத்துமென்பர்" மாயா காரியஞ் சற்காரியமாதலால் அசத்துமென்பரென்றுர்—என உரையாசிரியர் கட்டளையிட்டிருக்கிறுர்கள். இதனுலும் நன்குவிளங்கும்.

இனி நித்தியம் எனும்பொருள் அல்லது நித்தியமெனுஞ் சொல் காலத்திரையத்தும் நிலைக்கவேண்டுமாயின் முக்காலத்தும் அநித்தியமென வொருபொருளிருந்தாலன்றி முடியாதென்பது மேலே விளக்கிக்காட்டிய



நியாயங்களை யுய்த்துணரவல்லார் தெள்ளிதிற்றெரியலாம். அவ்வநித்திய மாவது பாசகாரியமாகிய தேகாதி பிரபஞ்சங்களே யாம். இவையும் நித்தியத்தைப்போலக் காலத்திரையத்து முள்ளதாயின் அநித்தியமென் பானேனென்னின், என்றும் ஒரேபடித்தாய் நிகழுஞ் சிவசன்னிதானத்தின் முன்னர் இவை சிருட்டி திதி லயம் ஆதி தொழில்களைப்பெறும். (காரியம் காரணத்திலொடுங்கும்) ஜன்மத்திரிவை நோக்கி, அநித்திய மென்றப்படியே யன்றி ஏகான்மவாதிகள் கூறும் அநித்தியம்போல வல்ல வென்றுணரவேண்டும். அதனை விளக்கவே "நான்முகத்தேவே நின்னுல் காட்டிய வகிலம்" என வினை முதலை விளக்கினுர் இன்னும் "பெண்ணு ணலியாய்ப் பிறந்துவளர்ந்தே யழியும், எண்ணுதபேத மியல்பின்றிப் பண்ணுங்காற் காரணகர்த்தா வொருவனுண்டவனைக் காட்டுது லாரணமு மாகமுமாம்" என்னும் பிரமாணங்களானும் ஒருவனேடொருத்தி யொன் றென்றுரைத்திடு மதனுல் நன்கு விளங்கும்.

இனி, திரிபதார்த்தமுங் காலத்திரையத்து முள்தாயின் பிரமத்தின் பூரணங்குறையுமே என்றும் இதற்காதாரமாகப் பசு பாசங்களிருக்குமிடங் களிற் பதி வியாபகமில்லாமற்போமே என்றும் படித்துக்கொண்ட பாடத் தையும் படிக்கிறுர்கள். இது வியவகாரத்தில் ஜகசீவபரமென்று முப்பொரு ளுண்டென்று சாதிக்கும் அவசரத்தில் பிரமத்தின் பூரணமெப்படிக்குறை யாமல் காண்கிறுர்களென்று தெரியவில்லை. வியவகாரத்தில் பிரமம் பூர ணங்குறைந்தது தான் பராமார்த்திகத்தில் தன்னையன்றி வேறில்லாநிலை யில்பிரமபூரண நிறைந்ததுதா னென்பர்போலும், நல்லழகிது இவ்வுண்மை யானது "கடல் சிவம் நீரான்மா வுப்புமலங் கன்மம் அடர்வாயுப் போத மலைகாண்" என்னுந் திருவெண்பாவால் முப்பொருளின் வியாபக வியா த்தி வியாப்பியவிலக்கணம் நன்குவிளங்கும். "வியாபகமாதி விரிக்குங் காலை வியாபகமேலிடு நிறைவாமென்ப வியாத்திசம நிறைவாகும். விளம்பின் வியாப்பிய மொன்றின் மிடைந்த நிறைவே வியாபகங்கடலே வியாத்தியந் நீரே வியாப்பிய முவரெனவிளக்கிய நூலே-வியாபகஞ் சிவமே வியாத்தியா ருயிர் வியாப்பிய மலமென விளக்கியநூலே-வியாபகங் கதிரே வியாத்தி கண்ணே வியாப்பிய மிருளென விதித்தன நூலே" என்னும் பிரமாணங் களானும் நன்கு விளங்கும்.

இனி முப்பொருளும் உள்ளதென்றது அதனதன் றன்மைகளோடுள்ள தென்ற கூறும் இலக்கணம்நோக்காது கேட்குங் கேள்விகள் விருதாகோஷ

2

மேயாம். அதனைதன் றன்மைகளோடுள்ளதென்பதியாதெனின், பதிதானே யறியுஞ் சுதந்தரவறிவும் பசு அறிவித்தாலறியுஞ் சிற்றறிவும் பாசம் அறிவித்தாலுமறியாத சடமும் அசேதனமுமாம்.

இனி உலகம் உள்ளதாயின சுழுத்தியிலிருக்கிறதா வென்கிறார்கள். ஆனால் சாக்கிரத்திலுள்ளதென்பதை யவர்களுமறுக்கவில்லையென்றாகிறது. ஆகவே சாக்கிரத்திற்கான விருப்பதுவும் சுழுத்தியிற் காணாதிருப்பதுமே கண்ட வேறுபாடு, அது கருவி கரணங்களின் றுணையுந் துணையின்மையுமே காரணமாமென்பதைக் காணாமையேயாம். எது உள்ளதோ அது முக்காலத்தும் உள்ளதே. எது இல்லாததோ அது முக்காலத்துமில்லாததேயாம். அது மலடிமகன் என்னுந் தோன்றுவாறுபோல்வதாம். அன்றியும் உள்ளதுபோகாது இல்லது வாராது என்னுந் தர்க்கரீதியானும் விளங்குமென்பர்.

"ஏகநாயகனை யோகநாயகனை யன்றிமற்றொன்று
முனைவனை யுணர்கிலேன் யானே"

திருவிசைப்பா,

இனி சத்து அசத்தையறியாது அசத்து சத்தையறியாது என்னும் பிரமாண மெவர்க்குமொப்பே. இது ஒளி இருளையறியாது இருள் ஒளியை யறியாதென்பது போல்வதேயாம்.

இதனால் சத்தையும் அசத்தையும் அறிவதற்கு அவ்விரண்டிற்கும் அன்னிய சாதிப்பொருள் வேண்டப்படுவது நிதரிசனமாம். அதுவே "பற்றியது தானாம்படிக" என்றுரைத்த ஆன்மாவாம். இங்ஙனமாக ஜகசீவபரங்கள் பிரமத்தினிடத்திற் கற்பிதமாய்த் தோற்றுமென்னும் தோற்றன்மாத்திரஞ் சொன்மாத்திரமன்றி உண்மையில் வேறு பொருள்களில்லையாம் என்றும் இங்ஙனமுணர்வதே ஞானமென்றும் சொல்கிறார்கள். இவர்கள் கூறுகிறபடி ஜகசீவபரங்கள் உண்மையிலுள்ளதேற்றத்தி லில்லாத பொய்ப்பொருள் இவை மூன்றும் பொய்யெனத் தேரவேண்டியது இவை மூன்றற்கும் விலட்சணமாகிய உண்மைப்பொருள்வேண்டும் அது எது பிரமம் அல்லது நாமரூபரகிதமாகிய சத்து எனின் இங்ஙனமுணர வேண்டியது மேற்சொன்ன சத்தாகாது. அன்றியும் சத்து அசத்தை யறியாதென்ற பிரமாணமும் பழுதாம். அதற்குள்ள கற்பிதப் பொருளிலொன்றாகிய சீவனே தேரவேண்டியதெனின் அது (சீவன்) கற்பிதப்



பொருளாய் அசத்தாயொழிவதால் அசத்து சத்தையறியாதென்ற பிரமாணமும் பழுதாய், இங்ஙனங்கூறிய தேற்றமும் உண்மையான பொய்யாய் முடிவதனால் வரும் பிரயோசனம் என்னை? என்பது விளக்கவேண்டும். நிர்மலமாகிய பிரமத்தினிடத்தில் ஜகசீவபரங்கள் அத்தியாசமாய்த் தோற்றிற்றென்னும் உண்மையில் பிரமத்தைத் தவிர மற்றவை பொய்யெனத் தெளிவதே பிரயோசனமுமாம். அன்றி, பிரயோசனமும் பிரயோசனத்தைப் பெறுவானும் கொடுப்பானும் வேதாந்தத்திற் கிடையாது, "பந்தமுற்றவரார் முத்திபெற்றவரார் பாவனைவிகற்பமே" பந்தமுத்திகள் மறந்துபோ மூண்டென்று பலர்சொல்லின் நகையாகும் அந்தரத்தையுண்டுமிழ்ந்தோர் கொசுகெறு மவர்களை நகையாரோ என்றும், மலடிமைந்தனுந் தாணுவிற் புருடனும் வான்மலர் முதற்கு, இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை இரசிதம் விலைபேசிக் கலகமாயினரிடையிலே கயற்றராக் கடித்திருவருமாண்டார் அலகையாயினரெனும் விவகாரத்தையறிந்தவன் மயங்கானே" எனும் எமது பிரமாணங்களால் பந்தமுத்திகள் சொன்மாத்திரமே என்பது வேதாந்தத்துணிவு எனின் நிர்மலமாகிய பிரமத்தினிடத்தில் ஜகசீவபரங்கள் ஏன் தோற்றிற்றென்னும் வினவுக்கு யாதுவிடை? அன்றியும் நிர்மலம் என்னும்பெயரை யதுதாங்கிப் பிரகாசிக்கவேண்டியது தானென்னை? பிரமம் நிர்மலமாயின் மலமுடையதெது உண்மையில் தோற்றமில்லையே மறப்பிலன்றோ தோற்றமுங்கேடும். உண்மையில் பிரமந்தானே யுள்ளது இதுவன்றோ வேதமுடிவு, எனின் எதுமயங்கிற்றோ அதுதான் தெளியவேண்டும் எது தெளிந்ததோ அதுதான் மயங்கியிருக்க வேண்டும். அதைவிட்டு மயங்கினவிடத்தில் சீவனென்ற பெயரையும் தெளிந்தவிடத்தில் பிரமம் என்ற பெயரையுமொப்படைக்கிறார்கள். விஷய விரோதமின்றி பிரமமே மயங்கிற்று மயங்கினவிடத்தில் சீவனென்று பெயர்பெற்றது என்று தெளிவாயுரைக்கினும் நன்றாயிருக்கும். அந்தோ பரிதாபம், இவர்கள் தன்னிலக்கணமும் தலைவனிலக்கணமும் சந்தேக விபரீதமின்றி யுணர்த்தும் பதி நூலிற்பயிலும் பருவமெய்தாமைக்காக வருந்துகின்றோம் பசு நூல்கற்றோம் பிச்சரைக்காணு கண்வாய் பேசாதபேய்களோடே, எந்தவகையாலுணரினும் அருட்டுணைகொண்டுணரவேண்டியது ஆன்மாவும் அவ்வுணர்ச்சிக்குக் கோசரமாவது பிரமமும் என்பது அநுபவிகளெவருமறிந்தவிஷயம். இங்ஙனமாகப் பிரமத்தைத் தவிர ஆன்மாவென வொருபொருளில்லை பந்தமில்லை முத்தியில்லை சித்தியில்லை என்பதனைத் "பல்சித்திமுத்தி பரனுடைதலாற் றொல்சீவருமொருஞ் சிபர" என்னும்

அவிரோத வுந்தியாருக்கு உரைவிரித்த திருப்போரூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் பல்சித்திமுத்தி என்றதனால் மாயாவாதியை மறுத்தது என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். இதனால் தேறுவதியாதெனின், சித்திமுத்திகள் கிடையாது அல்லது பொய்யென்று சொல்பவர்களியாரோ அவர்கள் மாயாவாதிகளே என்பதும் அதற்குப் பிரமாணமாகச் சில நூல்களைக்காட்டும் அந்நூலும் மாயாவாத நூலேயாம் என்பதுமாம், மிண்டிய மாயாவாதமென்னுஞ் சண்டமாருதஞ் சுழித்தடித்தார்த்து" என்னும் தமிழ் வேதத்தானும், நாம் பிரமங்கண்டவர்போற் றம்மைக்காண்டாங்களுவே நாம் பிரமமென்பவர்பாலணுகாதே" என்னுஞ் சந்தானகுரவர் சிகாமணியாம் உமாபதி சிவத்தின் கட்டளையாலும், யாங்களே கடவுளென நிடும் பாதகத்தவரும் "ஆயிரஞ்சொன்னாலு மறியாத வஞ்சநெஞ்சப் பேயரோடு கூடிற் பிழைகாண் பராபரமே" என்ற சிவானுபவத் திருவாக்காலும் அன்னவர் கூட்டுறவொழிந்து சுத்தசைவ உய்யு நெறியதாம்.

இந்த உலகம் என் நிலைபெற்றிருக்கின்றது வென்னுங்கேள்விக்கு அறிவாளிகளாற் சொல்லும் பதில் ஆன்மா முத்தியடைவான்பொருட்டே என்பதை யன்றி யுண்டோ உண்டாயிற் கூறுக. இதை மறுக்குமறிவுடையாரியார் "உலகத்தாருண்டென்பதில் லென்பான் வையத் தலகையாய் வைக்கப்படும்" என்ற தமிழ்வேதத்தாலொறுக்கப்படுபவரே யாம்.

வேதாகமங்களிற் றுணிந்தபொருள்களென மேலோர்கள் ஆதியிலிருந்து சத்தியமாயிலகும் பதி பசு பாசமென்னு முப்பொருள்களைப் பொய்யென்றுங் கற்பிதமென்றும் வேதத்தின் றுணிவிதுதானென்றுங் கூறுமவர்கள், மேற்பிரமாணத்திற்போந்த குறட்பாவின் கருத்தைத்தேர்ந்து யோசிக்குமாறு வேண்டுகின்றோம்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ சு. சீனியா பிள்ளை,

சைவப்பிரகாச சபை,

விருதுபட்டி.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மெய்கண்ட தேவர் விருத்தாந்தம்.

—— (o) ——

உலகத்திலுள்ள ஆன்மாக்களனைவரும் எல்லாம் வல்ல இறைவனடியைநாடி உஜ்ஜீவிக்கும் பொருட்டுச் சித்தாந்த உண்மையினை விளக்கி யருள்புரிந்த ஞானதானவள்ளல்களாகிய சந்தானசாரியர் நால்வரில் ஒருவராய் மெய்கண்டதேவருடைய குருபூசைதினம் (13-11-17) இத்தினமாகையால் அவரைப்பற்றி நாம் இன்று புகழ்ந்து கொண்டாடவேண்டியது நமக்கு இன்றியமையாத கடமையாகும். ஆகையால் அவருடைய வரலாற்றையும் அவர்செய்த ஞானநூற்களையும் இங்கெடுத்து கூறத்துணிந்தனன்.

சோழநாட்டில் திருப்பெண்ணாகடம் என்னும் கிராமத்தில் சதா சிவசிந்தனையும், அடியாரிடத்தில் மிக்க அன்பும் பூண்டவருமான அச்சுதகளப்பாளர் என்னும் ஓர் வைதிக சைவ வேளாளர் இருந்தனர். இவர் தமக்கு மைந்தனில்லாக் குறையால் மனம் வருந்திச் சுவேதாரண்ணிய ஈஸ்வரனைப் பூஜித்து வருவாராயினர், இவருக்கு நம் பெருமானும் கருணைபுரிந்து வாய் பேசாத ஓர் பிள்ளையை யருளிச்செய்தனர். பெற்றோர் அப்பிள்ளைக்குச் சுவேதவனப்பெருமாள் என நாமகரணமிட்டு வளர்த்துவருநாளில், இவர் மைத்துனர் திருவெண்ணைநல்லூர் காங்கேயபூபதி என்பார் இக்குழவியைத் தன்னிருப்பிடம் எடுத்தேக, பெற்றோரும் அவருடன் சென்றார்கள்.

இக்குழந்தை ஊமையாயிருந்தாலும் விளையாட்டெல்லாம் சிவபணியாகவே யிருந்தது. ஓர்நாள் இப்பிள்ளை மணலைக்குவித்து அதைச் சிவலிங்கமாகப் பாவித்துத் தொழுதுகொண்டிருக்கையில் அவ்வழிச்சென்ற பரஞ்சோதிமகாமுனிவர் சாம்சித்தராயவதரித்துள்ள அவருடைய [illegible]ரப்பக்குவத்தைக்கண்டு அவருக்கு ஞானதீட்சை செய்து மெய்கண்ட தேவர் என்னும் நாமமிட்டுச் சிவஞானபோதத்தை உபதேசித்துத் தமிழ் உலகம் உய்ய அதனைத் தமிழ் மொழிபெயர்த்துதவும்படிக் கட்டளையிட்டுச் சென்றனர்.

பிறகு பொல்லாப்பிள்ளையாரென்னும் விநாயகக்கடவுளின் திருவருளால் வேதாகமங்களின் கருத்தையும் சிவஞானபோதத்தின் உண்மையினையும் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடிச் சிவஞானபோதத்திற்கு வார்த்திகம் என்னும் விருத்தியுரையையும் உதாரணங்களோடு முடித்தனர். ஐந்துவயதளவும் ஊமையாயிருந்த இவர் தன்மகத்துவம் ஊரார் யாவருக்கும் தெரிந்தபின், சைவசித்தாந்தத்தின் உண்மைப்பொருளை யாவருக்கும் ஓதுவித்து உண்மை ஞானத்தையடையச் செய்தனர்.

ஒரு காலத்தில் அருணந்தி சிவாசாரியர் தாம் மெய்கண்டதேவருக்கு வயதிலும், கல்வியறிவிலும் சிறந்தவரென்று நினைத்துத் தம்மாணாக்கரோடு அவரிடம் சென்று இறுமாப்போடு உலாவி நின்றார். அப்போது அருணந்தி சிவாசாரியர் மெய்கண்டதேவரை நோக்கி 'ஆணவமாவது யாது' என்று வினவ, 'நும் நிலையே அது" என்று மெய்கண்டதேவர் அருளிச்செய்ய அருணந்திசிவாசாரியர் உடனே மெய்கண்டான் திருவடியிலே விழுந்து தமக்கு ஞானோபதேசம் செய்தருளுமாறு வேண்டிச் சிவஞானபோத நூலைக் கேட்டறிந்தார்.

இவர்காலம் 660-க்கு முன்னுள்ளது. இந்த மெய்கண்டதேவர் அவதாரம் செய்திலராயின் நம் தமிழ் நாட்டின் ரௌரவாகமத்தில் கூறப்பட்ட சிவஞானபோதப் படலமாகிய சகலாகம நவநீதம் எளிதிலே வெளிப்படுத்தவும், சைவம் ஏனைய சமயப் பெரும் படைகளை யெதிர்த்துப் பொரு வெற்றித் தம்பம் காட்டுவதில்லையாம்.

இக்கலியின் கொடுமைக்கு அஞ்சி சமயாசாரிய ரெல்லாம் மறைந்த இக்காலத்தில் நாற்றிசையினும் ரணபேரிமுழக்கி வளைந்திருக்கும் புறச்சமய வாதிகளின் படைத்திரள் இச்சிவஞானபோதமென்னும் பேரகழிக்கும் சிவஞானசித்தியென்னும் அஸ்திரத்திற்குமே யஞ்சித் தளர்கின்றது. பேரகழியும் அஸ்திரமும் இல்லையாயின் சைவம் நெடுங்காலத்திற்கு முன்னமேயே அரசிழந்துவிடும். அவ்வகழியைக் கடக்குமாற்றலும், அவ்வஸ்திரத்திற்கு மேற்பட்டஅஸ்திரமும் உலகத்தில் வேறெச்சமயமும் எக்காலத்தினும் பெறுதென்பது நன்கு துணியப்பட்ட உண்மையாம்.

"பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனடி மேவுநா ளெந்நாளோ"



என்று நம் தாயுமான சுவாமிகளும் அவரைப்பற்றி எவ்வளவு பெருமைப்படுத்தியிருக்கிறாரென்பது நாம் சொல்லவும்வேண்டுமோ? ஆகவே சுத்தாத்துவித வைதிக சைவ சமயத்தினை வச்சிரலேபமாக நாட்டியவர் நமது மெய்க்கண்ட சிவமே, நம் வைதிகசைவத்திற்கு ஒரு ஞானக்களஞ்சியமாயிருப்பது சிவஞானபோதமே.

இங்ஙனம்,

பி. இராஜு கிராமணியார்.

—:0:—

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கரந்தைத் தமிழ்ச்சங்கம் தஞ்சை.

(பதிவுசெய்யப்பெற்றது)

கரந்தட்டாங்குடி,

பிங்கள ஆவணி ௰௧ (26—8—1917)

தமிழ்ச்சங்கங்களுக்கும், தமிழ்ப்புலவர்களுக்கும்.

ஐயரே,

சென்ற பிங்கள ஆனி ௯ (23—6—1917) சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் ஸ்ரீமான்-தி. செல்வகேசவராய முதலியார், எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச்சங்கத்தின் ஆறாவதாண்டுத் திருவிழாக்காலத்தில், இச்சங்க உறுப்பினர் ஸ்ரீமான், எம். எஸ். கலியாண சுந்தரமையர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, கும்பகோணம் ஸ்ரீமான்-ஆர். வேங்கடராமையங்கார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஆங்குக்கூடியிருந்த தமிழ்மக்களால் ஒற்றுமையுடன் முடிவுசெய்யப்பட்ட தீர்மானம் வருமாறு:—

'தமிழ்ப் பெரும் புலவர்களின் பெருமைகளையும், அவர்கள் தமிழுக்குச்செய்து போந்த உதவிகளையும் நினைவுகூர்ந்து, ஒவ்வொரு தமிழ்ச் சங்கமும் ஆண்டுகள்தோறும் அவர்கட்குத் திருவிழாக் கொண்டாடி வர வேண்டும்.'

௨. இத்தீர்மானத்தில் தங்கள் சங்கத்திற்கும் / தங்களுக்கும் சம்மதமிருக்குமென்று நம்புகிறேன்.

௩. இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதில், தமிழ்ப்புலவர் ஒவ்வொருவர் திருநாளையும் எல்லாச் சங்கங்களும் கொண்டாட முயல்வது சாத்தியமின்றிப் போயினும் போகலாம். ஆதலால்,

(௧) எவ்வெப் பெரும்புலவர்க்குத் திருவிழாக் கொண்டாட வேண்டுமென்பதையும்,

(௨) அவ்வத்திருவிழாக்களை எவ்வெந்நாட்களில் கொண்டாடலாகுமென்பதையும்,

(௩ எவ்வெப்புலவர்க்கு எல்லாச் சங்கங்களும் ஒருபடியாகத் திருவிழாக் கொண்டாடவேண்டுமென்பதையும்,

(௪) எவ்வெப்புலவர்க்கு எவ்வெவ்விடங்களில் திருவிழாச் செய்யப்படலாமென்பதையும்,

(௫) இத்திருவிழாக்களை எவ்வெம் மாதிரிக் கொண்டாடலாமென்பதையும் முன்னர் நிச்சயித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆகையால் இவை சம்பந்தமாகத் தங்கள் சங்கத்தின் / தங்கள் ஆலோசனையைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் நன்றியுள்ள,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை,

சங்கத்தலைவர்.

---



சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# அருள்இலக்கணத்தின் ஓர் பகுதி.

—:o:—

தொகுதி-௩-பகுதி-௧௦-பங்கம்-உ௲௭-தொடர்ச்சி.

தம் அறிவின் மேம்பாட்டினால் பௌதிக நியாய முறைகளைக் கண்டுபிடிக்கச்சென்று அறிவு ஆன்மா கடவுள் முதலியன ஒன்றும் இல்லை என்ற விபரீத உணர்ச்சியை பௌதிக சாஸ்திரத்தின் ஆராய்ச்சியின் முடிபாக அவ்வாராய்ச்சியாளருள் சிலர் அடைகின்றனர். பௌதிக நியாய முறைகள் இயற்கைச் சக்தி அளவாகவே நின்று நிலவுகின்றன, மனிதனுடைய மனோநிலை அவ்வியற்கைச் சக்தியின் கூட்டுறவாலே இயங்குகின்றதாயினும் அதன் வசமாகவே தன்னை இழந்துவிடாது பௌதிகங்களுள் காணப்படாத அறிவுபேதங்களை மனிதன் வெளிப்படுத்துகிறான். ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு தூரம் பௌதிக நியாயமுறைகளை ஊன்றிப்பார்த்து அதிசயங்காண்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளின் ஆற்றலைவியப்பதே பௌதிக சாத்திர ஆராய்ச்சியின் உண்மையான முடிபாகும்.

ஆகலின் மண்ணினது நிலைமையை ஆராயப்புகுந்த ஆசிரியர் "வெளிப்படமண்ணில் திண்மை வைத்தோன்" என்னும் திருவாசகத்தின் திருக்கருத்தை விரித்தருளிய திருவருட்பிரகாச வள்ளலார் கூறிய அகவலுள்,

மண்ணின் திண்மையில்கிடக்கை, பொன்மையில் ஐம்மையும்,
ஐம்பூவில் ஐந்திறமும், நாற்றத்தில் பல்வகையும்,
பலவகை கருநிலைஇயலும், ஐந்தியலுள் பல்பயனும்,
அடிநிலையில் பலநிலையும், ஐந்தைந்து வகையும்,
இயல்சத்திகள் செயல்சத்திகள் உருச்சத்திகள் கலைச்சத்திகள்
ஒளிச்சத்திகள் கருச்சத்திகள் கணச்சத்திகள் வகைபலவும்
நிலைச்சத்தர்கள் வகைபலவும் கருவுயிர்த்தொகை வகைவிரிபலவும்
பொருள்பலவும் நிலைபலவும் செயல்பலவும் பக்குவத்தில்
பயன்பலவும் இயல்பலவும் பிறவும்

மண்ணின் அமைப்பை விரித்தருளிய ஆராய்ச்சியில் ஒரு சிறிதே ஆராய்ந்தவராவர்.

அற்றேல், மனிதன் அறிவின் பயனாக எழுந்த ஆராய்ச்சியினால் பௌதிக முறைகளைக் கண்டுபிடித்து புகைக்கப்பல், ஆகாய விமானம் முதலிய உண்டாக்குகிறான், பௌதிக நியாயங்களின் செய்கையை இவை விளக்குவன ஆயினும் இவை ஒழுங்குபெற நடத்த அறிவுடையவன் ஒருவன் வேண்டும். 10000-ஜனங்களை 1000 மைல் தூரம் இரண்டொருநாளில்

எதிர்க்கொண்டு செல்லும் ரெயில் வண்டித்தொடர் ஓட்டுவோன் ஒருவன் இல்லாவிடின் இவ்வளவு ஜனங்களையும் ஒரு நிமிஷத்தில் இரையாக்கிவிடும். பெரிய கப்பல்களும் மாலுமி இல்லாவிடின் பாறைமீது மோதி உருத்தெரியாது மாறிவிடும். யுத்தங்களில் பௌதிக நியாயங்களைக்கொண்டு செய்யப்பட்ட யந்திரங்கள் லக்ஷக்கணக்கான ஜனங்களை இமைப்பொழுதில் திரிபுர தகனமாக்குகின்றன.

ஆகையினால் பூத பௌதிகங்களிடத்துள்ள நியாயங்களைத் தக்க அறிவினாலே ஆளப்பட்டதாய் உண்மை ஆராய்ச்சியாளர்கள் தெளிவார்கள். அன்றியும் இத்தகைய பேராற்றல் இயற்கையான அண்டப்பகுதியுள் காணப்படும்படி அமைத்த எல்லாம்வல்ல தனித்தலைமைப் பெரும்பதியின் ஒப்பற்ற வல்லபத்தை விளக்குகின்றது என்றும் அத்தகைய கடவுளை வியந்தும் புகழ்ந்தும், துதித்தும் வணங்கியும் வாழ்த்தியும் போற்றுவதே உண்மையான ஆராய்ச்சியின் முடிவானநிலை என்றும் தத்துவ சாத்திர ((Philosophical Consciousness) உணர்ச்சி உடையவர் என்று எடுத்துவாதிப்பர்.

இதுகாறுங் கூறியவாற்றால்(Science) ஒரோர் துறையாக பௌதிக நியாயமுறைகளை ஆராய்ச்சிசெய்து விருத்தி அடைதல்போல (Philosophy) (தத்துவ சாத்திரம்) இப்படிப்பட்ட Sciences)தாம் ஆராய்ச்சியிலே முற்றுவதற்கு முன் என்ன உண்மைகளை ஆராய்ச்சிசெய்யாது (Assumptions) ஒத்துக்கொண்டு தொடங்கினவோ அவ்வுண்மைகளை நியாயவாயிலாக எடுத்துக்காட்டி பௌதிக சாஸ்திரங்களின் நோக்கத்தைப் பார்க்கிலும் மிக விசாலித்தது தன் நோக்கம் என நிரூபிக்கும். எங்ஙனம் எனின் பௌதிக ஆராய்ச்சி தொடங்குவதற்கு முன் ஊக்கம், விடாமுயற்சி, கவனசக்தி, உண்மை அறிவோம் என்னும் நம்பிக்கை உண்மை அறியப்பேரவா, சித்த மகிழ்ச்சி இவ்வாராய்ச்சி நிலைக்குவேண்டிய நூல்களின் தேர்ச்சி, விளக்கஞ்செய்யும் ஆசிரியர்மீது கொண்ட அன்பு இன்னோரன்ன மனோ சம்பந்தமான நிகழ்ச்சிகளை உடையவராய் ஆராய்ச்சிசெய்யப் புகுதல் வேண்டும். இவ்வுண்மைகளை முன் கொள்ளாது வெறுங்காகிதம்போன்ற மனோநிலையோடு சென்று ஆராய்ச்சிசெய்யின் சிறிதும் பயனிலதாய், அதைரியமும் அதிருப்தியும் கவலையும் கொண்டு உழல்வர். உண்மையறிய அவாவின நோக்கமும் தடைபடும். ஆகவே மனம், அறிவு, ஆன்மா கடவுள் முதலியவை இன்றியமையாதன என்றும் பௌதிகப் பரப்பிற்கண்ட உண்மைகள் அருளிலக்கணத்தை ஒருவாறு புலப்படுத்தும் என்று "அருளே சகலமுமாய பவுதிகம்" என்னும் திருமந்திரத்தின் கருத்தை (Sciences) விளக்குவது என்று தத்துவ நூல் உணர்ச்சி காட்டும். (இன்னும் வரும்.)

இங்ஙனம்,

மோ. கந்தசாமி முதலியார், B. A.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஏகான்மவாத பாவலரின்

# இழுக்குரை மறுப்பு.

——:o:——

ஐயன்மீர்!

சின்னாள் முன்னர் வடமொழிச் சிவஞானபோதத்திற்குத் தஞ்சை ஸ்ரீமான்-வெ. குப்புசாமிராஜு அவர்கள் உரையொன்றெழுதி, அதனைத் "தத்துவப்பிரகாசிகை" என்னும் பெயரால் வெளிப்படுத்தியுள்ளார்கள். அது அந்நூலோடு முற்றிலும் மாறுபட்ட உரையாயிருத்தல்கண்டு அம்மாறுபாடனைத்தையும் விளக்கப்புகுவது, மணற்சோற்றில் கல்லாராயப்புகுவதோடொக்குமெனக் கருதித் ஸ்தாலீபுலாக (ஒரு பானைசோற்றிற்கு ஒரு சோறு பதம்பார்க்கும்) நியாயமாய், அவற்றுள் ஓர் விஷயத்தை எடுத்தாண்டு அதிலுள்ள மாறுபாட்டை "வடமொழிச் சிவஞானபோதமும் ஸ்ரீமான்-வெ. குப்புசாமிராஜு அவர்கள் மாறுபட்ட உரையும்" எனப் பெயரிய சிறுபத்திரிகைவாயிலாக வெளிப்படுத்தியிருந்தேம். அதுபின்னர் சைவசித்தாந்த மகாசமாஜத்தினின்றும் வெளியான சித்தாந்தம் 1917ளு 5-வது சஞ்சிகையிலும் வெளிப்பட்டுள்ளது. இவ்வாறு வெளிப்பட்ட பத்திரிகையினைக் காய்தலுவத்தலகற்றி ஆராய்ச்சிசெய்த அறிஞரெல்லாம் ராஜு அவர்கள், பிரபலப்பிரமாண சாஸ்திரமான சிவஞானபோதத்திற்கு இவ்வாறாகவெல்லாம் மாறுபட்ட உரையெழுதி வெளியிடப்புகுந்தது, இது கொண்டு சுருதி யுக்தி அநுபவ விருத்தமான தமது ஏகான்மவாதக்கொள்கைக்கும் பிரபலச் சுருதிப்பிரமாணம் உண்டென நாட்டிக்கொள்ளவே போலுமென எள்ளிநகையாடாநிற்பவும், சென்னை தே. கிருஷ்ணசாமி பாவலர் என்பாரொருவர் இம்மாறுபட்ட உரையை மாறுபடா உரையென நாட்டுவார்போன்று வெளிவந்ததும், அதில் இவ்வுரையை வைதிக சைவரெல்லாம் கொண்டாடுவதாய்க் கூறியதும் வியப்பினும் வியப்பே. இது நிற்க; இனி விவாதவிஷயம் வருமாறு:—

"ஐந்தாவது சூத்திரம்.

விதந்த்யக்ஷாணி பும்ஸார்த்தாந்ஸ்வயம் ஸோபி சம்புநா |
தத்விகாரீ சிவச்சேந்ந காந்தோ யோவத்ஸதம் நயேத் ||

இதற்கு ராஜு அவர்கள் கூறிய அவதாரிகை முதலியன வருமாறு:—

அவதாரிகை, "இனி அவ்வாத்மா அறிதலும், சுதந்தரமாயின்றிச் சிவனாலேயறியுமென்பதனைக் கூறுகின்றார்."

பதவுரை. "அக்ஷாணி அர்த்தான் பும்ஸா விதந்தி - இந்திரியங்கள் விஷயங்களைப் புருஷனாய ஜீவனாலறிகின்றன. ஸ:அபி - அச்சீவனும், ஸ்வ்யம்ந-தானே அறிகிறதில்லை, ஸம்புநா-சம்புவினால், நயேத்-அறிகின்றான்" (என்பது முதலியன,)

## விசேட உரை.

"இதனால், இந்திரியவாயிலாகப் புருஷன் அறிவதுபோலச் சீவன் வாயிலாகச் சிவனே அறிகின்றான். சீவனுக்குச் சுதந்தரமான அறிவில்லையென்பது பெறப்பட்டது, அது சூரியன் நேரே பிரகாசித்தற்கேதுவாகாத இருட்டறையிலுள்ள பதார்த்தத்தினை ஒரு கண்ணாடியினது சாயாப் பிரகாசவாயிலாக விளக்குவதுபோலச் சிவன் அவித்தையினால் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை அந்தக்கரண பிரதிபிம்ப சிதாபாஸ வறிவாகிய ஜீவாத்மாவின் வாயிலாக அறிவன் என்பதனால் பொருந்துமாறு காண்க."

## எமது ஆக்ஷேபம்.

ஈண்டு இவ்விசேட உரையில் இந்திரியவாயிலாகப் புருடன் அறிவது போல் சீவன்வாயிலாகச் சிவனே அறிகின்றான் என்கின்றார்களே. இது 'அவ்வாத்மா அறிதலும் சுவதந்தரமாயின்றிச் சிவனாலே அறியும்' என்ற அவதாரிகை உரைக்கும் 'சீவனும் தானே அறிகிறதில்லை; சம்புவினால் அறிகின்றான்' என்ற சூத்திர உரைக்கும் மாறுபட்ட உரையே யாமன்றோ! யாதினாலெனின்; அவதாரிகையும்சூத்திரமும் சிவனாலே சீவன் அறியுமெனக் கூற, விசேட உரை சீவனாலே சிவன் அறிவன் எனக் கூறுதலினாலென்க.

## இதற்குப் பாவலர் கூறிய சமாதானம்.

"இவர் சிவஞானபோதம் 11-வது சூத்திரம் "ஏகமாய் நின்றே" என்னும் வெண்பாவினுரையில் சிவஞான சுவாமிகள் "கண் கண்ணாடியினின்றுந் தன்னைவிடயித்தாற்போல முதல்வன் ஆன்மாவுடலின்று தன்னை விடயித்தல் பொருத்த முடைமையின், ஆன்மாச்சிரயமென்னுங் குற்றம் இன்னோரன்னவற்றிற் கெய்தாதென்றுணர்க கண்ணாடிக்குள்ளாகத்தோன்றுவதுபோலும் எதிர்விம்பமாவது விம்பமே யன்றி வேறன்றென்பது சிவாகம நூற்றுணிபென்க" என்றெழுதியிருத்தலையும், இதன் கீழெழுதியிருத்தலையும் படித்துணர்ந் திருப்பாராயின், சூப்பு ஸ்வாமி மஹாராஜ் அவர்கள் எழுதிய உரையைத் தவறென்றுகூற முன்வரமாட்டார். சாஸ்திர ஆராய்ச்சிசெய்யாமலே ஒரு நல்லுரையைப் பழிப்பது கற்றோர்க்கழகன்றாம்" என்பதே.



இவ்வாறு பாவலர் எமது ஆக்ஷேபத்துக்குக் கூறிய சமாதானம் எட்டுணைத்தாயினும் பொருந்துமா? பொருந்ாதென்பதே தேற்றம். எங்ஙனமெனில்; ராஜு அவர்கள் 5-ம்சூத்திர அவதாரிகையிலும், பதஉரையிலும் சிவனாலே,சீவன் அறிவன் எனக்கூறிவிட்டு, விசேடஉரையில் சீவனாலே சிவன் அறிவனெனக் கூறியதையே யாம் மாறுபட்ட உரையென விளக்கியிருப்ப, இதற்குச் சமாதானம் கூறவந்த பாவலர் அவ்வவதாரிகைப் பொருளோடும் பதவுரைப்பொருளோடும் விசேடஉரைப்பொருள்மாறுபடவில்லைஎன்பதை நியாய வாயிலாக நாட்டித் தாம் சூடிக்கொண்ட பாவலர்ப் பட்டத்தோடு உரைவலார்ப்பட்டத்தையும் சூட்டிக்கொள்ளாமல் வாதத்தைவிட்டுப் பிறிதொன்றினைச் சொல்லிப் பொழுதுபோக்கல் என்னும் தோல்வித்தானப்பட்டத்தைச் சூட்டிக்கொண்டமையாலென்க. இனி இப் பட்டம் சூட்டிக்கொள்வதற்காகவே விவாத விஷயத்துக்கு எட்டுணையும் பொருந்தாத 'ஏகமாய்" என்னும் வெண்பா உரையின் ஓர் சிறுபாகத்தை எடுத்தாண்டவர் அம்மட்டில் நின்றுவிடாது, "இவ்வுரையைப் படித்துப் பார்த்திருந்தால் ராஜு அவர்கள் உரையைத் தவறென்று கூற முன்வர மாட்டார்" எனக்கூறுமுகத்தானே அதனைப் படித்துப்பார்க்கும்படி எமக்கோர் உபதேசமும் செய்கின்றார். எமது பூர்வபுண்ணியம் இவர் உபதேசங் கேட்டுப் படிக்கும்படி இதுகாறும் எம்மை விட்டுவையாது பல்லாண்டுகட்கு முன்னரே பக்குவப்பட்டுப், பொய்கண்டார் காணாப்புனிதமெனும் அத்துவித மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தையும், அதற்கு

"சங்கரர்ரா மானுஜர்மத் துவர்பாடி யங்களெலாந் தத்தளிக்கத்
தங்கியகே வலவிசிஷ்ட மருதலையத் துவிதந்தந் தலைகவிழ்க்கத்
துங்கமுறு சிவஞானபோத விருதயத்துண்மை சூழ்ந்ததற்கு
மங்களசுத் தாத்துவித திராவிடமாபாடியத்தை வரைந்து வைத்தான்"

எனக்கொண்டாடப்பெற்ற மாதவச்சிவஞானசுவாமிகள் இயற்றியபேருரை சிற்றுரையினைப் பார்த்தும் கேட்டும் படித்துணர்ந்துய்யுநெறியில் செலுத்திவிட்டமையின் இவருடைய உபதேசம் எமக்கணுத்துணையும் வேண்டற்பாலதன்றாம்.

இனி இவ்வுபதேசத்தை, அதாவது "ஒரும் வேதாந்தத் துச்சியிற்பழுத்த ஆராவின்ப வருங்கனிபிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தம்" தேனமுதினைச் செவ்வனே ஊட்டவல்ல சிவஞான சுவாமிகள்இயற்றியசிவஞானபோத உண்மை உரையைக்கைக்கொள்ளுமாறும், ராஜு அவர்கள்செய்த வடமொழிச் சிவஞானபோத மாறுபட்ட உரையைக் கைவிடுமாறும், தமதேகான்மவாதக் கூட்டத்தார்க்கு உபதேசம் செய்யப் புகுவாரேல் அது பயனுடைப் புண்ணியச்செயலாய் முடியுமெனத் தெளிவாராக.

இனி, இவரெடுத்தாண்ட சிவஞானசுவாமிகள் உரைப்பொருளை விவாத விஷயமாய் விளக்கவேண்டிய அவசியம் சிறிதுமின்றாயினும், இவரது

படாடோப வார்த்தையைக்கண்டு ஏகதேசிகள் மயங்காதிருத்தற்பொருட்டுச் சிறிது விளக்குவாம். இவர் ராஜு அவர்கள் உரைக்கு சாதகமாமெனக் கண்டுபிடித்த வாக்கியமாவது "கண் கண்ணாடியினின்றும் தன்னைவிடயித்தாற்போல முதல்வன் ஆன்மாவுடனின்று தன்னை விடயித்தல் பொருத்தமுடைமையின் ஆன்மாச்ரயமென்னும் குற்றம் இன்னோரன்னவற்றிற்கு எய்தாதென்றுணர்க" என்பதே. ஏனைய, இதன்பொருளை வலியுறுத்த எழுந்தனவேயாம். ஆகவே இவ்வாக்கியப்பொருளை விளக்குவதே ஈண்டு வேண்டற்பாலது. இனி இவ்வாக்கியமோ முதல்வன் உயிர்க்குக்காட்டும் உபகாரம் உடையனாயிருத்தலேயன்றி உடனின்றுகாணும் உபகாரமும் உடையனாயிருக்கின்றான் என மேல்வாக்கியங்களால் சாதித்த வழி, இது பெத்தநிலைக்கட்பெறப்படுவதாகிய ஐம்புல விடையாறுபவத்திற்குப் பொருந்துவதாயினும் முத்திநிலைக்கட் பெறப்படுவதாகிய சிவானுபவத்திற்குப் பொருந்துமா? பொருந்துமாயின், ஆண்டுச் சிவம் தன்னைத்தானும் அனுபவித்தல் பெறப்பட்டுத் தன்னைப்பற்றுதலென்னும் குற்றம் எய்துமேயென வாதிப்பாரை நோக்கி அக்குற்றம் எய்தாமையினை விளக்க வந்ததேயாம். இதனால் இவ்வாக்கியமும் முன்பின்னுள்ள ஏனைய வாக்கியங்கள்போலப் பெத்தம் முத்தி இரண்டினும் சிவத்துக்கு முதன்மைத்தன்மையும், ஆன்மாவுக்கு அடிமைத்தன்மையும் சாதித்ததேயன்றி ராஜு அவர்கள் கூறிய விசேடஉரைபோலச் சீவனுக்கு முதன்மைத்தன்மையும் சிவனுக்கு அடிமைத்தன்மையும் சாதிக்கவில்லையே. இங்ஙனமாகவும் பாவலர் ஏகமாவென்னும் வெண்பாவினுரையை எடுத்தாண்டதென்னை? இராஜு அவர்கள் உரையில் கண்ணாடி உவமை காணப்படுவதுபோல் சுவாமிகள் உரையிலும் கண்ணாடி உவமை காணப்படுதல் பற்றியா? அங்ஙனமாயின் ஈதென்ன அறியாமை! இருவர்கூறும் உவமையும் சாதிக்கும் பொருள் வேற்றுமை உணரவேண்டாமா? இங்ஙனம் பலபடித்தாலும் விவாத விஷயம் அறியாதவராகிய இவர் எமது விஷயத்தில் சிலவற்றை விவாதத்திற்குச் சம்பந்தமில்லாததென விலக்கியது வியப்பினும் வியப்பே. என்னை? விவாத விஷயமே அறியாத இவர்க்கு விவாதத்திற்குச் சம்பந்தமில்லாத விஷயமும் அறிதல் கூடாதாகலின். இனி இவர் வெளியிட்ட மறுப்புப் பத்திரிகையிற் கண்டுள்ள ஏனையவிஷயங்களில் சிலவிவாதத்திற்குச் சம்பந்தமில்லாதனவும் சில ஸ்ரீமான் வீ. க. பாண்டிப்பெருமாள் பிள்ளையவர்கள் மறுக்கவேண்டியதுமாய் இருத்தலின் யாம் அவற்றில் தலையிடவில்லை எனத்தெளிக.

இங்ஙனம்,

தெ. ச. சு. சுப்பிரமணிய பிள்ளை,

காரியதரிசி,

சைவசித்தாந்தசபை, தூத்துக்குடி.

# சமாச்சாரங்கள்

வாலாஜாபாத் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சபை:—இச்சபையின் இரண்டாமாண்டு நிறைவிழா, நவம்பர்மீ 3-4-தேதிகளில் சித்தாந்த சரபம் அஷ்டாவதானம்-சிவஸ்ரீ, கலியாண சுந்தர யதீந்திர சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ், பல வித்துவான்களும், பெண்மணிகளும் உபந்நியாசிக்கக் கொண்டாடப்பெற்றது.

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கம்:—இச்சங்கத்தினர் நவம்பர்மீ 11உ 49-வது தலயாத்திரையாகத் திருப்பாலைவனஞ்சென்று சிவாலய வழிபாடு, தமிழ்வேத பாராயணஞ்செய்து திரும்பினர்.

சைவசித்தாந்த மகாசமாஜம்:—நவம்பர்மீ 13உ மாலை 5-மணிக்குத் திருக்கைலாச பரம்பரைச் சந்தானகுரவர்களுள் ஒருவராகிய திருவெண்ணெய் நல்லூர்-மெய்கண்ட சிவாசாரியர் திருநட்சத்திரத் திருநாள் கொண்டாட்டம் திருமயிலை பிள்ளையார்தோட்டத்தில், பல சைவசிகாமணிகள் பற்பல உபந்நியாசஞ்செய்ய ஷை சமாஜத்தினர் நிறைவேற்றினர்.

மேலாய்க்குடி தமிழ் அபிவிருத்திக் கந்தவேள் சங்கம்:—இச்சங்கத்தின் நான்காவது வருஷ பூர்த்திமகோற்சவம், நவம்பர்மீ 16-17-தேதிகளில், ஸ்ரீமான் V. கோபாலசாமி ரகுநாத ராஜாளியவர்கள் அக்கிராசனத்தின்கீழ், பல வித்துவான்கள் உபந்நியாசிக்கக் கொண்டாடப்பெற்றது.

தூத்துக்குடி மேலூர் சைவசித்தாந்த சபை:—நிகழும் டிசம்பர்மீ 22-23-தேதிகளில், இச்சபையின் முப்பத்துநான்காம் ஆண்டு நிறைவிழா, மதுரையில் வசிக்கும் உத்தமபாளையம் மிராசுதார் ஸ்ரீமாந், M. T. சுப்பிரமணிய முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெறும்.

டிசம்பர்மீ 20-தேதி முதல் 25-தேதி வரையிலும் சமாஜ காரியதரிசிக்கு எழுதும் கடிதங்களெல்லாம் "செம்பியம் பிரம்பூர்" என்று குறித்தனுப்புதல் வேண்டும்.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1917ஞு அக்டோபர் மாதத்தின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூபா. | அ | ப | செலவு | தொகை. ரூபா. | அ | ப |
|---|---|---|---|---|---|---|---|
| 1917ஞு செப்டம்பர்மீ 30௳ இருப்பு .... | 383 | 12 | 4 | காகிதம் ... | 24 | 8 | 0 |
| விளம்பர வரவு ... ... | 2 | 8 | 0 | லிகிதர் சம்பளம் ... | 20 | 0 | 0 |
| பரீட்சை கட்டணம் ... | 1 | 0 | 0 | தபால் செலவு முதலியன ... | 15 | 9 | 9 |
| சமாசிகர் வருட சந்தா ... | 4 | 8 | 0 | | 60 | 1 | 9 |
| | | | | 31-10-17-ல் இருப்பு | * 331 | 10 | 7 |
| | | | | *ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 495-0-0 | | | |
| ஆ மொத்தம் | 391 | 12 | 4 | ஆ மொத்தம் | 391 | 12 | 4 |

K. Kuppusawmy Mudaliar, *Secretary.* M. Kandaswami Mudaliar, B.A., *Auditor.* W T. Govindaraja Mudaliar, *Treasurer.*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௬.] 1917ஞு டிசம்பர்மீ பகுதி [கஉ.

## சாந்தோக்யோபநிஷத்து.

———:o:———

### ஐந்தாவது பிரபாடகம்.

கண்டம் கக.

பிராசீனசாலர் எனும் ஔபமன்யவர், சத்யயஞ்யர் எனும் பௌலுஷி, இந்திரத்யும்னர் எனும் பால்லவேயர், ஜநர் எனும் சார்க்கராக்ஷ்யர், புடிலர் எனும் ஆச்வதராச்விச்வி ஆகிய ஐவர்களும் ஒன்றுசேர்ந்து நம்முடைய ஆன்மா எவர்? பிரமம் என்பது யாது? என விவகாரஞ்செய்து கொண்டிருந்தனர்.

உ. இவ்விஷயங்களைப்பற்றி சத்தாலகர் எனும் ஆருணியானவர் நன்கு விசாரித்துள்ளார். அவர் பாற்கேட்டுத் தெளிவோமெனத் தீர்மானித்துக் கொண்டு எல்லாரும் அவரிடஞ்சென்றனர்.

௩. இவர்கள் வருகையினை அவர் தெரிந்துகொண்டு இவர்கட்கு நமது உண்மையினைத் தெரிவிக்கப்படாது. பிறரொருவர்பால் அனுப்பிவிடுவோமென எண்ணங்கொண்டனர்.

௪. தன்னிடம் வந்த அவர்களை நோக்கி, அச்வபதி எனும் கைகேயர் ஆன்மாவைப்பற்றி நன்குதெரிந்துள்ளார் அவர்பால் கேட்போம் வாருமென்று அழைத்துக்கொண்டு போயினர்.

௫. அவர் இவர்களைக்கண்டு உபசரித்து ஐயன்மீர்! எனது தேசத்தில் திருடன், கொடாதவன், சுராபானம் செய்பவன், யாகஞ்செய்யாதவன், அவித்வான், வியபிசாரஞ்செய்கிறவன் இல்லை. யான் ஒரு யாகஞ்செய்யப் போகிறேன். ருத்விகளுக்கும் தங்கட்கும் அநேக திரவியங்கொடுக்கிறேன் இருங்கள் என்றனர்.

௬. அவர்கள் அவரைநோக்கி ஐய! எங்கட்குத் தனம் வேண்டுவதில்லை. ஆன்மாவைப் பற்றி நீர் நன்கு அறிந்திருக்கிறீர். அதைப்பற்றி எங்கட்கு உபதேசஞ்செய்ய வேண்டுமென்றனர்.

௭. மற்றைய நாள் காலையிற் சொல்லுகிறேன் எனக்கூறி அடுத்தநாள் சொல்ல ஆரம்பித்தனர்.

### கண்டம் க௨.

ஔபமன்யவ! நீர் எதை ஆன்மாவாக உபாசிக்கிறாய். நான் சுவர்க்கத்தை ஆன்மாவாக உபாசிக்கிறேன். ஆனால் அச்சுவர்க்கம் ஆன்மாவின் சிரசு. இதனால் யாகக்கிரியை, அன்னம், பிரியவஸ்துகள், பிரமதேஜசு உண்டாகும்.

### கண்டம் க௩.

சத்தியஞ்ஞரே! நீர் எதை ஆன்மாவாக உபாசிக்கிறாய். நான் சூரியனை ஆன்மாவாக உபாசிக்கிறேன். அங்ஙனமானால் அச்சூரியன் ஆன்மாவின் கண் அதனால் விச்வரூபம் சித்திக்கும்.

### கண்டம் க௪.

சந்திரத்யும்னரே! நீர் எதை ஆன்மாவாக உபாசிக்கிறீர். நான் வாயுவை ஆன்மாவாக உபாசிக்கிறேன். அங்ஙனமானால், அவ்வாயு ஆன்மாவின் பிராணன். அதனால் வஸ்திரமாதிபொருள்கள் சமர்த்தியாகக்கிடைக்கும்.

### கண்டம் க௫.

ஜனரே! நீர் எதை ஆன்மாவாக உபாசிக்கிறீர். நான் ஆகாயத்தை ஆன்மாவாக உபாசிக்கின்றேன். அங்ஙனமானால், அவ்வாகாயம் ஆன்மாவின் நடுதேகம், அதனால் பிரஜையும், தனமும் கிடைக்கும்,



### கண்டம் க௬.

புடிலரே! நீர் எதை ஆன்மாவாக உபாசிக்கிறீர். நான் ஜலத்தை ஆன்மாவாக உபாசிக்கின்றேன். அங்ஙனமானால், அந்தஜலம் ஆன்மாவிற்கு மூத்திரப்பை. அதனால் ஐஸ்வரியமுண்டாகும்.

### கண்டம் க௭.

உத்தாலகரே! நீர் எதை ஆன்மாவாக உபாசிக்கிறீர். நான் பிருதிவியை ஆன்மாவாக உபாசிக்கிறேன். அங்ஙனமானால், அப்பிருதிவி ஆன்மாவிற்குப் பாதங்கள். அதனால் பிரஜையும், பசுக்களும் பலிதமுண்டாம்.

### கண்டம் க௮.

பின்னர், எல்லோரையும் நோக்கி நீங்கள் பிரதக்பிரதக்காக பலவற்றை ஆன்மாவெனவெண்ணி உபாசிக்கின்றீர்கள். இவையனைத்திலும் அபிமானமுடைய ஆன்மாவை நான் என அறிந்து எவனறிகிறானோ அவனே எல்லா பூதங்களிலும், எல்லா இந்திரியங்களிலும் இருந்து அன்னத்தை உபாசிக்கிறான்.

மணவழகு.

### நீதி.

‘ஆயுஷோகண்ட நாயைவரவிரஸ்த மயம்கதா
அத்யந்யஹநி கர்த்தவ்யாஷி ப்ரம்தர்மஸ்ய ஸங்க்ரகா’

(கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே அஸ்தமிக்கிறானென்றெண்ணாதே) சகல ஜீவன்களுடைய ஆயுளையும் சிறிது சிறிதாகக்குறைப்பதற்காகவே அவனங்ஙனம் செய்கிறான். ஆகவே ஒவ்வொருவரும் ஜீவனோடிருக்கையிலேயே (பிரதி தினம்) தனது சக்திக்கு ஏற்றவாறு தருமத்தினைச் சேகரஞ்செய்துவரவேண்டும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மெய்ச்சமயம்.

உலகத்திலே நிலவும் சமயங்கள் அநந்தம். ஒரு சமயந்தானே பல நெறிப்பட்டு நடந்ததும் பெரிதுண்டு. இங்ஙனம் பேதப்பட்டு வழங்கும் சமயங்களை எல்லாம் நமது சைவசித்தாந்தம் நால்வகையின் வைத்து வகுத்துக்காட்டும். அவைதாம் புறப்புறச்சமயம், புறச்சமயம் அகப்புறச்சமயம், அகச்சமயம் என்பனவாம். இந்த வகுப்பு, அவ்வவ் வகுப்புக்குரிய சமயங்களுக்கும், உண்மைச் சுருதிகளாகிய வேதாகமங்களுக்கும் உள்ள தொடர்பும் தொடர்பின்மையும் நோக்கிச் செய்யப்பட்டதாகும். இந்த வகுப்புக்கள் நான்கும் நமது பரதகண்டத்தில் வழங்கிவந்த சமயங்களை நோக்கியே அமைந்தனவாயினும், பிறநாடுகளில் வழங்கும் சமயங்களையும் இந்த வகுப்புகளுட்டானே அடக்கிக் காட்டலாம்.

சமயங்கள் இங்ஙனம் பலபேதப்படுமாயினும், இவை எல்லாம் உண்மைச் சமயத்துக்குச் சோபானமார்க்கங்கள் என்றே சொல்லத்தக்கன. இதுபற்றியே புறச்சமய வகுப்புட்பட்டனவாகிய தர்க்கம், மீமாஞ்சம், ஏகான்மவாதம், சாங்கியம், பாஞ்சராத்திரம், யோகம் என்னும் ஷட் தரிசனங்களும் ஒன்றற்கொன்று படிமுறையாய், இறுதியில் சைவ சித்தாந்தத்தை ஒருவன் அடைதற்குச் சாதனங்களாகும் என்று ஆன்றோர் விளக்கிக்காட்டுவர். சமயங்கள் எல்லாம், ஆன்மாக்கள் தத்தம் பக்குவத்துக்கேற்ப இறைவனுடைய திருவருளைப் பெறுதற்குரிய சாதனங்களாம் என்பது பற்றியே உலகம்மையாராகிய உமாபிராட்டியாரைச் சமயங்களைத் தந்தருளிய தலைவி என்று நமது சமயசாத்திரங்கள் எடுத்துச்சொல்வது. எந்தெந்தச் சமயத்தை அனுட்டித்தாலும், அந்தந்தச் சமய வாயிலாகப் பசுபதியாகிய சிவபெருமானே அருட்பிரசாதஞ்செய்வர் என்று நமது சைவ சித்தாந்தம் வற்புறுத்தோறும்,



"யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகியாங்கே
மாதொருபாகனார் தாம்வருவர்" என்றும்,
"எவ்வெவர் தம்மையேனும் யாவரே யெனினும்போற்றின்
அவ்வவ ரிடமாக்கொண்டே யவர்க்கரு டருவாய் போற்றி" என்றும்,

நமது சமய நூல்கள் சிறிதும் உலோபமின்றி எடுத்துக்காட்டும்.

சமயத்தின் உதவிகொண்டன்றிக் கடவுளை அடையத் துணிவது கோலின்றி நடக்கத்துணிந்த முடவன் செயலை ஒக்கும். எமது சிற்றறிவுக்கெட்டாது மாயாதீதராயுள்ள பரம்பொருளை, மாயவரம்பிற்பட்ட எமது சிற்றறிவுகொண்டு நாம் அடையலாம் என்பது பெரும்பேதமையாம். அந்தப்பொருளை நாம் அடைதற்குச் சாதனமாயுள்ள சமயந்தானும் அந்தப் பொருளாற்றானே எமக்கு அளிக்கப்பட்டாலன்றி, நாம் அந்தப் பொருளை அடைவது கூடாது. மாயாவிருளின் மயங்கிக்கிடப்போர், அம்மாயாவிருளை யகன்று இறைவனடியைக் காண்டற்குபாயமாகிய சமயம் ஒன்றைத் தரவல்லுநர் என்பது, குருடன் குருடனுக்கு வழிகாட்ட வல்லுநன் என்பது போலும் ஓர் அபத்தமாம்.

இறைவனையும் இறைவனை அடையும் நெறியையும் அந்த நெறியினது அருமையையும் அறியார் எல்லாம், அவ்விறைவனை எந்தெந்தச் சமய வாயிலாகவும் அடைதல் கூடும் என்றும், யாதானுமொரு சமயந்தானுமின்றி எவ்வெவரும் தத்தமது சீவசாட்சிவாயிலாகவும் அடையலாம் என்றும் பிணங்குவர். இவர்கள் கடவுளுக்கும் தமக்கும், தமக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள தொடர்பை அறியாமை பற்றியே இங்ஙனமெல்லாம் பிணங்குவாராயினர். இத்தொடர்பை உள்ளவாறு அறிந்தாலன்றிப் பிரபஞ்சத் தொடக்கை அறுத்து இறைவனடித்தொடக்கை பெறுவது கூடாதாகும். நல்வினைகளைப்புரிதலும் கடவுளிடத்தன்பு செய்தலும் எமக்கு இறைவனடியைத் தலைப்படுதற்கண் சிறந்த உபாயங்களாகுமேனும், உண்மை அறிவு தலைப்பட்டு, அவ்வறிவு வாயிலாக அன்புமுதிரப்பெற்று, அம்முதிர்ச்சி காரணமாக இறைவனுடைய உண்மைச்சொரூபத்தைக் கண்டு, அக்காட்சி காரணமாக இறைவனுடைய திருவருண்முறையை எமது அநுபவத்தின் வைத்து ஐயந்திரிபற உணர்ந்தாலன்றி எமக்கு உறுதிப்பயன் சித்திக்கமாட்டாது. இந்த முறைகளையே எமது சித்தாந்த சைவம் தசகாரியத்தில் வைத்து விளக்கிக் காட்டுவது.

இறைவன் தத்துவங்களைத்தோற்றி ஒடுக்குமுறைகளையும், அத்தத்துவங்கள் வாயிலாகத் தனது திருவருளை ஆன்மாக்களுக்குச் சுரக்குமுறைகளையும், அங்ஙனம் சுரக்குமுகத்தால் ஆன்மாக்களைச் சேட்டிக்குமுறைகளையும், ஒருவன் உள்ளவாறு அறிந்தாலன்றி, அவன் அந்தத் திருவருள் விலாசத்தை உள்ளவாறு அறிந்து அதன்கண் உண்மைப்பத்தி செய்யமாட்டான். இங்ஙனம் செய்யமாட்டாதவன், அத்திருவருளை அநுபவித்தலாகிய முத்தியின்பத்துக்கும் பக்குவனாகான்; இதுபற்றியே தத்துவஞானம் தலைப்பட்டுத் தத்துவதரிசனம் தத்துவசுத்தி முதலிய வாய்க்கப்பெறுதல் வேண்டுமென்று சைவ சித்தாந்தம் சாதிப்பது.

உண்மையை உள்ளவாறு கண்டாலன்றி அந்த உண்மை உள்ளபடி எமக்குச் சுவைக்கமாட்டாது. கடவுள் ஒருவரே உண்மை. உண்மைப்பொருள் ஒன்றே அன்றிப் பலவாகமாட்டாது. இந்த உண்மையை ஒன்றுக்கு ஒன்று மாறுகிப் பல சமயங்களாலும் ஒருபடித்தாகக்காண்பது ஒருபோதுங்கூடாது. ஆகவே எல்லாச் சமயங்களாலும் இறுதிப்பயனாகிய உறுதிப்பயன் வாய்க்குமென்பது சமயத்தின் பிரயோசனத்தை அறியாத லௌகிகர் கூற்றன்றி உண்மை நிலையினையறிந்தார் கூற்றாகமாட்டாது. கடவுள் அருளிய சமயம் இது என்பதை அறியாதார் அந்தக் கடவுளை அடையத்தக்கார் என்பது, ஓர் ஊருக்குச் செல்லும்நெறியை அறியாதான் அவ்வூருக்குச் சென்றால் ஒக்குமென்க.

ஆன்மாக்கள் தத்தமது இயற்கை உணர்வின் வழிநின்று அவ்வியற்கை உணர்விற் செய்யத்தகுவென வென்று தோன்றுவனவற்றைச் செய்து, செய்யத்தகாதனவெனத் தோன்றுவனவற்றை ஒழித்து ஒழுகுவாராயின் அவர் எல்லாம் முத்தியடைவர் என்பது சிலருடைய கொள்கை. முத்தி அடைதற்கு ஆன்மாக்களுடைய இயற்கைஉணர்வு போதியதாகமாட்டாது. இவ்வியற்கை உணர்வு முத்தியடைதற்கண் ஒரு சாதனமாகுமேனும் அவ்வுணர்வு திருவருள் காட்டியவழிச் சென்றாலன்றி, முத்தி நிலையைக் காணவல்லதாகாது. கடவுள் உணர்வுக் குணர்வாய் நின்று ஆன்மாக்களை உணர்த்துதலால், இயற்கை உணர்வுதானும் கடவுளாற்றானே நடத்தப்படுமென்று வாதித்தலும் கூடும். பிரளயாகலர் சகலர் ஆகிய ஆன்மாக்களுக்கு உணர்வுக்குணர்வு மாத்திரையாய் நின்று கடவுள் உண்மையை உணர்த்துதற்கு அவர்கள் பக்குவம் உரியதன்றாதலாற்றானே கடவுள் குருமூர்த்தமாய் வெளிப்பட்டு அவர்களுக்கு உண்மையை உணர்த்துவர் என்று எமது சைவ சித்தாந்தம் சாதிப்பது. இந்த உண்மையை நாம் எமது அநுபவத்தின்



வைத்து இனிதறியக்கிடக்கின்றது. இந்த உலகத்திலே மானுடவடிவெடுத்தார் இயற்கை முறையால் மாத்திரம் விருத்தியுறுவது சிறிதும் கூடாதென்பது நாம் நாள்தோறும் காண்பதோர் அநுபவமாகும். ஆனதுபற்றியன்றோ செயற்கை முறையாகிய ஆசிரிய சிக்ஷை அவர்களுக்கு இன்றியமையாது கிடக்கின்றது. லௌகிகக் கல்விகளிற்றானும் ஆசிரிய கடனை வேண்டி நிற்பவர்களாகிய மானுடர் அந்த லௌகிகத்தினும் அநந்த மடங்கு காடின்யமாகிய ஆன்மிகவிஷயத்தில் ஒருசமயத்தை வேண்டாது கடைத்தேறத்தக்கார் என்பதும் சிறிதும் பொருத்தமுடைத்தாகாது. அன்றியும் இயற்கை உணர்வுமாத்திரையால் நாம் எல்லாம் முத்திக்குரியராய் விடுவமென்றால், இயற்கை உணர்வுமாத்திரையேயுடையனவாகிய மிருகங்களும் முத்தியடைதற்குரியனவாம் என்றபடியாகும். முத்தியடைதற்கு முக்கிய சாதனம் ஞானமே யாதலானும், இந்த ஞானம் கடவுளருளிய சமயத்தாலன்றி வாய்க்கமாட்டாதாதலானும், எல்லாச்சமயவாயிலாகவும் முத்தி அடைதல் கூடும் என்பது ஒருவாற்றானும் பொருந்தாதென்க.

இந்தக் காலத்திலே எல்லாருக்கும் திருத்தி கொடுத்தற்குரியதொரு கொள்கையைப் பிரதிபாதித்து விடுதல்வேண்டும் என்னுமோர் லௌகிக தருமங் காரணமாக, சமயத்தின் பிரயோசனத்தை உற்று நோக்காது, லௌகிகப் பயன்மாத்திரையாகவே அதனை எடுத்தாண்டு, எல்லாச் சமயங்களும் இறைவனடியைச் சேர்தற்கு உபாயமாகும் என்றும், ஒரு ஊருக்குச் செல்வதற்குப் பலபாதைகள் இருத்தல்போலக் கடவுளை அடைதற்கும் பலபாதைகள் உளவாயின என்றும், நமது லௌகிக ஞானிகள் பலர், சமயத்தையும் லௌகிகப் பிரயோசனம் ஒன்றே குறித்து எடுத்து விளக்குவர். சடப்பொருளாகிய ஒரு ஊரைச்சென்றடைதலைச் சித்துப்பொருளாகிய கடவுளைச் சென்றடைதற்கோர் உபமானமாக எடுத்துக்காட்டுவது சிறிதும் பொருந்தாது. கடவுளைச் சென்றடைவது அவருடைய உண்மைச் சொரூபத்தை எமக்குச் சந்தேக விபரீதமறத் தெள்ளிதினுணர்த்தும் மெய்ஞ்ஞானத்தாலன்றிப் பிறிதொன்றானும் ஆகாது. கடவுள் திரிபொன்றும் இல்லாத உண்மைப்பொருள். அந்தப் பொருளின் உண்மைச் சொரூபத்தை அநுபவத்திற்காணும் காட்சியாகிய மெய்ஞ்ஞானமாத்திரமே அதனைச் சென்றடைதற்குரிய பாதையாகும்.

இனிச் சிலர் அன்பு மாத்திரையாற் கடவுளை அடைதல் கூடும் என்றும் எந்தச் சமயத்தில் நின்றும் கடவுளிடத்தன்பு செய்பவர் முத்திக்குரி

யார் என்றும் வாதிப்பர். அன்பு மிக விசேடமானதோர் பேறு என்பதிற் றடையில்லை ஆனால் அந்த அன்பு மெய்யன்பாதல்வேண்டும். கடவுளுடைய உண்மைச் சொரூபத்தைக்கண்டு அதன்கட் செய்யும் அன்பே மெய்யன்பெனப்படும் உண்மைப்பொருளை இது என்றறியாது அதனைத் திரிபுற விளங்கச்செய்யும் அன்பு குருட்டுப் பத்தி எனப்படும். இதனால் முத்தி சித்திக்கமாட்டாது. ஆனால் இது உண்மைச் சமயத்தில் ஒருவனை உய்த்தற்கோர் சாதனமாகும்.

வேறு சிலர் பிரபஞ்சத்தை வெறுத்துத் துறவுபூண்டொழுகுவார், எந்தச் சமயத்தில் நின்றாலும் முத்திக்குரியார் என்பர். இவர்கள் பிரபஞ்சத்தை வெறுப்பது எங்ஙனம்? அதனை உள்ளபடி அறிந்தாற்றானே அதனை வெறுத்தல் கூடும் ஆகவே பிரபஞ்சத்தை உள்ளபடி கண்டு வெறுத்தவர்கள் தாமே முத்திக்குரியர் என்றபடியாகும். பிரபஞ்சத்தை ஒருவனுக்கு உள்ளபடி காட்டவல்லது உண்மைச்சமயம் ஒன்று மாத்திரமேயாகும், இந்தக் காட்சியே தத்துவ தரிசனம் எனப்படும் என்க

இக்காலத்துள்ளாருடைய காட்சியனைத்தும் லௌகிக அந்தகாரத்துண் மறைந்துகிடத்தலால் இவர்கள் முத்தியாவது இது என்பதை ஒரு சிறிதாவது விளங்கிக்கொள்ளாது அதனையும் இந்த உலகத்துள்ளதோர் பட்டணம் போல்வதெனக் கருதி நாம் எந்தச் சமயத்திலே நின்றாலும், அந்தச்சமயத்தை உள்ளபடி விசுவசித்து அதன்வழி ஒழுகுவேமாயின், சர்வஞானமுடையராகிய கடவுள் அந்தப் பட்டணத்துள் எம்மைச்செலுத்திவிடுவர் என்று மயங்குவர். இவர்களுடைய கொள்கை அந்தந்தச்சமயங்களால் பிரதிபாதிக்கப்படும் பத முத்திகளுக்கு ஒருவாறு ஏற்புடைத்தாகுமன்றி இந்தப் பத முத்திகளுக்கு மப்பாலுள்ள பரமுத்திக்கு ஒரு சிறிதும் ஏற்புடைத்தாகாது. அந்தப் பரமுத்தி இந்த உலகத்துள்ளதொரு பட்டணம்போல்வதல்ல. அது ஒரு இடம் என்று சொல்லத் தக்கதல்ல. அது இடம் காலம் முதலிய வரைபாடுகள் அனைத்தையும் கடந்ததோர் நிலையாகும். அந்த நிலை கடவுளையும் பிரபஞ்சத்தையும் உள்ளபடி அறிந்து, அறிந்தபடி அனுபவத்திற்கண்டு, பிரபஞ்சத்தில் நீங்கிக் கடவுளுடைய திருவடிக்கீழ் அத்துவித சம்பந்தமுற்று நித்தியானந்தத்தை அனுபவிக்கும் ஓர் நிலையாகும். இந்த நிலையைப்பற்றி ஒரு சிறிதாவது எடுத்துப்பேசாத சமயங்களால் நாம் பரமுத்தியை அடையக் காத்திருப்பது இலவுகாத்த கிளியின் செயல்போலாகும். முத்தியாவது நரகத்தில் நின்று விலகுதலாகிய இரட்சிப்பு மாத்திரையே என்று மேலைத்தேசச் சமயங்கள் போதிக்கும்



போதனையை எமது தேசத்தவர்களும் உண்மை என்று விளங்கிக்கொண்டு ஏமாந்து விடுகிறார்கள். முத்தி எனப்படுவது நரகதண்டனையின் விலகுவதல்ல, பாசபந்தத்தின் விலகுதலே முத்தி எனப்படும். பாசபந்தத்தின் விலகுவது உண்மைப்பொருளாகிய இறைவனை உள்ளபடி கண்டு, அவனோடு நாம் கொண்டுள்ள அத்துவித சம்பந்தத்தை ஐயந்திரிபற அனுபவத்திற் கண்டாலன்றிக் கூடாது. இந்தக் காட்சியே ஞானம் எனப்படுவது. இந்த ஞானத்துக்கேது சைவ சித்தாந்தத்தின் மாத்திரமே தெளிவுற விளக்கப்பட்டிருக்கின்றது அதுபற்றியே இந்தச் சித்தாந்தம்,

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவரிதிற் சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

என்றெடுத்துக் கூறும்,

முத்திக்கேதுவாகிய ஞானம் எமது சிற்றறிவுக்கெட்டாததோர் அந்தரங்கப் பொருளாகும். அதை அடைதற்கேதுவாகிய உபாயங்களைப் பரம்பதியாகிய சிவபெருமான் தாமே ஆன்மாக்கள்மீது கொண்ட பெருங்கருணைத்திறத்தால் சரியை கிரியை யோகம் என்னும் சோபானங்களாக எங்களுக்கு ஆகமங்களிற் றிருவாய்மலர்ந்தருளினார். இந்தச் சோபானங்களை ஆகமங்கள் சொல்லும்வழியில் நின்று நாம் அனுட்டித்தாலன்றி எமக்கு ஞானம் ஒருபோதும் வாய்க்கமாட்டாது, ஆசிரியன் சொல்லிக்காட்டும் வழிதனை மாணாக்கன் கிரமத்தோடு அனுட்டித்தாலன்றிக் கல்வி கற்றுத் தேறமாட்டான். இக்காலத்துள்ளவர்கள் இந்தக் கடப்பாட்டை அலட்சியம்செய்து கடவுள் அருளிய முறைகளைப் பிறழ்த்தியும், அவற்றை ஒருங்கே அநாவசியகம் என்று புறந்தந்தும் தமது மனம் சென்றவாறே ஒழுகுவாராயினர். இங்ஙனம் ஒழுகுதலால் இவர்களுக்கு உறுதிப்பயன் வாய்ப்பது சிறிதும் கூடாது கிடக்கின்றது. இவர்கள் இங்ஙனம் ஒழுகு

தலாற்றானே லௌகிகத்திலும் மிகத் தாழ்ந்தபடிக்கண் இறங்கி அவல முறுவாராயினர். லௌகிகத்தின் பொருட்டாக நமது சமயங்கூறும் நெறியை இவர்கள் கிரமமுற அனுட்டித்திருப்பாராயின் இங்ஙனம் தாழ்வுற் றிருக்கமாட்டாரர் என்பது திண்ணம்.

ச. சபாரத்தின முதலியார்.

யாழ்ப்பாணம்.

---

## சமாச்சாரங்கள்

:o:

திருப்போரூர்ப் பிரணவசைலமாலை:—இந்நூல் சென்னையடுத்த செம்பியம் ஆனரெரி மாஜிஸ்ரேட், பண்டிதரத்தினம் - புழலை-திருநாவுக்கரசு முதலியாரவர்கள் இயற்றிய நூறு செய்யுள். இது சொன்னயம் பொருணயம் தொடைநயங்களோடு விளங்குகிறது. கற்பனையலங்கார மமைந்திருக்கின்றன. அனேக புராண சரித்திரங்கள் அடங்கியுள்ளன.

---

திருஅவிநாசி ஸ்ரீ பிருஹத் கருணாம்பிகா சைவசித்தாந்த சபை:—இச்சபையின் மூன்றும் ஆண்டு நிறைவிழாக் கொண்டாட்டம் 1917ளு டிசம்பர்மீ 7, 8, 9உ களில் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகாமகோபாத்தியாயர் பிரமஸ்ரீ - உ - வே சாமிநாதய்யரவர்கள் அக்கிராசனம் வகிக்க நிகழ்ந்தது. பதினான்கு வித்துவான்கள் மகோபந்நியாசஞ் செய்தனர்.

---

உருத்திரன்மேரூர் சைவசித்தாந்த சபை:—இச்சபையின் காரியதரிசியும், சைவசித்தாந்த மகாசமாஜ அத்தியட்சர்களு ளொருவருமாகிய ஸ்ரீமத்-கா-உ-பொன்னுசாமி முதலியாரவர்கள் இவ்வருடத்தில் 17—உபந்நியாசங்கள் வைதிக சைவ சம்பந்தமாகச் செய்துள்ளார் என்பதனைக்கேட்டுச் சந்தோஷிக்கின்றனம்.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

## பன்னிரண்டாவது வருட

# அறிக்கைப் பத்திரம்.

## 1917.

---

“வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி” என்று மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளியபடி எல்லாமாகிய பரசிவப்பரம்பொருள் மற்றைத் தெய்வங்களைப்போலச் சாதல் பிறத்தலை நீத்துவேண்டுதல் வேண்டாமையொரீஇ நிற்றலைபுணர்ந்த அறிஞர் பலர் சைவ சித்தாந்தமே பெரிதென்றும் அதிற் சாருஞ்சிவமே எல்லாத்தெய்வங்களுக்கும் மேலாயதென்றும் வரையறுத்துச் சைவ சித்தாந்த சாத்திரங்களில் நிறுவினர். அவர் மதமே யுண்மை மதமெனக்கொண்ட சைவர் பலர் சைவசித்தாந்த மகாசமாஜமென ஓர் சபை கண்டு தமிழ்நாடு முழுவதிலும் மற்றத் தேயங்களிலும் பரவ நிலைநாட்டினர்.

### வருடாந்த மகோற்சவம்.

---

இம்மகாசமாஜம் 1906, 1907-ம் வருடங்களில் தில்லையம்பதியிலும், 1903, 1909, 1910, 1911, 1912, 1913, 1914, 1915-ம் வருடங்களில் முறையே நாகப்பட்டினத்திலும், திரிசிராப்பள்ளியிலும், இராமநாதபுரத்திலும், சென்னையம்பதியிலும், காஞ்சிமாநகரிலும், வேலூரிலும், தஞ்சையிலும் நடைபெற்றன. 1916-ம் வருடமாகிய கடந்தவருடம் சென்னை, திருமயிலை, பிள்ளையார் தோட்டத்தில் அத்தோட்டத்தின் தலைவராகிய ஸ்ரீமான்-கி. இராஜா கிராமணியார் அவர்களால் விமிசித்து மிக

அலங்காரமுடைய பெரியதோர் கொட்டகையில் யாழ்ப்பாணம் ஸ்ரீமான் ச. சபாரத்தின முதலியார் (Dy. Fiscal, Jaffna) அவர்கள் அக்கிராசனராக இருக்க டிசம்பர்மீ 29, 30, 31-ம் தேதிகளாகிய மூன்று தினங்களிலும் கூட்டம் கூடியது. பல சைவசிரோமணிகள் அரியபிரசங்கங்களைச் செய்தனர். ஷெ பிரபுவின் உதவியினாலும் சென்னை வாசிகள் சகலருடைய பொருளுதவியாலும் சமாஜ வருடோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சமாஜம் கூடுவதற்கேற்ற பல உதவிகளைச்செய்த ஸ்ரீமான் - கி. இராஜு கிராமணியார் அவர்களுக்கும் மற்றச் செல்வந்தர்களுக்கும் நிர்வாக சபையினர் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

## அங்கத்தவர்,

இம்மகாசமாஜத்து இப்போதுள்ள அங்கத்தவர்களின் எண் 761.

## சமாஜ காரியஸ்தானம்.

இச்சமாஜ காரியஸ்தானம் சென்னை, மயிலாப்பூர், "இராஜ விலாசம்" என்னும் வீட்டின் தோட்டத்தில் உள்ளது, இவ்விடத்தில் நம் காரியஸ்தானத்திற்குரிய வசதிகளைச் செய்திருக்கும் ஸ்ரீமான் - கி. இராஜு கிராமணியார் அவர்களின் சைவாபிமானம் வியக்கத் தக்கது.

## சித்தாந்தம்.

இம்மகாசமாஜத்தார் மாதந்தோறும் வெளியிடும் பத்திரிகை "சித்தாந்தம்" என்பதாகும். கடந்த இரண்டு வருடங்களாகக்காகித விலை ஒன்றுக்கு மூன்றாக ஏற்பட்டும் மாதம் மாதம் முட்டின்றி மிகப் பிரயாசையுடன் வெளிப்படுத்தப்பட்டுவருகிறது.

## பரீட்சை.

இவ்வருடமும் சமாஜ சம்பந்தமாகச் சித்தாந்த பிரவேச பரீட்சை நடைபெற்றது.



## நிர்வாக சபை.

இவ்வருடம் நிர்வாக சபையினர் சமாஜ உத்தியோக சாலையில் 13-முறை கூடிச் சமாஜ சம்பந்தமான விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டுவனவற்றைப் பேசிச் செய்யக்கூடிய யாவையும் செய்தனர்.

## பத்திராசிரியர்.

இச்சமாஜப் பத்திரிகையாகிய "சித்தாந்தத்தை" மிக ஊக்கத்துடன் பத்திராசிரியராய் இருந்து நடத்திவரும் சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் சிவஸ்ரீ - கலியாண சுந்தர யதீந்திர சுவாமிகள் அவர்கட்கு இச்சமாஜம் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறது.

## கணிதபரிசோதகர்கள்.

மாதந்தோறும் சமாஜக்கணக்கினைப் பரிசோதித்துப் பத்திரிகையில் வெளியிட உபகரித்த ஸ்ரீமான் M.கந்தசாமிமுதலியார் B.A., அவர்களுக்கும், வருடக்கணக்கைப் பரிசோதித்துத் தந்த ஸ்ரீமான் S. விநாயசமுதலியார் B. A., அவர்களுக்கும் நிர்வாக சபையினர் நன்றி பாராட்டுகின்றனர்.

## கிளைச்சபைகள்.

மெய்கண்ட சந்தான சபை, சென்னை.
சைவசமயாபிவிருத்தி சபை, செங்கல்பட்டு.
சைவசித்தாந்த சபை, கட்டியாம்பந்தல்.
,, திருக்கோவலூர்.
,, உத்திரன்மேரூர்.
,, பூவாளூர்.
பாலவிக்னேஸ்வர சங்கம், பெங்களூர்.
சிந்தாமணி விநாயக பக்தஜனசபை, செம்பியம், பிரம்பூர்.
ஸ்ரீ சொர்ணாம்பிகை சைவசித்தாந்த சபை, சேலம்.
சிவனடியார் திருக்கூட்டம், ஆலந்தூர்.
வாகீசபக்தஜன சபை, விழுப்புரம்.
ஸ்ரீசன்மார்க்க சபை, ஜலகண்டபுரம்,

ஸ்ரீ பிருஹத்கருணாம்பிகை சைவசித்தாந்த சபை, அவிநாசி.
சைவசித்தாந்த ஸ்ரீ பரமாசாரிய பக்தஜன சபை, தேர்த்துறை
சண்முகானந்த சபை, தாரமங்கலம், சேலம்.
ஸ்ரீ கலியாணசுந்தர பக்தஜன சபை, மாணம்பதி.

## சித்தாந்த பாடசாலை.

இச்சமாஜத்தின் சார்பாக ஓர் சித்தாந்த பாடசாலை இருத்தல்வேண்டுமென்று பலர் கருதியபடி திருமயிலை வித்துவான் ஸ்ரீலஸ்ரீ தணிகாசல முதலியார் அவர்களைக்கொண்டு சித்தாந்த சாஸ்திரம் பதினான்கினுள் ஒன்றாய திருவருட்பயன் பாடம் இச்சமாஜ உத்தியோகசாலையில் 1917ளூ பிப்ரவரிமீ 5உ முதல் பிரதி ஆதிவாரந்தோறும் நடந்துவந்தது. ஆனால் ஷை வித்துவானவர்கள் (17-8-17)-ல் இல்வுலக வாழ்வை வெறுத்துச் சிவபெருமான் திருவடி நீழலை யடைந்ததைப் பற்றி நிர்வாக சபையினர் பெரிதும் வருந்துகின்றனர்.

## உபந்நியாசங்கள்.

இவ்வருடம் இச்சமாஜத்தின் சார்பாக மார்ச்சுமீ 18உ ஸ்ரீ அருணாசலேசுவரர் வசந்த மண்டபத்தில் சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகளின் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் போ. முத்தைய பிள்ளையவர்களாலும் இன்னும் பல வித்துவான்களாலும் "தேவாரமாட்சி" என்னும் விஷயம் பிரசங்கிக்கப்பட்டது.

30-4-17, 4-5-17, 26-5-17, 20-8-17, 13-10-17, 13-11-17- ஆகிய இத்தேதிகளில் முறையே மாதவச்சிவஞான சுவாமிகள், உமாபதி சிவாசாரியர், சேக்கிழார் நாயனார், மறைஞான சம்பந்த சிவாசாரியர், அருணந்தி சிவாசாரியர், மெய்கண்ட தேவர் ஆகிய இவர்களுடைய குருபூசைத் தினங்கள் திருமயிலைப் பிள்ளையார் தோட்டத்தில் கொண்டாடப்பட்டன. அக்காலங்களில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள், ஸ்ரீமான் ஆலால சுந்தரம்பிள்ளை யவர்கள், ஸ்ரீமான் சிங்காரவேலு முதலியார் அவர்கள், ஸ்ரீமான் K. குப்புசாமி முதலியார் அவர்கள், ஸ்ரீமான் S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், ஸ்ரீமான் வல்லை-சண்முகசுந்தர முதலியார் அவர்கள், ஸ்ரீமான் புழலை-திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், ஸ்ரீமான்



K சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், ஸ்ரீமான் சேதுப்பிள்ளை அவர்கள், ஸ்ரீமான்-திரு வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் முதலிய பல சைவசிகாமணிகள் அரிய உபந்நியாசங்களைச் செய்தனர்.

## சைவசித்தாந்த மகாசமாஜக்கூட்டத்தின் அக்கிராசனர்கள்.

—:o:—

1906 சிதம்பரம், கனம் பொ- இராமநாதத்துரையவர்கள் K.C.C.M.G., கொழும்பு.

1907 சிதம்பரம், காலஞ்சென்ற பொ. பாண்டித்துரைசாமித்தேவர் அவர்கள் பாலவநத்தம் ஜமீன்தார்.

1908 நாகபட்டினம், ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் B. A., B. L., மதுரை.

1909 திரிசிராப்பள்ளி, கௌரவ அ. கனகசபைப் பிள்ளையவர்கள் B-A, அத்துவக்காத்து, யாழ்ப்பாணம்.

1910 இராமநாதபுரம், திவான்பகதூர் இராஜசபாபூஷணம் K. P. புட்டண்ண செட்டியார் அவர்கள் மைசூர் சமஸ்தானம்.

1911 சென்னை ஸ்ரீமான் J. M. நல்லசாமிபிள்ளையவர்கள் B. A. B. L, மதுரை.

1912 காஞ்சீபுரம், ஸ்ரீமான் T. பொன்னம்பலப் பிள்ளையவர்கள் M. R. A, S. Retired Excise Commissioner, Travancore.

1913 வேலூர், ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அதிபர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்.

1914 கூடலூர், ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அதிபர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்.

1915 தஞ்சை, ஸ்ரீமத் அம்பலவாண நாவல சுவாமிகள் யாழ்ப்பாணம்.

1916 திருமயிலாப்பூர், ஸ்ரீமான் ச. சபாரத்தின முதலியார் அவர்கள் J. P Dy Fiscal, யாழ்ப்பாணம்.

இச்சமாஜத்தின் அங்கத்தவர்களில் சிலர் சித்தாந்த பரமாகப் பல நூல்களை வெளியிட்டிருப்பதுபோல் சமாஜ வனிதையர்வகுப்புக் காரிய தரிசியாராகிய 'ஆண்டாளம்மாள்' என்னும் மங்கையர்க்கரசியார் இவ்வாண்டு "தேவாரம் வேதசாரம்" என்னும் நூலை வெளியிட்டுச் சித்தாந்த உலகத்திற்குதவியதை இங்குக் குறிப்பிக்க விரும்புகின்றோம்.

நிர்வாக சபையினர்.

---

## போஷகர்கள்.

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்.

ஸ்ரீமான் S. R. Mr. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள் M. R. A. S.

,, இரத்தினவேலுச் செட்டியாரவர்கள், சென்னை.

,, அ. தா. முத்துக்குமாரசாமி செட்டியாரவர்கள், கூடலூர்.

,, P. தெய்வசிகாமணிச் செட்டியாரவர்கள், சென்னை.

,, ஆண்டவராய விஜய அருணசல வணங்காமுடி பண்டாரத்தார் அவர்கள், பாலவனம் ஜமீன்தார்.

ஸ்ரீமத் அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமான்-கி. இராஜு கிராம்ணியார் அவர்கள், மயிலாப்பூர்.

## சபைத்தலைவர்.

ஸ்ரீமான்-ச. சபாரத்தின முதலியாரவர்கள், யாழ்ப்பாணம்.



## உபசபைத்தலைவர்.

ஸ்ரீமான்-J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், B. A., B. L. High Court Vakil, மதுரை.

,, T. நல்லசிவன் பிள்ளையவர்கள், B. A., B. L., High Court Vakil, சென்னை.

## காரியதரிசி.

ஸ்ரீமான்-கி. குப்புசாமி முதலியார் அவர்கள், சென்னை.

## பொக்கிஷதாரர்.

ஸ்ரீமான்-W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள், சென்னை.

## பத்திராசிரியர்.

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

சிவஸ்ரீ - கலியாணசுந்தரயதீந்திரரவர்கள், சென்னை.

(மணவழகு.)

## கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான்-S. விநாயக முதலியார் அவர்கள், B. A., சென்னை.

## உள்ளூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-T. V. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்-

,, புழலை திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்.

,, M. கந்தசாமி முதலியார் அவர்கள், B. A., Monthly Auditor.

,, C. V. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள்,

,, M. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்.

,, வல்லை. சண்முகசுந்தர முதலியார் அவர்கள்.

,, A. சிவசங்கர முதலியார் அவர்கள்.

,, C ஏகாம்பர முதலியார் அவர்கள்.

,, S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B. A., L. T.,

,, K. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள்.

,, T. N. தங்கவேலு முதலியார் அவர்கள்.

Madras, 21-12-17.

To

*The Secretary,*

Saiva Siddhanta Maha Samajam.

Sir,

As requested in your letter of the 2nd Instant, I have audited the accounts of the Samajam for the year 1916-17 ending with 30th November. I have the pleasure to certify that the accounts have been correctly and clearly maintained.

I herewith append a statement of receipts and charges for the year under report duly verified.

162410

Yours faithfully,

S. VINAYAKA MUDALIAR.

இங்ஙனம்,

சென்னை
22-12-17.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் நிர்வாகசபையார்.